# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# சிற்றிலக்கியம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி – 627 012.

# சிற்றிலக்கியம்

L T P C
4 0 0 4

**நோக்கம்:**

1. சிற்றிலக்கியத்தின் இலக்கிய நயத்தை அறிமுகப்படுத்துதல்.
2. சிற்றிலக்கியங்கள் வாயிலாகப் பல்வேறு காலங்களின் அரசியல் சூழ்நிலை மக்களின் உளப்பண்பு, வாழ்க்கை நிலை ஆகியவற்றை அறிதல்

**அலகு - 1:**

சிற்றிலக்கியத்தின் தோற்றம் - அமைப்பு - பாடுபொருள் - வகைமை - பிற்கால வளர்ச்சிநிலை (10 L)

**அலகு - 2:**

1. குமரகுருபரர் - முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ் - தாலப்பருவம் முழுவதும்
2. காரைக்காலம்மையார், அற்புத் திருவந்தாதி, - (51 முதல் 100 வரை இடம்பெறும் பாடல்கள் மட்டும்)
3. மதுரை சொக்கநாதர் - ‘‘தமிழ் விடு தூது’’ (முதல் 50 கண்ணிகள்), சீர் கொண்ட கூடல் எனத்தொடங்கும் முதற் கண்ணி முதல்’’ ஓங்கு புகழ்’’ என்ற 50வது கண்ணி வரை. (12 L)

**அலகு - 3:**

1. வீரமாமுனிவர், திருக்காவலூர் கலம்பகம் (1-10 பாடல்கள்)
2. குணங்குடி மஸ்தான் சாகிபு, முகைதீன் சதகம், (1-50 பாடல்கள்)

(11 L)

**அலகு - 4:**

1. ஜெயங்கொண்டார், கலிங்கத்துப்பரணி - "கோயில்பாடியது" முழுவதும்
2. ஓட்டக்கூத்தர், விக்கிரம சோழனுலா - (முழுமையும்)
3. திரிகூடராசப்பகவிராயர், திருக்குற்றாலக்குறஞ்சி, (வானரங்கள் கனிகொடுத்து") எனத்தொடங்கும் பாடல் முதல் "ஓடக்காண்பது" என்ற பாடல் வரை).

**அலகு - 5:**

முக்கூடற்பள்ளு - (முழுமையும்) (13 L)

(TOTAL : 60L)

# அலகு - 1

## சிற்றிலக்கியத்தின் தோற்றம்

சிற்றிலக்கியம் என்பதனுள் 96 வகையான இலக்கியங்கள் காணப்படுகின்றன என்று பொதுவாகக் கூறும் வழக்கம் உள்ளது. சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்று கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல் கூறுகின்றது இந்நூல்.

**“பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**

**தொண்ணூற் றாறுஎன்னும் தொகையதுஆம்”**

என்கிறது.

(பிள்ளைக்கவி + பிள்ளைத் தமிழ் என்ற இலக்கியம் தொகை = எண்ணிக்கை)

அதாவது, பிள்ளைத் தமிழ் என்ற இலக்கிய வகை முதலாகப் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு வகைப்பட்டது. பிரபந்தம் என்பது இதன் பொருள் ஆகும்.

வீரமா முனிவர் இயற்றிய சதுரகராதியும் 96 இலக்கிய வகைகளைக் குறிப்பிடுகின்றது. சிவந்தெழுந்த பல்லவன் உலா என்ற நூலில், தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான் (கோலம் = அழகு, பிரான் = தலைவன்) என்ற தொடர் இடம் பெறுகின்றது.

### சிற்றிலக்கியக் காலம்

சங்க காலத்திலேயே சிற்றிலக்கியம் தோன்றிவிட்டது எனலாம். சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பிரிப்பர். இவற்றுள், பத்துப்பாட்டில் 10 நூல்கள் உள்ளன. அவற்றுள் 5 நூல்கள் ஆற்றுப்படை என்ற சிற்றிலக்கிய வகை பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பன அவை.

சங்கம் மருவிய காலத்துத் தொகையான பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவை சிற்றிலக்கியங்களே ஆகும்.

பக்தி இலக்கியக் காலத்தில் நாயன்மார்கள் இயற்றிய திருமுறைகள், பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றுள் பல்வேறு சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. காரைக்கால் அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம், மாணிக்கவாசகர் பாடிய திருத்தசாங்கம், திருக்கோவையார், திருமங்கை ஆழ்வார் பாடிய திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் போன்றவை சிற்றிலக்கியங்கள் ஆகும்.

பின்னர்ப் பல்வேறு காலங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் இன்று வரையிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும், சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்ற காலத்தின் அடிப்படையில் சிற்றிலக்கியக் காலம் என்று அழைத்தனர். கி.பி. 15 -ம் நூற்றாண்டு முதல் 19 -ம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன. இக்காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம்.

**சிற்றிலக்கியம் விளக்கம்**

மேற்காட்டிய ஒப்பீட்டின் அடிப்படையில் சிற்றிலக்கியத்தைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்.

1. சிற்றிலக்கியம் அளவில் சுருங்கியதாக அமைவது.

2. அகப்பொருள், அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும்.

3. பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக உலா இலக்கியம் தலைவன் உலாவரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது.

4. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவவதாக அமைவது சிற்றிலக்கியம்.

5. இவ்வகையில் தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும்.

**சிற்றிலக்கிய வகைகள்**

இப்போது தமிழ்மொழியில் உள்ள பல்வேறு வகையான சிற்றிலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**பொருள் அடிப்படை**

இலக்கியத்தில் உள்ளடக்கமாக உள்ள அகப்பொருள், புறப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் சிற்றிலக்கியங்களை அகப்பொருள் சிற்றிலக்கியங்கள், புறப்பொருள் சிற்றிலக்கியங்கள் என்று வகைப்படுத்தலாம். தூது, கோவை முதலியன அகப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கும், பிள்ளைத் தமிழ், பரணி போன்றவை புறப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கும் சான்றுகள் ஆகும்.

**நிகழ்வுகள், செயல்கள் அடிப்படை**

அகம், புறம் என்னும் இவ்விருவகைப் பொருள்களிலும் உள்ள துறைகளைத் (தனித்தனி நிகழ்வுகள்அல்ல செயல்கள்) தனித்தனியே கொண்டு சிற்றிலக்கியங்கள் அமைவது உண்டு. பாட்டுடைத் தலைவனிடம் தூது விடுவதாகப் பாடுபொருள் அமைவது தூது இலக்கியம் எனப்படும். பாட்டுடைத் தலைவன் உலா வருவதாகப் பாடுபொருள் அமைவது உலா இலக்கியம் எனப்படும். பாட்டுடைத் தலைவனைத் தூக்கத்திலிருந்து எழவேண்டுவதாகப் பாடுபொருள் அமைவது பள்ளி எழுச்சி

இலக்கியம் எனப்படும். பெண்கள் ஆடும் ஊசல் விளையாட்டில் பாட்டுடைத் தலைவனைப் புகழ்ந்துபாடுவது ஊசல் இலக்கியம் எனப்படும்.

**பிற கருத்துகள் அடிப்படை**

பாடு பொருளாகப் பக்திக் கருத்துகளையும், தத்துவக் கருத்துகளையும், நீதிக் கருத்துகளையும் கொண்டு அமையும் சிற்றிலக்கியங்கள் உண்டு. பரணி இலக்கியத்துள் ஒன்றான மோகவதைப் பரணி வழக்கமான பரணி இலக்கியம் போல் அல்லாமல் தத்துவக் கருத்துகளை உள்ளிடக்கியிருப்பது,

**எண்ணிக்கை அடிப்படை**

நூலில் இடம்பெறும் பாடல் எண்ணிக்கையின் அடிப்படையிலும் சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தலாம். ஐந்து பாடல்களைக் கொண்ட இலக்கியம் பஞ்சகம் என்றும், பத்துப் பாடல்களைக் கொண்ட இலக்கியம் பத்து, பதிகம் என்றும், நூறு பாடல்களைக் கொண்ட இலக்கியம் சதகம் என்றும் அழைக்கப்படுவதை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

**புகழ்தல் அடிப்படை**

உடல் உறுப்புகளைப் புகழ்ந்து பாடுதலை அடிப்படையாகக் கொண்டு, மக்களைப் புகழ்ந்து பாடுதலை அடிப்படையாகக் கொண்டும் சிற்றிலக்கியங்கள் தோன்றின.

- **உறுப்புகளைப் புகழ்தல்**

உடல் உறுப்புகளைப் புகழ்ந்து பாடுதல் என்ற அடிப்படையிலும் சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தலாம்.

உறுப்புகளைப் பொதுவாகப் புகழ்ந்து பாடும் இலக்கியம் அங்க மாலை ஆகும். தலை முதல் பாதம் வரை உள்ள உறுப்புகளைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் கேசாதி பாதம் ஆகும். பாதம் முதல் தலை வரை உள்ள

உறுப்புகளைப் புகழந்து பாடும் இலக்கியம் பாதாதி கேசம் ஆகும். பெண்களின் கண்களைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் நயனப் பத்து எனப்படும்.

அரசனின் குடை, கொடி, முரசு, தேர், யானை, படை, குதிரை, செங்கோல், நாடு, நகரம் முதலிய பத்து உறுப்புகளைப் பாடும் அடிப்படையில் எழுந்த சிற்றிலக்கியங்களை இந்த வகையில் அடக்கலாம். சான்றுகளாகத் தசாங்கம், தசாங்கப் பத்து, தசாங்கத்தயல், சின்னப்பூ முதலிய இலக்கியங்களைக் கூறலாம்.

- **மக்களைப் புகழ்தல்**

ஆடவர் அல்லது பெண்களைப் புகழும் நோக்கில் இயற்றப்பட்ட சிற்றிலக்கியங்களையும் தனியாக வகைப்படுத்தலாம்.

ஆடவர்களைப் புகழும் நோக்கில் இயற்றப்பட்டது நாம மாலை என்ற சிற்றிலக்கிய வகையாகும். பெண்களைப் புகழும் நோக்கில் இயற்றப்பட்டவை புகழ்ச்சி மாலை, தாரகை மாலை என்ற இலக்கிய வகைகள் ஆகும்.

**யாப்பு அடிப்படை**

நூலை இயற்றுவதற்குப் பயன்பட்ட யாப்பின் அடிப்படையிலும் சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தலாம். அந்தாதி, வெண்பா, இன்னிசை, நேரிசை, அகவல் முதலான இலக்கிய வகைகளை இவ்வகையுள் அடக்கலாம்.

**சொல் முடிவு அடிப்படை**

நூற்பெயரின் இறுதிச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தலாம். வேனில் மாலை, காப்பு மாலை முதலியவற்றை மாலை இலக்கிய வகை என்று கூறுவதைச் சான்றாகக் காட்டலாம்.

**நாட்டுப்புற இயல் அடிப்படை**

நாட்டுப்புற வியைாட்டுகளையும், நாட்டுப்புற இலக்கியங்களையும் அடிப்படையாகக் கொண்டு சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தலாம்.

ஊசல், அம்மானை போன்ற இலக்கியங்கள் நாட்டுப்புற விளையாட்டு அடிப்படையிலான சிற்றிலக்கியங்கள் என்றும், பள்ளு, குறவஞ்சி முதலியன நாட்டுப்புற இலக்கிய அடிப்படையிலான சிற்றிலக்கியங்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

**இசை அடிப்படை**

இசை அடிப்படையிலும், இசைநாடகம் என்ற அடிப்படையிலும் சிற்றிலக்கியங்கள் வகைப்படுத்தப்படும். தெம்மாங்கு, கும்மி, சிந்து, கீர்த்தனை போன்ற இலக்கியங்கள் இசை அடிப்படையில் அமைந்தவை ஆகும். இசையுடன் நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற வகையில் இயற்றப்பட்ட இலக்கியங்களாகப் பள்ளு. குறவஞ்சி முதலியன காணப்படுகின்றன.

**சிற்றிலக்கியத்தின் பாடுபொருள்**

சிற்றிலக்கியங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும். அவை தோன்றுவதற்கான காரணங்களையும் இனிக் காணலாம்.

எந்த ஓர் இலக்கிய வகையும் திடீரெனத் தோன்றி விடாது. அது தோன்றுவதற்குரிய இலக்கிய மூலங்கள் அதற்கு முன்பு உள்ள இலக்கண நூல்களிலும் இலக்கியங்களிலும் காணப்படும். அந்த மூலங்கள் முதலில் தனிப்பாடலாக இருந்து, பின் வளர்ச்சி பெற்றுத் தனி இலக்கிய வகையாக உருவாகின்றன.

இதனை ஒரு சான்று மூலம் விளக்கமாகக் காணலாம். தலைவன் தலைவி ஆகிய இருவரிடையே பிரிவு ஏற்படுவதற்குரிய காரணங்களாகத் தொல்காப்பியர் ஓதல் பகை, தூது ஆகிய மூன்றினைக் கூறுகின்றார்.

ஓதல் பகையே தூது இவை பிரிவே (தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணை இயல், இளம்பூரணர் உரை, நூற்பா.27)

அதாவது, கல்வி கற்கச் செல்லுதல், போரிடுவதற்காகச் செல்லுதல், தூது செல்லுதல் ஆகிய மூன்று காரணங்களுக்காகத் தலைவன், தலைவி ஆகிய இருவரிடையே பிரிவு நிகழும் என்கிறார். இங்கத் தூது செல்லுதல் என்பது சுட்டப்படுகிறது. இது பிற்காலத்தில் தூது என்ற இலக்கிய வகை தோன்றுவதற்குரிய இலக்கிய மூலம் எனலாம்.

மன்னர்களாகிய அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் தொண்டைமானுக்கும் பகை ஏற்பட்டது. இதனால் போர் நிகழக்கூடிய சூழல் உருவானது. இதைத் தடுக்க ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றதாக ஒரு புறநானூற்றுப் பாடல்(95) காணப்படுகிறது. இது தூது இலக்கியத்தின் மூல காரணமான தனிப்பாடல். இதை அடிப்படையாகக் கொண்டு பிற்கால வளர்ச்சியில் தூது என்றி தனிச் சிற்றிலக்கியம் தோன்றியது எனலாம்.

**சமுதாய மாற்றம்**

சமுதாயத்தில் பல்வேறு காரணங்களால் மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்கள் ஏற்படும் போது இலக்கியத்தின் கருத்துகளிலும் மாற்றங்கள் ஏற்படும் இம்மாற்றங்களால் புதிய இலக்கிய வகைகள் தோன்றுகின்றன.

சான்றாகப் பள்ளி எழுச்சி என்ற இலக்கிய வகை தோன்றியதைக் கூறலாம். சங்க காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்து பாடும் நிலை காணப்பட்டது. எனவே மன்னனை உறக்கத்திலிருந்து எழும்படி வேண்டுவதாகப் பாடப்படும் துயிலெடை நிலை என்ற துறை காணப்பட்டது. பக்திக் காலத்தில் மன்னனின் இடத்தை இறைவன் பெற்றான். எனவே, மன்னனைத் துயில் எழுப்பப்பாடும் நிலை மாறி, இறைவனைத் துயில் எழுப்பப்பாடும் திருப்பள்ளி எழுச்சி என்ற சிற்றிலக்கிய வகை தோன்றியது எனலாம்.

**தனிநூல் ஆக்குதல்**

முந்தைய இலக்கியங்களில் ஓர் உறுப்பாக உள்ளதைத் தனி ஓர் இலக்கியமாகப் படைக்க வேண்டும் எனப் புலவர்கள் எண்ணினர். இதன் விளைவாகப் புதிய சிற்றிலக்கிய வகைகள் தோன்றின.

சான்றாக, முந்தைய இலக்கியங்களில் காப்பு என்பது ஓர் உறுப்பாகக் காணப்பட்டது. பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டிப் பாடுவது காப்பு ஆகும். இதையே பல பாடல்களில் பாடிக் காப்பு மாலை என்ற ஓர் தனி இலக்கிய வகையைப் படைத்துள்ளனர்.

**புதிய இலக்கியம் படைத்தல்**

மரபு வழியாக வந்த சில இலக்கியங்களை இணைத்துப் புதிய இலக்கியம் படைக்கும் நோக்கத்தின் காரணமாகவும் பல சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. சான்றாகப் பரணி என்ற சிற்றிலக்கிய வகையைக் கூறலாம். மன்னனின் போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவது பரணி இலக்கியம் ஆகும். போர்க்களங்களைச் சிறப்பித்துப் பாடும் இலக்கியங்களான களவேள்வி. மறக்கள வழி என்ற இலக்கியங்களை இணைத்துப் பரணி என்ற இலக்கிய வகையைப் படைத்தனர்.

**துறைகளை இணைத்துப் பாடுதல்**

சங்க இலக்கியத்தில் பல அகப்பொருள் துறைகள் காணப்படுகின்றன. தனித்தனியே உள்ள அவற்றை எல்லாம் இணைத்துப் புதிய இலக்கிய வகையாகப் பாட வேண்டும் என்ற நோக்கில் புதிய சிற்றிலக்கிய வகைகளைப் படைத்துள்ளனர்.

சான்றாகக் கோவை இலக்கிய வகையைக் கூறலாம். நானூறு அகப்பொருள் துறைகளை இணைத்துக் கோவையாகப் பாடப்பட்ட சிற்றிலக்கிய வகையே கோவை இலக்கியம் ஆகும்.

### கருவியாகக் கொள்ளல்

பக்தி இயக்கம் தோன்றிய காலத்தில் புலவர்கள் மக்களிடையே இறை உணர்வைத் தோற்றுவிக்கவும், இறைவனின் பெருமைகளை எடுத்துக் கூறவும் விரும்பினர். இதற்குரிய பல்வேறு வழி முறைகளில் புதிய சிற்றிலக்கிய வகைகளைப் படைத்தலையும் ஒன்றாகக் கொண்டனர். பக்தி இலக்கியம் என்று கூறப்படும் பன்னிரு திருமுறைகளிலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் ஏராளமான சிற்றிலக்கிய வகைகள் புதிதாகத் தோற்றம் பெற்றுள்ளதைச் சான்றாகக் கூறலாம். பின்னர் இப்போக்கு மேலும் வளரத் தொடங்கியது.

சைவ சமயச் சார்பில் திருவருணைக் கலம்பகம் வைணவ சமயம் சார்பாகத் திருவரங்கக் கலம்பகம் ஆகியவற்றை இவ்வளர்ச்சியின் வெளிப்பாடாகக் கூறலாம். இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களை அல்லது இடங்களைப் புகழ்ந்து பாடுவதன் மூலமும் மக்களிடையே பக்தி உணர்வை ஏற்படுத்த நினைத்தனர். இதனாலும் பல சிற்றிலக்கியங்கள் தோன்றின் சான்றாகத் தலக்கோவை என்ற சிற்றிலக்கிய வகையைக் கூறலாம்.இறைவனின் அவதாரச் சிறப்புகளை மக்களிடையே கூறி இறைவன் பெருமைகளை விளக்க நினைத்தனர். இதன் விளைவாக உற்பவ மாலை என்ற சிற்றலக்கிய வகை தோன்றியது.

### புலமைத்திறனை வெளிப்படுத்தல்

புலவர்கள் தம் புலமைத் திறனை அல்லது அறிவு ஆற்றலை வெளிப்படுத்தும் நோக்கில் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளைப் படைத்துள்ளனர். மரபாக வரும் இலக்கிய உறுப்புகளையும், நாட்டுப்புற இலக்கிய உறுப்புகளையும், பல்வேறு பா வகைகளையும் இணைத்துப் பாட வேண்டும் என்னும் விருப்பத்தில் கலம்பகத்தை படைத்துள்ளனர். பல்வேறு சந்தங்களில் பாட வேண்டும் என்ற விருப்பத்தால் பல்சந்தமாலை தோன்றியது.

வேறு வேறு பாக்களை இணைத்துப் பாட வேண்டும் என்ற விருப்பத்தால் இரண்டு பா வகைகளால் பாடப்படும் இரட்டைமணிமாலை, மூன்று பா வகைகளால் பாடப்படும் மும்மணிமாலை, நான்கு பா வகைகளால் பாடப்படும் நான்மணிமாலை முதலிய இலக்கிய வகைகள் தோன்றின.

ஒரே பொருண்மையில் பல்வேறு இலக்கிய வகைகளைப் படைக்கும் நோக்கத்தாலும் பல இலக்கிய வகைகள் தோன்றின. மன்னனின் பத்து உறுப்புகளைப்பாடும் இலக்கிய வகை தசாங்கம். இதே பொருண்மையில் தசாங்கப்பத்து தசாங்கத்தயல், தசாங்க வெண்பா, சின்னப்பூ ஆகிய இலக்கிய வகைகளையும் படைத்துள்ளனர். இவ்வாறு, பல காரணங்களால் பல்வேறு வகையான சிற்றிலக்கிய வகைகள் தோன்றியுள்ளதை அறிய முடிகிறது.

**சிற்றிலக்கியத்தின் சிறப்புகள்**

சிற்றிலக்கியம் என்ற இலக்கிய வகையானது பெயரளவில் தான் சிறு இலக்கியம் என்ற பொருளைத் தருகின்றது. ஆனால், உண்மையில் இது பேரிலக்கியத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் பல சிறப்புகளைக் கொண்டுள்ளது.

சிற்றிலக்கியம் சங்க காலம் முதல் இன்று வரையிலும் தோன்றித் கொண்டிருக்கும் நீண்ட வரலாற்றை உடையது. சிற்றிலக்கியம் என்பதில் முந்நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் நூற்றுக் கணக்கான நூல்கள் உள்ளன. எனவே, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிற்றிலக்கியத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

சைவம், வைணவம், சமணம், கிறித்தவம், இசுலாம் எனப் பல்வேறு சமயத்தவர்களும் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றைப் படைத்துள்ளனர். உவமை, உருவகம், கற்பனைச் சிறப்புகளால் பேரிலக்கியத்திற்கு இணையான நிலையில் நிகழ்கின்றது. இறைவன், ஞானக்குரவர், மன்னன், வள்ளல், சாதராண மக்கள் என அனைவரையும் பற்றிப் பாடுவதாக அமைந்துள்ளது. நாட்டுப்புற இலக்கிய வகைக்

கூறுகள் பலவற்றைக் கொண்டு சாதாரண மக்களையும் கவரும் வகையில் உள்ளது. நாட்டின் சமுதாய, அரசியல், பண்பாட்டு வரலாறுகளை வெளிப்படுத்துகின்றது.

இந்திய மொழிகள் பலவற்றிலும் காணப்படுவது. சான்றாகத் தூது இலக்கியம் வழமொழி, மலையாளம், கன்னடம் தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படுவதைக் கூறலாம். இவ்வாறு, சிற்றிலக்கியம் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு திகழக் காணலாம்.

**சிற்றிலக்கியத்தின் வகைப்பாடுகள்**

தமிழ் மொழியில் காணப்படும் சிற்றிலக்கிய வகைகளில் குறிப்பிடுவதற்குரிய இலக்கிய வகைகளுள் சிலவாகிய குறவஞ்சி, தூது, மடல், உலா, பள்ளு, கலம்பகம் ஆகியவை பற்றிய பொதுவான சில செய்திகளைத் தருகின்றது.

குறவஞ்சி என்னும் இலக்கிய வகையின் பெயர்க்காரணம் நூல் பெயர் பெறும் முறை, தோற்றம், வளர்ச்சி முதல் நூல், அமைப்பு என்பன பற்றிக் கூறுகின்றது.

அவ்வாறே, தூது, மடல், உலா, பள்ளு, கலம்பகம் ஆகிய இலக்கிய வகைகளின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, உள்ளடக்கம் முதலிய செய்திகளை விளக்குகிறது.

**கோவை**

கோர்க்கப்படுவதனால் கோவை. இ்.தோர் அகத்திணை இலக்கிய வகை. காதலன், காதலி இருவரின் உள்ளத்தில் கிளைத்து ஓங்கி வளரும் இன்ப இலக்கியம் இது. மன்னரைப் பாடினால் சிற்றின்பம், இறைவனைப் பாடினால் பேரின்பம், காதலன் -காதலி கூடல், இரண்டு உயிர்கள் பெறும் இன்பம், உயிர் - இறைவன் கூடல் பக்தி மார்க்கப் பேரின்பம். இறைவன் பெயரால், அவனைப்

பாட்டுடைத் தலைவனாக்கிக் கோவை பாடும்போது சிற்றின்பம் பாடிப் பேரின்பம் தேடுகிறார்கள்.

**“இன்பமம் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை”**

என்னும் தொல்காப்பிய சூத்திரத்துக்கு இயைந்து எழுதப்படுவது கோவை என்மனார் இலக்கண அறிஞர். ஆண்பெண் உணர்வுகளை முழுமையாகச் சொல்லும் இலக்கியம், கோவை, நூல்களில் தலைசிறந்தது, மாணிக்கவாசகர் யாத்த ‘திருச்சிற்றம்பலக் கோவை’ எனும் திருக்கோவையார் என்றும் இந்த நூலுக்கு மட்டுமே உயர்வு கருதிய ‘ஆர்’ விருதி உண்டு என்றும் சொல்கிறார்கள்.

கோட்டீச்சுரக் கோவை, திருவாரூர்க் கோவை, திருவெங்கைக் கோவை என்று வேறு சில கோவை நூல்களையும் குறிப்பிடுகின்றார்கள்.

கோவை என்றாலே சிதறிக்கிடக்கும் பொருள்களை ஒன்றாகக் கோத்துத் தரும் மாலையென்பது பொருளாம். சங்க இலக்கிய அகப்பொருள் மரபு அழிந்துவிடாதவாறு காத்த பெருமை கோவை நூல்களுக்கு உண்டு.

**“கோவை என்பது கூறுங் காலை**

**மேவிய களவு கற்பெனும் கிளவி**

**ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ**

**முந்திய கலித்துறை நானூறு என்ப”**

கோவை நூல்களுக்கு இலக்கணம் கூறுகிறது ‘பன்னிரு பாட்டியல்’ ‘கட்டளைக் கலித்துறை 400 பாடல்களில் இயல்வது கோவை என்கிறது இவ்விலக்கண நூல் ஆகும்.

**உலா**

காப்பியங்கள், தலைவர்கள் உலா வரும் செய்திகளைச் சுருக்கமாக உரைக்கின்றன. திருமுடி புனைந்தபின், வதுவை முடிந்தபின், போரில் வெற்றி பெற்றதும் உலா வரும் செய்திகள் அவை. பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் முத்தொள்ளாயிரத்தில் சில பாடல்கள் எனச் இத்தகு உலாக்களைப் பேசுகின்றன. அத்தகு உலாக்களை விரிவாகப் பேசும் சிற்றிலக்கிய வகையே உலா. இதில் தலைவன் பெயர் கூறப்படும் காரணத்தாலும் அவனைக் கண்டு மகளிர் மாத்திரம் காதல் வயப்பட்ட செய்திகள் பேசப்படுவதாலும் உலாப் பிரபந்தம் புறப்பொருள் சார்ந்த பெண்பால் கைக்கிளை என்று வழங்குவர் இதனைப் பாடாண் திணைக்கு உரியது என்கிறார்கள்.

தலைவன் உலா வரும் சிறப்பைப் பாடுவது உலா இலக்கியம் தலைவனை ஏழ் பருவத்துப் பெண்களான பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்பார். காதல் கொள்வதான பாடல்கள், தமிழர் பண்பாடு, பெண்களின் பருவங்களை ஏழாகப் பிரிக்கின்றது. ஆய்வாளர்கள் அவர்களது வயது எல்லைகளையும் வகுத்துள்ளனர்.

கம்பன், திரு அவதாரப் படலத்தில், இராமன், பரதன் இலக்குவன், சத்துருக்கனை ஈனும் கோசலை, கையேயி, சுமித்திரை எனும் தயரதன் தேவிமாரைத் தெரிவையர் என்கிறான். தெய்வங்கள், மக்களைப் பாடும் உலாக்கள் உலாப்புறம் என வழங்கப்பட்டன. உலாவில் பெரும்பாலும் தலைவனின் அங்க வர்ணனைகள் இடம்பெறும். தலைவன் இளம் பருவத்தினனாக இருத்தல் அவசியம் என்கிறது சிதம்பரம் பாட்டியல் எனும் நூல்.

உலாக்கள் கலி வெண்பாவில் இயற்ற பெறும். ஒரு எதுகை அமைந்த இரண்டிரண்டு வரிகள் இவற்றைக் கண்ணி என்றனர். உலா வருபவர்களுக்கான வாகனங்கள் உண்டு. ஆதியுலாவின் இடபம், வாகனம் எனில் மூவருலாவில் களிறு

வாகனம் இடபம் எனில் காளை, களிறு எனில் ஆண்யானை. சொக்கநாதர் உலாவில் தேர் முதலாய ஏழு வாகனங்கள். களிறு, குதிரை, பல்லக்கு ஆகியன உலாவரும் வாகனங்கள் எனப் 'பிரபந்த தீபிகை' எனும் நூல் கூறும் என்பார்கள். சேரமான் பெருமாள் நாயனார் சிவன் மீது பாடிய உலா ஆதியுலா எனப்பட்டது. உலா இலக்கியம் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சிற்றிலக்கிய வகை என்றும் இதுவரை 81 உலா நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன என்றும் சொல்கிறார்கள்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" எனுந் தொல்காப்பியத் தொடரே, உலாவின் மூலவித்து. பிற சிற்றிலக்கியங்களுக்கு உள்ளது போலவே தொல்காப்பியத்தில் வீழ்ந்து விதை கிடக்கிறது. மன்னன் ஓர் ஊர்தியில் நாற்படைகள் புடை சூழத் தலைநகர்ப் பெருவீதிகளில் உலா வருவதை பிறந்த நாள், மணநாள், வெற்றி நாள் முதலிய திருநாட்களில் உலா வருவதை நகர மக்கள் மாடமாளிகைகளிலும் தெரு ஓரங்களிலும் கண்ணாரக் கண்டு உவகை பொங்க வாழ்த்துவர்.

இம்மரபிலிருந்து புதிய இலக்கிய வகையாக 'உலா' எனும் சிற்றிலக்கியம் உருப்பெற்று எழுந்தது, எழுவகைப் பருவ மகளிரும் மன்னன் அழகால் காதல் மீதூர்ந்து அடையும் நிலைகளையும். அரசின் பத்து உறுப்பு நிலைகளின் வளங்களையும் (தசாங்கம்) உலாவின் வழியாகப் புலவர் பெரு மக்கள் புனைந்துரைக்கும் இலக்கிய வகையாக 'உலா'க்கள் பல தமிழில் எழுந்தன.

இலக்கிய கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலால் உலாப்பாட்டு மரபுகளைப் பாட்டியல் நூல்கள் வரையறுத்து அவற்றிற்கு இலக்கணம் வரைந்துள்ளன.

ஏழ் பருவ மகளிர் வயது வரம்பினைக் கூட அவை வரையறுத்தன,

**“பேதை முதல் ஏழ்பருவவப் பெண்கள் மயக்கமுற**

**ஓதும் மறுகுஉற்றான் ஒள்வேலான் என்று ஏதம்**

**அறக் கலிவெண்பாவின் ஆக்கல் உலாவாம்**

**புறத்தசாங்கம் தாங்கிப் போற்று”** **(பிரபந்தத் திரட்டு)**

| **பருவங்கள்** | **ஆண்டு** |
|---|---|
| பேதை | 5 - 8 |
| பெதும்பை | 9 - 10 |
| மங்கை | 11 - 14 |
| மடந்தை | 15 - 18 |
| அரிவை | 19 - 24 |
| தெரிவை | 24 - 29 |
| பேரிளம் பெண் | 30 - 36 |

**தூது**

தூதும் கலிவெண்பா உலா, கோவை, பிள்ளைத் தமிழ் எனும் சிற்றிலக்கியங்கள் தமிழுக்கே உரிய சிறப்பு வகைகள், ஆனால் தூது என்பது ஒரு அகில இந்திய இலக்கியம். பிற இந்திய மொழிகளிலும் பல்வகைத் தூது இலக்கியங்கள் உண்டு. வடமொழியில் இதனை சந்தேசம் என்பர். வங்காளத்தில் ‘சந்தேஷ்’ என்றொரு இனிப்பு வகை உண்டு. அதுவும் ஒருவேளை தூது போயிருக்கலாம். மகாகவி காளிதாசனின் தூது நூல் மேக சந்தேகம். அதாவது மேகத்தைத் தூது விடுவது தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளம், சிங்கள மொழிகளில் தூது இலக்கியம் உண்டு.

தூது என்பது அற்புதமானதோர் தமிழ்ச்சொல், பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு எனப் பல சங்க இலக்கிய நூல்களில் இலகுவாக, பலவாகக் கையாளப்பட்ட சொல். தூதுப் பிரபந்தங்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில் உ.வே.சா. குறிப்பிடும் செய்தி முக்கியமானது. 'கோவைக் கண் உள்ள துறைப் பொருளும் கிளவியமைதியும் பெரும்பாலும் ஒரே அமைப்புடையன. உலாவில் உள்ள ஏழு பருவப் பெண்களின் வருணனையும் பிறவும் அத்தகையனவே. பிள்ளைத் தமிழிலும் பத்துப் பருவங்களும் ஒரு திறத்தனவாகவே அமைந்துள்ளன. தூது நூல்களிலோ, தூது விடுக்கப்படும் பொருளுக்கு ஏற்பச் செய்திகளும் பொருளமைப்பும் மாறுபட்டு இருக்கின்றன.

திருக்குறளின் 69-ம் அதிகாரம் 'தூது' பற்றிப் பேசுகிறது.

**"அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்து அவாம்**

**பண்புடைமை, தூதுரைப்பான் பண்பு"**

என்று தூது உரைப்பவன் பண்புகள் பேசப்படுகின்றன. மேலும் வள்ளுவர்.

**"அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூது உரைப்பார்க்கு**

**இன்றி அமையாத மூன்று"**

என்கிறார். தூதின் தன்மை பற்றியும் கூறுகிறார்.

**"தொகச் சொல்லி, தூவாத நீக்கி நகச் சொல்லி**

**நன்றி பயப்பதாம் தூது"**

என்கிறார்.

புராணங்கள், இதிகாசங்கள் தூது பற்றி நெடுகப் பேசுகின்றன. போர் தொடங்குமுன், இறுதி நடவடிக்கையாக விடுத்த தூதுகளை, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் இவற்றுள் காணலாம்.

சத்தி முற்றத்துப் புலவர் பசியிலுமம குளிரிலும் வாடி, தன் இருப்பையும் நிலையையும் மனைவிக்கு அறிவிக்கும் வண்ணம் நாரையைத் தூதுவிட்ட பாடல், தமிழ் இலக்கியப் பரப்பில் அற்புதமானது.

**"நாராய், நாராய், செங்கால் நாராய்,**

**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**

**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்"**

என்று தொடங்கும் அந்தப் பாடலைப் பொருள் உணர்ந்து ஒரு முறை வாசித்தவர், வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். அதுவும் 'கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇ' எனும் ஒரு பிரயோகம் மிக வலிமையானது. மேலும் 'பனங்கிழங்கு பிளந்தாற்போல் பவளக்கூர்வாய் செங்கால் நாராய்' எனும் அந்த உவமை வெகுவாகப் புகழப்படுவது.

பிசிராந்தையார் எனும் புலவர், கோப்பெரும் சோழனிடத்து, அன்னத்தின் சேவலை தூதுவிட்ட புறநானூற்றுப் பாடலும் சிறப்பானது. சங்க இலக்கியங்களான நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு நூல்களிலும் சைவத் திருமுறைகளான தேவாரத்திலும் நாலாயிரத் திவ்யா பிரபந்தத்திலும் தூதுப் பாடல்கள் உள.

எகினம், மயில், கிளி, மழை, பூவை, சகி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு முதலிய பத்தும் தூது விடப்பட்டுள்ளன. இந்தப் பத்தினுள் மயில், பூவை, குயில் என்பன தூதுபோன இலக்கியங்கள் இன்று இல்லை என்கிறார்கள்.

புகழேந்திப் புலவர் இயற்றிய 'இரத்தினச் சுருக்கம்' எனும் நூலில் எவற்றை எல்லாம் தூது அனுப்பலாம் எனும் இலக்கணம் இருக்கிறது என்கிறார் டாக்டர் உ.வே.சா.

**பள்ளு**

பாட்டியல் நூல்களால் 96 என வகுக்கப் பெற்றவை சிற்றிலக்கியங்கள், புத்திலக்கியங்களை 'விருந்து' எனக் குறிக்கின்றது தொல்காப்பியம்.

'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுள் எண் 201. இவற்றுள் பள்ளு இலக்கியங்கள் 17 -ஆம் நூற்றாண்டையும் குறம் 18 -ம் நூற்றாண்டையும் சார்ந்தவை. நொண்டி, உழத்திப்பாட்டு ஏசல் என்பனவும் இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவை. பிற பிரபந்த வகைகளில் பள்ளும் குறமும் வாசிக்க இலகுவானவை. சிற்றிலக்கியங்களின் இலக்கணங்கள் கூறும் பாட்டியல் நூல்களில் பள்ளு எனும் இலக்கியத்துக்கான இலக்கணம் இல்லை என்கிறார்கள். இதுவரை 35 பள்ளு நூல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**அந்தாதி**

அந்தத்தை ஆதியாக வைத்துத் தொடுக்கும் பாவகை அந்தாதி ஆகிறது. ஒரு பாவின் அடியையோ சீரையோ, அசையையோ, எழுத்தையோ, அடுத்த சீரிலோ, அடியிலோ, பாவிலோ முதலாக வைத்துத் தொடுப்பது அந்தாதியாகும். பாக்களை மனனம் செய்வதற்கு அல்லது மனத்தில் நிறுத்திப் பயன்படுத்துவதற்கு இந்த அந்தாதிகள் மிகவும் உறுதுணையாகின்றன.

தொல்காப்பியர் இதனை 'இணைபு' என உரைப்பர். "அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி" என்பது யாப்பருங்கலகாரிகை.

**"மண்திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**

**வளித் தலைஇய தீயும்**

**தீ முரணிய நீரும் என்றாங்கு" (புறப்பாடல். 2)**

என்ற புறப்பாடல் அந்தாதித் தொடைக்கு ஏற்ற சான்றாகும். சங்க இலக்கியங்களில் காணப்படும் இக்கருக்களைக் கொண்டு பிற்காலத்தல் பல அந்தாதி நூல்கள் தோன்றின. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி முறையில் அமைந்திருப்பதைக் காணலாம். அந்தாதி இலக்கியத்தை முதன்முதலாய்த் தனி நூலாகத் தோற்றுவித்த பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும் அவருடைய அற்புதத் திருவந்தாதி.

அந்தாதி இலக்கியம் தொடங்கிய காலத்தில் வெண்பா வடிவம் பெற்றிருந்தது. அந்தாதி இலக்கியங்கள் மேலும் மேலும் பல்கிப் பெருகிற போது. விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற யாப்பு வகைகளிலும் வடிவுற்றன. காரைக்கால் அம்மையின் அற்புதத் திருவந்தாதி 100 வெண்பாக்களால் ஆன அந்தாதி ஆகும்.

## குறவஞ்சி

குறி சொல்லும் மரபில் வந்த குறத்திப்பாட்டு 34 குறவஞ்சிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறம் என்பதன் மறுபெயர்களே குறவஞ்சி, குறுவஞ்சித் தமிழ், குறவஞ்சி நாடகம் என்கிறார்கள். குறவஞ்சியில் சிறந்தது குற்றாலக் குறவஞ்சி என்பர் புலவர் பெருமக்கள். இதனைத் திருக்குற்றாலக் குறவஞ்சி என்பார். ஊர், குற்றாலம் என்பதே பண்டைய தலப் பெயர். திரு என்பது முன்னொட்டு சிறப்பு அடைமொழி.

குறவஞ்சி இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனின் உலா, அதனைக் கண்ணுற்ற தலைவியின் மையல், அத்தலைவியின் வாட்டம் போக்கக் குறத்தி குறி சொல்லுதல், குறவன் குறத்தி ஊடல் - கூடல் முதலியன இடம் பெறும். இந்நூல்

ஒரு வகையில் நாடக இலக்கியம் வெண்பா, அகவல், விருத்தம் எனும் பாவினங்களால் பாடப்பெறும் சிந்து, கண்ணி என்பனவும் விரவி வரும்.

**"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**

**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"**

என்னும் தொல்காப்பியம். களவியல் 115 -ம் சூத்திரத்தால் குறி வகையின அடியொற்றி, பல புதிய மாறுபடுகளுடன் குறவஞ்சி என்னும் நாடக நூல் தோன்றிற்று என்கிறார் வித்துவான் சு.பாலசாரநாதன்.

'சங்க இலக்கியங்கள் அரசர்களையும் வள்ளல்களையும் பாடின சமய நூல்கள் கடவுளைப் பாடின. குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் கடவுளையும் மனிதர்களையும் பாடின. குறவஞ்சி நூல்கள் பாமர மக்களை நினைவில் கொண்டு தோன்றின. எனவே குறவஞ்சி நூல் மக்கள் இலக்கியமாகும் என்கிறார் அவர். பெயர் உண்டாயிற்று என்று தோன்றுகிறது. குறவஞ்சி - குறமகள் என்பார் டாக்டர் உ.வே.சா.

பள்ளு எனும் சிற்றிலக்கியம் பள்ளர் இன மக்களைக் கொண்டது போலவே, குறவஞ்சி எனும் சிற்றிலக்கியம் குறவர் இன மக்களைக் கொண்டதாகும்.

**பிள்ளைத் தமிழ்**

குழந்தைகள் வாழ்வின் கவிதை என்பர்கள். அந்தக் குழந்தையையே கவிதையாக்குகிறது. பிள்ளைத் தமிழ் பெரியோர்களைக் குழந்தைகள் ஆக்கி, கவிதைக் கூண்டுக்குள் போட்டு விளையாடுகின்றது பிள்ளைத் தமிழ்

மனிதர்களுக்கும் தெய்வங்களுக்கும் இடையே உள்ள இணைப்புச் சங்கிலிகள் குழந்தைகள் என்பார்கள். ஆனால் குழந்தைப் பருவத்தைத் தெய்வத்தின் மேலேற்றி, கவிதைத் தேர் ஏற்றிப் பத்துப் பருவங்கள் ஆக்கி உலாவிடுகின்றன பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள்.

பின்ளைத் தமிழ் இலக்கியத்தின் ஆணி வேர்

**“குழவி மருங்கினும் கிளவ தாகும்”**

**(தொல்.புறம்.29)**

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியத்திலும் பிள்ளைத் தமிழின் வேர்கள் கிடக்கின்றன.

பட்டினப்பாலையில், ‘‘பொற்கால் புதல்வர் புரவியின் றுருட்டும் முக்கால் சிறுதேர்’’ என்று வருகிறது.

‘‘மணற் சிற்றில் காலில் சிதையா அடைச்சிய சிறுபட்டி’’ கலித்தொகையில் வருகிறான்.

**“குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும்தொட்டும் கல்வியும் துழந்தும்**
**நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மழலைக் குழந்தையர் மன்னர்களையே மயக்கியிருந்தனர்”**

வாழ்வில் மட்டுமல்லாமல் பிரபந்தங்களுள் முதலில் உருப்பெற்றதும் பிள்ளைத் தமிழே என்பது தமிழறிஞர்கள் கருத்து.

பெரியாழ்வார் தம் திருமொழியில் கண்ணனின் பிள்ளையின் குறும்புகளைத் தோழியிடம் சொல்லிப் புலம்புவதாகக் கூறும் பாடல்களிலிருந்து பிள்ளைத் தமிழ் சிற்றிலக்கியமாக வடிவு கொள்ளத் தொடங்கிவிட்டது எனலாம்.

தெய்வங்கள், மக்களைப் பாட்டுடைத் தலைவராக்கி அவர்கள் மேல் குழந்தைமையை ஏற்றி, பத்துப் பருவங்களாக்கிப் பாடுகின்றன பிள்ளைத் தமிழ் நூல்கள்.

ஆண்பால், பெண்பால் பிள்ளைத் தமிழ்களாக அவை பிரிந்தன காப்பு முதலாக அம்புலி ஈறாக, வரும் பருவங்கள் பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும் உரியவை. ஆனால் ஈற்றில் வரும் சிறுபறை, சிற்றில், சிறுதேர் ஆகிய ஆண்பால் பருவங்களுக்கு ஈடாகப் பெண்பால் பிள்ளைத் தமிழில் கழங்கு, அம்மானை, ஊசல் எனும் மூன்று பருவங்கள் கொள்ளப்படும்.

சில பிள்ளைத் தமிழ்களில் இப்பருவங்கள் வேறாக மாறுதலும் உண்டு மூன்று முதல் இருபத்தொரு திங்களில் பிள்ளைத் தமிழில் வரும் பத்துப் பருவங்களையும் அடக்கி உரைப்பர்.

**"மூன்று முதல் இருபத்தொன்றனுள் ஒற் றைப்**

**பெறுதிங்கள் தனிற் பிள்ளைக் கவியைக் கொள்ளே"**

என்பது சித்திரப் பாட்டியல் ஆசிரிய விருத்தங்களே பிள்ளைத் தமிழின் பாவகையாகும்.

கடவுளரை, ஞானிரை, அரசர்களை, குறுநில மன்னர்களைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் இலக்கிய வகையே பிள்ளைத் தமிழ் ஆகும். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடிய 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்' தமிழின் முதல் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகக் கருதப்படும். எனினும் பெரியாழ்வார் குலசேகர ஆழ்வார் பாடல்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் வேர்களைக் கண்டடைய இயலும்.

1. நச்சினார்க்கினியரது தொல்காப்பிய உரையில் பிள்ளைத் தமிழில் அமையும் பருவங்களைக் காண முடிகிறது.

2. கி.பி. 7-ம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்த்த பாட்டியல் இலக்கண நூல்களும் பிள்ளைத்தமிழுக்கு விரிவாக இலக்கணம் வகுத்துள்ளன.

3. பிள்ளைத்தமிழ், பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்றும் கூறப்பெறும்.

**கலம்பகம்**

கலம்பகம் என்னும் சொல்லுக்குப் பல்வகை கலந்த ஒரு கலவை என்பது பொருளாகிறது.

"கனிவண்டு மழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலத் தொடையல்" எனும் தெர்ண்டரடிப் பொடியாழ்வார் வாக்கால் பன்னிறமுடைய, பன்மணமுடைய ஒருமாலை கலம்பகம் என்பது தெளிவாம்.

கலம் + பகம் = கலம்பகம்

கலம் - 12 (மரக்கால் படி)

பகம் - அதனிற் பகுதி 6

ஆக 18 உறுப்புக்களுடைய இலக்கியத் தொகுதி கலம்பகம் என்பதும் பொருந்துகிறது.

அகப்பொருள், புறப்பொருள் துறைகள், பாக்கள், பாக்களின் இனங்கள், மக்களில் பல்வகை இனங்கள், அவா் தம் தொழில்கள், அவர்கள் பண்புகள் - அத்தனையையும் கலந்து அகத்தே வைத்திருப்பதனால் இதற்குக் கலம்பகம் என்னும் பெயர் மிகப் பொருந்துவதாகவே தோன்றுகிறது.

கலம்பகங்கள் அகம், புறம் என இரு பிரிவுகளிலும் பாடப்பெறும் புய வகுப்பு, அம்மானை, ஊசல் முதலிய பதினெட்டு உறுப்புகள் கொண்டது. அந்தாதியாக அமைக்கப்பெறும்.

**பரணி**

பரணி இலக்கியம் 'விருந்து' எனும் தொல்காப்பிய இலக்கியப் பகுப்பில் அடங்கி, களவேள்வி, கொற்றவை நிலை, முன்தேர்க் குரவை எனும் புறத்திணையியல் துறைகளின் கூட்டுக் கலவையாக எழுந்ததாகும்.

**"போர்க்களத்தில் பரண் மீதமர்ந்து, களக்**

**காட்சியைப் பாடுவது பரணி"**

என்றும்,

**“அணிமணிகளை வைக்கும் செப்புக்குப்**

**பரணியெனும் பெயருண்மையால்**

**பல்வேறு கற்பனைகளும் சுவைகளும்**

**பாக்களும் சந்தங்களும் சேர்த்துவைத்திருக்கும்**

**நூல் பரணி”**

என்றும்,

**“பரணி நாளில் கூளிகள் காளிக்குக் கூழ் சமைத்துப் படைக்கும்**

**நிகழ்வால் பரணி”**

என்றும்,

**“பரணியிற் பிறந்து தரணியாள்வான் மேல் பாடுவது பரணி”**

என்றும்,

பல்வகைப் பெயர்க்காரணங்களைக் கொண்டிலங்குவது பரணியெனும் சிற்றிலக்கியமாகும்.

வெல்லப்பட்டார் தொடர்பால் பெயர் பெறுவது இதன் சிறப்புகளுள் ஒன்று. இரணியனை வென்றதால் இரணியவதைப் பரணி. கலிங்கத்தைக் கருணாகரத் தொண்டைமான் வென்றதால் கலிங்கத்துப் பரணி. தக்கனை வென்றதால் தக்கயாகப் பரணி, பாசத்தை வென்றதால் பாசவதைப் பரணி, மோகத்தை வென்றதால் மோக வதைப் பரணி என்று வெல்லப்பட்ட பெயர்களை வைத்தே பரணிகளுக்குப் பெயரிடப்பட்டிருக்கின்றன. கலிங்கத்துப் பரணி 13 உள்ளுறுப்புகளைப் பெற்றுள்ளது.

பரணி எனும் நாள்மீனையும் ஒருவேளை அறிந்திருக்கலாம். ‘பரணி தரணி ஆளும்’ என்றொரு வழக்கும் உண்டு. அந்த நட்சத்திரத்தில் பிறந்தவரைக் குறித்து. பரணி எனும் நட்சத்திரத்தின் தேவதைகள் காளியும் யமனும் ஆவார்கள். அந்த

நாள்மீனால் அமைந்த பெயர்தான் இவ்வகை இலக்கிய நூலுக்கும் பெயராக அமைந்தது என்று டாக்டர். உ.வே.சாமிநாத ஐயர் கருதுகிறார். போர்க்கள அதிபதிகள் யமனும் காளியும் என்பதால் இவ்வாறு கருதக் காரணம் இருக்கும். பொதுவாக மாவீரரைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி பாடுவது என்றார்கள். பெரும்போரை சாமான்ய மன்னர்கள் வெல்ல முடியாது. பரணியை சாமான்யப் புலவர்கள் பாடவும் ஏலாது.

**"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**

**மானவனுக்கு வகுப்பத பரணி"**

என இலக்கண விளக்கம் கூறும். அது பரணியின் இலக்கணம். கடும் போரில் ஆயிரம் யானைகளை உடைய எதிரிப்படையை வென்ற மன்னவர்மீது மட்டுமே பரணி பாடப்படுவது மரபு.

**சதகம்**

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் சதக இலக்கியங்களும் தனி இடம் பெறுகின்றன. 'சதம்' என்னும் வடசொல் நூறு என்னும் பொருள் தருவது அது 'க' என்னும் எழுத்துப் பேறு பெற்று சதகம் என்றாகி 100 பாடல்களை உடைய நூல் எனும் பொருள் தந்து நிற்கிறது.

**"வினையும் ஒருபொருள் மேலொரு நூறு**

**தழைய உரைத்தன சதகம் என்ப"**

என்பது சதகத்திற்கு 'இலக்கண விளக்கம்' எனும் நூல் கூறும் இலக்கணம் ஆகும்.

மக்களின் வளவாழ்விற்கு வேண்டப்படுகிற அத்தனை அறக் கருத்துக்களையும் நீதிகளையும் வழங்கி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் நல்லியல்பினை உடையன சதக இலக்கியங்கள். மக்களின் உணர்வில் பதியுமாறு அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய செய்திகளை, அகப்பொருள் புறப்பொருள்

பற்றிய செய்திகளை, கற்பார் மனங்களில் கனிவுடன் பதிய வைப்பதில் சதக இலக்கியங்கள் பெருவெற்றி பெற்றுள்ளன எனறே கூற வேண்டும்.

திருவாசகத்தில் 100 பாடல்களுக்குத் 'திருச்சதகம்' எனப் பெயரிட்டுத் துவக்கிய மணிவாசகரே முதல் சதக ஆசிரியர் எனலாம். ஆனால் அவரின் பாடு பொருள் வேறானது இன்றைய ஆய்வின் முடிவுகளின்படி 'கார் மண்டல சதகம்' எனும் நூலே முதல் சதக நூலாகும். அதனை அடியொற்றி, 'தொண்டை மண்டல சதகம்', 'சோழ மண்டல சதகம்', 'பாண்டல சதகம்', கொங்கு மண்டல சதகம்' ஆகிய சதகங்கள் எழுந்தன. இம்மண்டல சதகங்கள் அந்த அந்த மண்டலங்களில் வாழும் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு அரிய நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து காக்கும் ஆவணக் காப்பகங்களாக இன்று விளங்கி வருகின்றன.

பக்தி நெறியை வளர்த்தும், நாட்டு மக்களின் வரலாற்றைப் பதிவு செய்தல், தனிப்பட்ட மக்களின் வாழ்க்கை நெறியை அமைத்துக் கொடுத்தல் என்னும் மூன்று கோட்பாடுகளை வரையறுத்துக் கொண்டு சதக நூல்கள் இயங்கியுள்ளன. மண்டல சதகங்கள் அம்மண்டலங்களின் எல்லைகளையும் அங்கு வாழும் மக்களின் வரலாற்றில் பதியத்தக்க சிறப்புப் செய்திகளையும் எடுத்து இயம்புகின்றன. படிப்பவர்களுக்கு அம்மண்டலங்களின் மேல் பற்றும் ஒரு பெருமிதமும் உண்டாகுமாறு எளிய நடையில் இவை எடுத்தியம்புகின்றன.

**மடல்**

மடல் இலக்கிய அகப்பொருள் சார்ந்த சிற்றிலக்கிய வகை ஆகும். இது காதல் குறித்த ஓர் இலக்கியம்

**மடல் ஏறுதல்**

இந்தச் சிற்றிலக்கிய வகைக்கு மடல் என்று பெயர் வந்தது என்று பார்ப்போம். தலைவன் தலைவியைக் காதலிக்கின்றான். எவ்வளவோ முயன்றும் தலைவனால் தலைவியை அடைய முடியவில்லை. எனவே தலைவன் தலைவியை

அடைவதற்கு இறுதி முயற்சியாக மடல் ஏறத் துணிகின்றான். சில சமயம் மடல் ஏறவும் செய்கின்றான். எனவே, தலைவன் தலைவியை அடைய மடல் ஏறுவதாகிய பாடு பொருளைக் கொண்ட இலக்கியம் ஆகையால் இதற்கு மடல் என்ற பெயர் ஏற்பட்டது எனலாம்.

பனை மரத்தின் கிளை மட்டை எனப்படும். இது இரண்டு பக்கங்களிலும் கூரிய முள் போன்ற பாகங்களைக் கொண்டிருக்கும். இந்தப் பனைமரத்தின் கிளையால் குதிரை போன்ற உருவம் செய்வர். இதன் மேல் காதல் கொண்ட தலைவன் ஏறி அமர்ந்திருப்பான். இதன் கீழ் உருளை பொருத்தப்பட்டிருக்கும். இதில் கயிற்றைக் கட்டி இழுத்துச் செல்வர். இதுவே மடல் எனப்படும்.

பனை மரக்கிளையால் செய்த குதிரையில் மயில் தோகை (பீலி), பூளைப்பூ, ஆவாரம்பூ, எருக்கம் பூ ஆகிய பூக்களால் தொடுத்த மாலையை அணிவிப்பர். மடல் ஏறும் தலைவன் உடம்பு முழுதும் திருநீற்றைப் பூசியிருப்பான். கையில் ஒரு கிளியைப் பிடித்திருப்பான். ஊரின் நடுவில் உள்ள நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்திற்குச் செல்வான். தான் செய்த மடலின் மேல் ஏறி இருந்து தன்கையில் உள்ள கிழியின் மேல் பார்வையை வைத்துக் கொண்டிருப்பான். வேறு எந்த உணர்வும் அவனிடம் காணப்படாது. தீயே தன் உடலில் பட்டாலும் அவனுக்குத் தெரியாது. மழை, வெயில், காற்று எதைப் பற்றியும் கவலைப்படமாட்டான். இவ்வாறு தலைவன் மடலில் ஏறியதும் ஊரார் அதை இழுப்பர். தலைவன் தலைவியைப் பற்றிப் பாடிக் கொண்டிருப்பான். இதுவே மடல் ஏறுதல் என்பதாகும்.

தலைவன் இவ்வாறு மடல் ஏறுவதால் என்ன பயன் உள்ளது. தலைவனின் துன்பத்தை ஊரிலுள்ளவர்கள் பார்ப்பார்கள். அவனுடைய துன்பம் தீர்வதற்காகத் தலைவியைத் தலைவனிடம் சேர்த்து வைக்க முயல்வார்கள். இதனால் தலைவன் தலைவியை அடைய வாய்ப்பு உள்ளது.

மேலும் தலைவனின் காமத்துயரம் நீங்க ஒரே வழி இது என்றும் கருதப்படுகிறது. எனவேதான் மடல் என்பதைக் காமம் ஆகிய கடலை நீந்துவதற்குரிய தெப்பம் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. திருவள்ளுவரும்.

**''காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**

**மடல் அல்லது இல்லை வலி''   (திருக்குறள்.1131)**

என்று கூறுகின்றார்.

**"மடன்மா கூறும் இடனுமார் உண்டே"** என்பது தொல்காப்பியம் இவ்வாறு சிறு துறையாக முன்பு அமைந்த மடலேறுதல் எனும் துறை வளர்ந்து வளர்ந்து பின்னர் மடற் பிரபந்தம் என்னும் தனிநிலையை அடைந்தது. இது கோவை நூல்களிலும் ஒரு துறையாக உள்ளது. சிறிய திருமடல், பெரிய திருமடல் என்று திருமங்கையாழ்வர் தன்னை நாயகியாக்கிக் கொண்டு பெருமானை மணந்து கொள்ள மடலேறுவேன் எனும் அருமையான இரண்டு மடற் பிரபந்தங்களை வரைந்துள்ளார்.

''பெண்கள் மடலேறுவதில்லை என்பது தென்னாட்டுப் பண்பாடு, நான் அதனை மீறி இவ்விடத்தில் மட்டும் வடநாட்டுக் கொள்கையை மதித்து மடலேறுகிறேன்'' என்று நாயகியாக மாறிய நிலையில் திருமங்கை யாழ்வார் பெரிய திருமடலில் பேசுகிறார்.

'ரா' என்னும் ஓரெழுத்தையே எதுகையாகக் கொண்டு சிறிய திருமடலில் 77 கண்ணிகள் பாடியுள்ளார் திருமங்கையாழ்வார். 'ன்' ன்னனும் எழுத்தையே எதுகையாகக் கொண்டு 148 கண்ணிகள் பெரிய திருமடலில் பாடியுள்ளமை விளக்க வைக்கிறது. மடல் ஏறுவதாகக் கூறுவது ஐந்திணை நெறியாகும் மடலேறுவது பெருந்திணையாகிவிடும் என்பர் இலக்கண நூலார்.

**நம்பி அகப்பொருள் கருத்து**

நம்பி அகப்பொருள் என்ற இலக்கண நூல் மடல் பற்றி இருநிலைகளைக் கூறுகின்றது. மடல் கூற்று, மடல் விலக்கு,

தலைவன் தலைவியை அடைவதற்காக மடல் ஏறுவேன் என்று கூறுவது மடல் கூற்று என்கிறது. அவ்வாறு மடல் ஏற வேண்டாம் எனத் தலைவனை விலக்குவது அல்லது தடுப்பது மடல் விலக்கு என்கிறது.

**சிற்றிலக்கிய வளர்ச்சி நிலைகள்**

தமிழிலக்கியங்களில் பெரும்பாலனவும் சிற்றிலக்கியங்களே. அவை எல்லாக் காலத்திலும் காணப்படுகின்ற. பழம்பாடல்களாகிய சங்கப் பாடல்களைத் தனித்தனியாக நோக்கினோமானால் அவை ஒவ்வொன்றும் அகப்பொருள் பற்றியோ புறப்பொருள் பற்றியோ அமைந்த ஒருவகை சிற்றிலக்கிய மரபு கொண்டவை என்பது புலனாகும். பெருங்காவியங்கள், சிறு காவியங்கள், புராணங்கள் ஆகியவை தொடர்நிலைச் செய்யுள் எனப்படும் பேரிலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவை ஒழிந்தன எல்லாம் சிற்றிலக்கியங்களே.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சோழராட்சிக் காலம் போன்று காப்பியங்களும் புராணங்களும் தோன்றவில்லை. ஆயினும் பள்ளு, உலா, தூது, மாலை, கலம்பகம் முதலிய சிறுபிரபந்தங்களும் கோயில்களைப் பற்றிய சிறுசிறு தலபுராணங்களும் தோன்றின. பிரபந்தம் என்பது வடமொழிச் சொல் சிறு பிரபந்தங்கள் எனப்படுகின்ற வடமொழிச் சொல் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்று வழங்கப்படுகின்றன.

செய்யுள், யாப்பு எனும் சொற்களைப் போன்றே பிரபந்தம் என்ற சொல்லும் நன்கு கட்டப்பட்டது என்ற பொருளுடையதாகும். பிரபந்தங்கள் 96 என்பது வழக்கு, இதனை ஒட்டி வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் பிரபந்தம் 96 வகை என்று குறிப்பிடுவார்.

இப்பிரபந்தங்களின் இலக்கணம் பற்றிப் பிற்காலத்தில் தோன்றிய பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை என வழங்கும் வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்

பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்கள் விரித்துரைக்கின்றன. ஆனால், இவற்றுள் கூறப்படாத சிற்றிலக்கியங்கள் சிலவற்றை இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

96 வகைப் பிரபந்தம் எனும் பொழுது தமிழிலுள்ள காப்பியம் புராணம் சிறுநூல்கள் அனைத்தையும் உட்கொண்டே கூறப்பட்டு வந்தது என்பதைப் பாட்டியல் நூல்களைக் கொண்டு தெளியலாம். சிற்றிலக்கிய நூல்கள் நெடும்பாட்டு போல்வன. ஒரு சிறு துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கியன. சுருங்கிய அளவினதாகவும் எளிதில் படித்து முடிக்கக் கூடியனவாகவும் அமைவன. இச்சிற்றிலக்கியங்கள் பொதுவாக ஆண்டவன், அரசன், வள்ளல், குரு ஆகியோரின் சிறப்புக்களை எடுத்துரைப்பதையே தமது நோக்கமாகக் கொண்டு விளங்கின.

சிற்றிலக்கியம் என்ற சொல் வழக்குப் பிற்காலத்தாயினும் சங்க காலம் முதலே இவ்வகைமைகள் தமிழில் இடம் பெற்றிருந்தது. காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றன. பல சிற்றிலக்கிய வகைமைகளுக்கான வித்துக்களை நாம் சங்க இலக்கியத்துள் காணலாம். (தமிழிலக்கிய வரலாறு, அ.ஜெயம், ப.208).

அன்று முதல் இன்று வரை பல சிற்றிலக்கிய வகைகள் சிறந்தது வளர்ந்துள்ள போதும் சிற்றிலக்கிய வகை மோலோங்கிய காலம் என்பது கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கிய காலம் என்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பிய காலம் என்றும் அக்காலக் கட்டத்தில் தோன்றி இலக்கியங்களின் மேலோங்கிய தன்மையால் சிறப்பித்துக் கூறுவது போல கி.பி.1350 முதல் ஆட்சி புரிந்த நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கிய காலம் என்று கூறலாம்.

சிற்றிலக்கியங்கள் அகம் பற்றியன, புறம் பற்றியன, பக்தி பற்றியன எனப் பல பிரிவுகளாகப் பகுத்து நோக்கத்தக்கன. இவற்றுள் தலைமை வாய்ந்தவையாகக் காணப்படுவன அந்தாதி, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், கோவை, உலா,

மாலை, தூது, பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இச்சிற்றிலக்கியங்கள் எல்லாம் தொல்காப்பியம் கூறும் விருந்து எனும் வனப்பினுள் அடங்கும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தில் எழுந்த காப்பிய இதிகாசங்களைப் பேரிலக்கியங்கள் என்றும் பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களைச் சிற்றிலக்கியங்கள் என்றும் பிரிக்கின்றனர். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் சிற்றிலக்கியம் என்ற சொல் இல்லை சிற்றிலக்கியம் பேரிலக்கியம் என்னும் பிரிவு தமிழலக்கிய நெடு வரலாற்றில் அண்மைக் காலத்ததே ஆகும். (திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ந.பிச்சமுத்து, ப.153).

அடிகளால் மிகுந்து பொருள்களால் சிறந்து மக்கள் வாழ்வையொட்டி மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தி இன்பம் நல்கத் தோன்றினவெல்லாம் பேரிலக்கியங்களாயின. அவைகள் தாம் கூறும் பொருள் பாகுபாட்டால் பெயர் பெற்றிருக்கலாம். அடிகளால் குறைந்து கற்பனை மிக்குக் கடவுள்களையும் செல்வந்தர்களையும் தலைவர்களாகக் கொண்டு இயற்றப்பட்டவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. இவை தாம் கொண்டுள்ள பாவகையால் பெயர் பெற்றிருக்கும் பிரபந்தம் என்ற வட சொல்லால் அழைக்கப்பட்டன வெல்லாம் சிற்றிலக்கியங்கள் எனச் செந்தமிழால் அழைக்கப்படும் என்று விளக்குவர் டாக்டர் இலக்குவனார். இதிலிருந்து பிரபந்தம் என்று அழைக்கப்பட்ட நூல்கள் இப்பொழுது சிற்றிலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன (திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ந.பிச்சமுத்து, ப.153).

பிரபந்தங்கள் 96 என்னும் வழக்கு கி.பி.14 ஆம் நூற்றாண்டில் எழுந்த சிவந்தெழுந்த பல்லவன் உலாவில் முதன் முதலாகக் குறிக்கப்படுகிறது. தொண்ணூற்றாறு கோபிர பந்தங்கள் கொண்ட பிரான் என்று கூறுவது அறியத் தக்கது.

**“பிள்ளைக் கவி முதல் புராணம் ஈறாகத்**

**தொண்ணூற் றாறெனும் தொகைய தாகும்”**

என்று 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரபந்த மரபியல் கூறுகின்றது. தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்களைப் பற்றிய தெளிவான விளக்கத்தை முதன் முதல் தந்தவர் வீரமாமுனிவரே. 1838 -ல் வெளிவந்த தொன்னூல் விளக்கம் எனும் அவர் நூல் பிரபந்தங்களின் பட்டியலைத் தருகிறது.

இன்றைய நிலையில், நொண்டி நாடகம், துளுவ நாடகம், வில்லுப்பாட்டு, கப்பற்பாட்டு, கும்மி, கோலாட்டப் பாட்டு, கண்ணி போன்ற சிற்றிலக்கியங்களைச் சேர்த்தால் 96 என்பது நூற்றுக்கு மேல் போய்விடும்.

### சிற்றிலக்கிய உள்ளடக்கம்

சிற்றிலக்கியங்களின் உள்ளடக்கம் சங்கப் பாக்களைப் போலவோ அல்லது பிற, காப்பிய, பக்தி இலக்கியங்களைப் போலவோ சமுதாயம் தழுவியதன்று, இடைக்காலத்தில் நிலப் பிரபுத்துவ உச்சகட்டத்தில் அரசனை ஆண்டவனாகப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறுவதை நோக்கமாகக் கொண்டவை.

பரணி மன்னனின் மதிப்பைப் பெறுவதற்காகப் போரின் அழிவைப் புகழ்ந்து பாடும் நூல். உலா நிலப் பிரபுக்களின் காம விகாரங்களைத் தூண்டிவிடும் நூல். கலம்பகம் சமுதாயத்திற்குத் தருவதற்கு உருப்படியான பழைய இலக்கியங்களுள் உருவவாதத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. பிள்ளைத் தமிழ் ஓரளவுக்கு கலைத்திறன் உள்ள இலக்கியம். மாலை என்பது கடவுளைப் புகழ்ந்து பாமாலை சூடும் வகையைச் சார்ந்த இலக்கியம் ஆகும்.

### சிற்றிலக்கியம்

சிறிய இலக்கியம் எனப் பொருள்படும் சிற்றிலக்கியம் எனும் இச்சொல்லாட்சி மிகவும் அண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. இன்று சிற்றிலக்கியம் எனும்

சொல்லால் குறிப்பிடப் பெறும் இலக்கிய வகைகளை ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னால் பிரபந்தம் எனும் வடமொழிச் சொல்லால் குறித்தனர்.

சங்க இலக்கிங்களான தொகை நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவற்றையும் பேரிலக்கியங்கள் என வழங்கும் வழக்கு உரையாசிரியர் காலத்திலேயே உண்டு. மேலும், காப்பியங்களைப் பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்துவதும் ஏறக்குறைய உரையாசிரியர்களின் காலத்திலேயே உருவாகி விட்டதாகவே தெரிகிறது. தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் கண்டு மொழிந்துள்ளமையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, காப்பியங்களைப் பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்தும் வழக்குப் பிற்காலத்தில் அதாவது, கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே இருந்தது என்பது தேற்றம். ஆனால், சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்று வழங்கும் வழக்கினை அக்காலத்தில் காண முடியவில்லை.

உரையாசிரியருள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலானோர் பிள்ளைத் தமிழ், கலம்பகம், தூது உள்ளிட்ட சில இலக்கிய வடிவங்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்வராயினும் அவற்றை எல்லாம் சிற்றிலக்கியம் என்றோ பிரபந்தம் என்றோ இன்று வழங்குவது போன்று வழங்கினாரில்லை. ஆக, உரையாசிரியர் காலத்தில் பேரிலக்கியம் மற்றும் பெருங்காப்பியம் என்ற வகைமைப்பாடு இருந்தபோதும் சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்ற வகைமைப்பாடு இல்லாதிருந்தது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

பலரோ ஒருவரோ பாடிய பல பாடல்களைத் தொகுத்து ஒரே நூலாகக் காட்டப் பெறும் இலக்கிங்களைப் பேரிலக்கியம் என்றும் அதிகமான எண்ணிக்கை உடைய பாடல்களைக் கொண்ட தொடர்நிலைச் செய்யுளட்களாலான நூல்களைப் பெருங்காப்பியம் என்றும், வழங்கும் வழக்கினைக் கண்ட பிற்காலத்தவர் குறைந்த பாடல் எண்ணிக்கையோடு தனித்தனி இலக்கிய வகைகளாக வழங்கப் பெற்று

வரும் தூது, உலா, மாலை, கலம்பகம் முதலானவற்றை அப்பேரிலக்கியங்களிலிருந்து வேறுபடுத்தித் தனி வகையாகக் காட்ட எண்ணி அத்தகு சிறிய இலக்கிங்களை எல்லாம் பிரபந்தங்கள் எனும் பொதுப் பெயரால் வழங்கப் தொடங்கினர்.

பிரபந்தம் எனும் சொல் நன்கு கட்டப்பட்ட இலக்கிய வடிவம் எனும் பொருள் தருதலால் இலக்கியம் எனும் சொல்லுக்கு மாற்றாகவே இச்சொல்லை முதலில் பயன்படுத்தினர் எனலாம். இன்னும் சற்று ஆழந்து நோக்கினால் பிரபந்தம் எனும் வடசொல், தமிழில் தொகை, திரட்டு, எனும் சொற்கள் தரும் பொருளிலேயே முதன் முதலில் ஆளப்பட்டது என்பது புலனாகும்.

பிரபந்தம் என்ற சொல்லாட்சி தமிழில் பெறுகிற்று. இலக்கியம் எனும் நல்ல தமிழ்ச் சொல்லின் இடத்தைப் பிரபந்தம் எனும் வடசொல் கைப்பற்றித் தக்க வைத்துக் கொண்டது. பிரபந்தம் எனும் சொல் ஒருகாற் பேரிலக்கியம் என்னும் மற்றொருகாற் இலக்கியம் என்றும் பொருள் தருமாறு தமிழில் வழங்கி வருதலைக் கண்ட பிற்காலத்தவா் தூது, உலா, கலம்பகம் உள்ளிட்ட சிறிய இலக்கிங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் எனவும் வழங்கத் தலைப்பட்டனர். சில்லறை எனும் சொல் சிலவாக அறுக்கப்பட்டது எனப் பொருள் தருதலால் சிறிய இலக்கியம் என்பதை உணர்ந்த சில்லறைப் பிரபந்தம் என வழங்கினர் (சிற்றிலக்கிய ஆராய்ச்சி - முதல் தொகுதி, இரா.கண்ணன், ப.23). எனவே பிரபந்தம் எனும் சொல் இன்று கருதுமாறு சிற்றிலக்கியம் என்ற பொருளை எக்காலத்தும் தரவில்லை என்பதை உணர வேண்டும் பாட்டியல் நூல்கள் கூட பிரபந்தம் என்னம் சொல்லை இலக்கியம் எனும் பொருளிலேயே ஆண்டுள்ளன. எனவே தான் அப்பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம், காப்பியம், புராணம் ஆகிய இலக்கிய வகைகளையம் பிரபந்தங்கள் என்றே குறிப்பிட்டுள்ளன. இலக்கியங்களை அவற்றின் அளவு கருதி வகைமை செய்தோர். இன்று சிற்றிலக்கியங்கள் எனச் சுட்டப்பெறும் இலக்கிய வடிவங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் என்றே வழங்கினர் என்பத நாம் கருத்தில்

கொள்ள வேண்டியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தனித்தமிழ் இயக்கம் எழுந்தபோது சில்லறைப் பிரபந்தம் என்ற பெயருக்குப் பதிலாகத் தனித்தமிழிச் சொல்லான சிற்றிலக்கியம் எனும் பெயர் வழக்கிற்கு வந்தது.

**சிற்றிலக்கியப் போக்குகள்**

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் அமைந்த சமூக அமைப்பு வேறு. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வந்த நிலவுடைமைச் சமூகம் வீழ்ச்சியுற்றுத் தொழில் வழிப்பட்ட முதலாளித்துவச் சமூக அமைப்பு இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் கொள்கிறது. இதன் காரணமாகச் சமூக விழுமியங்கள் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகின்றன. இதனால் இலக்கிய அமைப்புகளிலும் உள்ளடக்கங்களிலும் பெரும் மாறுதல்கள் தோன்றின.

பொருளாதார அமைப்பில் உண்டான மாற்றம் மறுமலர்ச்சி அரசியல் கலை இலக்கிய அமைப்புகள் இயக்கங்களாக மாறித் துணை செய்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களில் தமிழகத்தில் நிலவிய சமூக மாற்றமும் சிற்றிலக்கிய போக்கிற்கு வழிவகுத்தது எனலாம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் சமயமே பல்வேறு காலங்களில் சமூகப் போராட்டத்தை நிகழ்த்தி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் சிற்றிலக்கியங்களில் பெரும் பகுதி சமய இலக்கியங்களே. இக்காலச் சிற்றிலக்கியத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சமயம் சாாந்த சிற்றிலக்கியம் மற்றொன்ற சமயஞ் சாரா சிற்றிலக்கியம் என பகுக்கலாம். ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கித் தமிழ்ச் சமுதாயம் சமய முதன்மைச் சமுதாயமாகத்தான் திகழ்ந்துள்ளது. பௌத்தம், சமணம், சைவம், வைணவம், இசுலாம், கிருத்துவம் என ஒவ்வொரு காலத்திலும் சமயம் முதன்மை பெற்று வந்துள்ளது.

ஒரு சமுதாயத்தில் எது முதன்மை பெறுமோ அல்லது முன்னிறுத்தப்படுமோ அது இலக்கியப் பாடுபொருளாவது மரபு. தவிர்க்க முடியாததும் கூட. அவ்வகையில் ஏறத்தாழ பதினேழு நூற்றாண்டுகள் தமிழகத்தில் சமயங்கள் தாம் பெரு வீச்சில்

ஆட்சி செலுத்தி உள்ளன. எனவே, சமயக் கடவுளரும் சமயத் தலைவர்களும் சமயத் தத்துவங்களும் இலக்கிய உரு எய்துவது எளிதாகவும் மரபாகவும் அமைந்து விட்டது. இந்நிலை இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்வது ஆயிற்று. இருபதாம் நூற்றாண்டுச் சமயச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு இரு அடிப்படைகள் உண்டு.

அவை,

1.தொன்று தொட்டு வரும் மரபுவழியே சிற்றிலக்கியங்களை யாக்க முற்பட்டபோது முந்தை மரபு சமய உறவுடைய மரபாக இருந்தமை.

2. இருபதாம் நூற்றாண்டின் சமூக மறுமலர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றிற்கு எதிராகச் சமயம் தன் நிலைபாட்டை வலுப்படுத்த மேற்கொண்ட முயற்சி, சமயத்தின் வீச்சிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப சமயச் சிற்றிலக்கியங்கள் பெருகி வருவதையும் உணர முடிகிறது.

**சிற்றிலக்கிய எண்ணிக்கை**

தமிழில் இந்நூற்றாண்டு வரையிலும் பிறந்துள்ள சிற்றிலக்கியங்களை எண்ணிட்டு வரையரைக்கப்படுதலும் இயலுவதன்று. காலந்தோறும் புதிது புதிதாகக் கிளைக்கின்ற ஒன்று எண்ணிற்குள் அடங்குமோ? முன்னையோர் சிலர் பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்கள் உள என்றனர். இந்த எண்ணிக்கை எந்த வகையில் நோக்கினும் பொருந்தவில்லை.

சிற்றிலக்கியங்கள் பலவற்றின் இயல்புகளை விளக்கும் பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப்பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களில் 96 சிற்றிலக்கியங்களின் இலக்கணம் தரப்படவில்லை. அன்றியும் ஒரு நூலில் உள்ளவாறு மற்றொன்றில் இல்லை. இலக்கிய வகைகளும் வேறுபாட்டுக் காணப்படுகின்றன. பிரபந்த மரபியல் என்ற ஓர் இலக்கிய நூல் 96 என்பதனை நிரப்ப முயன்றள்ளது. (சிற்றிலக்கிய வளர்ச்சி, மு.சண்முகம் பிள்ளை, ப.4)

**பிரபந்த எண் வரையறை**

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கருத்து இன்று மிகப் பரவலாக வழங்கி வருகிறது. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்ற கருத்துப் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து வழங்கி வருவதை இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. ஏறக்குறைய பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலோ அதற்குச் சற்று முன்னரோ பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கோட்பாடு தமிழ் இலக்கிய உலகில் தோன்றிற்று எனலாம். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான வீரமாமுனிவர் தாம் எழுதி வெளியிட்ட சதுரகராதியில் தொண்ணூற்றாறு இலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

படிக்காசுப்புலவரின் காலந் தொடங்கி மெல்ல மெல்ல வளர்ந்து வந்த பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் கோட்பாடு இருபதாம் நூற்றாண்டில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனும் புதிய கோட்பாடு எழ அடித்தளமாயிற்று. பிரபந்தங்கள் என்ற சொல் பொதுவாக இலக்கியங்கள் என்ற பொருளிலேயே வழங்கப் பெற்று வந்திருப்பினும் பிரபந்தங்கள் எனும் சொல் சிற்றிலக்கியம் எனும் பொருளைத் தரும் எனப் பிற்காலத்தவரால் பிழைப்பட உணரப்பட்டமையால் பிரபந்தங்கள் (இலக்கியங்கள்) தொண்ணூற்றாறு வகைப்படும் எனப் பாட்டியலார் முதலானோர் கருதிய கருத்து இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் எனக் கருத இடம் தந்தது. உண்மையில் இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்ற கோட்பாடு எவ்வகையானும் பொருந்தாது என்பதையும் இலக்கிய வகைகள் காலந்தோறும் புதிது புதிதாக எண்ணிறந்த அளவில் எழுந்துள்ளமையும் அறிஞர் பலரும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர். எனவே தொண்ணுற்றாறு எனும் இவ்வெண் வரையறை பற்றிய கோட்பாடு பொதுவாக வழங்கி வரும் ஒரு வழக்கே அன்றிப் பொருள் புணர்ந்த கோட்பாடன்று என்பது உணர வேண்டுவதாகும்.

**சிற்றிலக்கிய தனித்தன்மை**

ஒரு தனிப்பாடல் கூட ஓர் இலக்கியமாகலாம். ஆற்றுப்படை வாழ்த்து, கையறுநிலை முதலிய பொருள்களில் வரும் தனிப்பாடல்கள் தனித்தனி இலக்கியமே. பிரபந்தம் என்பது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடங்குவதன்று. பிரபந்த இலக்கணம் உரைக்கும், பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம் உட்பட எல்லா இலக்கியங்களையுமே உள்ளடக்கி விளக்கம் தருகின்றன. ஆனால், இன்றைய வழக்கில் பிரபந்தம் என்பத பெருங்காப்பியம் தவிர ஏனைய இலக்கிய வகைகளைச் சுட்டுவதற்கே வழங்குகின்றது. பிரபந்தம் என்பதனைச் சிற்றிலக்கியம் என்னும் பெயராலும் இக்காலத்தில் வழங்கி வருகின்றனா்.

ஒவ்வொரு காலத்தும் எழுந்த நூல்கள் அந்தந்தக் காலத்து மக்களின் வாழ்க்கைச் சூழலை ஒட்டி அமைதல் இயல்பே. கால ஓட்டத்தில் மக்களின் நோக்கும், போக்கும் மாறுபடுவதும் இயல்பே. இலக்கியங்கள் காலத்திற்கேற்பக் கோலம் பல பூண்டு கருத்துகளிலும் வேறுபட்டு வளா்ந்து வந்துள்ளன.

நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கானது சிற்றிலக்கியங்களிலும் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. பள்ளு, குறவஞ்சி என்ற இரு இலக்கியங்களும் நாட்டுப்புற இலக்கியமே என்று சொல்லும் வகையில் செல்வாக்குற்று நாட்டுப்புற இலக்கியத்தையே மூலமாகக் கொண்டு முளைவிட்டவை ஏனையவற்றில் நாட்டுப்புற இலக்கியத்தின் கூறுகளையும் குறிப்புகளையும் காணலாம்.

## வினாக்கள்

1. சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளா்ச்சியும் குறித்து எழுதுக.
2. தூது, உலா - வரையறை தருக.
3. பள்ளு, குறவஞ்சி - விளக்கம் தருக.
4. அந்தாதி, கலம்பகம் - குறிப்புத் தருக.

5. பரணி, மடல் - விளக்கம் தருக.
6. சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலைகளை விளக்குக.
7. சிற்றிலக்கியத்தின் தனித் தன்மைகள் யாவை?
8. சிற்றிலக்கியத்தின் சிறப்புகள் யாவை?
9. சிற்றிலக்கியத்தின் வகைகளை விளக்குக

# அலகு - 2

## முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்

### குமரகுருபரர்

தென்பாண்டி நாட்டில், ஸ்ரீவைகுண்டத்தில், சைவ வேளாள மரபில் பிறந்தவர் குமரகுருபார். 17 -ம் நூற்றாண்டு என்று அறிகிறோம். திருமலை நாயக்கர் அவையில் இருந்து பெருமை சேர்த்த திருக்கிழார். காசியில் சில காலம் வாழ்த்திருக்கிறார்.மாபெரும் புலவர் என்பதை அவர் பாடி வைத்து விட்டுப் போன நூல்களும் அவர் கையாண்ட தமிழும் சாட்சியாக நின்று நிருபிக்கும்.

### இவர் பாடிய நூல்கள்

முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர், முருகன் மீது பாடிய கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் தியாகராசப் பெருமான் மீது பாடிய திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பரம் நடராசப் பெருமான் மீது இயற்றிய சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, ஞான உபதேசம் செய்த தமது ஆசிரியர் மாசிலாமணி தேசிகர் மீது பாடிய பண்டார மும்மணிக்கோவை, காசி விசுவநாதர் மீது பாடிய காசிக்கலம்பகம், கலைமகள் மீது பாடிய சகலகலாவல்லி மாலை என்பன.

வைத்தீஸ்வரன் கோயில் என்று அழைக்கப்பெறும் புள்ளிருக்கும் வேலூரில் புள்ளிருக்கும் வேலூர், புள்ளிருக்கும் வேளுர் இரண்டில் எது சரி? கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் மீது பாடியது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் முழுக்க முழுக்க பக்தி இலக்கியம். இது உருகியுருகித் தமிழ் பாடுகிறார் குமரகுருபார்.

வருகைப் பருவத்தில் ஒரு பாடல்,

**“நஞ்சில் தோய்த்துக் கொலை தீற்றும்**

**நயன வேலும், கரும்பு உருவ**

**நாமச்சிலையும், அகல் அல்குவ**

**நகு பொன் தேரும், இகல் கடந்து”**

உரையானது பின்வருமாறு அமையும்.

நஞ்சில் தோய்ந்த கொலைத்தன்மை கொண்ட நயன வேலும், கரும்பு உருவமும் நாம வில்லும், பொற்தேரை ஏளன நகையாடுகின்ற அகன்ற அல்குலும், பகை வென்று, வஞ்சிக்கொடி போன்ற நுண் இடை சாய்த்து, மதர்த்துக் களித்து மது மயக்கம் தரும் கொங்கைகளையும் மற்றும் படைகள் பற்பலவும் வகுத்துக்கொண்டு, மடல் அவிழ்ந்த தாமரைப் பீடத்தில் வீற்றிருக்கும் செந்திரு மகளைப் போன்று பொலியும் பெண்கள் கடல் போன்றும் காமன் படை வீடு போன்றும் காட்சியால் அம்சொல் தமிழ்கள் காமவேளின் வேளுருக்கு அரசே வருக வருகவே அருள் ஆனந்தக்கடல் பிறந்த அமுதே வருக வருகவே.

பெண் குழந்தைகள் சிற்றில் கட்டி விளையாடுவார்கள் துடுக்கான ஆண் குழந்தைகள், அந்தச் சிற்றிலைக் காலால் ஏத்திச் சிதைத்துக் குறும்பு செய்வார்கள். சிற்றில் பருவம் என்பது அந்தப் பருவம் எம் சிற்றில் சிதையாதே எனப் பெண் குழந்தைகள் இறைஞ்சுவது போன்ற பாடல்கள் இப்பருவத்தினுள் அமையும்.

சிற்றில் பருவத்துப் பாடல் ஒன்று,

**“குறு மென்டையும் நெடு வெணிலாக்**

**கோட்டு நகையும் வாள் தடங்கண்**

**குளிர முகந்து உண்டு ஒளிர் சுட்டிக்**

**குஞ்சி திருத்தி நறும் குதலை”**

இந்தக் கவிதையின் எதுகைகளையும் மோனைகளையும் கவனித்தால் குமரகுருபரரின் தமிழ் ஆட்சி புலனாகும். முருகா, சிறு பெண்களாகிய யாம் கட்டிவிளையாடும் சிற்றிலைக் காலால் சிதைத்துத் துன்புறுத்தாதே என்பதுதான் செய்தி. என்றாலும் அதற்குள் இத்தனை தமிழ் விளையாட்டு கவி, ஆளுமை செல்வாக்குடன் செயல்படுகிறது. இதில் குமரகுருபரர் சிறுமிகளாக இருந்து முருகனை இறைஞ்சும் சுபாவம்.

**"கானக் குறப்பெண் குடியிருந்த**

**கண்ணிப் புனத்துத் தினை மாவும்**

**கமழ்தேன் தெளிவும் உண்டு சுவை**

**கண்டாய் என்றோம், அதுவல்லால்"**

என்று சிறுமியர் கெஞ்சுகின்றனர்.

கானக்குறமகள் வள்ளி குடி இருந்த கன்னிப்புனத்துத் தினைமாவும் கமழ்தேன் தெளிவும் உண்டு சுவை கண்டாய் என்று சொன்னோம். உண்மைதான் அதுவல்லாமல் மீன் போன்ற பெரிய கண்களை உடைய வள்ளியின் எச்சில் தேனும் தினைமாவும் உண்டதையும் அவளது குமுதமலர் போன்ற வாய் எச்சிலைப் பருகியதையும் சொன்னேமா? எனவே சிறியேம் சிற்றில் சிதையேலே என்று இறைஞ்சும் பாடல்.

## தாலப் பருவம்

### தாலாட்டுப் பருவம்

தால் - நாக்கு, ஆட்டுதல் - அசைத்தல், நாவினை அசைத்துப்பாடுதலால் உண்டான பெயர் தாலாட்டு, நாட்டுப்புறப் பாடல் வகைகளில் முக்கிய ஒன்றான இவ்வகையினில் குழந்தையைத் தூங்கச் செய்திட தாய் பாடுவதாக இப்பாடல் அமைந்திடும். தால் + ஏல் + ஓ--- தாலேலோ என்பதாகப் பாடல் அமைந்து 'நான்

சொல்லுவதனைக் கேட்பாயாக' என்று தான் பாடும் பாடலில் குழந்தையின் அருமை பெருமைகளையும், குழந்தையைப் பற்றிய தன்னுடைய கனவுகளையும், தன் குடும்பம் பற்றிய பின்னணிகளையும் பாடுபொருளாக அமைத்துப் பாடுவது இயல்பு, இப்பாடலானது குழந்தை பிறந்தது முதல் கொண்டே பாடப்படுமாயினும், இப்பிள்ளைத் தமிழ் இலக்கிய முறைப்படி குழந்தை செய்திகளைக் கேட்டு உணரும் பருவம் தொடங்கும் ஏழாம் மாதத்தில் பாடுவதாகவே இப்பகுதி அமைக்கப்படுகின்றது. இதில் பாடப்படுகின்ற பாட்டுடைத் தலைவன் (அ) தலைவியின் சிறப்புகளை எடுத்துரைத்தல் மரபு.

**கந்தபுரியில் எழுந்தருளியிருக்கும் கந்தப் பெருமானே**

**முருகனின் பிறப்பு**

**பில்கும் பசுந்தேன் அசும்பிறந்த**

**---------------------------------------**

**மணியே தாலோ தாலேலோ.**

பின்னால் தொங்குகின்ற கூந்தலானது தேன் சிந்தும் தன்மையுடைய தெய்வப் பெண்கிளியிடம், அறியாமையினால் குறும்புத்தனம் செய்து விளையாடுகின்றன. இதனால் அவர்களுடைய சின்ன இடையினிடத்தில் தோற்றுவிடக்கூடிய பூங்கொடிகள் அசையாமல் நிற்கின்றதனாலும் உயர்ந்த பளிங்கினாலான நிலா முற்றத்தினுடைய உயர்ந்த சிகரங்களில் மரகதத்தின் ஒளி வீசுகின்றதானலும், வானுலகில் வாழும் தெய்வத் தன்மையுடைய பசுக்கள், அலைகளை உடைய பெரிய ஆகாய கங்கையின் கரையினில் செழித்து வளர்ந்துள்ள பசும்புல் என்று நினைத்துத் தன்னுடைய நாவினால் அவைகளை வளைத்திடக் கூடியதான் நிகழ்வுகளை உடைய பசும்பொன்னால் செய்யப்பட்ட மாளிகைகள் கோடிக்கணக்கில் பெருகியிருக்கும் செல்வபுரியாக விளங்குகின்ற கந்தபுரியினில் எழுந்தருளுகின்ற முத்துக்குமரப் பெருமானனே! மலைகளாகிய பார்வதி

அன்னையின் வயிற்றினில் பிறந்த முழுமையான மணியினைப் போன்று திகழ்கின்றவனான முருகப் பெருமானே! தாலோ தாலேலோ என்று உன்னைத் தாலாட்டுகின்றேன் நீ உறங்குவாயாக!

**தொடுக்குந் தொடைவெண் துகிற்கொடிகள்**

---------------------------------------------

**மணியே தாலோ தாலேலோ**

வரிசையாகக் கட்டப்பட்டு அழகான வெண்மை நிறத்திலான கொடிச் சீலைகள் ஒருபுறம், ஆழமான நீர்நிலையினை உடைய கடலின் முகம் வெதும்பிடும் படியாகக் காட்சியளிக்கும் சூரியனின், அழகான ஆற்றல் பொருந்திய தன்மையுடன் தேரினைச் செலுத்திடுவதற்காக அதில் கட்டப்பட்ட கடிவாளம் பூட்டிய தாவிச் செல்லும் தன்மையுடைய குதிரைகளைத் தாக்கி விரைவாகச் செலுத்தக் கூடியதான இடமாக விளங்குகின்ற பொன்போன்ற மாளிகைகளில் அலங்கரிக்கப்பட்டுள்ள முழு நீலத் தன்மையுடையதான இரத்தினங்களில் உண்டான ஒளியின் காரணமாக, அதில் மூழ்குகின்ற தெய்வத் தன்மையுடையதான ஐராவதம் என்கிற வெள்ளை நிற யானையானது மேகம் என்பதான தோற்றத்தினையுடைய கரிய நிறம் உடையதாகத் தோன்றியது. அந்நிலையில் ஐராவதமாகிய யானையினைக் கண்ட தெய்வ மகளிர் இது மண்ணுலகத்திலிருந்து இங்கு வந்துள்ளது போலும் என்று சந்தேகம் கொண்டனர். அதே நேரத்தில் அந்த தெய்வ யானையானதும் தன்மைத்தானே பார்த்துக் கருத்த நிறமுடைய தன்னுடைய தோற்றத்தினைக் கண்டு, பொன்னிறம் போன்ற தன்னுடைய வெண்மையான உடலில் சேறுபட்டுவிட்டது என்று எண்ணி, ஆகாய கங்கையின் பசும்பொன்னைப் போலத் ததும்புகின்ற நீரில் நீராடத் தொடங்கியது. இத்தகையதாகப் பொலிவு பெற்று விளங்குகின்றதான செல்வச் செழிப்பினை உடைய கந்தபுரியினில் எழுந்தருளியுள்ளவனான முத்துக் குமாரப் பெருமானே! உமையம்மையின் வயிற்றில் தோன்றிய முழுமையாக

விளங்குகின்றவனான முருகப் பெருமானே! உன்னைத் தாலோ தாலேலோ என்று தாலாட்டுகின்றேன்! நீ உறங்குவாயாக!

**தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத்**

**--------------------------------------**

**மணியே தாலோ தாலேலோ**

பூசப்பட்டிருந்த சுண்ணாம்புகளிலிருந்து வெண்மை நிற ஒளி வீசியது. பெரிய மாணிக்கங்களும் ஒளியினை உண்டாக்கின. செம்பொன்னினால் செய்யப்பட்ட பெரிய மாளிகைகளின் மேல்நிலை மாடங்களில் இருந்த போர் செய்வதனைப் போன்றதான பெரிய கண்களை உடைய சிறுமியர்கள் நறுமணம் கமழ்ந்திடக் கூடிய அகிலினால் புகையினை உண்டாக்கினார்கள். அந்தப் புகையினில் தங்களுடைய கூந்தலை உலர்த்தினர். அந்தக் கூந்தலை மேகக் கூட்டம் என்று எண்ணி, ஆடுகின்றன மயில்கள். இந்தக் காட்சியினைக் கண்ட அந்தப் பெண்களின் பவளம் போன்ற சிறிய வாயிலிருந்து தோன்றிய புன்முறுவலைச் சகோதரப் பறவையானது உண்டது. இதனால் அப்பெண்களின் வாயிலிருந்து முழு நகையானது வெளிவந்தது. பெரிய அந்த முழு நகையின் நிலவொளி, சந்திர காந்தக் கல்லைப் பதித்து ஒளி வீசுகின்ற மாளிகைகளிலும் மேல் மாடங்களிலும், உவர்ப்புத் தன்மையுடைய கடலில் உண்டாகும் உவர்ப்பையும் புலால் நாற்றத்தையும் நீக்குகின்றது. இத்தகைய தெய்வத் தன்மை உடைய கந்தபுரியில் எழுந்தருளியுள்ளவனான முத்துக்குமரப் பெருமானே! பார்வதிதேவியின் திருவயிற்றில் அவதரித்த முழு மணியினைப் போன்றவனான சண்முகப் பெருமானே! உன்னைத் தாலோ தாலேலோ என்று தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

**கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்**

**--------------------------------------**

**மணிலே தாலோ தாலேலோ**

சகரர்கள் நூற்றுவர்களால் தோண்டப்பட்ட பெரிய கடல் என்று எண்ணி. முதலைகள் உலவக் கூடியதான ஆழமான நீரினை உடைய அகழியில் உண்டாகும் அலைகளையே உணவாகப் பருகி அதனால் செழித்த மழை மேகங்கள் வானத்தில் தோன்றின. அதனைக் கண்ட சிறிய கண்களையும் பெரிய துதிக் கைகளையும் உடைய யானைகள் அதுவும் தம்மினம் என்று நினைத்துப் பிளிறலாயின. அப்பிளிறலைக் கேட்ட மேகங்கள், அடுத்திருந்த மதில்களை, உயர்ந்த சக்கரவாளமலை என்று நினைத்துத் தம்முடைய உடல் இளைக்கும் படியாக ஏறக்கூடிய வானை எட்டும் அளவில் உயர்ந்து விளங்குகின்ற அந்த அழகான மதிலானது ஆகாயமாகிய இடத்தினை அடைவதற்கு ஏறத் தகுந்த ஏணியாகவும் அழகான கற்பகச் சோலைகளுக்கு வேலியாகவும் விளங்குகின்றது. இவ்வாறு ஏழுலகங்களையும் வளைத்திடக் கூடியதான பொன்போன்ற மதில்கள் சூழ்ந்த தெய்வத் தன்மையுடைதான கந்தபுரியில் எழுந்தமருளியுருக்கும் கந்தப் பெருமானே! உமையம்மை ஈன்றெடுத்த முத்துக்குமரன் என்னும் முழுமணியே தானே தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன் கண்ணுறங்குவாய்!

**பரிதிபுரியில் எழுந்தருளியுள்ள முத்துக் குமரப் பெருமானே**

**சோலைப் புறமுப் புடைக்கனிகள்**

------------------------------------

**மணிலே தாலோ தாலேலோ**

தேங்காய்களைத் தாங்கி சோலைகளில் வளைந்து கிடந்த தென்னை மரங்கள், இந்திரனின் பெரிய அவையினில் தோகையுடைய மயில்களைப் போன்று நடனம் ஆடுகின்ற, கூந்தலில் சாந்தினை அணிந்து கரிய நிறமுடைய கூந்தலாகக் காட்சி தருகின்ற இளம் பெண்களுக்கு, முதுவேனிற் காலத்தினில் ஏற்படுகின்ற இளைப்பினைத் தீர்த்திட வேண்டிய குலைகளோடு செவ்விள நீர்க் காய்களைக் கொடுத்தன. தம்முடைய இறுதிக் காலம் வந்தது என்று நினைத்து வருந்துகின்ற கார்கால மேகங்களின் முகத்தின் சோர்வினைத் துடைத்துக் கொண்டிருந்தன. ஓங்கி

வளர்ந்த கமுகு மரங்கள் நன்கு பழுத்த காய்களாகிய பவளத்தோடு ஒளி வீசுகின்ற முத்துக்களை விரித்துச் செழிப்பான பாளைகளாகிய கற்றைச் சாமரைகளைக் கொண்டு பக்கத்தில் இருந்து அசைந்து கொண்டிருக்கும் வகையில் செழித்து வளர்ந்துள்ள வயல்கள் சூழ்ந்த பரிதிபுரியில் எழுந்தருளியுள்ள முத்துக் குமரப் பெருமானே! உமையம்மை ஈன்றெடுத்த முழுமணியெனத் திகழும் மாணிக்க வேலனே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! கண்ணுறங்குவாயாக.

**புள்ளிருக்கு வேலூரில் எழுந்தருளியுள்ள முத்துக்குமரப் பெருமான்**

**மாலி மயத்து மடப்பிடி பெற்று**

**------------------------------------------**

**தாலோ தாலேலோ**

மேகங்கள் தவழ்கின்ற இமயமலையினில் பிறந்து உமையம்மை என்கிற இளம்பிடியினால் நன்றாக வளர்க்கப்பட்டு யானைக் கன்று போன்று திகழக்கூடிய பெருமானே! இளமைத் தன்மையுடைய இடபம் போன்றவனே! திருமாமனாகிய திருமாலுக்கென்று சிறப்பாக அமைந்த கவுத்துவ மணியினைப் போன்றவனே! எல்லாவற்றிற்கும் முதன்மையாகவும் மூலமாகவும் உள்ளவனே! நான்கு வேதங்களில் குறைகளையும் தீர்க்கும் ஆற்றவுலுடைய முழுமுதற் பொருளே! அழியாத மூன்று கண்களை உடைய சிவபெருமானிடத்தில் தோன்றிய கனியினைப் போன்று பழுத்த சுவையினையுடையவனே! ஈடு இணையில்லாததான வீடுபேறினை அடைந்திடுவதற்கு ஒப்பற்றக் காரணனாகத் திகழ்ந்திடக் கூடியவனே! காலையில் தோன்றக்கூடிய இளஞ்சூரியனுக்கு எதிராகத் தோன்றக் கூடிய முதிர்ச்சி பெற்ற நெற்கதிர்களை உடைய செம்பவளங்களோடு, ஒளியுடைய தன்னுடைய முத்தினையும் சேர்த்து வணங்கப் பார்த்தவர்கள் கரும்பா?, கமுகா? என்று வியந்து போற்றும்படியான வயல்கள் சூழ்ந்ததும் முத்தமிழினை வளர்த்திடுவதுமான புள்ளிருக்கு வேலூர் என்கிற தலத்தினில் எழுந்தருளியுள்ளவனான முத்துக்குமரப்

பெருமானே! முதற் தமிழ்ச் சங்கத்தினில் தலைப்புலவனாக வீற்றிருந்த முருகப் பெருமானே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன். நீ கண்ணுறங்குவாயாக.

**மதுரை முதற் சங்கத்தின் புலவனாய் விளங்கிய தமிழ் அண்ணலே**

**கருமுகி லுக்கரி தாம்அடி வாரம்**

**---------------------------------------**

**தாலோ தாலேலோ**

கார்மேகத்தினைப் போன்றவனான திருமாலும் காணமுடியாததான அரிய திருவடிகளை சம்பாதி, சடாயு என்பதான கழுகுப் பறவைகள் கண்டு மகிழ்ந்தன. ஆனால் அன்னப் பறவையாகச் சென்றும் திருமுடியைக் காணமுடியாமல் வெட்கத்துடன் திரும்பி வந்தான் பிரம்மன். அலைகளை உடைய கங்கையின் நீரருவி தவழுகின்ற திருமுடியின் மீது பிறைச் சந்திரனின் ஒளி வீசிடக் கூடியதான சிறப்புக்களையுடையவனாகப் புள்ளிருக்கு வேலூரில் எழுந்தருளியுள்ள கயிலாயங்கிரி வாகனான பொன் மலையினைப் போன்று திகழ்ந்திடக் கூடியவனான வைத்தியநாதனின் வலிமை பொருந்திய வயிரம் பாய்ந்த தோள்கள் என்பதான எட்டு மலைகளிலும் தழும்புகள் உண்டாகும் படியாக, குத்திப் போர் செய்திடுவதற்குரிய இரண்டு கொம்புகளை உடைய ஈடு இணையில்லாத அழகிய கூந்தலையுடையவளான பெண்யானையாகிய உமையம்மை பெற்றுத் தந்த ஒப்பற்ற தொந்தியினையுடைய யானை முகனுக்கு இளையவனானவனே! முத்துக்குமரப் பெருமானே! கடல் கொண்ட மதுரையில் கூடிய தலைச் சங்கத்தின் தலைமைத் தமிழ்ப் புலவனே! தாலோ தாலேலோ என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

**உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட**

**-----------------------------------------------**

**தாலோ தாலேலோ**

மனம் உருகி வேண்டிப் பணிகின்ற அடியவர்களின் உள்ளங்களில் உள்ள அறியாமையாகிய இருளினைப் போக்கக் கூடிய ஞான ஒளியினை வீசுகின்ற மாணிக்கம் போன்று திகழக் கூடியவனே! உயர்ந்த வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், மற்றும் ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் பற்றிய செய்திகளை உடைய பல உயர்ந்த நூல்களின் முடிந்த பொருளாக விளங்கும் ஒளியினையுடைய மரகதம் போன்று திகழ்ந்திடுகின்றவனே! விண்ணுடன் மண்ணினையும் உட்கொண்டு அருள் என்கிறதான ஒளிவீசுகின்ற கதிர்களை வீசுகின்ற இளம் சூரியனைப் போன்றவனே! உண்மையாகிய அறிவினால் புலன்களை வென்று அமைந்துள்ள உள்ளமாகிய ஒப்பற்ற வீட்டினை உயர்வடையச் செய்யக் கூடிய ஞான விளக்கின் ஒளியாக உள்ளவனே! புண்ணியம் பரிமளிக்கின்ற ஒரு பெண்கனியாகிய உமையம்மை மனமகிழ்ச்சியுடன் இந்தவுலகத்திற்கு அருளிய ஞானப்பழம் என்று திகழ்ந்திடக் கூடியவனே! புனிதமான புள்ளிருக்கு வேலூர் போல என்னுடைய மனமாகிய இடத்தில் நிறைந்த புதிய அமுதக்கடல் போன்று இனிமையானவனே! அருள் ஒளியினைத் தாங்கியிருக்கக் கூடியதான அருட்செல்வனே! முத்துக்குமரப் பெருமானே! கடல் குடித்த மதுரையில் கூடிய முதற் சங்கத்தின் தலைமைப் புலவனாய் விளங்கிய தமிழ் அண்ணலே! தாலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

**ஊனாயு யிர்க்குயிர் ஆனாய் தாலோ தாலோலோ**

**-----------------------------------------------------**

**சேனாப திப்பெரு மாளே தாலோ தாலேலோ**

உடம்பாகவும் அந்த உடம்பினுள் இருக்கின்ற உயிராகவும் இருக்கக் கூடியவனே! ஓதாமல் உணர்த்திடக் கூடியதான அறிவினை உடையவனே! நீங்காத

கருணையின் துணையாய் இருப்பவனே! ஆராயாத சொற்களான பிரணவங்களைச் ஆராய்ந்து சொன்ன தந்திரனே! நான், எனது என்று எண்ணுகின்றவர்களுக்கு எட்டாத அருமையுடையவனே! நாதம் முதலானவைகட்கு அனுபூதமானவனே! தேன்நிறைந்ததான மலர்கள் விளங்கும் சோலைகள் நிறைந்த புள்ளிருக்கு வேலூர் என்கிற தலத்தினில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமரப் பெருமானே! தேவர்களின் சேனாதிபதியாய் விளங்கும் பெருமானே! தலோ தாலேலோ! என்று உன்னைத் தாலாட்டுகின்றேன்! நீ கண்ணுறங்குவாயாக!

## காரைக்காலம்மையார் வரலாறு

சோழநாட்டின் கடற்கரை நகரமான காரைக்காலில் வணிகத் தொழிலில் புகழ்பெற்று விளங்கிய தனதத்தனின் மகளாகப் பிறந்தவர் புனிதவதி. சேக்கிழார், புனிதவதியின் தந்தை தருத்தின் வழியில் நின்று நேர்மையுடன் பொருள் ஈட்டிய தன்மையினை,

**“மானமிகு தருத்தின் வழிநின்று வாய்மையினில்”**

**(காரை. புராணம்-1)**

என்னும் பாடல் வழியாகத் தெளிவுபடுத்துகிறார். தனதத்தன் தனக்குப் பெண் குழந்தை பிறந்ததைக் கொண்டாடி மகிழ்ந்தான். குழந்தைக்குப் புனிதவதி என்னும் பெயர் சூட்டப்பட்டது. புனிதவதி குழந்தைப் பருவத்தில் சிவபெருமானிடம் அன்புடையவராய்த் திகழந்தார்.

புனிதவதி விளையாடுகின்ற பொழுதுகளிலும் நமசிவாய என்னும் மந்திரத்தை இடையறாது சொல்பவராகவும், அடியார்களைக் கண்டால் அவர்களை வழிபாடு செய்யும் பக்குவம் உடையவராகவும் விளங்கினார். இல்லத்தவர்கள் அன்புடன்

போற்றி வளர்க்கச் செல்வச் செழிப்புடன் வளர்த்த புனிதவதி திருமணப் பருவத்தை அடைந்தாள்.

அக்காலத்தில் நாகப்பட்டினம் என்னும் கடற்கரை நகரில் நிதிபதி என்னும் வணிகர்களின் தலைவன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னுடைய மகனுக்குத் தனதத்தனின் மகளான புனிதவதியை மணம் செய்து வைக்க விரும்பினான். அதற்காக முதியவர்கள் சிலரை மணம் பேசி வருமாறு தனதத்தனிடம் அனுப்பி வைத்தான்.

தனதத்தனால் அனுப்பப்பட்ட முதியவர்கள் காரைக்காலுக்கு வந்து நிதிபதி சொல்லியனுப்பிய செய்தியைக் கூறிப் பரமதத்தனுக்கும் புதிதவதிக்கும் திருமணம் செய்து வைக்கும் எண்ணத்தைக் கூறினர். இதனைக் கேட்ட நிதிபதி மனதில் மிக்க மகிழ்ச்சி கொண்டு தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான். வளம் நிறைந்த தன்னுடைய உறவினர்களுடன் சேர்ந்து திருமண விழாவினை நடத்தத் திட்டமிட்டான். திருமணத்திற்கான ஓலைகள் அனுப்பப்பட்டன. திருமண நாளில் அதற்குரிய அணிகலன்களை அணிந்து புனிதவதி நாகப்பட்டினம் நகரில் காலடி வைத்தாள். திருமண நிகழ்வுகள் முடிந்து பரமதத்தனும் புனிதவதியும் நாகப் பட்டினத்திலிருந்து மீண்டும் காரைக்கால் வந்தனர். புனிதவதி தனதத்தனுக்கு ஒரே மகளாதலால் மகளையும் மருமகனையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்ப மனமில்லாமல் தன் இல்லத்தின் அருகிலேயே அவர்களுக்கு மாளிகை அமைத்துக் கொடுத்தான்.

பரமதத்தன் தனக்குரிய வணிகத்திறமையினால் தன் மாமனார் கொடுத்த பொருளை வணிகத்தில் இட்டுச் செல்வம் பெருக்கினான். இருவரும் இனிதாக இல்லறம் நடத்தி வந்தனர். இந்நிலையில் புனிதவதி காளையை வாகனமாக உடைய சிவபெருமான் மீது அன்பு கொண்டு மனத்தில் பக்தியையும் பெருக்கினார். இல்லத்திற்கு வருகை தரும் இறையடியார்களுக்கு உணவும், பொன்னும் பொருளும் கொடுத்து உபசரித்து வந்தார்.

### பரமதத்தன் மாங்கனிகளை கொடுத்தனுப்பல்

பரமதத்தன் வணிகர்களுக்கு உள்ள நல்ல நெறியில் வணிகத் தொழில் புரிந்து வரும் நாளில் வணிகத்தின் பொருட்டு வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தனர். அவற்றை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்ட பரமதத்தன் அவர்களுடைய குறைகளைக் களைந்து கனிகள் இரண்டையும் இல்லத்தில் சேர்க்கும் படி கூறினான். கணவன் கொடுத்தனுப்பிய கனிகள் இரண்டையும் பெற்றுக் கொண்ட புனிதவதி இல்லத்தில் வைத்தார். அப்போது சிவபெருமான்பால் அன்பு கொண்ட அடியார் ஒருவர் பசியின் காரணமாகப் புனிதவதியின் இல்லம் புகுந்தார்.

வேதங்களைச் சொல்லியருளிய சிவபெருமானின் அடியார் பசியால் வாடுவதைக் கண்டு ‘இறையடியார் பசி தீர்ப்பேன்’’ எனக்கூறி அவர் கால்களைச் சுத்தம் செய்ய நீர் கொடுத்து உணவு படைத்தார். அப்போது வீட்டில் திருஅமுதான அரிசி உணவு மட்டுமே சமைக்கப்பட்டிருந்தது. கறி உணவு சமைக்கப்படவில்லை. இந்நிலையில் சிவனடியார்க்கு உணவு உபசாரிப்பதைவிட வேறு சிறந்தபேறு ஏதுமில்லை என்று கருதிய புனிதவதியார் தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகளுள் ஒன்றை அடியவருக்கு இட்டு உணவு படைத்தார்.

### புனிதவதியார் இறைவன் அருளால் மாங்கனியைப் பெறுதல்

வயதான காரணத்தினாலும், பசித் துன்பத்தாலும் வாடிய சிவனடியார் புனிதவதியின் உபசரிப்பில் அகமகிழ்ந்து வாழ்த்தி விடைபெற்றார். இறையடியார் சென்ற பின்பு பரமதத்தன் மதிய உணவிற்காக இல்லம் வந்தான். உணவு உண்பதற்கு முன்பு நீராடி அமர்ந்தான். புனிதவதி உணவு உபசரிக்கும் முறையறிந்து அவனுக்கு உணவு படைத்தாள். இனிமையுடைய கறி வகைகளுடன் புனிதவதி உணவு படைக்க அதனை உண்ட பரமதத்தின் மகிழ்ந்திருக்கையில் அவன் கொடுத்தனுப்பிய மாங்கனியைத் தட்டில் இட்டாள். புனிதவதி இட்ட

மாங்கனியின் சுவையில் மனம் ஈடுபட்ட பரமதத்தின் மற்றொரு கனியையும் இடுமாறு வேண்டிக்கொண்டான். செய்வதறியாது திகைத்த புனிதவதி கனியைக் கொண்டு வருவது போல அங்கிருந்து சென்றார். மற்றொரு கனிக்கு எங்கு செல்வேன் என்று மனம் வெதும்பி, கேட்டவர் கேட்டதை அருளும் காளை வாகனமான சிவபெருமானை வணங்கி நின்றாள். சிவனருளால் இனிமையான சுவையுடைய மாங்கனி ஒன்று கிடைத்தது. அதன் சுவையில் மனம் ஈடுபட்ட பரமதத்தன் முன்னர் உண்ட கனியைவிட இது சுவையில் மேம்பட்டதாக இருக்கிறது. இது நான் கொடுத்த மாங்கனி அல்ல மூன்று உலகங்களிலும் பெறுவதற்கு அரிதான இக்கனியை நீ பெற்றது எங்கே என்று கேட்டான்.

புனிதவதியார் இறையருளால் பெற்றதைக் கணவனிடம் சொல்லலாமா என்று மனதுள் எண்ணிய அதே வேளை கணவனிடம் மறைக்கக் கூடாது என மன உறுதி கொண்டவளாய்த் தளர்ச்சியுற்று, இறையருளால் பெற்றது என்று கூறினாள். அதனைக் கேட்ட பரமதத்தன் முன்னர் கொடுத்த கனி இறையருளால் பெற்றது என்றால் மீண்டும் ஒரு கனியைப் பெற்றுவா என்றான். அங்கிருந்து சென்ற புனிதவதி இறைவனை வணங்கி மற்றொரு கனியைப் பெற்றாள். இறைவனை வணங்கிப் பெற்ற கனியினைக் கணவனுக்குக் கொடுக்க அவன் அதிசயத்துடன் வாங்கினான்.

பரமதத்தன் பெற்ற மாங்கனி அப்போதே அவன் கையில் இருந்து மறைந்தது. அதனால் மனத்தில் அச்சம் கொண்டு மேலும் அச்சம் அதிகரிக்க என்ன செய்வதென்று மனம் தடுமாறித் தன் மனைவியைத் தெய்வப் பெண்ணென்று கருதி அவளை விட்டுப் பிரியும் எண்ணம் கொண்டான். யாருக்கும் சொல்லாமல் புனிதவதியோடு எவ்விதமான தொடர்பும் இன்றி வாழந்து வந்தான்.

புனிதவதியை விட்டுப் பிரிய எண்ணம் கொண்ட பரமதத்தன் கடல் வாணிகம் செய்து பொருளீட்டப் போவதாகக் கூறினான். அதனைக் கேட்ட உறவினர்கள் கடல் பயணம் செல்வதற்குக் கலம் அமைத்துக் கொடுத்தனர். அக்காலத்தில் பரமதத்தனும் வணிகர்கள் சிலரும் புறப்பட்டுச் சென்றனர். கடல் வாணிகம் செய்து

கொண்டே பரமதத்தனும் வணிகர்களும் பாண்டிய நாட்டிலுள்ள துறைமுகத்தை அடைந்தனர். அவ்வூரில் வாணிகத் தொழிலில் சிறந்து விளங்கிய வணிகன் ஒருவனின் மகளைப் பரமதத்தன் மணம் செய்து கொண்டான். அவர்களுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. பரமதத்தன் தெய்வமாக வழிபட்டு வரும் தன் முதல் மனைவியான புனிதவதியின் பெயரையே குழந்தைக்கு இட்டான். இந்நிலையில் பரமதத்தன் மிகுந்த வளத்துடன் பாண்டி நாட்டில் வாழந்து வருவதையறிந்த புனிதவதியாரின் உறவினர்கள் சிலரைப் பாண்டி நாட்டுக்கு அனுப்பி அவனது நிலையை அறிந்துவரச் செய்தார்கள். புனிதவதியைப் பரமதத்தனிடம் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அவரைப் பல்லக்கில் ஏற்றிப் பாண்டி நாட்டுத் துறைமுகப்பட்டினம் சென்றடைந்தனர். தங்களது வரவைப் பரமதத்தனுக்கு அறிவித்தார்கள். அதனைக் கேட்ட பரமதத்தன் மனத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு மனைவி குழந்தையோடு புனிதவதியின் பாதங்களைப் பணிந்து வணங்கினான்.

**புனிதவதியார் பேய் வடிவம் கொள்ளல்**

கணவன் தன்னை வணங்குவதைக் கண்ட புனிதவதி அச்சம் கொண்டு தன் உறவினர்களை நாடி நின்றாள். உறவினர்கள் நாணம் கொண்டு பரமதத்தனை நோக்கி, ஏன் உன் மனைவியை வணங்கினாய் எனக் கேட்டனர். அதற்குப் பரமதத்தன்,

**"மற்றுஅவர் தம்மை நோக்கி**
**மானுடம் இவர்தம் அல்லர்,**
**நல்பெருந் தெய்வம் ஆதல்**
**நான்அறிந்து அகன்ற பின்பு"** **(கா.பு. - 47)**

என்னும் பாடல் வழியாக, சுற்றத்தாரை நோக்கி இவள் மானிடப் பெண்ணல்ல, தெய்வப் பெண். அவள் தெய்வம் என்று அறிந்து அவளை விட்டு விலகிய பின்பு பாண்டி நாட்டில் நான் பெற்ற மகளுக்குப் புனிதவதி எனப் பெயரிட்டேன்.

அதனாலேயே அவளது பாதங்களைப் பணிந்து வணங்கினேன். நீங்களும் அவளை வணங்குங்கள் எனக் கூறினான். இதைக் கேட்ட உறவினர்கள் இது என்ன மாயமென்று திகைத்தனர். கணவன் தன்னை வணங்கியது கண்ட புனிதவதியார் சிவபெருமானை மனமுருக வேண்டி எழில் நிறைந்த தன்னுடைய உடல் வனப்பை நீக்கி உன்னையே வணங்கி நிற்கும் பேய் வடிவம் தந்தருளும் என்று கேட்டார். அவர் வேண்டி அக்கணத்திலேயே அழகிய உருவம் நீங்கப் பெற்று வானுலகமும் மண்ணுலகமும் வணங்கி மகிழும் பேய் வடிவம் பெற்றார்.

புனிதவதி பேய்வடிவம் பெற்றுக் காரைக்காலம்மையார் ஆனார். இறைவனை வேண்டிப் புனிதவதி பேய்வடிவம் பெற்ற போது வானத்திலிருந்து தேவர்கள் பூமழை பொழிந்தனர். வானுலகில் துந்துபி என்னும் இசைக் கருவி ஒலித்தது. உலகெல்லாம் மகிழ்ச்சியடைய முனிவர்கள் உறவாடினார்கள். வானுலகக் காவலர்கள் மகிழ்ச்சியின் மிகுதியால் ஆடக்கூடிய குணலைக் கூத்தாடினார்கள் இதனைக் கண்ட புனிதவதி பரமதத்தன் ஆகியோரின் உறவினர்கள் அஞ்சி ஒதுங்கினர்.

இறையருளால் மனத்தில் பெருகிய ஞானத்தின் உதவியால் காரைக்காலம்மையார் உமையம்மையின் தலைவனான சிவபெருமான் மீது அற்புதத் திருவந்தாதியை அருளிச் செய்தார். பெருமையும் சிறப்பும் உடைய செம்மை நிறத் தாமரை போன்ற பாதங்களை இடையறாது போற்றும் பேய்க் கூட்டத்தினில் நானும் ஒருவரானேன் என்று மகிழ்ச்சியின் மிகுதியால் இறைவன் மீது ‘திருவிரட்டை மணிமாலை’ பாடியருளினார். இறைவன் மேல் கொண்ட அன்பு பெருக ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று கோட்டைகளையும் அழித்தொழித்த கைலைவாசனான இறைவனை வழிபட விரும்பிக் கைலை புறப்பட்டார். விரைவாகப் பயணித்தவர் கைலைமலை மேல் காலால் நடந்து செல்வதைத் தவிர்த்துத் தலையால் நடந்து சென்றார்.

காரைக்காலம்மையார் தலையினால் நடந்து வருவது கண்டு பார்வதிதேவி அதிசயத்துடன் சிவபெருமானை நோக்கி, கயிலை மலை மீது எலும்பு உருவம் கொண்டு தலையினால் நடந்து வருவது யாரெனக்கேட்டாள். இதனைக் கேட்ட சிவபெருமான் இவள் நம்மை வழிபடும் அம்மையாவாள். பேய் வடிவத்தை நம்மை வேண்டி விருப்பமுடன் பெற்றக் கொண்டாள் எனக் கூறினார். பேய் வடிவம் கொண்ட காரைக்காலம்மையார் தம்மிடம் நெருங்குவதுண்டு சிவபெருமான், அம்மையே என்று அழைத்தார். அம்மையாரும் அப்பா எனக் கூறி அவரது பாதங்களில் விழுந்து வணங்கினார்.

கயிலாயத்திற்கு உரிமையுடையவனான சிவபெருமான் பேய் வடிவம் கொண்ட காரைக்காலம்மையாரை நோக்கி, தாங்கள் வேண்டுவது என்ன? சொல்லியருள்க என்றார். அதற்கு அம்மையார், இறைவனே! எனக்கு இறவாத பேரின்பமாகிய உன்னுடைய அன்பு வேண்டும். மீண்டும் பூமியில் பிறப்பெடுக்காத வரம் வேண்டும். அப்படியே பிறந்தாலும் உன்னை எனக் காலத்திலும் மறவாமல் இருக்க வேண்டும். நீ திருநடனம் புரியும் போது உன் பாதங்களின் கீழ் அமர்ந்து மகிழ்ச்சியோடு பாட வேண்டும். என்று தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டார். அம்மையின் விருப்பத்தைக் கேட்டருளிய சிவபெருமான் அருள் சுரக்கும் மனத்துடன் அன்னையே, தென்திசையில் திருவாலங்காட்டில் கோயில் ஒன்று இருக்கிறது. அக்கோயிலில் நான் திருநடனம் புரிந்து கொண்டிருக்கிறேன். அதனைக் கண்டு மகிழ்ச்சியடைந்து என்னைப் பாடிக் கொண்டு இருப்பாயாக என்று அருள் புரிந்தார்.

### புனிதவதியார் தலையால் நடத்தல்

இறைவனின் திருவருள் பெற்ற அம்மையார் தலையால் நடந்து திருவாலங்காட்டை அடைந்தார். அங்கு சிவபெருமான் அருளிய திருக்கூத்தைக் கண்டு களித்தார்.

எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த காரைக்காலம்மையார் யாத்தது அற்புதத் திருவந்தாதி. வெண்பாக்களால் ஆன அந்தாதி இது. இதன் பாடல் ஒன்று

**“அழலாட அங்கை சிவந்ததோ அங்கை**

**அழகால அழல் சிவந்த வாறோ - கழலாடப்**

**பேயோடு கானிற் பிறங்க அனலேந்தித்**

**தீயாடு வாய் இதனைச் செப்பு”**

தீயேந்தி ஆடுவதால் அழகிய கை சிவந்து காணப்படுகிறதா? அழகிய கையின் அழகால் தீ சிவந்தவாறோ? கால்களின் கழல் ஆட கானகத்தில் பேயோடு அனல் ஏந்தித் தீயாடுகிறவனே இதனைச் சொல்வாய் என்பது பொருள்.

அந்தாதி என்பதால் தொடர்ந்து அடுத்த பாடலையும் காண்பது சிறப்பாக இருக்கும்.

**“செப்பேந்து இளமுலையாள் காணவோ தீப்படு காட்டு**

**அப்பேய்க் கணம்அவைதாம் காணவோ - செப்பு எனக்கு ஒன்”**

செப்புப் போன்ற இளமுலையாளாகிய உமையாள் காணவோ, அன்றேல் தீப்படு சுடுகாட்டுப் பேய்க்கணங்கள் காணவோ? அண்ணாந்து பார்த்து ஒன்றாக அனல் உமிழும் ஐவாய் நாகம் அணிந்தவனே, உனது நடம் எதற்காக என்று சொல்வாய்! என்பது என் உத்தேசமான உரை,

**“ஒரு பால் உலகு அளந்த மாலவனாம் மற்றை**

**ஒரு பால் உமையவளாம் என்றால் - இருபாலும்”**

என்றொரு பாடல் காரைக்காலம்மையின் தமிழை செய்யுளை, வெண்பாவின் நேர்த்தியை, நயத்தை வாசித்து உணர்தல் வேண்டும் எட்டாம் நூற்றாண்டுத் தமிழ் அப்படியொன்றும் நமக்கு இன்னும் அந்நியமாகிப் போய்விடவில்லை. இருமலுக்கு பனங்கற்கண்டுக் கட்டியை அலவில் ஒதுக்கிக் கொள்வதைப்போல, ஒரு பாடலை மனதில் போட்டுக்கொண்டால் அது தானாகக் கரைந்து இனிப்புப் பயக்கும். முதலில் பொதுவான பொருள் புரிந்தால் போதும். சில சொற்களுக்குப் பொருள் முதலில் புரியாவிடின் ஒன்றும் மோசம் இல்லை. நாட்பட நாட்படப் புரியும். கொண்டல்,

கொண்மு, கார்முகில் எல்லாம் கேம்தான். அரவம், நாகம், சர்ப்பம், எல்லாம் பாம்புதான் நாட்பட நாட்பட நாகம் எனில் யானை என்றும் பொருள் உண்டு என்பதும் அர்த்தமாகும். செந்தமிழும் மனப் பழக்கம் யாவரையும் போல் எனது தமிழ்க் கல்வியும் பட்டப்படிப்பு இரண்டாம் ஆண்டில் முடிந்து போனது. நான் குரு மூலம் கற்றது கம்பன் மட்டுமே. எனது மூதாயின் தமிழ் எனக்கு விளங்காமற் போய்விடுமா?

சைவக்குரவர் நால்வருக்கும் மூத்தவர் காரைக்கால் அம்மையார் காரைக்காலில் அவர்க்கொரு கோயில் உண்டு. காரைக்காலின் மூத்த ரொட்டேரியின், சகோதரர் இராகவசாமி அழைத்துப்போனார். கோயிலின் காலம் பற்றி என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை.

காரைக்கால் அம்மையின், ‘அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்னும் வரியும் திருப்பாவையில் ஆண்டாள் பாடும், ‘எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம் எனும் வரிக்கும் ஒப்புமை உண்டு.

**“யானே தவமுடையேன் என் நெஞ்சே நன்னெஞ்சம்**

**யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்”**

எனும் எட்டாம் நூற்றாண்டு காரைக்காலம்மையின் வரிகளை ஏழாம் நூற்றாண்டின் ஆழ்வாராகிய பூதத்தாழ்வாரின்.

‘யானே தவம் செய்தேன், ஏழ்பிறப்பும், எப்பொழுதும் யானே தவம் உடையேன்’ எனும் வரிகளை ஒப்புநோக்கலாம்.

சற்றே தோய்ந்த வாசிப்புப் பயிற்சி இருந்தால் ஆழ்வார்களோ நாயன்மார்களோ கடினமானவர் அல்லர் சில வரிகள் மேற்கோள் தருகிறேன். இதில் என்ன புரியாமை உண்டென்று பாருங்கள்.

# அற்புததிருவந்தாதி

**சிவபெருமானின் சிறப்புகள்**

**"குழலார் சிறுபுறத்துக் கோல்வாளையைப் பாகத்**

**தெழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப்**

**பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்**

**ஆரழல்வாய் நீயாடும் அங்கு" - (51)**

இறைவா! கழல் என்னும் அணிகலன் ஒலி எழுப்ப, அடர்ந்த இருள் நிறைந்த நள்ளிரவில் பிணங்கள் எரியும் சுடுகாட்டில் பேய்க் கூட்டங்களோடு பெருகி எரியும் நெருப்பில் நின்று நடனமாடுகின்ற இடத்திற்கு அழகிய கூந்தலுடைய வளையல்கள் அணிந்திருக்கும் உமையம்மையை உன்னுடைய இடதுபுறத்தில் அழகுபொருந்தியிருக்க வைத்துக்கொண்டு செல்ல வேண்டாம்.

சிவந்த கண்களைக் கொண்ட திருமாலை வலதுபுறத்தில் கொண்டிருப்பவனாகிய சிவபெருமான் சிவந்த நிறம் உடைய சடையினில் அணிந்திருக்கின்ற மாலை ஒளிவீசுகின்ற சிறப்பிற்கு, அழகு பொருந்திய முழுநிலவு வானம் எங்கும் உதித்தாலும் ஒப்புமை உடையதாகாது. (52)

சிறப்புடைய கொன்றைமலர்கள் வளமுடன் விளங்கும் சடைமுடியில் ஆகாயத்தில் உலவி நீர் நிறைந்து விளங்கும் கங்கை ஆறு பெருகிற ஓடுகின்ற தன்மை, போர் நடைபெற்றபோது அரைஞாண் கயிறாகப் பாம்பினை இடையில் கட்டியிருக்கின்ற நம்முடைய தலைவனாகிய இறைவனின் திருமுடியைக் காண்பவர்களுக்கு அது கார்மேகத்தைப் போல் விளங்குகிறது. (53)

**இறைவனின் அடி முடியைத் தேடுதல்**

விடம் உண்டதனால் கருமையான கழுத்தை உடைய எம்முடைய இறைவனே, நீரின் வடிவத்தைக் கொண்ட மேகத்தால் செய்தது போன்ற உடலை உடைய பிரம்மனுக்கும் உன்னுடைய உடலின் வலதுபுறம் வீற்றிருக்கும் திருமாலுக்கும் காட்சியளிக்காமல் அவர்கள் இருவரும் வானுக்கும் பூமிக்குமாக அடியையும் முடியையும் தேடியபோது எங்கே மறைந்திருந்தாய். (54)

**"பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு**
**கண்டங் கறுத்ததுவு மனிறயே - உண்டு**
**பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியி லுள்ளே**
**மணிமறுவாய்த் தோன்றும் வடு. (55)**

முற்காலத்தில் தேவர்கள் பயம்கொள்ளுகின்றபடி பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு கழுத்து கருமைநிறம் அடைந்திருப்பதோடு மட்டுமல்லாமல், பாம்பு வீற்றிருகின்ற செம்மை நிறமுடைய சடையில் அணிந்திருக்கின்ற வெண்மை நிறம் பொருந்திய சந்திரனின் நடுவில் அழகிய மச்சம் போலத் தோன்றும்.

**பிறை நிலவைத் தலையில் சூடியிருக்கின்ற இறைவன்**

ஒளி பொருந்திய பிறை நிலவைத் தலையில் சூடியிருக்கின்ற இறைவனே! உன்னுடைய தலையில் அணிசெய்யும் சந்திரனின் நடுவில் உள்ளது கறை அல்ல என்றும், மாமிசம் பொருந்திய இருக்கின்ற மண்டை ஓட்டிலிருந்து உணவை உண்ணவில்லை என்றும் சொல்லியருள வேண்டும். இவ்வாறெல்லாம் இருப்பதாக அயலார்கள் உன்னை நிந்தனை செய்கிறார்கள். (56)

இறைவனே! நீ உலகெங்கும் பிச்சைக்காக அலைந்து திரிந்தாலும் கொடுமையான விடம் உடைய உன்னுடைய நாகத்தை விடுத்துச் செல்வாயாக. உன் மேனி எங்கும் விடம் பொருந்திய நாகம் ஊர்ந்து திரிவதனால் தூய்மையான மனமுடைய பெண்கள் தான் கொண்ட அச்சத்தால் பிச்சை இடமாட்டார்கள். (57)

ஒலியுடன் எரிகின்ற நெருப்பும் செறிந்த இருளும் ஒன்றுசேர்ந்து இருந்தாலும், செவ்வானத்தை ஒத்த மேனியும் செந்நிறம் உடைய சடையும் உடைய சிவபெருமானின் இடப்பாகம் இருக்கின்ற உமையம்மையின் கரிய அழகிய கூந்தலுக்கு ஈடாகாது. (58)

கண்ணுடைய நெற்றியும் கறை உடைய கழுத்தையும் உடைய இறைவனே! உன் வடிவம் இடதுபுறம் உமாதேவியார் வீற்றிருக்கும் வடிவமோ? வலதுபுறம் திருமால் வீற்றிருக்கும் வடிவமோ? புகழ்மிக்க காளை வாகனத்தை உடையவனே! நீ உன்னுடைய உடலில் திருநீறு அணிந்திருப்பது எந்த வடிவம்? இவற்றின் தன்மைகளை என்னால் அறிந்துகொள்ள இயலவில்லை. நீயே எனக்குக் கூறவேண்டும். (59)

**“மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்**
**போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே - மாலாய**
**கைம்மா மதக்களிற்றுக் காருரியை போர்த்தபோ**
**தம்மான் திருமேனி அன்று” (60)**

இறைவா! நீண்ட பெரிய தும்பிக்கையினையும் பெருகிற மதத்தையும் உடைய யானையின் தோலை முற்காலத்தில் நீ போர்வையாக அணிந்து கொண்ட போது உன்னுடைய சிறப்புப் பொருந்திய உடலின் அழகுக்கு, சிறப்புப் பொருந்திய ஏழுமேகங்களும் ஒன்றுசேர்ந்து தங்கத்தால் இயன்ற மலையின் ஒளியை மறைத்தாலும் ஈடாகக் கூற இயலாது.

### இறைவனின் திருவுடம்பின் வடிவம்

இறைவா! முற்காலத்தில் உன்னுடைய உருவம் இத்தன்மையது என்று அறிந்து கொள்ளாமலேயே உனக்கு அடிமையாகிவிட்டேன். இப்போதும் உன்னுடைய திருவுடம்பின் வடிவம் காணக்கிடைக்கவில்லை. எப்போதும் உன்னுடைய இறைவன் எத்தகைய வடிவத்தை உடையவன் என்று

கேட்பவர்களுக்கு நான் என்ன பதில் கூறுவேன்? உன்னுடைய வடிவம் என்ன? அது எத்தன்மை உடையது சொல்லியருள வேண்டும். (61)

முற்காலத்தில் வில் ஏந்திய வேடவடிவினைக் கொண்ட அர்ச்சுனனோடு போர் செய்த காலத்தில் கச்சினை அணிந்த வேடன் வடிவத்திற்கு நான்கு வகைத் தோற்றங்களில் எவ்வடிவத்தை ஒப்புமையாகக் கூறலாம்.? எதைக் கூறலாகாது? எந்த உருவம் ஆகும்? எந்த உருவம் ஆகாது? எந்த உருவம் ஒப்புமை கூறத்தக்கது என்று யார் அறிவார்கள்? அதனால் இறைவனே நீயே சொல்லியருள வேண்டும். (62)

**சோதி வடிவம்**

இறைவா! சிறப்புமிக்க சொற்களின் முடிபொருளால் அறிய இயலாத சோதி வடிவானவனே! உன்னுடைய சடையில் அணிந்திருக்கின்ற ஒளியுடைய சந்திரன் அழகுமிக்க சூரியனின் ஒளிக்கு மாறாகப் பகல் பொழுதில் நீண்ட நேரம் உலவிச் சூரியனின் ஒளியைப் பெற்றுக் கொண்டு சூரியனைப் போல வெம்மை தருகிறதோ? நீயே கூறுவாயாக. (உன் அருள் கிடைக்காததால் நிலவொளியும் வெம்மையாக இருக்கிறது. (63)

இறைவா! நிலவு உதயமாகி இருக்கும் செம்மை நிறமுடைய வானத்தைப் போன்றிருக்கும் உன்னுடைய சடையில் தங்கி இருக்கின்ற பாம்பு ஒளி நிரம்பிய கதிர்களை உடைய சந்திரனைத் தேடி அலைந்து ஓர் இடத்தில் தங்கி இருப்பது போல் உள்ளது. (64)

**சிவபெருமானின் திருவுருவ காட்சி**

**“காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்**
**வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்**
**தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு**
**வீங்கிருளே போலு மிடறு”** **(65)**

சிவபெருமானின் திருவுடல் காலை நேரம் போல ஒளியுடன் விளங்கும். மதிய வேளை அவனது உடலில் வெண்ணிறு அணிந்த தோற்றமுடன் விளங்கும் மாலைக்காலம் அவனது உடலை ஒத்துச் செந்நிறத் தன்மையாய் விளங்கும். இரவுக்காலம் அவனுடைய கருமை பொருந்திய கழுத்தின் கறைபோல் அடர்ந்து தோன்றும். எல்லாக் காலங்களுமாக இருக்கின்றவன் இறைவனே ஆவான்.

**சிவபெருமானின் தோற்ற வருணனை**

கழுத்தில் விடத்தைக் கொண்டிருக்கின்ற இறைவா! நீ உன்னுடைய மார்பில் அணிந்திருக்கின்ற பாம்பு உன்னுடைய கழுத்தை நக்கியதனால் கீழ்வாயில் விடம் உடையதானதா? அதன் உடல் கருமை நிறம் அடைந்ததா? (66)

சிவனது தலையில் சூடியிருக்கின்ற பிறைநிலவு, பாம்பு, கங்கை, பாய்கின்ற தன்மை உடைய புலி ஆகியனவும் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கின்றன. கங்கை ஒலியுடன் ஆறாகப் பாய்கிறது. இவற்றோடு சிவனின் கால்களில் அணிந்த சிலம்புகளும் ஒலியை எழுப்பிய வண்ணம் இருக்கின்றன. (67)

இளமை பொருந்திய சந்திரனை அணிந்த சிவபெருமான் பாதங்களில் சிலம்பினை அணிந்திருக்கும் உமாதேவியின் ஊடலைத் தீர்ப்பதற்காக யாசகம் கேட்டுச் செவ்வரத்த மலர்களைச் சிலம்பணிந்த பாதங்களில் பெய்த ஊடல் நீங்கி நற்சொற்களைச் கேட்டு, எதிரில் தோன்றுகின்ற செவ்வானத்தை விடச் சிவந்த சடையுடைய தலையால் வணங்கிச் செந்நிறத்தை உடையவன் ஆனான். (68)

இறைவன் சடைமுடியில் வளைவான பிறைநிலவை அணிந்தவன். மூன்று கண்களை உடையவன். அவனது நன்மை வழங்கும் பாதங்களைத் தலையில் தாங்கிக் கொண்டோம். உடல்குறுகி இறைவனை வணங்கும் அடியார்களின் கூட்டத்தில் சேர்ந்து அடியவரானோம். உயிர் கவரும் இயமனும் இனி நமக்கு ஒரு பொருளாக மதிக்கத் தக்கவன் இல்லை இனிமேல் துன்பம் என்று ஏதும் இருக்கிறதா? (69)

**“எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிரா**

**தெமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே**

**போந்தெரி பாய்ந்தன்ன புரிசடையாய் பொங்கிரவில்**

**எந்தெரி பாய்ந்தாடு மிடம்” (70)**

நெருப்பினை உண்டாக்குவது போன்ற சிவந்த சடையினை உடைய என் தந்தையே, என் மனத்தைவிட்டு நீங்காத பேராசை ஒன்று இருக்கிறது. அடர்ந்த இருளுடைய இரவுக் காலத்தில் கரத்தில் ஏந்திய நெருப்புடன் நீ நடனமாடுகின்ற இடத்தை எனக்குக் காட்டியருள வேண்டும்.

**உமையம்மையின் சிறப்பு**

சிறப்புப் பொருந்திய மூன்று கண்களை உடைய இறைவனே! இடது புறத்தில் வானில் உதயமாகின்ற நிலவினையும் அதனருகே ஒப்புமை கூற இயலாத கங்கையினையும் வைத்திருக்கிறாய். ஆனால் மலையரசன் பெற்ற மகளாகிய பார்வதி தேவியின் உடலின் ஒரு பகுதி உன்னில் காணக் கிடைக்கவில்லை. உலகப் பொருள்களில் எல்லாம் நிறைந்திருக்கும் இறைவனே! இது உனக்குத் தெரியுமா! (71)

அரிந்து எடுக்கப்பட்டது போன்ற வானில் உலவும் பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்து விளங்கும் இறைவா! மேல் உலகம் கீழ் உலகம் என அமைந்த பதினான்கு உலகங்களுக்கும் தலைவனாக விளங்குகின்றவனே! இதுவே என்னுடைய மனக்கருத்தாகும். உலகத்தையே எனக்குக் கொடுப்பதாக இருந்தாலும் உனையன்றி வேறு தெய்வத்தை நான் வணங்கவும் மாட்டேன் அதற்கு நான் பணி செய்யவும்மாட்டேன். (72)

மனமே! நீ நினைத்ததை எல்லாம் அப்போதே செம்மை செய்து கொள்ளலாம். உறுதியாக நான் சொல்கிறேன். அலைகள் பெருகும் கங்கையைத்

தலையில் அணிந்த சிவபெருமானின் பாதங்களை நீ விருப்பமுடன் வணங்கி எக்காலமும் பாமலைகளால் பாடுவாயாக. (73)

இறைவா! நீ உன்னுடைய கரத்தில் வைத்திருக்கின்ற கண்கள் பொருந்திய மண்டை ஓடாகிய பிச்சைப் பாத்திரத்தில் கடல் நீரை உலையில் பெய்து அரிசி இட்டுச் சமைத்த உணவினை நிறைய இட்டும் நிறையவில்லை. தாருகாவனத்து முனிவர்களின் மனைவியர்கள் தங்கள் மனதில் ஏதும் நினைக்காமல் இட்ட பிச்சையினால் நிறைந்த அதிசயம் என்ன? சொல்லியருள வேண்டும். (74)

**சிவனின் விரிந்த சடை**

**"கலங்கு புனற்கங்கை யூடாட லாலும்**
**இலங்கு மதிஇயங்க லாலும் - நலங்கொள்**
**பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்கலாலும்**
**விரிசடையாங் காணில் விசும்பு" (75)**

சிவனின் விரிந்த சடையினை நாம் பார்க்கின்ற போது, கங்கை சடையினில் வீற்றிருப்பதாலும், ஒளி நிறைந்த சந்திரன் வீற்றிருப்பதாலும், தன்னை வழிபடுவோர்களின் பிறவியாகிய கடலைக் கடக்க அவன் தோணியாக உதவுவதாலும், வளர்கின்ற தன்மை உடைய சடையினில் பாம்பு விளங்குவதாலும் அது ஆகாயத்தைப் போலத் தோற்றுமளிக்கிறது.

எங்களின் தந்தையாக விளங்குபவனே, மேல் உலகில் பிரமனும் தேவர்களும் உன்னுடைய பாதங்களைப் பணிந்ததனால் அவர்கள் தலையில் அணிந்த இரத்தினக் கற்கள் பதித்த மணி மகுடம் உரசி உனது காலில் பெற்ற தழும்புகளைப் பார்த்தோம். அதனால் எங்கள் மனமும் வருத்தத்தால் கன்றியிருக்கிறது. எங்களுடைய மன வாட்டத்தை நீவிர் நீக்கியருள வேண்டும். (76)

**சிவபெருமானின் புகழ்**

இறைவா! உன்னுடைய பாதங்களைப் பெயர்த்து வைத்தால் கீழ் உலகங்கள் ஏழும் தன்னிலையில் இருந்து மாற்றமடையும், தலையை அசைத்தால் உயர்ந்த சிகரங்கள் பெயர்ந்து விழும். கடகம் என்னும் அணிகலன் அணிந்த கையை உயர்த்தினால் எட்டுத் திசைகளும் நிலை குலையும் முத்திரைகளை அறிந்து நடனம் செய்யும் உனக்கு மேடைகள் போதமாட்டாது. (77)

ஆணவம் நிறைந்த என் மனமே! நடனமாடுதற்குரிய மேடையாக நினைத்துப் பேய்கள் வாழ்கின்ற மயானத்தில் நடனமாடும் இறைவன் உலக உயிர்களுக்கு வெறுமனே அருளை வழங்கிவிடுவானா? பல நாட்கள் வணங்கி மனதால் கெஞ்சினால் அருள் செய்வான் எதுவும் செய்வான். எவ்வுலகும் தருவான். (78)

எப்போதும் இறைவனை வணங்கியும் விரிந்த சடையினை உடைய சிவபெருமானின் பாதங்களில் மலர்களைச் சார்த்தியும் மந்திரங்களாலும் யாகங்களாலும் இறைவனை வழிபடுகின்ற அடியார்களையும் வணங்கி, அடியார்களுக்கும் எம்முடைய தலைவனான சிவபெருமானுக்கும் தொண்டு செய்யும் அருளைப் பெற்றதனால் மனம் இறுமாப்புக் கொண்டிருக்கிறது. (79)

**செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்**
**அரக்கனையும் முன்னின் றடர்த்த - திருத்தக்க**
**மாலையனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்**
**காலனையும் வென்றுதைத்த கால் - (80)**

இறைவா! உன்னுடைய பாதம் ஆணவம் கொண்டு கயிலைமலையைப் பெயர்த்த இராவணனைத் தண்டித்தது, பிரம்மனும் திருமாலும் உன் அடியையும் முடியையும் காண இயலாமல் தேடிய போது என்னை வணங்கித் துதிக்கச் செய்தது. உயிரைக் கவரும் பொருட்டு பாசக்கயிறு வீசிய இயமனை மார்கண்டேயனுக்காக உதைத்துத் தள்ளியது.

தாமரை மலர்போன்று வட்டமாகிய அழகிய திரிபுராசுரர்களின் கோட்டைகள் மூன்றையும் அழிப்பதற்காக நெருப்பு அம்பினை எய்த சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை அடைந்து உயிர்கவரும் இயமனை வென்றோம். கொடுமையான துன்பமுடைய நரகத்துக்குச் செல்வதில் இருந்து விலகினோம். வருந்தும் தன்மையனவாகிய சஞ்சிதம் ஆகாமியம் என்னும் வினைகளை வேரோடு அழித்தோம். (81)

நெருப்பின் நிறமான சிவபெருமானின் தாழ்ந்து விளங்கும் சடை நெருக்கமாக இருந்து தவமனத்தோடு பார்ப்பவர்களுக்குத் தங்கத்தின் கொழுந்தான தளிர்களைப் போல ஒளிவீசும், அவனை நினைக்காமல் தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு நெருப்புக் கொடி போல விளங்கும். மனத்தால் உணர்ந்து பார்க்கும் போது கீழ் நோக்கிய ஒளியை உமிழக் கூடிய சூரியனின் சிவந்த கதிர்கள் என்றும், வளைவாகிய மின்னல் என்றும் உலகத்தவர்கள் சொல்வார்கள். (82)

**சிவனின் சடைமுடியும் மூன்று கண்களும்**

நீண்ட மின்னலைப் போல ஒளிவிளங்கும் செந்நிறமான சடையினை உடைய சிவபெருமான் திருமாலோடு சோந்து இருந்தால் காண்பவர்களுக்கு எப்படி விளங்கித் தோன்றும் என்று கேட்பவர்களுக்கு, சிவனைப் போல ஒளிவிளங்கும் பொன்னின் மயமான மலையும் திருமாலின் சிறத்தை உடைய நீல இரத்தினமலையும் ஒன்று சேர்ந்து விளங்குவதைப் போலத் தோன்றும் என்று சொல்வேன். (83)

உயர்மாக எழுந்து எரியும் பெரு நெருப்பும், ஒழுங்கான வடிவமுடைய குளுமை பொருந்திய நிலவும், காலத்தின் நிலையைக் காட்டுகின்ற வெம்மையான கதிர்களை உடைய சூரியனும் சிவனின் மூன்று கண்களாக அமைந்திருக்கின்றன போலும், கொடுமையான கோபத்துடன் பகைகொண்டு திரிந்த முப்புர அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் தன்னடைய வெப்பம் பொருந்திய

நெருப்புக் கண்ணால் அழிந்தபோதும் அவை சிவனின் மூன்று கண்களால்தான் அழிந்திருக்க வேண்டும். (84)

**"கண்ணாரக் கண்டும்என கையாரக் கூப்பியும்**
**எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோன்**
**எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ**
**பெரியானைக் காணப் பெறின்" (85)**

உலகின் மிகப்பெரிய பொருளான சிவனை நான் நேரில் கண்டால் கண்கள் நிறையும் அளவு அவனைப் பார்த்தும், கைகள் தலையில் குவியுமாறு வணங்கியும், தியானத்துக்குப் பொருத்தமாக மனத்தால் வணங்கியும், தேவர்களின் தலைவனே என்றும், நெருப்புமயமான மயானத்தில் நடமிடுபவனே என்றும் கூறி மகிழ்வேன். (85)

ஒரு கண்ணை நெற்றியில் கொண்டிருக்கும் சிவபெருமான் தன்னுடைய நல்ல பேய்களாகிய கூட்டத்தில் எனக்கும் என்னைப் போன்றவர்களும் அவனின் திருவருள் கிடைத்தாலும் கிடைக்காமல் போனாலும் மற்ற பிறந்து அழியும் தன்மையனவாகிய தெய்வங்களின் அருளைப் பெற்றால் அதை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டோம். (86)

## ஆணவம் என்னும் கொடிய வினை அழிந்து போதல்

சிவபெருமானுடைய அழகிய பாதங்களுக்கு அன்போடு நாவால் இசைக்கும் பாமாலைகளை அணிவித்தும், அன்புடன் பூமாலை தொடுத்து அணிவித்தும் இறைவனை அறியக்கூடிய தியான நெறியில் நாம் சென்றால் என்ன ஆகும்? குறிப்பாகச் சொல்லப்படுகின்ற நெருப்பின் தன்மையதான ஆணவம் என்னும் கொடிய வினை அழிந்து போகும். (87)

எப்போதும் நன்மை பொருந்தியவனே! செம்மை நிறமுடைய சடையின் மேல் ஒளிவீசக்கூடிய வெண்மையான பிறைநிலவை அணிந்திருக்கும் என்னுடைய

தலைவனே, உன்னுடைய கழுத்தில் விளங்கும் ஒளி எத்தகையது? அதை அடர்ந்த இருளின் வடிவம் என்று சொல்வேனா? பெருமைமிக்க கார்மேகம் என்று சொல்வேனா? குற்றம் இல்லாத நீல இரத்தினம் என்று சொல்வேனா? இறைவா! நீ எனக்குச் சொல்லியருள வேண்டும். (88)

ஒளிபொருந்திய வில்லைக் கொண்டிருக்கும் திருமாலின் மகனாகிய மன்மதனை ஒளி விளங்கும் சாம்பலாகப் போகும்படி பார்த்து, குற்றங்கள் நீங்கிய தெளிவான மனத்தில் வீற்றிருப்பவனே! ஒளி நிரம்பிய விடத்தை உண்டவாயானது அமைதியாக இருக்கவும் உன்னுடைய கழுத்தானது கருமைநிறம் அடைந்ததன் காரணம் என்ன? இதனைக் கூற வேண்டும். (89)

**கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்**
**டேற மிகப்பெருகின் என்செய்தி - சீறி**
**விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்**
**தெழித்தோடுங் கங்கைத் திரை - (90)**

குளிர்ச்சி பொருந்திய சடையை மேலே அழித்துவிட்டு அதிகமாகப் பெருகினாலும், சீற்றமுடன் கண்களை வழிக்கும் ஒளிபொருந்திய பாம்பையும் வெண்மையான நிலவையும் கங்கை நீரின் அலைகள் இழுத்துக்கொண்டு சென்றாலும் நீ என்ன செய்வாய்? என்னுடைய தந்தையே! இதனை எனக்குச் சொல்லியருள வேண்டும்.

கங்கை நதியின் அலைகள் அடிக்கும் செம்மைநிறமான சடையினை உடைய சிவ பெருமானின் திருவடிகளுக்கு அடிமையாகுமாறு இறைவனுடைய ஐந்தெழுத்து மந்திரத்தை முறைப்படி ஓதி வீடுபேறு அடைவதற்கான வழியைத் தெரிந்து கொண்டோம். இவ்வுலக வாழ்வுக்கும் மறுபிறவிக்கும் தேவையான எல்லா நற்பொருள்களையும் தியானத்தின் வழியாகப் பெற்றோம். தெரிந்து கொண்டீர்களா? எங்களைப் பிறசமயத்தவர்களோடு சேர்த்து வைத்துப் பேசுவது ஏன்?. (91)

பொன்னால் ஆன கம்பிகளைச் சுருள் சுருளாகச் சுற்றியது போன்ற தூய்மையான சடையினை உடையவன், தேவர்களுக்கு அருள் தருமாறு தேவர் உலகத்தைத் தனக்குரிய இடமாகக் கொண்டவன். அவன் எத்தகைய தன்மையானவன் என்றால் என்ன அடிமை கொண்டவன், தனியானவன், தான் இத்தகையவன் என்பதை அறியாதவன். (92)

நல்லனவற்றைச் செய்கின்ற மனமே, எப்பொழுதும் இறைவன் தேவர்களின் தலைவனாக விளங்குபவன் என்பதைத் தெரிந்து கொள்வாயாக, அவன் செம்மை நிறமுடைய அழகிய பவளம் போன்ற செம்மை நிறத்தை உடையவன் என்பதை அறிந்து கொள்வாயாக, கருமை நிறம் பொருந்திய கழுத்தை உடையவன் அவனே என்பதை உணர்ந்து கொள்வாயாக, அவனிடம் உண்மையாக அன்பு கொண்டு தியானத்தை மேற்கொள்வாயாக. (93)

மேகத்தின் நிறத்தை ஒத்த திருமாலைக் காளை வாகனமாகக் கொண்ட இறைவனே, உமையம்மை மீது கொண்டிருக்கும் விருப்பத்தினால் அவளைப் பிரிவது கிடையாதா? அவள் தங்கி இருப்பதற்கு இடம் கிடையாதா? என்ன காரணம்? மலையரசனின் மகளானவள் உன்மைப் பிரிந்து தனியாக இருக்க அச்சம் கொள்வாளோ? சொல்லியருள் வேண்டும். (94)

**“அவளோர் குலமங்கை பாகத் தகலாள்**
**இவளோர் சலமகளும் ஈதே - தவள நீ**
**றென்பணிவீ ரென்னும் பிரிந்தறியீா ஈங்கிவருள்**
**அன்பணியார் சொல்லுமின்இங் கார்” (95)**

வெண்மையான திருநீற்றையும் எலும்பையும் அணிந்து கொள்ளும் இறைவனே, உமையம்மை ஒப்பற்ற கற்புடையவள். ஆதலால் உன்னைவிட்டு பிரிவது கிடையாது. நீர்வடிவமான கங்கை உமது சடையில் வீற்றிருக்கிறாள்.

இவர்கள் இருவரையும் நீங்கள் விட்டுப் பிரிவதே இல்லை இவர்கள் இருவரில் அன்பினையே அணிகலனாக அணிந்திருப்பவர்கள் யார்? சொல்லியருள் வேண்டும்.

அழிக்கும் தன்மை உடைய இறைவனைக் கண்களால் கண்டு வணங்குபவர்கள் யார்? அன்பு என்னும் போர்வையினால் ஒப்புமை கூற இயலாத மனத்துக்குள் அவனைப் புகவைத்துத் தந்திரம் நிறைந்த மனத்தால் மறைத்து வைத்திருக்கிறேன். (96)

## முப்புரம் எரித்த சிவன்

முப்புரங்களையும் எரித்த இறைவனே! திரிபுராசுரர்களின் கோட்டைகளை அழிக்கும்படி உள்ளே புகுந்து வருத்தம் கொள்ளுமாறு புறப்பட்டு கலந்து எழுந்த சிவப்பு நிறமான நெருப்பினை ஏழு உலகங்களிலும் மறைத்து வைத்து அமர்ந்திருக்கிறாயோ? அவ்வாறு அல்லாமல் அதிகமான வெப்பத்தோடு உன்கையில் ஏந்தியிருக்கிறாயோ. (97)

கால்களில் அணிந்திருக்கும் கழல்கள் ஒலியெழும்பும்படி பேய்க் கூட்டங்கள் ஆடுகின்ற ஏதுமற்ற மயானத்தில் ஒளி விளங்கும் படியாகக் கையில் நெருப்பினை ஏந்திக்கொண்டு நெருப்பில் நடனமாடுகின்ற இறைவனே, நெருப்பைக் கையில் ஏந்திருப்பதனால் கை செம்மை நிறமானதோ அல்லது அழகிய கையில் பொருந்திய செம்மை நிறத்தால் நெருப்பு சிவந்த தோன்றுகிறதோ, இதனைச் சொல்லியருள் வேண்டும். (98)

உடலில் அமைந்த வாயினைத் திறந்து நெருப்பைப் போன்ற விடத்தைக் கக்குகின்ற ஐந்து வாயினை உடைய பாம்பினை அணிந்தவனே, நீ ஆடுகின்ற நடனத்தைச் சிமிழைப் போன்ற மார்புடைய உமையம்மை காணும் பொருட்டு ஆடுகிறாயா? அல்லது ஒன்றுமற்ற வெளியில் நெருப்பு எரியும் மயானத்தில் பேய்க் கூட்டங்கள் காண்பதற்காக ஆடுகிறாயா? எனக்குச் சொல்லியருள வேண்டும். (99)

**“நடக்கிற் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்**

**இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்**

**பொரும்ஏறோ ஆன்ஏறோ பொன்னொப்பாய் நின்ஏ(று)**

**உரும்ஏறோ ஒன்றா உரை” (100)**

தங்கத்தின் நிறத்தைப் போன்றவனே உன்னுடைய காளை வாகனம் நடந்து சென்றால் உலகம் அச்சம் கொள்ளும். கண்களால் பார்த்தால் திசைகள் எரிந்து போகும். உரசிக்கொண்டு சென்றால் உலகம் வருத்தம் கொள்ளும். அதுவோடல்லாமல் மலையோடு போர் செய்யும் சிங்கமோ? மேகத்தில் தோன்றும் இடியோ? கோபமுடைய ஆண்புலியோ? நீ எனக்குப் பொருத்தமான ஒன்றைச் சொல்லியருள வேண்டும்.

## தமிழ்விடு தூது

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று. கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அ∴றிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம். மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்க நாதர் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடுதூது. இதனை இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை.

**“விருந்தே தானே புதுவது கிளந்த**

**யாப்பின மேற்றே”**

என்று பிற்காலத்தில் தோன்றும் இலக்கிய வகைகளுக்கெல்லாம் விருந்து என்னும் பெயர் கொடுத்து அழைத்திருக்கிறார் தொல்காப்பியர். அவ்வகையில் புத்திலக்கிய வகைகள் தமிழில் பல்கிப் பெருகிய காலம் சிற்றிலக்கியக் காலம். சிற்றிலக்கியக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பாட்டியல் நூல்கள் தொண்ணூற்று ஆறு

என்னும் வரையறைக்குள் கொண்டு வருகின்றன. சிற்றிலக்கிய வகைகளுள் பள்ளு, குறவஞ்சி, தூது, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம் முதலானவை புகழ்பெற்றவை. சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான தூது இலக்கியம் சிற்றிலக்கியக் காலத்திலும் பிற்காலத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்த இலக்கிய வகையாகும். சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே தூது இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. ஒருவர் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிப்பதற்காக அனுப்பப்படுவது தூதாகும். அக இலக்கிய முறைமையில் தலைவி தன் மனக் கருத்தைத் தலைவனுக்கு உணர்த்தும் முகமாக அஃறிணை உயர்திணைப் பொருள்களைத் தூதாக விடுத்தமையை அக இலக்கியங்களால் அறியலாம்.

தூது இலக்கிய வகைக்கான இலக்கணத்தை நவநீதப் பாட்டியலே முதன் முறையாகக் கூறியது. ''கலிவெண்பா தூது'' என, தூது நூல் கலிவெண்பாவால் பாடப்படும் என்று நவநீதப் பாட்டியல் (நா.45) குறிப்பிடுகிறது.

**"பயில்தரும் கலிவெண் பாவினாலே"**

என்று இலக்கண விளக்கமும்,

**"ஆணும் பெண்ணு மவரவர் காதல்"**

என முத்துவீரியமும் குறிப்பிடுகின்றன. பிரபந்தத் திரட்டு வெண்பா.

**"எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை"**

என்னும் பாவின் வழியாக அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புகள், தோழி, குயில், நெஞ்சும், தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களும் தூதுக்கு உரியவை எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் நெய்தல் திணையில் இடம்பெறும் பாடல்கள் தூது குறித்த செய்திகளை மிகுதியாகப் பெற்றுள்ளன. தொல்காப்பியரால் கூறப்பட்ட காமம் மிக்க கழிபடர் கிளவி என்னும் துறையே பிற்காலத்தில் தூது இலக்கியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

தூது, தனி இலக்கிய வகையாக முகிழ்த்த காலத்தில் முதன் முதலாகத் தோன்றியது உமாபதி சிவாச்சாரியாரால் பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நெஞ்சுவிடு தூதாகும். கால வளர்ச்சியில் ஞானப்பிரகாசர் நெஞ்சுவிடு தூது, கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது, கிளிவிடு தூது, தமிழ்விடு தூது முதலான தூது நூல்கள் தோற்றம் பெற்றன.

தூது இலக்கிய நூல்களுள் செறிவும் இனிமையும் மிக்கதாய்த் தனித்தன்மையுடன் திகழ்வது தமிழ்விடு தூது. மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன்னுடைய காதலைச் சிவபெருமானிடம் கூறிவருமாறு தமிழைத் தூதனுப்பிய பொருளில் பாடப்பட்டது. கலிவெண்பாவால் இயன்ற 268 கண்ணிகளை உடையது. இந்நூலைப் படைத்த ஆசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை. இந்நூலைப்படைத்த ஆசிரியர் தன் மனத்தில் இருந்த தமிழின் உயர்வைப் பன்முகமாகப் போற்றிச் சிறப்பித்திருக்கிறார்.

இலக்கியத்தின் தொடக்கத்தில் இருந்து இறுதிவரை தமிழின் சிறப்பு எடுத்துக் கூறப்படுகிறது. இலக்கியத்தில் இடம்பெறும்,

**“அரியாசன முனக்கோ யானா லுனக்குச்**

**சரியாரு முண்டோ தமிழே”   (தமிழ்விடு தூது. 62)**

என்னும் கண்ணிகள் நூலாசிரியரின் தமிழ்ப்பற்றை அறிந்து கொள்ளச் சான்றாய் அமைவன. தமிழ் மொழியின் சிறப்புகளையும், தெளிவையும், இனிமையினையும், செறிவையும், திண்மையினையும் ஆசிரியர் நுட்பமான கண்ணோட்டத்துடன் கூறியிருக்கும் பாங்கு நூலாசிரியரின் தமிழ்ப்புலமைக்குத் தக்க சான்றாகயமைகிறது. தமிழின் சிறப்புகளையும் பெருமைகளையும் எடுத்துக் கூறும் இவ்விலக்கியத்தைக் கற்றுத் தமிழின் சிறப்புகளை உணர வேண்டியது நம் கடமை.

**தமிழ்ச் சான்றோர்களின் புகழ்**

**சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்**

**தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்**

சிறப்பு மிக்க மதுரை என்னும் சைவ சமயத்தின் தலை நகரைக் காத்து அழகு பொருந்திய தமிழ்ச் சங்கத்தில் புலவராக வீற்றிருந்தவரும்.

**டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு**

**விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே**

தமிழரசி என்று பலரும் வாழ்த்தி வணங்குமாறு பலதிசைகளிலும் சென்று போர்புரிந்து வெற்றி பெற்ற பெண்களின் தலைவியாகிய மீனாட்சியும்.

**செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு**

**கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்**

ஆராய்ந்து தன்னுடைய முடியில் மணம் நிரம்பிய தாழம்பூவைச் சூடிக்கொள்ளாதவராகிய சிவபெருமான ஓலைகளை வாரிச் சேர்த்து தம்முடைய பட்டோலையில் எழுதிக் கொள்ளுமாறு கூறியவரும்.

**ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்**

**தொல்காப் பியமொழிந்த தொன்மொழியம் - மல்காச்சொற்**

தடை ஏற்படாமல் குறையாத பெருமை உடைய இயல், இசை,நாடகம் என்னும் முத்தமிழையும் எடுத்துக் கூறியவராகிய அகத்திய முனிவரும், தமிழின் தொன்மையான இலக்கணத்தை எடுத்துக் கூறிய தொல்காப்பியனும்.

**பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு**

**சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்**

குறையில்லாத சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பாடிய பாக்களால் இறைவனை நாடிச் செல்லும் உயிர்களைப் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு கட்டிய தூயவரும்.

**தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்**

**ஆதி முனிவ ரனைவோருஞ் - சாதியுறும்**

இரண்டு கண்களாகிய தீமை இல்லாத கவிதைகளைப் படைத்தளித்த திருமாளிகைத் தேவரை முதலாகக் கொண்ட முனிவர்கள் அனைவரும்.

**தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு**

**மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழிற்**

பிறந்த குலத்தாலும் செய்யக்கூடிய சூழ்ச்சி மிக்க செயல்களாலும் அழியாத உயிரைச் சேரும் வினைகளை, எடுத்துக்கூறிய திருமந்திரம் என்னும் மறை நூலால் ஒழித்த வலிமை உடையவராகிய திருமூலரும்.

**பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்**

**மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்**

சிறப்புடைய தமிழ்மொழியில் பொய்கூறும் தன்மை இல்லாத புலவர் என்று புலவர்களால் சொல்லப்பட்ட உண்மைத தன்மை உடையவர்களாகிய சங்கப் புலவர்களும்.

**காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்**

**பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாடவருங்**

ஐயடிகள் காடவர் கோனும் தூய்மையான சொல்லை உடைய கழறிற்றறிவார் என்னும் இறையடியாரும் பாடுவதற்கு அரிதான தெய்வமொழிப் புலவராகிய திருவள்ளுவரும்.

**கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியா்**

**எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்**

ஆராய்ச்சி செய்வதற்கு அரிதான கல்வி கற்காத அறிவற்றவா்களுக்குச் சிங்கம் போன்று கல்வி கேள்விகளில் சிறந்த அனைவரும் நீயாக இருந்ததனால்.

**என்னடிக் கேளயுனைக்கண் டேத்தினிடா் தீருமென்றுன்**

**பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென**

புகழ்நிறைந்த, எனக்குக்கிடைத்த தெய்வமே, உன்னைக் கண்டு வணங்கித் துதித்தால் துன்பங்கள் தீரும் என்று உன்னுடைய பொன்போன்ற மேன்மைமிக்க திருவடிகளை அடைக்கலமாகக் கொண்டு போற்றுகின்றேன்.

**பஞ்சிபடா நூலே பலா்நெருடாப் பாவேகீண்**

**டெஞ்சியழுக் கேறா வியற்கலையே - விஞ்சுநிறக்**

நெருக்கமான மென்மைத் தன்மை உடைய பஞ்சினால் நூற்கப்படாத நூலே, பலரால் நெருடப்படாத பாவே, கிழிந்தும் குறைந்தும் அழுக்குப்படாத தன்மையுள்ள ஆடையே.

**தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்**

**தீயாது சொல்வினையுஞ் செய்யுளே - வீயா**

மீஞ்சிய நிறம் தோயாத செந்தமிழே சொல்லை ஏராகக் கொண்டு புலவர்களின் மனம் கருகாமல் சொல்லை விளைவிக்கும் செய்யுளே.

**பாவும்,எழுத்துகளின் பிறப்பும்**

**தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்**

**வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்**

எந்தக் குலத்திலும் பிறக்காமல் இறக்காமல் உயிருக்குள் உயிராய் நின்றாய், பிறப்பும் இறப்பும் இல்லை எனினும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து குலமாக வளர்ந்தாய்,

**புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்**

**கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்**

பெருமை நிலைபெற்ற பூவுலகில் புண்ணியம் வாய்ந்த தொப்புளில் காற்றுத்தங்கி வாக்காகச் சூல் கொண்டு,

**தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திழ்நாத் தந்தம்**

**உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி**

தலை, கழுத்து, மூக்கு, நெஞ்சு, ஆகிய நான்கு இடங்களைச் சார்ந்து உதடும் நாக்கும் பல்லும் கெடாத மேல்வாயும் ஆகிய கருவிகளால்,

**ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று**

**நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே**

தலையில் இருந்து மீண்டு ஏற்குமாறு உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு மெய்யெழுத்துகள் பதினெட்டு என முதல் எழுத்துகள் முப்பதாகவும், உயிர்மெய்(216) உயிரளபெடை(7), ஒற்றளபெடை(11), குற்றியலுகரம்(1), குற்றியலிகரம்(1), ஆய்தம்(1), ஐகாரக்குறுக்கம்(1), ஔகாரக்குறுக்கம்(1), மகரக்குறுக்கம்(1) எனச் சார்பெழுத்துகள் இருநூற்று நாற்பதாக நன்றாகப் பிறந்தாய்.

**எண்முதலா கப்பகரு மீரா றெனும் பருவம்**

**மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணியோற்**

முதல் சார்பு எழுத்துகளாய்ப் பிறந்தபின் மேலும், எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ச்சி,

எனப்பன்னிரண்டு பருவங்களாக மண்ணுலகில் வாழும் கல்வியில் முதன்மை உடையோர் வளர்த்து வரும் காலத்தில்,

**பள்ளிக்கூட டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்**

**தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு**

ஆசிரியர்களுக்குக் கண்மணிபோல் விளங்கி பள்ளிக்கூடத்தில் அசையாம் பலப்பல தொட்டிகளில் இட்டு சிறுவர்கள் தள்ளித் தாலாட்டி,

**மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**

**மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய மஞ்சரையே**

உள்இடம் விளங்குமாறு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டி கழுவி மை இட்டு அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பால்களையும் மிகுதியாக அருந்த வைத்தமையால் மிகுதியாக வளர்ந்தாய்,

**பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீ வளர்ந்தாய்**

**உன்மை வளர்த்துவிட வொண்ணுமோ - முன்னே**

புதல்வர்களையே காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி (சிற்றில் சிறுபறை சிறுதேர்) (கிழங்கு அம்மானை ஊசல்) என்னும் பத்துப் பருவங்களாக்கி நீ வளர்ந்தாய். அத்தகைய சிறப்புடைய உன்னை யாரால் வளர்க்க இயலும்?

**நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்**

**உயையும் படிப்பிப்பா ருண்டோ - புனைதருநற்**

முதலில் நினைக்கும் கல்வி எல்லாம் உன்னிடம் உள்ளது என உணர்ந்து உன்னைப் படிப்பவரே மனிதர் என எண்ணப்படுவார். அது அவ்வாறு இருக்க, உனக்குக் கற்றுக் கொடுப்பவர் எவரும் உண்டோ? இல்லை.

**சொல், திணை,யாப்பின் உறுப்புகள்,அணிகள்**

**செய்யுட்சொன் னான்குமுயர் செந்தமிழ்ச்சொல் லோர் நான்கும்**

**மெய்யுட் பொருளேழ் விதத்திணையும் - மையிலெழுத்**

செய்யுளை அழகு செய்கின்ற இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் சொற்கள் நான்கும், உயர்வு பொருந்திய பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு சொற்களும், மெய்யாகிய உட்பொருளில் கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய ஏழு திணைகளும், (புறத்தில் வெட்சி, காஞ்சி, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை வாகை ஆகிய ஏழு திணைகளும்),

**தாதியாய் பெட்டு மலங்கார மேழைந்தும்**

**பேதியாப் பேரெழின்மாப் பிள்ளையாய் சீ - சாதியிலே**

குற்றம் இல்லாத எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை, இனம் என்னும் யாப்பின் உறுப்புகள் எட்டும், தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வரு நிலையணி, முன்ன விலக்கணி, வேற்றுப் பொருள் வைப்பணி, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரல் நிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாகிதம், உதாத்தம், அரிதுணர், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக் கூட்டம், விரோதம், மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதர்சனம், புணர்நிலை, பரிவர்த்தனம், வாழ்த்து, சங்கிரணம், பாவிகம் என்னும் அணிகள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டு பேரழகு வாய்ந்த மாப்பிள்ளையாகி,

**ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் ஒள்ளற்பண்**

**தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா - ஓங்கு மனத்**

குலமாகிய பாவில் செப்பலோசை அகவலோசை துள்ளல் ஓசை தூங்கல் ஓசை ஆகிய பண்கள் பட்டத்து அரசிகளாகவும்,

**தெண்கருவி யைந்தீன் றிருநூற்று மூன்றான**

**பண்களும்பின் கல்யாணப் பாவையரா - யெண்கொளும்**

உயர்ந்த மனத்தினால் ஆராய்ந்த தோல் கருவி, துளைக்கருவி, கஞ்சக் கருவி, நம்புக் கருவி, மிடற்றுக் கருவி என்பவை இயைந்து உருவான நூற்று மூன்று பண்களும் திருமணத்திற்குப் பின் ஏற்றுக் கொண்ட காமக் கிழத்தியராக விளங்கவும்,

**நற்றா ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்**

**பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே - உற்றகலாப்**

கொண்டு மதிக்கப்படும் நல்லாதரவினையால் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம் என்னும் ஒன்பது சுவைகளாகிய குழந்தைகளைப் பெற்றெடுத்துப் பெருமை கொள்ளத்தக்க வாழ்வினைப் பெற்றாய்,

**பண்கள் முதற் பெண்களொடும் பாலரொடு நாடகமாம்**

**பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே - மண்புகழத்**

பொருத்தமாக இருந்து உன்னை விட்டு நீங்காத பண்கள் முதலாகிடப் பெண்களோடும் பிள்ளைகளோடும் நாடகமாகிய பெண்கள் கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாய்,

**தாழ்விலா வட்டா தசவன் னனைகளெனும்**

**வாழ்வெலாங் கண்டு மகிழ்ந்தாயே - ஆழ**

மண்ணுலகில் உள்ளவர்கள் புகழும்படி குறைவில்லாமல் மலை, கடல், நாடு, நகர், வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம், ஆறு, கதிரவன், நிலவு ஆகிய வர்ணனைகள் பதினெட்டனைப் பெற்று மகிழ்ந்திருந்தாய்,

**நெடுங்கோல வையையிலென னேசர்மேற்பட்ட**

**கொடுங்கோல்செங் கோலாகக் கொண்டாய் - அடங்காத**

ஆழமானதும் நீண்டதும் அழகுள்ளதுமாகிய வகையாற்றின் கரையை அடைக்கச் சென்ற என் அன்புக்கு உரியவரான சிவபெருமான் பட்ட பிரம்பின் அடியைச் செங்கோல் போல ஏற்றுக் கொண்டாய்,

**எங்கோவே பத்தென் றியம்புதிசைக் குள்ளேநின்**

**செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேயுன்**

அடங்காத வலிமை உடைய என் மன்னனே! கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு, மேல்த்திசை, கீழ்த்திசை என்னும் பத்துத் திசைகளுக்குள் உன்னுடைய ஆட்சி செல்லாத திசை இருக்கிறதோ,

**தேசமைம்பத் தாறிற் றிசைச்சொற் பதினேழும்**

**மாசறநீ வைத்தகுறு மன்னியரோ - வீசு**

மண்ணுலகில் உள்ள ஐம்பத்தாறு தேசங்களிலும் வழங்கப்படும் திசைச்சொற்கள் பதினேழும் குற்றமில்லாமல் அரசாட்சி செய்வதற்காக நீ அரசாள நியமித்த குறுநில மன்னர்களோ,

**பன்னிரண்டு நாடுகள்**

**குடகடலுங் கீழ்கடலுங் கோக்குமரி யாறும்**

**வடவரையு மெல்லை வகுத்தாய் - இடையிருந்த**

அலைவீசும் மேற்குக் கடலும் கிழக்கே உள்ள வங்கக் கடலும், தென்குமரி ஆறும், வடக்கில் வேங்கடமலையினையும் எல்லையாகக் கொண்டாய்,

**முன்னுறுந்தென் பாண்டி முதற்புனனா டீறான**

**பன்னிரண்டு நாடுமப் பானாடோ - அந்நாட்டுள்**

இவற்றின் இடையில் இருந்த தென்பாண்டி நாடு முதலாகப் புன்னாடு இறுதியாக உள்ள பன்னிரண்டு நாடுகளும் தமிழ் நாட்டின் எல்லைக்கு உட்பட்ட நாடுகளோ, (குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு பூமிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடதலை நாடு, சீத நாடு மலாடு ஆகிய நாடுகள் தமிழ் நாட்டிற்கு உட்பட்ட நாடுகளாகும்.

**வையை கருவையரு தாறுமரு வூர்நடுவே**

**யைநீ வாழு மரண்மனையோ - செய்யபுகழ்**

அந்நாட்டுக்குள் வையை கருவை மருதாறு, மருவூர் என்னும் இவ்வூர்களின் நடுவே அரசே! நீ வீற்றிருக்கும் அரண்மனை இருக்கிறதோ!

**மூவேந்தர் வாகனமா மூவுலகும் போய்வளைந்த**

**பாவேந்தே நீபெரிய பார்வேந்தோ - காவேந்து**

மிகுந்த புகழை உடைய சேரர் சோழர் பாண்டியர் என்னும் மூவேந்தர்களை வாகனமாகக் கொண்டு மேல்உலகம் மண்ணுலகம் கீழுலகம் மூன்றையும் சுற்றிவந்த பாக்களின் தலைவனே! நீ பெரிய நாட்டின் மன்னனோ!

**விண்ணவருங் காணரிய வேதா கமங்களெலாம்**

**புண்ணியனே யுன்றன் புரோகிதரோ - எண்ணரிய**

கற்பகமரத்தைக் கொண்டிருக்கின்ற தேவர்களும் காண்பதற்கு அரிதான வேதமங்களம் ஆகமங்களம் புண்ணியம் நிறைந்தவனே! அவை உன்னுடைய புரோகிதர்களோ!

**நல்லபெருங் காப்பியங் ணாடகா லங்காரஞ்**

**சொல்லரசே யுன்னுடைய தோழரோ - தொல்லுலகிற்**

எண்ணிக்கையை அறிய இயலாத சிறப்புடைய பெருங்காப்பியங்களும், நாடக நூல்களும், அணி நூல்களும், சொல்வன்மையில் சிறந்தவனே! அவையெல்லாம் உன்னுடைய நண்பர்களே!

**படைத் தலைவர்களும் படைகளும்**

**சார்புரக்குங் கோவேநற் சாத்திரங்க ளெல்லாமுன்**

**பார்புரக்குஞ் சேனா பதிகளோ - வீரரதிர்**

பழமையான உலகில் வாழ்கின்ற மக்களை காக்கும் மன்னவனே! நன்மையான கருத்துகளைக் கூறக் சாத்திரங்கள் எல்லாம் உன்னுடைய நாட்டைக் காக்கும் படைத் தலைவர்களோ!

**போர்ப்பா ரதமும் புராணம் பதினெட்டுஞ்**

**சீர்ப்பாவே யுன்னுடைய சேனைகளோ - பார்ப்பார்கள்**

படைவீரர்கள் நடுக்கம் கொள்ளத்தக்க போர் நிகழ்ச்சிகளைக் கொண்ட மகாபாரதமும் பதினெட்டுப் புராணங்களும், சிறப்புமிக்கபாடலே! உன்னுடைய படைகளோ!

**சக்கர வர்த்தியென லாமென்பார் பூலோக**

**சக்கர வர்த்தியும் நீதானன்றோ - சக்கரமுன்**

உன்னைப் பார்ப்பவர்கள் சொல்லணிக் கவியடிவானவன் என்று கூறுவார்கள். பூவுலகை ஆட்சி செய்யகூடிய மன்னவனும் நீயே ஆவாய்,

**பேந்தி நெடுந்தேர்மே லேறிச் சுழிகுளம்**

**நீந்தியோர் கூட நிறைசதுக்கம் - போந்து**

சக்கரத்தை முன்பு ஏந்திக்கொண்டு உயர்ந்த தேரில் ஏறி நீர்ச்சுழியினை உடைய குளத்தில் இறங்கி நீந்தியவர்களோடு நாற்சந்திக்கு வந்து அமர்ந்து.

**மதுரங் கமழ்மாலை மாற்றணிந்து சூழும்**

**சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்**

இனிய மனம் கமழும் மலையினை மாற்றி அணிந்துகொண்டு யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நால்வகைப் படைகளும் சூழ்ந்து நிற்க.

**முரசங் கற்க முடிவேந்தர் சூழ**

**வரசங்க மீதிருந்து வாழ்ந்தே - அருள்வடிவாய்**

நன்மையை உடையனவாக முரசு ஒலி எழுப்பவும் முடிபுனைந்த மன்னர்கள் சூழ்ந்திருக்கவும் உயர்வு பொருந்திய சங்கப் பலகையின் மேல் இருந்து வாழ்ந்தாய்,

**ஓங்குபுகழ் மூவரொருபா வொருப.்.தும்**

**ஆங்கவைசொல் வாதவூ ராளிசொல்லும் - ஓங்குமவன்**

இறையருள் பெற்றவர்களாய் உயர்ந்த புகழை உடைய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய ஒருபா ஒருப.்.தும், அப்பாக்களைக் கூறிய திருவாதவூரை ஆளக்கூடிய மாணிக்க வாசகரின் பாடல்கள்.

## வினாக்கள்

1. 'தாலப் பருவம்' - விளக்கம் தருக.
2. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - குறிப்புத் தருக.
3. குமரகுருபரரின் - குறிப்புத் தருக.
4. குமரகுருபரர் முத்துகுமார பிள்ளைத்தமிழின் தாலப் பருவத்தின் செய்திகளை தொகுத்துரைக்க.
5. புள்ளிருக்கு வேலூர் சிறப்பு யாது? விளக்குக.
6. அற்புதத்திருவந்தாதி - குறிப்புத் தருக.
7. அற்புதத்திருவந்தாதி கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

8. காரைக்கால் அம்மையாரின் வரலாற்றினைக் கூறுக.

9. இறைவனுக்கு எதுகொடுத்தால் ஈடாகும் என்கிறார் ஆசிரியர்?

10. தமிழ்விடுதூது - பெயர்க்காரணம் தருக.

11. தமிழ் விடு தூது இலக்கியம் தோற்றம் குறித்து எழுதுக.

12. தமிழை எவ்வாறு எல்லாம் புகழ்ந்து பாடுகிறார்.?

13. தமிழ்ப் புலவா்களை எவ்வாறெல்லாம் ஆசிரியா் புகழ்ந்து பாடுகிறாா்.

14. அணிகளைப் பற்றி தமிழ் விடு தூது கூறுவது யாது? விளக்குக.

15. தமிழின் சிறப்புகளை எடுத்துரைக்க.

# அலகு - 3

# திருக்காவலூர்க் கலம்பகம்

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் ஒன்று திருச்சிராப்பள்ளி. இந்த மாவட்டத்தில் கொள்ளிடம் என்ற ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள ஊர் ஏலாக்குறிச்சி என்ற திருக்காவலூர் ஆகும். தெய்வத் திருக்காவல் மிகுந்த ஊர் என்ற பொருளில் திருக்காவலூர் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கருதுவர். இந்தப் பெயரை இந்த ஊருக்கு இட்டவர் இந்த நூலின் ஆசிரியராகிய வீரமாமுனிவர் ஆவார். திருக்காவலூர் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள பெண் தெய்வம் அடைக்கல அன்னை. இந்த அடைக்கல அன்னையைப் புகழ்ந்து கலம்பகமாகப் பாடப்பட்ட நூலே இது. எனவே இந்நூல் திருக்காவலூர்க் கலம்பகம் எனப்பட்டது.

**ஆசிரியர்**

இந்த நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார். இவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பது ஆகும். இவர் இத்தாலி நாட்டில் மாண்டுவா என்ற மாவட்டத்தில், காஸ்திக்கினியோன் என்ற ஊரில் 08.11.1680 -ல் பிறந்தார். இவர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர். கிறித்தவ சமயக் கருத்துகளைப் பரப்புவதற்காக இந்தியா வந்தார். தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் மொழியைக் கற்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றார். பின் இலக்கணம், காப்பியம், சிற்றிலக்கியம், சிறுகதை, அகராதி போன்ற துறைகளில் தமிழ்மொழியில் நூல்கள் பல இயற்றினார். அவற்றுள் ஒன்றே திருக்காவலூர்க் கலம்பகம் ஆகும்.

இவர் கி.பி. 17 -ம் நூற்றாண்டில் தோன்றியவர். இவர் இந்தியர்களைப் போல நடை, உடை, பாவனை, உணவு முதலியவற்றை மேற்கொண்டவர். இவர் புலால் புசித்திலர் .தமிழ்ச் சமயல்காரர்களை அமர்த்தித்த தூய உணவு சமைக்க ஏற்பாடு செய்தனர். ஒரு வேளையே உண்டு வந்தனர். கோபிச்சந்தனம் நெற்றியில் இட்டு

வந்தனர். காவி உடை உடுத்தினர். காலில் கட்டை மிதியடி பூண்டு நடந்தனர். காதில் முத்துக்கடுக்கன் பூண்டனர். சிவிகையில் சென்று வந்தனர். புலித்தோலே இவருக்கு இருக்கை ஆகும்.

இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி, இந்துஸ்தான் பாரசீக மொழிகளைப் பயின்றவர். இவர் பன்மொழிகளைப் பயின்றிருந்தும் தமிழ்மொழியில் தான் பல நூல்களைச் செய்துள்ளனர். அவைவேயே, சதுர் அகராதி, தமிழ் இலத்தீன் அகராதி, தொன்னூல் விளக்கம், பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் முதலியன.

**சிறப்புகள்**

திருக்காவலூர்க் கலம்பகம் பல சிறப்புகளைப் பெற்ற நூலாகத் திகழ்கின்றது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. தமிழ் மொழியில் தோன்றியுள்ள கலம்பக நூல்கள் பொதுவாக ஆண்பாற் கலம்பகங்களாக உள்ளன. அதாவது பாட்டுடைத் தலைவர் ஆடவராக உள்ளனர். ஆனால், இந்தக் கலம்பகம் பெண்பாற் கலம்பகமாக உள்ளது. இந்நூல் அடைக்கலமாதா என்ற பெண் தெய்வத்தைத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.

2. கிறித்தவ சமயம் சார்ந்த கலம்பக நூலாக இது ஒன்றே காணப்படுகின்றது.

3. பிற கலம்பக நூல்களில் சிற்றின்பச் செய்திகளே அதாவது உலக இன்பச் செய்திகளே காணப்படும். இந்த நூலில் பேரின்பச் செய்திகள் அதாவது இறை இன்பச் செய்திகள் காணப்படுகின்றன.

4. இந்த நூலில் காணப்படும் கலம்பக இலக்கிய உறுப்புகளுள் ஒன்று சமூக உல்லாசம். இந்த உறுப்பு வேறு கலம்பக நூல்களில் காணப்படவில்லை.

## நூல் அமைப்பு

இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, துறை, தாழிசை, விருத்தம் முதலிய பல வகைப் பாடல்களால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் 100 பாடல்களைக் கொண்டுள்ளது.

கலம்பக உறுப்புகள் 18 எனக் கூறப்படும் பொது மரபு உள்ளது. ஆனால் கலம்பக நூல்களைப் பார்க்கும் போது 18 உறுப்புகளுக்கு அதிகமாகவும், வேறு சில உறுப்புகள் கலந்து வரவும் காணலாம். இந்த நூலில் காப்புச் செய்யுள் நீங்கலாக 20 உறுப்புகள் காணப்படுகின்றன.

திருக்காவலூர் என்பது திருச்சி. அரியலூர் அருகே உள்ள ஒரு சிற்றூர். வீரமாமுனிவர் இங்குக் கிறித்தவச் சபையைத் தோற்றுவித்து, ஓர் ஆலயமும் கட்டினார். இவ்வூருக்குத் திருக்காவலூர் எனப் பெயரும் வழங்கினார். திருக்காவலூரில் கோவில் கொண்டுள்ள அடைக்கல மாதாவே இக்கலம்பத்தின் பாட்டுடைத் தலைவி ஆவார். இந்நூலில் அன்னையின் பெருமைகளும், கிறித்துவின் புகழும் கூறப்பட்டுள்ளன.

## காப்புச் செய்யுள்: மரியாளின் வரலாறு

நூலை இயற்றும் புலவர்கள் தாம் இயற்றும் நூல் நன்கு முடிவதற்காக இறைவனைக் காக்கும்படி வேண்டிப் பாடுவர். இது காப்புச் செய்யுள் எனப்படும்.

இந்த நூலில் திருக்காவலூரில் கோயில் கொண்டுள்ள, பெண்களில் சிறந்த அடைக்கல அன்னையின் பெருமைகளைக் கூறுகின்றார். அதற்குக் கன்னிமை மாறாத சங்கு போன்ற தூயவளாகிய மரியாள் ஈன்ற இறைவனாகிய இயேசு என்ற அழகிய முத்து மாலையைத் தம் நெஞ்சில் அணிந்து கொள்வதாகக் கூறுகின்றார். இப்பாடலில் வீரமாமுனிவர் இயேசுவின் தாயாகிய மரியாளை, பால் கடல் கன்னிச் சங்கு என்ற புகழ்கின்றார். கடலில் உள்ள சங்கு மழைத் துளிகளை ஏற்று, ஆணின் உறவு இல்லாமல் கருவுற்று, முத்தினைக் கொடுக்கும். அதுபோல் ஆணின்

உறவு இன்றி தேவ ஆவியின் வல்லமையால் மரியாள் கருவுற்று, இயேசுவைப் பெற்றாள் என்று காட்டுகின்றார்.

**திருக்காவலூர்க் கலம்பகம்**

இது திருக்காவலூர் அடைக்கல மாதாவின் மீது பாடப்பட்ட நூல் ஆகும். அடைக்கல மாதா ஏசுப்பெருமானின் அன்னையாவார். திருக்காவலூர் காவிரியாற்றின் வடகரையில் உள்ள ஏலாக்குறிச்சி என்ற சிற்றூரில் உள்ளது. இதனை இக்கலம்பக நூலில் வரும்.

**"தண்டிருக் காவலூர்த் தடம்வளர்ந் தொளிபெற**
**மண்டிரு மலரடி வைத்தனை யெங்கணும்**
**வினையிராப் பரந்து விளைந்த வவாவிரு**
**டனையிற மறையொளி தருந்திருப் பகலோன்**
**வந்துயிர் விளக்க வருநா ளிதுவென**
**நந்துயி ருய்ய நகைக்கதிர் பரப்பிக்**
**கொதித்தனைத் திருளினைக் கொய்தீங்**
**குதித்தனை நீயோ ருதய மீனே"** (1)

தாயே! மேன்மை மிக்க உம்முடைய மலர் போன்ற திருவடிகளை நீ வைத்திருக்கின்ற காரணத்தால் சோலைகளால் சூழப் பெற்றிருக்கும் திருக்காவலூர் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. உலகம் எங்கும் குற்ற செயல்கள் நிகழ்வதற்கும் காரணமாகிய பாவ இருளை நிறைந்திருக்கின்ற காரணத்தால் பாவ இருளை அழித் தொழிக்கும் சூரியனாக இயேசு பெருமான் உலகில் உதித்தருளினார். உலகில் வாழ்கின்ற மக்கள் தங்கள் பாவங்கள் நீங்கி மீட்படையத் தகுந்த நாள் இதுவேயாகும் தாயே! உலக இருள் அகன்று ஒளிபரவ விடிவெள்ளியாக உலகில் தோன்றினாய்.

**“மீனே தலையரும்ப வெண்மதியே தாளரும்பப்**
**பானே யுடலரும்பப் பாங்குருவைத் - தானே**
**ருடைத்தா டிருக்காவ லூரகத்து வைத்தா**
**டுடைத்தாள் வினைத்துயரைத் தொக்கு”     (2)**

**அன்னை மரியாளின் சிறப்பு**

வானில் ஒளிதருகின்ற விண்மீன்கள் எல்லாம் தாமாக வந்து தலையில் மேன்மைமிக்க ஒளிநிறைந்த முடிவாக விளங்கவும், வெண்மை நிறமான பிறைச்சந்திரன் மலா் போன்ற மென்மையான திருவடிகளைத் தாங்கிக் கொள்ளவும், உலகிற்கு ஒளிதரும் சூரியன் உடலில் ஆடையாக இருக்கவும் அழகிய உருவம் உடையவளாகிய அன்னைமரி திருக்காவலூரின் தன்னுடய திருவடிகளைப் பதித்த காரணத்தினால் உயிர்களின் பாவச் செயல்களால் விளைந்த குற்றங்களையும் அவற்றால் விளைந்த துன்பங்களையும் அழித்தொழிந்தன.

**“தொக்க நலமேலாம் பெய்திடி யாதரு டோய்முகிலாய்ப்**
**புக்க நிழல்கொண் டிருள்புக விற்பொழிற் பொங்கலைநீ**
**ரொக்க வரையா வரங்கொண் டுவரில வோர்நிலையா**
**யக்க மகிழ்க்கண் டேன்றிருக் காவலூ ரங்களையே”     (3)**

அன்னையே! உயிர்கள் நலம்பெறும் பொருட்டு நன்மைகள் அனைத்தையும் உன் அருளால் மழையாகப் பொழிந்த மக்கள் அச்சம் கொள்ளத்தக்க இடி இல்லாமல் அருள் நிறைந்த மேகமாக இருப்பவளே! தன்னை வந்தமைந்தவா்களுக்கு இருள் இன்றித் தண்ணிய நிழல் நிறைந்த சோலையாக இருப்பவளே! அளவற்ற அருளைத் தனதாகக் கொண்டு உப்புத்தன்மையற்ற கடலாய் என் மனம் மகிழ நீ திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கின்றாய்.

**“அங்கனை வருமரு மறையறை**
**யயிர்வன விளியுள முயிருண**
**கையையி யக்கினை பொய்யைவி லக்கினை**
**மெய்பைவி ளக்கினை யொளிவேந்தே”        (4)**

அன்னையே! மக்களாகப் பிறந்தவர்கள் சென்று சேர்வதற்கு அரிதான வீடுபேற்று உலகில் வாழும் பேறுபெற்று அனுபவிக்கக் கூடிய இன்பங்களை எல்லாம் பிறந்து அழியும் தன்மையுள்ள மக்களும் பெற்று அனுபவிக்குமாறு வானுலகில் இருக்கின்ற இறைவனை அனைவரும் காணும் வண்ணம் மண்ணுலகிற்குக் கொணர்த்தாய்.

மக்களுக்குத் துன்பம் தரும் இருளாகிய துன்பப் பேயினை அழித்தொழித்தாய் உலகோர்கள் இறைவனைக் காணும் வண்ணம் வெளிப்படுத்தினாய். உலக மக்கள் அடையும் வறுமையால் வந்த துன்பத்தையும், சோம்பலால் வந்த துன்பத்தையும் இழிவான செயல்களால் வந்த துன்பத்தையும் ஒழித்து அவர்களின் வாழ்வில் மகிழ்ச்சி ஒளி காட்டியருளினாய்.

உன் மேன்மை மிக்க கரங்களில் கொண்டிருக்கும் செப மாலையைத் தம் உயிராகக் கருதி அணிந்து கொள்பவர்கள் தம் பாவங்கள் எல்லாம் நீங்கப் பெற்று பெறுவதற்கரிதான அனைத்தையும் பெற்று மேன்மையான வாழ்க்கை பெறுவர்.

அன்னையே! சிறிதும் குற்றமற்ற தூய்மை பொருந்திய அன்னப் பறவை போன்ற மென்மையான திருவடிகளை உன்னுடைய அடியார்களாகிய நாங்கள் எங்கள் தலையில் அணிந்து கொள்ளும் பொருட்டு சிறிதும் நன்மையற்ற எங்களை அணுகித் திருக்காவலூரில் கோயில் கொண்டிருக்கிறாய். நாங்கள் உய்யும் வண்ணம் இன்னும் உன்னை எங்களுக்குக் காட்டாமல் இருப்பதேன்? உன் மேன்மை மிக்க திருவுருவை எங்கட்குக் காட்டியருள வேண்டும்.

**“தன்னைக்காட்டத் தன்றிறஞ்சீா் தயைஞான மற்றருந்தன் றகுதி காட்டத்**

**தகும்வழியாற் றகாச்செல்வோ னுனைப்படைப்பக் கருதிப்பின் றரணி யெங்கு**

**----------------------------------------------------------------**

**நினைக்காட்டா வெழில்காட்டு மிவைகண்டுன் னடிதொழுநா**

**நினைக் காட்டா யோமரியே திருக்காவ லூர்நிலையே நிமலத் தாயே”** (5)

அன்னையே! திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் தன்மையளே! நிலைத்தன்மை உடையவளே! தனக்கென்று எதனையும் ஒப்புமையாகக் கூற இயலாத இறைவன் தன் இயல்பை உலகோருக்குக் காட்டவும், தன்னுடைய அருட் தன்மையை உணர்த்தவும் முனைந்து உன்னைப் படைக்க நினைத்துப் பின் உன் மேன்மை மிக்க குணத்தை உலகோர்க்கு அறிவிக்க எண்ணினார்.

**அன்னை மரியாளின் திருக்காட்சி**

உலகிற்குப் பகலில் ஒளிதரும் சூரியன், இரவுக் காலத்தில் ஒளிதரும் நிலவு, வானெங்கும் பரவிக் கிடக்கும் நட்சத்திரங்களின் கூட்டம், கோமேதம். நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரிய ஆகிய ஒன்பது வகையான மணிகள், வானுலகில் உள்ள ஒளிமிக்க பொருட்கள், கொடியில் மலரும் பூக்கள் மரத்தில் மலரும் பூக்கள், நீரில் மலரும் பூக்கள் ஆகியவற்றின் எழிலையும், சுவைமிக்க கனிகள், மலர்களில் முகிழ்த்த தேன், இனிமைமிக்க பொருட்கள், மின்னலோடு மழை பொழியும் மேகம் பரந்து கிடந்து அழகு தரும் கடல், வானுலகம், மண்ணுலகம் எல்லாவற்றையும் தாயே! உன்னை நினைத்தே இறைவன் படைத்தார்.

தாயே! நான் உன் மேன்மை மிக்க அருளையும் உன் குணத்தையும் அழகையும் கண்டு உன் மேன்மை மிக்க அடிகளை வணங்கும் பொருட்டும் நான் நல்வாழ்வு பெறும் பொருட்டும் உன் திருக்காட்சியை எனக்கு வழங்கியருள வேண்டும்.

**“தாயுனைக் கொண்டா னனைத்தும் படைத்தவோர் தந்தையனான்**

**காயெனப் பூவெனத் தந்தரு மாட்சியைக் காட்டுவபோற்**

**சேயுனைக் காட்டலி னிவ்வள வுன்புகழ் செப்புவரா**

**ரோயில காவ லிறைவி பொறாயென் னுரைவெளிறே” (6)**

**மரியாள் மக்களின் குறைகளைப் பொறுத்தல்**

மரியே! உலகையும் உலகப் பொருள்களையும் படைத்த இறைவன் உன்னை அன்னை என்று அறிந்து கொண்டார். இறைவன் உலகப் பொருள்களுக்கெல்லாம் தந்தையானார். மரத்தின் குணம் பூ, காய், கனி அனைத்திலும் வெளிப்பட்டு நிற்பது போல தாயே! இறைவன் உன்னைத் தன் மகளாக உலகிற்குக் காட்டியதனால் உன் புகழை யாரால் அளவிட்டுக் கூற இயலும்? தாயே என்னைக் காத்தருள்பவளே! உன் தகுதியை எடுத்துக் கூறுமளவு தகுதியற்ற என் அறிவுக் குறையைப் பொறுத்தருள வேண்டும்.

**“வெளிமதிகதி ருடக்கல மயிநிதியொளி முகத்தவை**

**மலர்கனியமு துமற்றைய பலவுலகுள வனைத்தையு**

**மீறிலா தெய்கணு மருளிப் பயந்தன”**

**கசடிடர்முழு தொழிப்பன வொழிவிலகளி யுயிர்ப்பன**

**நரககல்கத வடைப்பன கடையிலகதி யிலுய்ப்பன**

**காலூ ரங்களை மகன்றன் புயங்களே” (7)**

**இறைமகனின் (இயேசுவின்) மேன்மைகளும் நட்ந்த அற்புதங்களும்**

அருள் தன்மையுடன் தீரக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் கன்னி மரியாகிய அடைக்கல அன்னை பெற்றெடுத்த இறைமகனின் மேன்மை மிக்க தோள்கள் வெம்மையான கதிர்களை உடைய சூரியன், தண்ணிய கதிர்களைக் கொண்ட நிலவு, ஒளிப் புள்ளிகளாய்ப் பரந்து கிடக்கும் நட்சத்திரக் கூட்டங்கள்

முதலானவற்றையும், மண்ணுலகில் உள்ள ஒளிமிக்க கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து ஆகிய மணிகளையும், ஒளிமிக்க ஒண்பொருள்களையும், மலர்கள் காய்கள், கணிகள், உணவுப் பொருள்கள் அசையும் பொருட்கள் அசையாப் பொருட்கள், உயிருள்ள பொருட்கள் உயிரற்ற பொருட்கள் என எல்லாவற்றையும் படைத்துப் பயன் நல்கின.

வானுலகில் வாழ்கின்ற இறைதூதர்கள் முதலாகப் பூவுலகில் பல்வேறு கடமைகளையும் மேற்கொள்கின்ற மனிதர்கள், மனிதர்களைச் சார்ந்தும் தன்னிச்சையாகவும் செயலாற்றுகின்ற உயிர்கள் என அனைத்தையும் படைத்தன.

மக்கள் மனத்துடன் கலந்து அவர்களின் வாழ்வில் துன்பங்களையும் பாவங்களையும் நிகழ்த்தக் காரணமாக அமைந்த தீவினையை அழிக்கும் பொருட்டு மேகத்தின் மூலம் நெருப்பு மழை பெய்யச் செய்து சோதோம், கொடுமாரா, ஆத்மா, செபோயிம், பேலா என்னும் ஐந்து நகரங்களும் வெப்பத்தால் எரிந்து சாம்பலாகுமாறு செய்த சிறப்பிற்குரியன.

இறைவன் அருளிய வேதங்களைக் கற்றுத் தூய்மையான மனத்தை உடைய யூதர்கள் நடந்து செல்லும் பொருட்டு பிரிந்த கடல் விரைவாக இரண்டு மதிற் சுவர்களைப் போல எழும்பி நிற்கச் செய்தருளின.

யூதர்களை எதிர்க்கும் பொருட்டாக வந்த பகைவர்களின் வருத்தம் கொண்டு இறக்குமாறு மதிலாக எழுந்து நின்ற கடல் நீரை எதிரில் படைகளை மேற்கொள்ளுமாறு செய்த சிறப்புக்குரியன. எர்மோர் மலையின் உச்சியில் இருந்து வழிந்த யோர்தான் ஆற்றின் போக்கைத் தடுத்து அலைகளின் மேல் அலைகளை அடுக்கியது போன்றும் மலையின் மீது மலையை அடுக்கியது போன்றும் தகுந்த தன்மையது.

போர்த்தொழில் புரியும் குணமுடைய பகைவர்களை நெருங்கி அவர்கள் வாழ்கின்ற வானுயர்ந்த கோட்டையின் மதில்களை ஆயுதம் இல்லாமலேயே அழித்து எரிக்கோ கோட்டையைச் சினம் கொண்டு அழித்தன.

மக்களுக்கு நன்மை செய்யும் அறவழியை மறந்து நல்லறிவிழந்த சினக்கரனின் ஆட்சியும் அவனுடைய உயிரும் நீங்குமாறு அவனுடைய யானை, குதிரை முதலான படைகளையும் படைவீரர்களையும் யூத அரசன் சினக்கரன் மீது படையெடுத்த போது வதைத்து அழித்தன.

வானில் ஒளி தந்து வலம் வரும் சூரியனை உலகம் நன்மையடையும் பொருட்டு யோகவாவுக்காக வலம் வராமல் நிலை நிறுத்தின. நிலைபெற்ற சூரியனை எசோக்கியா என்னும் மன்னனின் பொருட்டாகப் பின்னாக வலம் வருமாறு செய்தன. அதே சூரியனை பகல் வேளையில் இரசவேல் மக்களின் பொருட்டாக இருள் சூழுமாறு எகிப்பது நாட்டில் மறைத்தன.

உயர்ந்து விளங்கிய சீனாய் மலையின் உச்சியில் இடிமுழக்கத்துடன் நெருப்பு இறங்கிய போது அச்சம் கொண்டு நடுக்கம் கொண்டு இரசவேலா் மகிழ்ச்சியடையும் பொருட்டு வேத நூலின் பத்துக் கட்டளைகளைக் கற்பலகையில் எழுதி அன்புடன் அனைவருக்கும் அறிவித்தன.

உலக மக்கள் தங்கள் பாவங்களில் இருந்து நீங்கி விடுதலை பெறும் பொருட்டு உலகில் அவதரித்த இறைமகன் சிலுவையில் அறையப்பட்டு கல்வாரி மலையின் உச்சியில் இயேசு பெருமானின் உடல் தொங்கிய போது வானவர்கள் அச்சம் கொண்டு நடுங்கி வருத்தமடையுமாறு சிவந்து தேன்றின.

உலக மக்களைத் துன்புறுத்தும் தன்மைமிக்க பாவச் செயல்களுக்குக் காரணமான துன்பங்கள் அனைத்தையும் உலகில் இருந்து நீக்கி மக்கள் அனைவரையும் துன்பம் நெருங்காமல் காத்தன.

மக்களின் உடலில் இருந்து அவர்களைத் துன்பம் கொள்ளச் செய்த நோய்கள் நீங்கவும் அவர்களின் வாழ்க்கையைப் பீடித்திருந்த துன்பங்கள் ஒழிந்து நன்னிலை பெறவும் நன்மை நிறையும் பொருட்டாச் சிறந்து விளங்கின.

கடலில் சுழன்றெழுந்த புயல்காற்றை அடங்க செய்தன. இறைமகன் சிலுவையில் உயிர்விட்ட காலத்தில் பூவுலகை நடுக்கம் கொள்ளச் செய்தன. பகல் பொழுதில் உலக மக்கள் நன்மைக்காக இருளை உண்டாக்கின.

தீயமனத்துடன் நபூக்கன் மூட்டிய தீயின் கொடுமை நெருப்பு சாத்திராகு, மேஷாக், அபேத்நேகோ என்னும் யூதர்கள் மூவருக்கும் துன்பம் தராதிருக்கச் செய்தன. நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகியவற்றுக்குரிய தன்மைகளை கொடுத்து அவை ஒவ்வொன்றையும் அதனதன் நிலையில் நிற்கச் செய்தன.

உலக மக்கள் நற்கதி அடையும் பொருட்டு அவர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத தன்மையனவாகியும் வள்ளல் குணம், இரக்க உணர்வு, தவம், இன்பம், பொறுமை குணம், சிந்திக்கும் ஆற்றல், உண்மை ஆகியவற்றை உலக மக்களின் நலனுக்காகக் கொடுத்தருளின.

உலகில் நிகழும் குற்றங்களை எல்லாம் நீக்கி நன்மை நடைபெறச் செய்வன. உலகில் வாழ்கின்ற உயிர்களை நன்னெறியில் உய்த்து மோட்சம் பெறச் செய்தன.

**“புயங்க வுருவால் வினைநஞ் சுமிழ்ந்து புழுங்கியபே**
**யுங்க மிதித்துத் தவத்தால்வென் றாயென வொண்மதிய**
**மயங்கார் பகையினுக் கஞ்சிவந் துன்றவ வாகையிற்றான்**
**முயங்க வடைக்கலங் கொண்டதோர் காவலூர் மூதுயிரே” (8)**

சிறப்புமிக்க திருக்காவலூரில் எழுந்தருளியிருப்பவளே! பழமையான உயிர்போன்ற அன்னையே! உலக மக்களை எல்லாம் பாவச் செயல்களுக்கு உள்ளாக்கும் பொருட்டுப் பாம்பின் வடிவம் கொண்டு வந்து குற்றம் நிறைந்த

விடத்தைக் கக்கித் தீமை விளைவித்த பேயை நீ உன் மேன்மை மிக்க திருவடிகளால் மிதித்து வெற்றி பெற்றாய். அதனால் வானில் வலம் வரும் ஒளிமிக்க நிலவு இருளுக்கு அச்சம் கொண்டு உன்னை அடைக்கலமாக வந்தடைந்தது.

**“உயிராந் தயையாளை யோம்பனந்தத் தாளை**
**யயிரா மறைமொழியாளை - பயிராருஞ்**
**சிந்துசேர் காவலூர்ச் சேர்ந்தாளைப் பாடினே**
**னிந்துசேர் தாட்சேர யான்” (9)**

அன்னையே! நீ உலக உயிர்களுக்கெல்லாம் அவர்களின் உயிர்போன்று இருந்து அருளும் தன்மையள். உலகில் பாதுகாக்கப்படும் உயரிய பொருள்கள் எல்லாமுமாக இருந்தருள்பவள். தீமை இன்றி உலகிற்கு நலத்தை அருள்கின்ற வேதத்திற்கு இருப்பிடமாக இருப்பவள். பயிர் வளம் நிறைந்த கொள்ளிட ஆற்றின் வடகரையில் அமைந்திருக்கும் திருக்காவலூரில் எழுந்தருளி இருப்பவளே! நிலவு அடைக்கலமாக வந்தடைந்த பெருமைக்குரிய அன்னையே! உன் மேன்மை மிக்க திருவடிகளை அடையும் பொருட்டு உன்னை நான் பாடினேன்

**“யானரும்பும் பழந்தழகி மதியரும்பும்**
**பதத்தழகி யினிய வில்வாய்ப்**
**பானரும்பும் படத்தழகி தேனரும்பம்**
**படத்தழகி பகலிற் றொல்கா**
**மீனரும்பும் சிரத்தழகி விண்ணரும்பும்**
**சிரத்தழகி விரிவான் வீட்டைத்**
**தானரும்பு முகத்தழகி தலையயரும்பக்**
**காவனலூர் தங்கி னாளே” (10)**

உலக மக்கள் நன்மையடையும் பொருட்டுத் திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் அன்னை, நான் இயற்றுகின்ற பாக்களில் இனிமையாக இருப்பவள் நிலவு தோன்றி அழகு செய்கின்ற திருவடிகளை உடையவள். உலகிற்கு ஒளிதரும் சூரியன் போன்று ஒளி நிறைந்த ஆடை அணிந்தவள். தேன் போன்று இனிமை மிக்க சிங்கக் கொடியை வெற்றிச் சின்னமாய் உயர்த்திய அழகினை உடையவள். பகல் காலத்திலும் ஒளி குறையாத பன்னிரு நட்சத்திரங்களைத் தன் முடியில் கொண்டவள். வானுலகில் தோன்றும் தலையழகினை உடையவள். வானுலகை ஒளி கொள்ளச் செய்யும் முக அழகினை உடையவள்.

## குணங்குடி மஸ்தான் சாகிபு

## முகைதீன் சதகம்

### ஆசிரியர் குறிப்பு

குணங்குடி மஸ்தான் (கி.பி. 1792 -1838) தமிழ் நாட்டில் ஓர் இஸ்லாமிய இறைஞானி ஆவார். இவர் வடசென்னையில் பழைய வண்ணாரப்பேட்டைப் பகுதியில வாழ்ந்துள்ளார். தமிழிலும், அரபியிலும் ஆழந்த புலமை பெற்றவர். இஸ்லாமிய சமயத்தைக் குறிக்கும், இறைவனைக் குறித்தும் இவர் இயற்றிய தமிழ் இலக்கியங்கள் புகழ் பெற்றவை ஆகும். இல்வாழ்க்கையைத் துறந்து துறவியாக வாழ்ந்த இவரைத் தமிழ் சித்த மரபினரில் ஒருவராகவும் மக்கள் போற்றுகிறார்கள். இவருடைய தர்க்கா (நினைவிடம்) வடசென்னையில் உள்ளது.

குணங்குடி மஸ்தான் இராமநாதபுரம் மாவட்டம், வட்டம், தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவில் அமைந்துள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர்கள் இவருக்கு வைத்த பெயர்

சுல்தான் அப்துல்காதிர் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே குர் ஆன் உள்ளிட்ட இஸ்லாமிய சமய நூல்களையும் ஐயம் திரிபுரக் கற்றுத் தேர்ந்தார்.

**குணங்குடி மஸ்தான் படைப்புகள்**

1. அகத்தீசர் சதகம்
2. ஆனந்தக் களிப்பு
3. நந்தீசர் சதகம்
4. நிராமயக்கண்ணி
5. பராபரக்கண்ணி
6. மனோன்மணிக்கண்ணி

தம்மை வழிபடுவார்க்கு இசைகின்ற பெருமையுள்ள பேரான்ந்தக் கடலில் மூழ்கி என்னை ஆண்டருளி மனங் கனிந்து மிக மகிழ்ந்து அணைத்தணைத்தெடுக்கின்ற அருள் பெருகுகின்ற அளவற்ற அருளால் காப்பாற்றுதற்குரிய குணங்குடியில் வாழ்பனாய் முகியித்தீன் என்னும் பெயரையுடைவனாகிய எம் குருநாதனது திருவடியைத் தலைமேல் வைத்துக்கொள்வோம்

**முகைத்தீன் ஆண்டவரின் வரலாறு**

**"ஆதிமுன் னிற்கவே யகதுகது வாகிதிய்**
**யத்தெனது முன்னிற் கவே**
**யத்துவித வஸ்துமுன் னிற்கவே யறிவகண்**
**டாகார முன்னிற் கவே**
**------------------------------------**
**வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்**
**மணியே முகியித் தீனே"**

முதல்வன் என் எதிரே நிற்க அகதுகதுவாய் திய்யத்தானது என் எதிரே நிற்க அத்துவித வஸ்துவானது என் எதிரே நிற்க ஞான அகண்டரூபமானது என்

எதிரே நிற்க ஞானம் என் எதிரே நிற்க ஞானத்துக்கு எட்டாத பரிபூரணமானது என் எதிரே நிற்க விளங்குகின்ற சிவஞானமானது என் எதிரே நிற்க ஆகாய முதலிய ஆதங்கள் வயிக்குமிடமானது என் எதிரே நிற்க நாதமானது என் எதிரே நிற்க நாதனது பிரகாசத்தைப் பெற்ற நபிநாயகம் என் எதிரே நிற்க நானும் எதிரே நிற்க எனக்கு நன்மையைத் தந்து ஆள்வதற்காக அடியேனும் உம்மையே நம்பினேன் தாயைப் பார்க்கினும் விசேஷித்த கிருபையுடைய நீா் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே (1)

நீங்குதவில்லாமல் எவ்வெவ்விடத்தும் நிலைபெற்று நிறைந்த பொருளானது நேராக என் எதிரே நிற்க நிா் விஷயமாயும் சுத்தமாய் இருக்கிற களங்கமற்ற பரவெளியாகிய நிா்க்குணமானது என் எதிரே நிற்க பெருமைபொருந்திய பலவாகிய வேதவாக்கியங்களால் எடுத்துச் சொல்லப்படுகின்ற பெரிய உண்மைப் பொருளானது என் எதிரே நிற்க தத்துவம் முதலியவை நீங்கிய மோஷ பீஜமாகிய சற்குருநாதன் என் எதிரே நிற்க போக்குவரவு இல்லாத மிகப்பெரிய இன்பம் எப்போதும் என் எதிரே நிற்க என் பொய்யொழுக்கங்களை நீக்கி ஆண்டருளும் பொருட்டு தாழ்வுகள் எல்லாம் குடியிருக்கப் பெற்ற அடியேனும் உம்மையே நம்பினேன் சொல் தவறாத நாவை உடைய நீா் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே (2)

இம்மை மறுமைகள் இரண்டும் பொருந்தும் வகையாக உட்கொண்டு மீண்டும் தோற்றுவித்த ஈசன் எதிரே நிற்க ஒன்றாகிய பராவர வஸ்து என் எதிரே நிற்க எல்லாப் பொருள்களும் என் எதிரே நிற்க பல வகைகளாக தொகுக்கப்பட்டு வேதங்களால் முரசறையப்படுகிற வள்ளலானவன் என் எதிரே நிற்க ஆகாய முதலிய பூதங்களுள் தானேயாகிய நின்ற எம்பெருமான் என் எதிரே நிற்க மனமகிழ

வந்து அதனிடத்துக் குடிகொண்ட குருநாதனது அடியார்களும் என் எதிரே நிற்க அன்றும் இன்றும் என்றும் நெருங்கி வந்து ஆளும் பொருட்டு அடியேனும் உம்மையே நம்பினேன் மகிழ்ச்சி மிக்க புன்சிரிப்பை உடைய நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே (3)

நோக்கப்படுவதாகிய பார்வையானது என்னெதிரே நிற்க ஆராயும் இடத்து பழம் பொருளாகிய நுண்ணறிவினும் நுட்பமான பொருள் என் எதிரே நிற்க நீக்கமல்லாமல் அங்கிங்கென்று சொல்லாதபடி எவ்வெவ் இடத்தும் ஒரு நிறைவாயிருக்கும் பொருள் என் எதிரே நிற்க விரும்பின மனத்தையே குடிகொண்டிருக்கிற மேலான கருணையோடு கூடிய அன்பு என் எதிரே நிற்க போக்கும் வரவும் விகாரம் இல்லாத தாய் நின்ற பரிசுத்த வஸ்து என் எதிரே நிற்க வா என்று அழைத்து ஆண்டருளும் பொருட்டு அற்ப அறிவின் ஆகிய அடியேனும் உம்மையே நம்பினேன் வாக்கும் மனமும் ஒன்றாகிய மரபினை உடைய நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (4)

ஒருவராலும் வெல்லப்படாத மாயையை அழிக்கின்றதும் அதன் பேரையும் அழிக்கின்ற பேராநந்தமானது என்னெதிரே நிற்க ஒன்றாகி ஒரு காலத்திலும் அழியாத ஒளியாகிய எம்பெருமான் ஆனவர் என் எதிரே நிற்க மனத்துக்கு எட்டாத அஷ்டாங்க மழையைச் சொரிவதாகிய மேகம் என் எதிரே நிற்க பூத முதல் நாதத் தத்துவம் ஈறாக உள்ள எல்லாம் தானே ஆகிய மேலான பொருள் என் எதிரே நிற்க குற்றமற்ற நல்ல குணங்குடியான் என்கிற குணமலை என் எதிரே நிற்க குறையை நீக்கி ஆளும் பொருட்டு கொடுமை குடிகொண்டு இருத்தற்கு இடமாகிய அடியேனும் உம்மையே நம்பினேன் குறையாத அருட் செல்வத்தை உடைய நீர்

பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (5)

துன்பமற்று நாமரூபங்களோடு பற்றுமற்று உயர்ந்திருப்பதாகிய என் எதிரே நிற்க ஒன்றற்று இரண்டற்று சொல்லற்று மனதற்று, உதயஞ் செய்ததாகிய வஸ்து என் எதிரே நிற்க சொல்லப்பட்ட குணமற்றும் ஒளியைப் பெற்றும் வெளியில் தாவிக் குதித்தும் வஸ்து என் எதிரே நிற்க அடையாள மற்றும் அறிவற்றும் நிறைகுறைகள் அற்றும் விளங்கினதாகிய வஸ்து என் எதிரே நிற்க முடிவும் முதலும் மற்றும் இன்றற்றும் நாளையும் அற்றிருப்பதாகிய பொருள் என் எதிரே நிற்க எல்லாம் முன்னிற்கும்படி மகிழ்ந்து என்னை யாளும் பொருட்டு அடியேனும் உம்மை நம்பினேன் பெருங்கருணை உடைய நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (6)

தேடிக் கொண்டே வந்து கிருபை செய்து அடிமை கொண்ட அருளின் என் சற்குருநாதன் என் எதிரே நிற்க சிற்பவொளியில் ஒளி வீசுகின்ற பெரிய கற்பூர தீபமானது என் எதிரே நிற்க நோக்குதற்குரிய செவ் ஒளியை குருநாதன் ஆனவன் எக்காலத்தும் என் எதிரே நிற்க நானும் விதத்தைக் கொண்டிருக்கிற வாசாமகோசரமாகிய இன்பம் என் எதிரே நிற்க ஈடு சோடி இல்லாத சிற்சத்தியாகிய எம்பெருமான் என் எதிரே முன் நிற்க அடியேனை ஏற்றுக் கொள்ளுவது எதிரே நிற்க இவ்விடத்து எழுந்தருளி என்னை யாட்கொள்ளும் பொருட்டு அடியேனும் உம்மையே நம்பினேன் குறையாத சமநிலையில் உள்ள நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (7)

அருளோடு கூடிய அகண்ட ரூபத்தை உடைய ஆனந்த பூர்த்தி என்கிற ஆதாரப் பொருள் என் எதிரே நிற்க மேலான பிரகாச அருளோடு கூடிய தேஜோமயப் பொருளை அருள் செய்த மேன்மையான பொருள் என் எதிரே நிற்க குருசிரேஷ்டனாக உண்மையாகிய பிரணவரூபக் கொழுந்தானது என் எதிரே நிற்க சொல்லுதற்குரிய சாலம்பமற்றதாகிய திவ்யகுண சாந்தமானது என் எதிரே நிற்க விகார மின்னையோடு தளதளவென்று நிலைபெற்றுப் பிரகாசிக்கிற நிராமயமானது என் எதிரே நிற்க நிலையான பொருள் எதிரே நிற்க அன்பு வைத்தாளும் பொருட்டு அடியேனும் உம்மையே நம்பினேன் வாசனை பொருந்திய மலரை அணிந்த மணக்கோலத்தை உடைய நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (8)

பல பொருள்கள் ஆகிய பொருளுமாகி எக்காலமுமாகி நிலை பெற்ற அந்த மேலான பொருள் என் எதிரே நிற்க மேலானதாகிய எப் பொருளும் அதுவாகி முளைத்து விளைகின்ற பயிரானது என் எதிரே நிற்க நிலையாகிய சரத்தோடு இம்மையிலும் மறுமையிலும் உயிருக்குயிராகி நின்றதாகிய பொருள் என் எதிரே நிற்க எதிர்ப்பட்ட ஞானசூரியனாகி உதயஞ் செய்த நன்னெறியானது என் எதிரே நிற்க கடல் சூழ்ந்த உலகமானது கானல் நீர்போலத் தோன்றும் படி மெய் அறிவானது என் எதிரே நிற்க ஆதரித்தாளும் பொருட்டு ஐயனே பயந்து அடியேனும் உம்மை நன்பினேன் மலையிலக்காகிய அடையாளம் உள்ள நீர் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (9)

உடல்பொருள் என்பவற்றோடு உயிரையும் கைக்கொண்டு என்னை ஆண்டருளுகின்ற உத்தமன் என் எதிரே நிற்க உடம்பாகி, உயிராகி, உடம்போடு கூடிய உயிருக்கு உயிராகி மெய்ப் பொருள் என் எதிரே நிற்க உறுதியாகிய

மாயையானது தொடராத படி அதனை அழித்து மேற்படுகினற் மெய்ஞ்ஞான தீரமானது என் எதிரே நிற்க அழகாகிய கருணைக்குப் பிறப்பிடமாகிய முகம்மதா் என்று சொல்லப்படுகிற அருட்செல்வரானவா் என் எதிரே நிற்க கொடியோடிப் படா்தற்குரிய கொழு கொம்பு போல நீா் எழுந்தருளி குதித்து என்னெதிரே நிற்க கொண்டணைத் தாளும் பொருட்டு குடி அடிமையாகிய அடியேனு மும்மை நம்பினேன் அழகு விளங்குகிற நடனரூபத்தை உடைய நீா் பின்தொடரும்படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (10)

நித்தயமாகி சிறந்த நிருவிகற்ப நிஷ்டாபரா்களுடைய நெற்றியிற் சந்தித்த பொருளை நிச்சயமாய் அகோசரமாய் ஆதாரபேத நிலையில் நின்று பூா்ணமாகிய பொருளை மோட்சத்துக்கு பீஜமாகி முளைத்துப் பியராகிற பொருளை அருள் மிகுந்த ஒளி சிறந்த பொருளை மூன்று மண்டலங்களை கொண்ட மூலாதாரமாகிய மௌனரூபமாகிய பொருளை புத்திக்கு எட்டாமல் புத்திக் உள்ளே நின்று விளங்குகிற போக்கு வரவுகள் இல்லாத பொருளை மிகவும் கருணை செய்யும் பொருட்டு அடியேனும் உம்மையே நம்பினேன் பரிசுத்தம் என்னை ஆளும் பொருட்டு மத்தமத யானைக்கு நிகராயிருக்க நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (11)

பந்த மோஷங்களும் மகிழ்வும் இகழ்வும் பின்னும் முன்னும் இல்லாததை பெரியது சிறியது அருவம் உருவத்தோடு அது இது என்னும் வேறுபாடும் பிறப்புக்களும் இல்லாததை சிந்தனை செய்தலும் வாழ்த்துதலும் பொய்யொடு மெய் என்பது இல்லாததை நீ நான் என்பதும் ஒன்று இரண்டு என்பதும் நீதியோடு அநீதியென்பதும் இல்லாததை இரவு பகல் போதலோடு வருதல் மனவாக்குக்களோடு இவ்விடம் அவ்விடம் என்பதும் இல்லாததை அறியாதறிவும் பொருட்டு அடியேனும்

உமை நம்பினேன் அறிவு கொடுத்தாளும் பொருட்டு வந்தடிமை கொள்ள விருப்பமுள்ள வள்ளல் நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (12)

முத்தினை நவரத்தினத்தை ஒளிவரிசையாய் வியாபித்தற்கு உரியமணியை மோன மணியை ஞானமணியை மிக்க ஒளியை உடைய குற்றமற்ற மணியை ஆகாசாதிகளாலுண்டாகிய மூன்று உலகங்களுமான மணியை சித்திகொடுக்கு மணியை சித்தியால் தரப்பட்ட முத்திமணியை என்மனத்தில் குடிகொண்ட மணியை அழகிய நிறமுள்ள மணிகளால் செய்யப்பட்ட சிங்காசனத்தின் முடிமணியை பக்தருக்குக் கிடைக்கும் படியான சிகாமணியை நிறுக்கப்பட்ட மேலான அா்த்த உள்ளமணியை ஆபரணமாகப் பூண்டு பாா்க்க பணி பூட்டி பணியை எனக்குப் பூட்டி ஆளும் பொருட்டு வைத்த விளக்குக்கு நிகராய் உள்ள நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (13)

கரிய மேக மாா்க்கம் போல பெரிதாகிய அருட்கடலின் நீரைக்குடித்து மூடுகின்ற கருண்ட மேகத்தை ஆகாய மண்டலப் பெரு வெளிக்கும் அப்புறத்து நின்று வேரூன்றுகின்ற மேகத்தை தரவொண்ணாத அருளைத் தந்த மௌனகுருவாகிப் மேகத்தை என் தாயினுஞ் சிறந்த மேகத்தை சண்டமாருதம் போல அருள் மழையைப் பொழிகின்ற மேகத்தை சராசரங்களைத் தன்னிடத்திற் கொண்ட மேகத்தை நில முதலாகிய பஞ்சவா்ணப் பகுப்போடு படா்ந்து மழைபொழிந்த மேகத்தை படா்ந்து மழைபொழியும் பொருட்டு பருவமுண்டால் என்னை ஆளும் பொருட்டு வராத நெறியாகிய கருணையை உடைய நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும்

அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (14)

தாவி தாவி கரை அழிய வருகிற இன்ப உருவாகிய பெருங்கடலை அடைந்த அன்பரது இதயங்களிக்கும் படி பொங்கி வருகிற சதாகால இன்பக் கடலை சுற்றி மூடிக்கொண்டு எவ்விடத்திலும் ஒருமிக்க வளைந்து கொள்ளுகிற நிறைந்த கருணைக் கடலை சொப்பிரகாசத்தை வீசுகின்ற சுயஞ் சோதியாய் நின்ற சோமசுந்தரக் கடலை எத்தனை வகையாற் சொன்னாலுஞ் சொல்லொண்ணாத இனிதாகிய நிறை கடலை ஏப்பமிடும்படி உண்பிக்கும் பொருட்டு கிட்டி வந்தாளும் பொருட்டு இடை நிலைத்தீபம் போலுள்ள நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (15)

அன்பாகிய பெருக்கை நல்ல அறிவாகிய பெருக்கை மெய்ஞானமாகிய அமிர்தப் பெருக்கை கரையற்ற பேராசையாகிய வெள்ளப் பெருக்கை அறிவுருவாகிய பெரிய பெருக்கை சுகப் பெருக்கை அருள் பெருகுகின்ற பெருக்கை வெளியிடமாகிய எவ்வெவ்விடங்களிலும் பிரகாசிக்கிற பெருக்கை ஏகமாகிய பெருக்கை அநுபோகமாகிய பெருக்கை நல்ல இனிமையான செந்தேன் பெருக்கை தென்பாகிய பெருக்கை மிகுடம்பமாகிய பெருக்கை பெரிய அழகாகிய இனிய பெருக்கை ஒருமிக்கக் கூட்டி யூட்டும்படி சித்தம் வைத்து ஆளுதற்கு திருவுளம் வைத்தாளும் பொருட்டு வலிய பெருக் குருவமுள்ள நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (16)

காணப்பட்ட பொருள்கள் எல்லாமாகிய நின்று அவைகளாலும் காணவொண்ணாத காரணத்தை நினைத்தற்குரிய சித்தாகி விசித்திரமாகி நின்று

விளங்குகின்ற காரணத்தை கோடி அண்டங்களையும் தன்னுள்ளே வைத்து அணுவுக் கணுவாயிருக்கிற காரணத்தை அறியாமல் என் தெய்வம் உன் தெய்வம் என்பவார்க்கும் அவ்வவ் வகையாயிருக்கிற காரணத்தை அஷ்டதிக்குகளையு முண்டாக்குதற்குரிய விதையாயிருந்தும் தனக்கு இடமில்லாத காரணத்தை அடைந்து மகிழும்படி எதிரே காட்டி ஆளும் பொருட்டு மண்ணுலகும் விண்ணுலகும் உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (17)

நிலையாக எவ்விடத்தும் வியாபித்த நிலை குலையாமல் நிலைபெற்ற தேஜோ ராசியை நெற்றி விழியினுள்ளே நிலைநின்றேராது மனத்தில் தவழ்ந்த தேஜோ ராசியை முடியாமல் விளங்குகிற துரியா தீதமாகிய அத்வைதமாகிய தேஜோ ராசியை பற்றுவிட்டவர்களுடைய இந்தியில் வண்டாய்ப் புரளுகின்ற தேஜோ ராசியை அசையாத வயிராக்யமாகிய தீரத்தை உடையவனை அனுப்பின மிகு சாந்தத்தையுடைய தேஜோ ராசியை இறக்கு முன்பே எனக்கு அருள் செய்ய விரைவில் வந்து ஆளும் பொருட்டு மிகுகருணையாகிய மிக்க வலிமை உள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (18)

எல்லையின் நிலையானது சொல்லுதற் கரிதாயிக்கிற வல்லமையோடு எவ்விடத்தில் இருந்து ஞான உதயத்தை எந்தப் பொருளும் எக்காலமும் எவ்விடமும் அவ்உருவங்காளக விளங்குகின்ற ஞான உதயத்தை இரவிலும் பகலிரும் அன்பரது மனமாகிய வீட்டிற் ஞான உதயத்தை அழியாத இடத்தில் இன்றும் வந்து என்னை அண்டருளினார் குணங்குடியார் சேர்ந்த ஞான உதயத்தை பழவினைகளற்ற நல்ல அறிஞர் போம் வழியைச் சொன்னால் வெளிப்படையாய்த் தோற்றுகிற ஞான உதயத்தை தொழு தெழாத பாவியாகிய தொண்டு கொண்டு

அடிமை கொண்டாளும் பொருட்டு யாவரும் உமது வல்லமையைப் புகழ்ந்து சொல்லும்படி எழுந்தருளியிருக்கிற நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (19)

சொல்ல முடியாத பெருங்கருணை குடிகொண்டிருக்கிற தேஜோ ரூபாநந்த குருவை சொந்தமாக எழுந்தருளி என்னையும் அடிமைகொண்டு இன்பங் கொடுத்த மோனகுருவை நிலையாத மாயையானது நிலை குலையும்படி நிலை கெடாத நெறியையருள் செய்த நித்தியாநந்த சுகத்தை அடைந்து முதுமூது என்று சொல்லப்பட்ட நிஷ்டையை அடைந்த குருவை வெறுக்காமல் தழுவி முத்தங்கொடுக்க என்னை இன்றி பிதாவாய் வந்த குருவை அடைய அறியாத தயை செய்து ஆளும் பொருட்டு மலைகள் பொடியாகும் படியான நடையும் உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (20)

எவ்விடத்தும், அருளினது விஸ்தாரமாகி அவ்விடம் இவ்விடம் என்று சொல்லப்படாததாகி என்பெருமானுமாகி எண்ணுதற்குரிய அண்ட பகிரண்டங்களுமாகி நின்று இம்மை மறுமைகளென்கிற இரண்டுமாகி பொங்கி வழிந்து பலவாகிய கடங்களில் எல்லாம் பெருகுகின்ற பரிபூர்ண சுகமாகி பரிசுத்தமான மெய்ஞ்ஞான மென்கிற ஆனந்த மழை மாரியைச் சொரிகின்ற கிருபாமேகமாகி இராப்பகல்களில்லாத சூரியசந்திரர்களாகி எவ்விடத்தும் ஒருகரையற்ற கங்கையாகி மூடுகின்ற ஒளியைச் செய்ய கருணையை வைத்து என்னை ஆளும் பொருட்டு மழுங்காத சந்திரகாந்தியுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (21)

உடல்களாகி உடலிலுயிராகி எவ்வுலகுமாகி ஒன்றாகி இரண்டுமாகி அகமாகி புறமாகி ஒளியாகி இருட்டாகி ஊரோடு பேருமாகி காடாகி மலையாகி வளைந்த கடலுமாகி போர் செய்கிற காட்டுமிருகங்களுமாகி இராப்பகல்களாகி சந்திரனாகி சூரியனாகி வெளியாய்க் காணப்பட்ட பொருள்கள் எல்லாமாகி நானாகி நீயாகி அவனாகி அவளாகி நாதத்தோடு பூதம் ஆகி விரும்புதற்குரிய ஒளியைச் செய்ய நன்மை செய்து என்னை யாளும் பொருட்டு தேவரும் அடிவணங்கும் படியான பெருமையுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (22)

முடிவு முதல் முன் பின்புடன் பக்கம் நடுவாகிய யாவும் ஆகிநின்றும் அவைகள் யாவு மொழிந்ததுவுமாகி ரூபமாகி அரூபமாகி ரூபாரூபங்களற்ற ஞானாகாரமாகிய மௌன நிலையாகி பிதா மாதாக்களாகி அருள் செய்த குருவாகி என்னுயிருக்குயிருமாகி தாயினுஞ் சிறந்த அந்த அன்பின் பெருமையாகி சதாந்த ஞானமாகி சிந்திக்கும்படி எழுந்தருளின உறுதிப் பொருளாகி என்னை ஆட்கொண்ட அருளின சற்குறவுமாகி தெளிகின்ற ஒளியைச் செய்ய சகல சித்திகளையுத் தந்து என்னை ஆளும் பொருட்டு வந்திருந்தருளுதற்குரிய கருணையுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (23)

பூமியாகி எல்லாப் பொருளளூாகி அந்தப் பூமியில் ஐந்து நிறங்களாகி பற்பலவகையைக் கொண்ட விந்து நாதங்களில் பதிந்து முளைக்கின்ற பருவமாகி வேரொடி போக பூமியில் வளர்ந்து அருளாகிய தேன் விளைந்து ஒழுகுகின்ற கற்பகத் தருவுமாகி ஆகாயமாகி பூமியாகி இலக்கமாகி பலவாகி விஸ்தாரமாகி மறைவுமாகி தூராதிதூரத்தினும் மிக்கதூரமாகி அதிக ஆராய்ச்சியில் சமீபமாகி காணப்படுகிற ஒளியைச் செய்யும் பொருட்டு துரிதமுடன் விரைவில் என்னை ஆளும்

பொருட்டு பெருமை நிறைந்த அருள் மழையை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (24)

பார்த்த திசைகளில் எல்லா இடத்தும் ஒப்பற்ற வெளியாகி எனது பராபரப்பிரம வெளியாகி பற்றுகின்ற மன வெளியாகி மனவெளியைத் தாண்டின முப்பாழாகிய வெளியுமாகி நுண்ணிய அறிவு முழுதும் ஏற்றபடி கொள்ளையிட்ட கடுவெளியுமாகி கோடானு கோடியாகிய பலஅண்ட பகிரண்டங்களையும் தன்னுள்ளே யடக்கின பெருவெளியுமாகி சேர்த்து வைத்த நிலையானது குலையாமல் நிலைபெற்ற சிற்சத்தி வெளியுமாகி மிகுந்த ஒளியைச் செய்தற்கு தெளிவைக் கொடுத்த என்னை ஆளும் பொருட்டு சொல் தவறாத நாவை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (25)

நடையோடு கிடையாகி பொருந்திய நடத்தைகளுமாகி இடையிலே உண்டாகிய நீ நான் என்பதும் ஆகி உண்டாகிய ஆராய்ச்சிகளுமாகி தடையாகி வைத்ததடை அழித்த இடமாகி நல்ல தாரணைகளுமாகி தலைமையொடு நிலைமையையும் வன்மைகளுமாகி எந்தச் செய்திகளுமாகி நடுவாகி இறுதியாகி நன்மை தீமைகளுமாகி ஏக முதலாகிய யாவையுமாகி விளங்குகின்ற ஒளியைச் செய்ய இதஞ்சொல்லி ஆளும் பொருட்டு மடமட வென்று திருவடி நடனத்தை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (26)

மாயை முதலியவைகளாகி உயிர்களாகி ஆச்சரியமான நிலைபெற்ற உயிர்களுக்குயிராகி பெருகுகின்ற இருவினைகளாகி வினைகளுக்கிருப்பிடமாய்

வாழ்கின்ற பாழான உடலுமாகி பரிசுத்தமாகிய அறிவும் நிலை பேறுவடையதாகி நிலையாத தொடர்புகளுமாகி துறவாகி மூவாசைகளாகிய உறவாகி மறைவாகி சோதிப்பிரகாசமாகி ஆராயப்படுகிற வேதாந்தமாகி முதலாகி இடையாகி வியப்பைத் தருகிற கூத்துமாகி ஆடுகின்ற ஒளியைச் செய்ய அன்பு மிகுந்து ஆளும் பொருட்டு திருவாயிற் சுரக்கிற தேன் போலும் இன்சொல்லை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (27)

கண்ணாகிய கண்ணே என் அன்னமே என்றெழுவோர்கள் கண்ட கண்காட்சியாகி துன்பங் குடிக்கொண்டு தடுமாறாதவர்களுடைய நல்ல மனக்கண்ணாடியுமாகி மண்ணாகிய வஞ்சமனத்தினர்க்கு கையேறாமல் மறைகின்ற புதையலாகி மதபேதம் பேசி அறிவுகெட்டவர்க்கு எட்டவொண்ணாத மேலான கருணைப் பெருக்காகி எண்ணாத எண்ணத்தை யெண்ணாதவர்கள் எடுத்துண்ணாதற்குரிய பேராநந்த வெள்ளமுமாகி அடைதற்குரிய ஒளியைச் செய்ய இன்பந்தந் தாளும் பொருட்டு அழகிய திருக்கருணையையுடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (28)

வேத வேதாந்தமாகிய மேலான வீடாகி நட்டநடு வீட்டில் விட்ட தீபமுமாகி ஞானமயனாகிய இறைவனிருக்கிற நவரத்ன மாளிகையாகி ஒளி பரவிய கதிர்ச்சுடருமாகி பலநாத கீதங்களும் முழங்கி ஓலியிடுகின்ற நாத நாதங்களாகி நல்ல குணங்குடி என்றும் எனக்குப் பேரருளிய ஞானத்திரு நாமமாகி முதல் நடு இறுதியும் தானாகி விஸ்தாரமாகி அகண்ட ரூபமாகி பிரகாசிக்கிற ஒளியைச் செய்ய ஞானத்தைக் கொடுத்து என்னை ஆளும் பொருட்டு பெரிய பரிசுத்தமான பாததாமரை மலரை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல்

என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (29)

இராப்பகல்களற்ற அருள் தங்குதற்குரிய எவ்வெவ்விடங்களிலும் நிறைந்த காரண கர்த்தாவாகி கறையறப் பொங்குகிற கருணா சமுத்திரமாகி என் கையில் நெல்லிப் பழமாகி சிங்கம் போன்று வினையை வென்ற சற்குருநாதனுமாகி தெளிந்த தைரியமுள்ள குணங்குடி வாழ்வை எனக்கு அருள் செய்த அழகாகிய குண மேருவாகி எவ்விடத்தில் இருந்தாலும் அவ்விடத்தில் எழுந்தருளி உதவி செய்கிற எங்களுடைய மகுமூதுமாகி பொருந்தின ஒளியைச் செய்ய எளிதாய் வந்து என்னை ஆட்கொள்ளும் பொருட்டு மங்களமாகிய அழகுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (30)

என்னைப் பார்க்கமாட்டீரோ என் தாயே என் முகம் நோக்கி அருள்கனியீரோ பாவியாகிய கன்னெஞ்சினே னதுவுஞ் சகுண மொழிய எழுந்தருளி உமது திருவடிக் கீழ் இழுத்துக் கொள்ள என் எதிரே வரமாட்டீரோ உமது வாயினால் ஒரு முத்தந் தாரீரோ மகிழ மாட்டீரோ புகழமாட்டீரோ கருணை மிகுந்து என்னை ஆளும் பொருட்டு வா என்றழைக்க மாட்டீரோ என்னையும் கலக்க மாட்டீரோ அடைந்தோர்க்கும் உமது அருளாகிய தேனை துளித்தீடீரோ மனம் நொந்து வருந்துகிற சித்தம் வைத்து மனது வைத்து என்னை ஆளும் பொருட்டு வருகிறோம் என்று சொன்ன சொல்லை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (31)

எங்கள் குடிக்கு வேந்தரே உமது திருவடி எனக்கு கிடையாதது என்ன குறையினாலோ. என் தெய்வம் என் தெய்வம் என்று சொன்ன குறைதானே அல்லாமல் இடிசாபமாகிய குறை தானே பாகத்தை கூறு செய்த குறை தானே

பாவியாகிய என்பாழ் மனத்தில் பக்தியில்லாத குறைதானே பகலை இருளென்று சொன்ன குறைதானோ வீண்காரியங்களில் வியாபித்து மிகவும் படு நீலனான குறைதானோ அங்கு மிங்குமாக கெட்டலைந்த குறைதானோ உன்னைத்தேடி அலையாமலிந்த குறைதானோ அறியாமல் வருந்துகிற சார்பு தந்து என்னை யாளும் பொருட்டு அன்பாகிய கடலில் அப்பாலிருக்கிற நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (32)

கல்லிலேயோ மண்ணிலேயோ ஆகாயத்திலேயோ அடியேனது இருகண்ணீரிலோ, கரையிலேயே கடலிலேயோ உடம்பிலேயோ உயிரிலேயோ கதியாகிய நிலத்திலேயோ இரவிலேயோ பகலிலேயோ நற்பதமாகிய வீட்டிலேயோ, அருவிலேயோ உருவிலேயோ அறிவிலேயோ அறிய வொண்ணாத வேதத்திலேயோ வேதங்கள் முதலாக ஆகம புராணங்களிலேயோ செல்வமிகுந்த துரை ராஜரே, தேவரீருக்கு நிலையிடமாயிருப்பது திவ்விய குணங்குடியிலேயோ தெரிந்து கொள்ளமாட்டால் சேர்ந்தணைத்தாளும் பொருட்டு மல்லிகைப் பூ மணமுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (33)

என் துக்கம் ஒழியாதோ ஆகந்த வெள்ளமானது உள்ளுக்குள்ளே பெருகிப் பாயாதோ கண்மாயை நீங்காதோ பாழாசையானது ரசிக்காதோ பழவினைகள் ஒய்ந்திடாவோ வலியகருவி தீய்ந்து போகாதோ கரணங்கள் உலர்ந்து போகவோ கொடு வினைகள் நீங்கிப் போகவோ பாழாகிய மனந் தெளியாதோ பேரறிவுண்டாகாதோ நற்குணம் வாய்க்காதோ அருள் மழை பெய்யாதோ மேலான கருணை வாய்ககாதோ பேரின்பம் கிடைக்காதோ மிகுதியாக நின்று வருந்துகிற அன்புடனே என்னை யாளும் பொருட்டு திருவாயில் மேலான சொல்லையுடைய நீர்

பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (34)

மோட்ச மார்க்கம் நாடப்படுமோ நெற்றியில் கண்ணிரண்டும் சேருமோ நல்லுணர்வு பந்தாடுமோ நல்லகுணங்குடியில் வீடு தந்தருள வேண்டும் என்று அந்த சற்குருநாதனது அருளும் என்னைத் தேடுமோ அட்டாமாசித்திகளும் ஆடக்கிடைக்குமோ புத்தியும் அந்த வழியை சேருமோ மனமானது ஆரவாரத்தையுஞ் செய்யுமோ ஆனந்தம் கூத்தாடுமோ மாடகூடங்கள் வேண்டுமென்கிற மனையாள் உண்டாக்குகிற ஆசையானது இருக்கமாட்டேனென்று என்னை விட்டோடுமோ மனம் வெருத்து வருந்துகிற வந்து சேர்ந்து என்னை யாளும் பொருட்டு வாடாத பூவை நிகர்த்திருக்கிற நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (35)

ஆசாபாசா வலைக்குள்ளே சிக்கிக் கொள்வேனோ அல்லது வெளிப்படுவேனோ பிரபஞ்ச வாழ்க்கை என்கிற சேற்றில் வீழ்ந்திடுவனோ அதைக் கடந்து அப்புறத்தே நடப்பேனோ பணத்தாசை பிடித்து கதிகெட்டு நிற்பேனோ கதியாசையே கொள்வேனோ கரையேறாத கப்பல் போல கலங்குவேனோ கரையேறி நிற்பேனோ ஈசன் திருவடியை அடையாதிருந்து நிற்பேனோ ஈசன் திருவடியை அடைவேனோ ஏக்கமடைந்து மிகவும் வருந்துகின்ற ஏக்கமற்றெழிய வாழும் பொருட்டு கலங்கமில்லாத மணிமாலையையுடைய நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (36)

புத்திரா் என்கிற முதலைகள் பற்றிக் கடித்துண்ண என்னைக் கொடுத்து உழல்வேனோ பொல்லாத காமக் கடலிலுண்டாகிய புலால் நாற்றமாகிய ஒருமாதின்

கையிலகப்பட்டு உழல்வனோ கதகதவென்று எரிகிற பணமாகிய நெருப்பை மிதித்து கட்டப்படுகிற பட்டுவஸ்திரங்களென்கிற மனது கைவலையாற் கட்டுபட்டு நின்றுழல்வேனோ சதசதவென்று அழுகா நின்ற தீநாற்றத்தையுடைய சாக்கடை சாக்கடையாகிய சமுசாரத்திற்சிக்கி உழல்வேனோ. தத்தழித்து வருந்துகின்ற சிறிது வந்து ஆளும் பொருட்டு குழந்தை போலக் கொஞ்சுங் குணத்தையுடைய நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (37)

வண்டுபோலப் பறந்தெழுந்திடுவனோ சிற்றின்பக்கடலில் விழுந்திடுவேனோ மண்போன்ற காமக்குரோதங்களை யுண்பேனோ மாயையை வெல்லுவேனோ பெண்ணாசை என்று சொல்லப்பட்ட பேயாற் பிடிக்கப்பட்டு சாவேனோ பேராநத்தத்தையடைவேனோ பீறல் துருத்தியாகிய இந்தச் சரீரத்தில் விருப்பத்தை உடையவேனோ பிரியங்கள் ஒழியப் பெறுவேனோ நண்டளந்த நாழிபோல் வறியனாவேனோ குறைவில்லாத நாலு நிறை நாழி யாவேனோ காலமெல்லாம் வருந்துகின்ற நன்மை மிகுந்து என்னையாளும் பொருட்டு மிக்க பேரானந்த வொளியமைந்த நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (38)

என்னுடைய பாவமிருக்க நான் என் வசமாவேனோ என்ன மோச மாவேனோ இரவும் பகலுமில்லாத அனுபூதியிலிருப்பேனோ இதம் அகிதம் என்பதியிலிருப்பேனோ தன்னை மதிக்காமல் அறிவு கேட்டால் கெடுவேனோ தன்னையும் மதிப்பேனோ தாராளமாக அருள் நேசத்தை உண்பேனோ தடைசெய்யும் மருட்சியைக் கொள்வேனோ இனிமேல் என்ன தான் செய்கிற தென்றும் ஏக்க மடைவேனோ ஏகாந்தமாயிருப்பதில் உயர்வடைவேனோ இவ்விதமாக வருந்தும் அடியேனும் உம்மையே நம்பினேன் விருப்பம் வைத்து என்னை ஆள்வதற்காக முத்தி

நிலையிலிருக்கப்பட்டவை நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (39)

பாவியான நான் யாவரையுஞ் சூழும் நிலை பெற்ற அரசா்களது கையிள்ள செங்கோலாவேனோ குருடா்களது கையிலுள்ள கோலாவேனோ கூலாயிலாக யில்லல்லாகு என்று சொல்லுவேனோ குடி கெட்ட நிலையை யுண்பேனோ அதுவே வேலையாய் முகம்மது ரசூல் என்று சொல்வேனோ இது தான் வேலை என்று சொல்வேனோ வேத வேதாந்தங்கள் சொல்லும் மெய்ஞ்ஞான வீட்டை அடைவேனோ வெற்றிடமான வெளியில் நிற்பேனோ ஆலமரத்தைப் போல மேன்மை உடைவேனோ உதிரும்படியான அந்த ஆலமரத்தின் சருகை போலாவேனோ ஆனபோதிலும் வருந்தும் அடியேனும் உம்மையே நம்பினேன் ஆதரித்து என்னை ஆள்வதற்காக உமது விஷயத்தில் ஆசையுள்ளவா்களுக்கு வாலாய முடையவராகிய நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே (40)

பாயும் கலைகள் பன்னிரண்டு அங்குலத் தளவும் பாயாமல் பக்குவஞ் செய்து வைப்பது சமாதியாகும் பழமையான வினைகள் கெடவும் சுழுமுனை நாடியின் வழிதிறக்கும் படிக்கும் பழக்க மடைவது நமாதியாகும். ஓய்வடையாத கருவி கரணம் முதலானவைகள் ஓய்வடைந்து அழியும் படியாக விழியின் ஒளியைக் கொழிப்பது சமாதியாகும்.. ஒன்றிரண்டென்று மனத்திலுணா்ந்தும் பிதற்றுதலைவிட்டு ஒரு வழிப்படுதல் சமாதியாகும் ஈ எறும்பு முதலியவைகளுக்கு சரீரங் குழைந்து முன்னே அன்பினாலுருகுவது சமாதியாகும். சமாதிவகை இப்படிப்பட்டதென்று அடியேனான நானும் அருளையுடைய உபகாரகனே உம்மையே நம்பினேன். என்னை ஆள்வதற்கு இதுவே வேளையாகும். வாயுவைக் காட்டிலும் அதிக வேகமுடைய நீா் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவா் எழுந்தருளக்கடவா்

வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (41)

நாவின் நுனியை மடித்து, அந்த உள் துளையில் ஓடச் செய்து நிலையாக நாட்டிவைப்பது சமாதியாகும். காலிமண்டெட்டும் எட்டெட்டாகி அழியும் படி முன்னான் காக்குவது நமாதி சித்திரம் போலிருந்து உள்ளே யொழுகி நல்ல அமிர்தம் ஒழுக, அதை உண்பது சமாதியாகும். உச்சியினிடத்துள்ள வெளியில் சென்றும் ஒளியைக் கண்டும் இரண்டு கண்ணையும் உள்ளே குவிப்பது சமாதியாகும். ஏவலுடன் விலகுதல் என்று சொல்லும் இருவினையுமில்லாமல் அசைவில்லாதிருப்பது சமாதியாகும் என்று பெரிய வேகமும் மனவேகமும் உள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (42)

மனங் களித்து வரும் வினைகளையுங் கொளுத்தி வெளியில் ஏறிவிடுவது சமாதியாகும் எட்டியு எட்டாத பொருளை எட்டிப் பிடிப்பதற்காக, அடியை எட்டிவைப்பது சமாதியாகும். மனமாகிய பதியில் அதிபதியாகிய ஆண்டவனை வைத்து அதிக துதிகளைச் சொல்லி அவரது திருவடியைப் பணிவது சமாதியாகும். பரிபூரணத்தில் வரும் காரணத்தை கண்டு களிப்படைவது சமாதியாகும். எது வந்து சம்பவித்தாலும் மாறினாலும் அவ்விரண்டும் ஒன்றென்றெண்ணியிருப்பது சமாதியாகும். மதத்தை உடைய யானையைப் போல வீரம் உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (43)

வேரற்றதான பரிசுத்தமான பரிபூரணமான பேரின்பமயமான வீட்டில் பிரவேசிப்பது சமாதியாகும். விரிந்த தனது கருணையைக் கொடுத்த குருநாதனுடைய அடியார்களென்று சொல்லும் படி வேஷங் கொள்வது சமாதியாகும்

போர் செய்யும் மயக்கமாகிய குதக்கைக் கடந்து அப்புறத்தே நின்றிருப்பது சமாதியாகும். சொல்லப்படும் வேதத்திலுள்ள பொருளை மறவாத கடமை நமக்காகுமென்று மனமகிழ்வது சமாதியாகும். பன்னிரண்டு கால்களையும் எட்டுக் கயிற்றினாலே நெருக்கிக்கட்டி அறிவது சமாதியாகும். மார்பிலணியும் முத்து மாலைகளை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (44)

வருண பேதத்தையும் பெண்கள் போகத்தையும் நிவர்த்தி செய்து நிற்பது சமாதியாகும் தீமையில்லாத அருளைக் கொண்ட ஒளிமயமான பொருளில் மனஞ் சேர்ந்திருப்பது சமாதியாகும். செத்த பிணம் போலிருந்து ஜபத்தையும் தவத்தையம் செய்வதற்குத் தனித்திருப்பது சமாதியாகும். எப்பொருளிலும் அதுவாயிருக்கப்பட்ட குருநாதனது இரண்டு பாதங்களில் விருப்பம் வைப்பது சமாதியாகும் பெருந் தவத்தை உடையவர்களுக்கு உதவியாயுள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (45)

திரவிய ஆசை நீங்கி துறவறத்தில் அதிக ஆசைபொருந்தி நல்ல நிஷ்டை செய்வது சமாதியாகும். சரீரம் நிலைக்க மாட்டாதென்று சிந்தனையே ஒன்றேன்று நிச்சயிருப்பது சமாதியாகும். சேறும் சவ்வாது கூட்டிய சந்தனமும் ஒன்றாகும் என்று மனத்திற் கொண்டு இருப்பது சமாதியாகும். வராதது வரமாட்டாது வரும் அவைகள் வரும் என்று வாட்ட மடைவதை யொழிந்திருப்பது சமாதியாகும். இது இதமானது இது இதமல்லாதது என்பதில்லாத ஞானத்தை அடைந்து மனத்தை முத்தி நிலையிற் சேர்த்து நிற்பது சமாதியாகும் நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த

குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (46)

எல்லையும் மறந்து பல தொல்லைகளும் இறந்ததான ஒரு இடத்திலிருப்பது சமாதியாகும். என்னுடையது நான் என்பதை இடம் பொருள் ஏவல் முதலிய வலிமையோடு அழிப்பது சமாதியாகும். இரவு பகலாக வெல்லுமளவும் நல்ல அறிவுடையோர்களின் அடிகளைப் பணிவது சமாதியாகும். சாஸ்திரத்தின் படி செய்து முடிக்க அதற்கு முதலாக உள்ளவற்றையும் இல்லாமலிருப்பது சமாதியாகும். மனைவியும் மக்களும் பந்துக்களும் உறாயில்லை என்பது சமாதியாகும். போர் செய்த போதிலும் பொறுமையுடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (47)

அசைவிக்கும் சஞ்சலத்தைத் தொலைத்து அருளாகிய மலையின் பக்கத்தில் சார்ந்திருப்பது சமாதியாகும். எங்கும் நிறைந்த துண்டிக்கப்படாத உருவமே சாட்சி என்று உரைப்பது சமாதியாகும். இருப்பிடம் விட்டு அலையாமல் நீவாத தீபம் போல நிலையில் நின்றிருப்பது சமாதியாகும். கண்ணிரண்டையுஞ் சேர்த்து நெற்றியின் நடுவிலிருத்தி அங்குள்ள ஒளியின் நேரில் வைப்பது சமாதியாகும். எப்போதும் விளங்கும் நிஷ்டை விருத்தியாகும். துறவறத்தில் அடைந்து நிற்பது சமாதியாகும். மலையைப் போல பெரிய பெருமையுடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (48)

யார் இருந்தாலும் என்ன யார் போனாலும் என்ன என்று மனம் திறந்திருப்பது சமாதியாகும். யாராலும் அறியாத சூதான வெளியிலே சென்று அடங்கிப் போவது சமாதியாகும். வீரசூரங்கள் முதலாகிய அதிக ப்ரசங்கமும் மெலிவடையத் தான்

மெலிவடைவது சமாதியாகும். வேத வேதாந்தங்களும் விட்டு நாதாந்தமாகிய நடுவீட்டில் செல்வது சமாதியாகும். அழகு மிகுந்த மயிர்ப் பாலத்தில் ஏறக்கூடிய மனமே ஏறுமேறு என்று சொல்வது சமாதியாகும் என்று மேகம் போல உயர்ந்த கருணை உள்ள நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (49)

சமுத்திரம் போல அருள் அதிகரிக்க வேண்டும் என்கிற ஆசையை அடைந்து அழுதழுது மனங்களிப்பு அடைவது சமாதியாகும். அதிக சுகரூபமான பெருங் கடலின் அமிர்தத்தைப் பலமுறை உண்டு தளர்வு குறைந்து நிற்பது சமாதியாகும். பாழாகிய நிலையொழிந்து முப்பாமினு மேற்பட்ட நிலைமை அடைந்து பகைத்தலையை ஒழிப்பது சமாதியாகும். பல கோடியான அண்டமும் புற அண்டமும் தனக்கு உள்ளே பார்த்திருப்பது சமாதியாகும். ஏழுலகங்களையுஞ் சுற்றியும் சுற்றாமல் இருப்பிடத்திருப்பது சமாதியாகும் வாழியை உடைய மகுமூதின் அருளை உடைய நீர் பின் தொடரும் படி உதாரணகுணமுடைய ரசூல் என்பவர் எழுந்தருளக்கடவர் வளரும் அருள்நிறைந்த குணங்குடியில் வாழும் எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே முகியித்தீன் ஆண்டகையே. (50)

## வினாக்கள்

1. முகைதீன் சதகம் - பெயர்க்காரணம் தருக.
2. முகைதீன் ஆண்டவரின் புகழினை எடுத்துரைக்க.
3. குணங்குடியில் வீற்றிருக்கும் முகைத்தீன் வரலாற்றை கூறுக.
4. முகைத்தீன் ஆண்டவரின் சிறப்புகளை எடுத்துரைக்க.
5. குணங்குடி மஸ்தான் முகைத்தீனை எவ்வாறெல்லாம் புகழ்ந்து பாடுகிறார்?.

6. திருக்காவலூர் கலம்பகம் விளக்கம் தருக.

7. திருக்காவலூரில் அன்னையின் பெருமைகளை எடுத்துரைக்க.

8. மரியாளின் வரலாற்றை எடுத்துரைக்க.

## அலகு - 4

## கலிங்கத்துப்பரணி - "கோயில்பாடியது"

### பரணியின் இலக்கணம்

போர் முகத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் 'பரணி' என்று வழங்குவர்.

**"ஆனை யாயிரம் அமரிடை வென்ற**
**மானவ னுக்கு வகுப்பது பரணி"**

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் சூத்திரம் பெரும்போர் புரிந்து வெற்றிபெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று வழங்கும் மரபு உண்டு. இவ்வாறு பரணி நூல் அரசர் முதலியவர்கள்மேல் செய்யப்படுவதன்றி, தெய்வங்கள் மேலும் தத்தம் ஆசிரியர்கள் மேலும் அறிஞர்களால் இயற்றப்பெற்று வழங்கும். கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, இரணியவதைப் பரணி, கஞ்சவதைப் பரணி, அஞ்ஞவதைப்பரணி, மேகவதைப் பரணி, பாசதைப் பரணி என்பன அவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களாகும். நூல் பாடுவோர் கொச்சகக்கலி என்னும் பாட்டின் உறுப்பாகிய ஈரடிக் கலித்தாழிசை என்ற உறுப்பை மேற்கொள்வது வழக்கம், இதனை,

**"மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று**
**------------------------------------------------**
**ஒரு தனி ஏத்தும் பரணி பண்பே" (பன்னிருபாட். சூத்.57)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தால் அறியலாம். பொதுவாக நூலில் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு, காளிகோயில் முதலிய பல்வகைச் சிறப்புக்களும் பல்வேறு சுவைகள் கொப்புளிக்கும்படி அமைக்கப்பெறும். இந்த வழக்கத்தை,

**“தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை**

**---------------------------------------------**

**தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே”**

**(பன்னிருபாட்- சூத்.58)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தாலும் அறியலாம். இதனைத் தேவ பாணியில் அடக்குவர் பேராசிரியர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர். ‘‘பரணியுள் புறத்திணை பலவும் வீராண் வருதலின் அது தேவ பாணியம் என்றது என்னையெனின் அவையெல்லாம் காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந்துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர், வழக்குப்பற்றி, அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவன. ஆதலால் அவை எல்லாவற்றினும் தேவபாணியாம்’’ என்பது அவர் உரையாகும். நச்சினார்க்கினியரும் அதே சூத்திரத்திற்கு உரையெழுங்கால், ‘‘பரணியாவது - காடு கெழு செல்விக்குப் பரணி நாட்கூழுந் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு பற்றியது, அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று என்று கூறுகிறார்.

**பரணி என்ற பெயர்க்கரணம்**

பரணி என்ற பெயர்க்காரணம் பலவாறகக் கூறப் பெறுகின்றது. டாக்டர், உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் பரணி என்ற நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றும் அவ்வாறு கொள்வதே ஏற்புடைத்து என்று கூறுகிறார்கள். இதற்கு

**‘‘காடு கிழவோள் பூத மடுப்பே**

**தாழி பெருஞ்சோறு தருமனால் போதமெனப்**

**பாகு பட்டது பரணிநாட் பெயரே”**

என்னும் திவாகரத்தையே அவர்கள் ஆதாரமாகக் கொண்டார்கள்.

தொல்காப்பியத்தில் தொடர்நிலைச் செய்யுட்களின் இலக்கணமாக அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எட்டுவகை வனப்புக்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் விருந்து என்பதை,

**“விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”**

**(தொல்.பொருள். 231)**

என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இளம்பூரணர் ‘‘விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு, புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்’’ என்று இதற்கு விளக்கம் தருகிறார். பேராசிரியர்’’, விருந்து தானும் புதிதாகப் பாடும் தொடர்நிலை மேற்று’’ என்று உரை கூறி சில பிரபந்தங்களை மேற்கோள் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியரும் அவ்வாறே சில பிரபந்தங்களை உதாரணங்களாகக் காட்டுகின்றார். எனவே, இப்போது விதியே பல புதிய பிரபந்தங்கட்கு இடனாக அமைந்துள்ளது என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை.

**கலிங்கத்துப்பரணி பற்றிய வரலாறு**

‘‘கலிங்கத்துப் பரணி’’ என்னும் நூல் அக்காலத்துப் பேரரசனாகத் திகழ்ந்த முதல்குலோத்துங்கன் தன் படைத் தலைவனான கருணகரத் தொண்டைமான் என்பவனைக் கொண்டு கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்து வென்ற செய்தியைக் கூறுவது. கலிங்கப் போர் நிகழ்ந்த ஒரு சில நாட்கள் கழித்து அரசவையில் குலோத்துங்கனும் அவன் அவைப் புலவராகிய ஜெயங்கொண்டாரும் உரையாடிக்

கொண்டிருந்தனர். அப்பொழுது அரசன் வேடிக்கையாக, 'புலவர் அவர்களே, கலிங்க நாட்டைச் ஜெயங்கொண்டமையால் யானும் தங்களைப் போல் ஜெயங்கொண்டான் ஆயினேன்' என்று கூறினான். அதனைக் கேட்ட புலவர் அங்ஙனமாயின், ஜெயங்கொண்டானைச் ஜெயங்கொண்டான் பாடுதல் சாலப் பொருத்தமாகும் என்று மாற்றி உரைத்து கலிங்கத்துப் பரணியைப் பாடி முடித்ததாக ஒரு வரலாறு வழங்கி வருகிறது. நூல் அரங்கேற்றப் படுங்கால் அந்நூலின் சொற்சுவை பொருட்சுவைகளைக் கண்டு வியந்த ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பொன் தேங்காயை உருட்டி அவரையும் அவரது நூலையும் சிறப்பித்ததாகவும் அவ்வரலாற்றால் அறிகின்றோம். இது எத்துணை உண்மையாயிருக்கும் என்பதை ஆராய்ந்த பின்னர்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

**நூற் பொருள்**

ஜெயங்கொண்டார் தம் நூலில் குலோத்துங்கன் அவையில் வீற்றிருக்கும் சிறப்பு, அவன் நால்வகைச் சேனையுடன் புறப்பட்டுப் பயணம் செல்லும் இயல்பு, படைகள் போருக்கெழுந்த தன்மை, அவை போர் புரியும் பான்மை, போர்க்களக்காட்சி முதலிய செய்திகளை நூலைப் படிப்போர் அவற்றைத் தம் மனக்கண்முன் நிறுத்திக் கண்டுமகிழுமாறு அழகிய சொல்லோவியங்களால் காட்டுகின்றார். நூலிலிருந்து அக்கால அரசர் இயல்புகள், அக்காலப் போர்முறை, அக்கால மக்கள் இயற்கை, அவர்களின் பழக்க வழக்கங்கள் போன்ற செய்திகளை நன்கு அறியலாம்.

**நூலமைப்பு**

நூலைத் தொடங்கு முன் பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங்கன் நெடிது வாழுமாறு சிவபெருமான், திருமால், நான்முகன், ஞாயிறு, யானைமுருகன், ஆறுமுகன், நாமகள், உமை, சப்தமாதர்கள் ஆகியவர்களை வணங்கி வாழ்த்துக் கூறுகின்றார் ஆசிரியர். அடுத்து 'கடைதிறப்பு' என்ற பகுதி வருகிறது.

கலிங்கப்போா் மேற்சென்ற வீரா் மீண்டு வரக் காலம் தாழ்த்தியதாகவும் அதுகண்ட அவா்களுடைய காதல் மகளிா் ஊடல் கொண்டு கதவடைத்துக் கொண்டதாகவும் கொண்டு, புலவா் தாம் பாடப்போகும் அக்கலிங்கப் போா்ச் சிறப்பைக்கேட்டு மகிழ்தற் பொருட்டு கதவைத் திறக்குமாறு வேண்டுவதாக இப்பகுதி அமைக்கப் பெற்றுள்ளது.

அடுத்து பேய்களின் தலைவியாகிய காளிதேவியின் சிறப்பு கூறப்பெறுகின்றது. காளிதேவி வாழும் காட்டின் இயல்பு, அதன் நடுவேயுள்ள அவளுடைய திருக்கோவில் அமைப்பு முறை, அவாள் வீற்றிருக்கும் சிறப்பு, அவளைச் சூழ்ந்திருக்கும் பேய்களின் தன்மை முதலியவற்றை ஆசிரியா் வருணிப்பது நம்மை வியப்புச் சுவையில் ஆழ்த்துகின்றது. தேவி வீற்றிருக்கும் பொழுது இமயத்திலிருந்து ஒரு முதுபேய் வருகிறது. அது தான் கற்ற ‘இந்திர சாலங்களை’ எல்லாம் காளிதேவிமுன் அரங்கேற்றுகின்றது. இப்பகுதி நகைச்சுவை ததும்பி நிற்கின்றது.

பிறகு குலோத்துங்கன் பிறந்த ‘குடிவழி’ கூறப்பெறுகின்றது. இது இமயத்திலிருந்து வந்த முதுபேயின் வாயில் வைத்துப் பேசப்படுகின்றது. முதுபேய் இமயத்தில் வாழ்ந்தபொழுது கரிகாலன் இமயத்தைச் செண்டால் எறிந்து திரித்து மீண்டும் அது நிலைநிற்குமாறு தன் புலிக்கொடியைப் பொறித்தான். அப்பொழுது அங்கு வந்த நாரதா் திருமாலே குலோத்துங்கனாகப் பிறக்க இருக்கும் சோழா் குடி பெருமையுடைத்து என்று கூறினாா். அவா் கூறிய சோழா் குடிவரலாற்றைக் கரிகாலன் இமயத்தில் எழுதுவித்தான். அந்த வரலாற்றையே முதுபேய் காளிக்குக் கூறுகின்றது.

இனி, குலோத்துங்கன் சிறப்பைக் கூறுவதற்கு முன்பதாக பரணிப்போா் நிகழ்வதற்கான நிமித்தங்களைக் கூறுகிறாா் ஆசிரியா். பேய்கள் தம் பசிக்கொடுமையைத் தேவியிடம் கூறி அதைப் போக்குமாறு அம்மையை வேண்டி நிற்கின்றன. அவ்வமயம் இமயத்திலிருந்து வந்த முதுபேய் கலிங்க நாட்டின்

வழியாக வந்தபொழுது ஆங்குக் கண்ட சில தீ நிமித்தங்களைக் கூறுகின்றன. காளி தேவி கணிதப்பேய் கண்ட கனவு நிலையையும் நனவில் கண்ட தீக்குறிகளையும் அவர்களுக்குக் கூறி ''மிக்கவிரைவில் கலிங்கநாட்டில் பெரும் போர் நிகழும், உங்கள் பச முற்றுந் தொலையும்'', என்று உரைக்கின்றாள்.

குலோத்துங்கனின் பிறப்பு, வளர்ப்பு, முடிசூடல் முதலிய செய்திகள் காளி பேய்களுக்கு உரைப்பதாக அமைக்கப்பெற்றுள்ளன. அங்ஙனம் காளி உரைத்துக்கொண்டிருக்குங்கால் ஒருபேய் ஓடிவந்து கலிங்க நாட்டில் நிகழும் போரை உரைக்க, எல்லாப் பேய்களும் தாம் உணவு பெறப்போவதை நினைந்து மகிழ்ந்து கூத்தாடுகின்றன. கலிங்கப் போர்க் காரணத்தைக் கூறுமாறு காளி வினவ, வந்த அக்காரணத்தை உரைக்கின்றது. குலோத்துங்கன் சோழ நாட்டை ஆண்டபொழுது ஒரு நாள் பாலாற்றங் கரைக்குப் பரிவேட்டையாடச் செல்லுகின்றான். வேட்டை முடிந்ததும் காஞ்சியிலுள்ள மாளிகை ஒன்றில் செய்தமைத்த சித்திர மண்டபத்தில் முத்துப்பந்தரின் கீழ் தேவியர், அமைச்சர், தானைத் தலைவர் முதலியோர் புடைசூழ வீற்றிருக்கும் பொழுது சிற்றரசர் பலர் வந்து அவனைத் திறையுடன் காண்கின்றனர். கலிங்க நாட்டரசன் அனந்த பன்மன்மட்டிலும் வந்து காணவில்லை. அதைக்கண்ட குலோத்துங்கன் தன் தானைத் தலைவனை கருணை கரத்தொண்டைமானை தண்டெடுத்துச் சென்று கலிங்க அரசனின் செருக்கை அடக்கி வருமாறு ஏவுகின்றான். அது கேட்ட கலிங்க வேந்தன் வெந்தறுகண் வெகுளியினால் வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து நோக்கி,

போர் கடுமையாக நடைபெறுகின்றது. இறுதியில் கலிங்க வேந்தன் தோற்றோடுகின்றான். கருணாகரன் கலிங்கத்தை எரிகொளுவி அழித்துப் பல்வகைச் செல்வங்களை கவர்ந்து வாகை மாலை சூடி குலோத்துங்கன் அடியை வணங்கி நிற்கின்றான். இப் பகதியில் வீரச் சுவை செறிந்துள்ளது.

போரைச் சொல்லி முடித்த பேய் காளியைப் போர்க்களத்தில் வந்து காணுமாறு அழைக்கின்றது. அந்த அழைப்பை ஏற்று காளிதேவி பேய்கள் சூழ களத்திற்கு வந்து பல்வேறு காட்சிகளைப் பேய்களுக்குக் காட்டுகின்றான், காட்சிகளைக் கண்டு களித்த பிறகு தேவி நீராடிக் கூழ்சமைத்து உண்ணுமாறு பேய்களைப் பணிக்கின்றான். அங்ஙனமே பேய்கள் பல்துலக்கி, நீராடிக் கூழ் அட்டு உண்ணுகின்றன. உண்டபின் பேய்கள் வள்ளைப் பாட்டுக்களால் குலோத்துங்கன் புகழ்பாடி வாழ்த்துகின்றன.

## கோயில் பாடியது

### பழைய கோயிலும் புதிய கோயிலும்

பாலை நிலத்தை அடுத்துள்ள சுடுகாட்டிலேயுள்ள காளி கோயிலின் இயல்பு இப்பகுதியில் கூறப்படுகிறது.

மேலே கூறிவந்த அந்தக் கொடிய பாலைவனத்திலே வாழ்பவள் காளிதேவி. அவளுக்குப் பிரமனால் படைக்கப்பட்ட இந்த உலகமே பழைய கோயிலாகும். இருந்தாலும், புதிய கோயில் ஒன்றும் அவளுக்கு அங்கே இருக்கிறது. இனி அதைப் பற்றிக் கூறுவோம்.

**“ஓதி வந்த அக் கொடிய கானத்து**
**உறை அணங்கினுக்கு அயன் வகுத்த இப்**
**பூதலம் பழங் கோயில் என்னினும்,**
**புதிய கோயில் உண்டு, அதுவி ளம்புவாம்”** (97)

### புதிய கோயிலுக்குக் கடைகால்

முதற் குலோத்துங்க சோழன் வட்டமாகிய வெண் கொற்றக் குடையை உடையவன். போர்க்களத்தில் அவனது வாளின் வாய்ப்பட்டு மடிந்த மன்னர்கள்

பலராவர். அம்மன்னர்களின் பட்டத்தரசிகளின் நகைகளில் இருந்த அழகிய பெரிய இரத்தினக் கற்களே புதிய கோயிலுக்குக் கடை காலிடும் கற்களாக அமைந்தன.

**"வட்ட வெண்குடைச் சென்னி மானதன்**
**வாளின் வாயினால் மறலி வாயிடைப்**
**பட்ட மன்னர்தம் பட்ட மங்கைமார்**
**பரு மணித்திருக் கரு இருத்தியே" (98)**

### கோயில் இயல்பு

சேர மன்னர்கள் செந்நிறப் புள்ளிகளையுடைய யானைப் படையைப் பெற்றிருந்தனர். அவர்களுடைய கட்டளையினால் சேர வீரர்கள் போர்க்களத்திற்கு வந்தனர். தன்னை எதிர்த்த சேர வீரர்களை முதற்குலோத்துங்கன் கொன்று குவித்தான். அவ்வீரர்களின் கொழுப்பாகிய சேற்றை இரத்தமாகிய நீரால் உழைத்து பெரிய தலைகளாகிய கற்களால் கோயிலுக்குச் சுவர் எழுப்பினர்.

### தூணும் உத்தரமும்

அறிஞர்களுக்கெல்லாம் தலைவன் முதற் குலோத்துங்க சோழன். அவனுடைய யானைகள் பகையரசர்களின் காடுகளைத் தம் கொம்புகளால் பிடுங்கி எறிந்தன. அவ்வாறு எறிந்த கணைய மரங்களே, புதிய கோயிலுக்குத் தூண்களும் உத்தரங்களும் ஆயின.

### கை மரமும் பரப்பு மரமும்

மிதிலை என்னும் நகரில் முதற் குலோத்துங்க சோழன் யானைகளை விரைவாகக்கொன்று குவித்தான். அந்த யானைகளின் கொம்புகளைக் கோயிலுக்குக் கைமரமாக இட்டனர். அவற்றின் விலா எலும்புகளைப் பரப்ப மரங்களாக அடுக்கினர்.

“கடிது அழிந்து, பேர் மிதிலையில் படும்

கரி மருப்பினைத் திரள் துலாம் எனும்” (100)

## மேல் முகடு

முன்னொரு நாள் முதற் குலோத்துங்கன் சோழன் யானைப் படையைச் செலுத்தி வெற்றிச் சின்னங்களை உடைய அரசர்களோடு போர் புரிந்து அவர்களிடமிருந்து பெற்ற யாளி, யானை, பன்றி, சிங்கம் ஆகிய உருவங்கள் எழுதப்பெற்ற தனித்தனிக் கொடிகளை வரிசையாக வைத்து மேல் முகடு அமைத்தான்.

## வெற்றிடத்தை மூடுதல்

முதற் குலோத்துங்க சோழன் அரசாண்ட நாளில் குந்தளம் என்னும நாட்டை, ஆறாம் விக்கிரமாதித்தன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். ஆறாம் விக்கிரமாத்தனையும், அவன் தம்பி சயசிங்கனையும் முதற் குலோத்துங்கன் வென்றான். அவர்களைத் துங்கபத்திரை என்னும் ஆற்றுக்கப்பால் துரத்தினான். அந்தப் போரில் யானைகள் பலவற்றைக் கவர்ந்தான். அப்படி கவர்ந்த யானைகளின் முகப் போர் வைகளை எடுத்துக் காளி கோயிலின் வெற்றிடம் மறையும்படி மேலே மூடினான்.

## கோபுரமும் நெடுமதிலும்

காளி கோயிலின் கோபுரங்களும் பெரிய மதில்களும் வெள்ளியால் கட்டி முடித்ததைப் போலப் போரில் இறந்தவர்களுடைய வெள்ளிய எலும்புகளால் கட்டி முடிக்கப் பெற்றன. அக்கோபுரங்களையும் மதில்களையும் கொள்ளி வாய்ப் பேய்கள் காவல் புரிந்தன.

**கோயில் வாயிலில் மகர தோரணம்**

கரும் பேய்கள், கரிய இரும்பினால் ஒப்பற்ற இரண்டு தூண்களை நட்டன. ஓர் இரும்பைச் சுறாமீன் போல வளைத்துத் தோரணமாகவும் கட்டின.

> **"கார் இரும்பின் மகரதோ-**
> **ரணம்ஆகக் கரும் பேய்கள்**
> **ஓர் இரண்டு கால் நாட்டி,**
> **ஓர் இரும்பை மீசை வளைத்தே"      (105)**

**மதில்களின் காட்சி**

மயிலின் தலைகளும், வீரர்கள் காளிதேவிக்குப் பலியாக மலர்ந்த முகத்தோடு கழுத்தை அறுத்துவைத்த தாமரை மலர் போன்ற முகங்களும், மதில்களில் பதிக்கும் கொழுப்பாலாகிய கொடிச்சீலைகளும், பச்சிளம் குழந்தைகளின் இளந்தலைகளும், அக்கோயிலின் எல்லா இடங்களிலும் தொங்கவிடப்பட்டன.

**மதுரையில் மகா தோரணம்**

முதற் குலோத்துங்க சோழன், தனக்கு அடங்காத பாண்டியருடைய பாய்ந்து கொல்லும் யானைகளின் மறம் போன்ற காதுகளை அறுத்துக் காளி கோயிலில் மாலையாகத் தொங்கவிட்டான். மதுரையில் சுறாமீன் வடிவத்தில் ஒரு மகர தோரணம் இருந்தது. அதனைப் பறித்து வந்து, காளி கோயிலின் முன்னே இரத்தினங்களைப் பதித்த ஊசல்போல் நட்டுவைத்தான்.

**ஈம விளக்கு**

காளிதேவியை வழிபடுபவர் அனைவரும் அவ் அம்மையிடம் அன்பு செலுத்தி, அவள் உறைந்துள்ள கோயிலைச் சுற்றிலும் பெருக்கிப் பசுமை இரத்தமாகிய தண்ணீரைத் தெளித்தனர். கொழுப்பாகிய மலர்களைத் தூவினர். காளி கோயில்

சுடலையின் நடுவில் அமைந்தமையால், சுற்றிலும் பிணங்களைச் சுடுவதால் எரியும் விறகடுக்காகிய விளக்கை எல்லாப் பக்கங்களிலுமே ஏற்றி வைத்தனர். அது ஒப்பற்ற பயங்கரத் தன்மையைக் கொண்டதாக இருந்தது.

**வீரர்களின் பேரொலி**

காளி தேவியை வழிபடும் வீரர்கள் சிறிதும் மனம் தளராதவர்கள், ஒப்பற்ற ஆண்மையும் அஞ்சாமையும் உடையவர்கள், அவர்கள் தாங்கள் விரும்பும் வரத்தைத் தருமாறு தேவியிடம் வேண்டினர். அவ்வீரத்திற்கு ஈடாக தங்கள் தலை முதலிய உறுப்புக்களை அரிந்து கொடுக்கிறோம் என்று ஆரவாரத்தோடு கூவி வழிபட்டனர். இவ்வாறு அவர்கள் வழிபட்ட ஓசையானது, கடல் ஒலிபோல் எல்லாத் திக்குகளிலும் சென்று பரவிற்று,

**வீர வழிபாடு**

காளி தேவியை வழிபடுவோர் அவளை வணங்கி அமர்ந்திருந்தனர். சொல்லுதற்கு அருமையான பசைக்குத் தகுதியான நெருப்பை மூட்டினர். தங்கள் விலா எலும்பைப் பிடுங்கி வலிய நெருப்பில் தொடர்ந்து எரியும்படி விறகாக வைத்தனர். உடம்பிலிருந்து பெருகி வழியும் இரத்தத்தை நெய்யாக ஊற்றினர்.

**தலை துதிக்கும் முண்டம் வழிபடும்**

வீரர்கள் தங்களுடைய பெரிய தலையைக் கழுத்தின் அடியிலே அறுப்பார்கள். அறுத்த தலையைக் காளியின் கையிலே கொடுப்பார்கள். கொடுத்த தலைகள் தேவியைப் போற்றும் தலைகுறைந்த உடல்கள் தேவியைக் கும்பிட்டு நிற்கும்.

**"அடிக் கழுத்தி னுடன் சிரத்தை அரிவராலோ,**

**அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ**

**கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ**

குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ”   (111)

**அச்சுறுத்தும் தலைகள்**

பலிக்கடன் செலுத்தும் பலிபீடத்தில் வீரா்கள் நீண்ட குடுமியோடு கூடிய தங்கள் தலைகளை அறுத்து வைத்தனா். ஆண்டலைப் பறவைகள் அத்தலைகளைத் தம் இனப்பறவைகள் என்று எண்ணிப் பக்கத்தில் வந்து பாா்க்கும் அந்தப் பறவைகளை அறுபட்ட தலைகள் பயமுறுத்தும்.

**குறையுடனும் பேயும்**

‘வீரா்கள் காளி தேவிக்குச் செலுத்த வேண்டிய பலிக் கடனுக்காகத் தங்கள் தலையை அரிந்து வைத்தனா். அப்பொழுதே அவா்கள் கடமை நிறைவேறிவிட்டது. இனிச் செய்ய வேண்டியது யாதுமில்லை. அந்தக் களிப்பினால் குறையுடல்கள் கூத்தாடின. பெரும் பசியுடைய பேய்கள் அவற்றை உண்ண ஆசைப்பட்டன. ஆனால் அந்த உடல்களிடம் அணுக அஞ்சி கீழே விழுந்தவுடன் உண்ணலாம் என்று கருதி அவற்றின் பன்னலேயே அலைந்தன.

**குரல் ஒலியும் வாத்திய ஒலியும்**

‘காளி தேவியே’ இப்பொழுது எருமைக் கடாலைப் பிளந்த எடுத்த பசிய இரத்தம் இது, இதனை அன்போடு பலியாக ஏற்றுக் கொள்க என்று வீரா்கள் இட்ட கூச்சல் பெரிய இடி இடித்தாற்போல எட்டுத் திக்குகளிலும் பரவின, அவ்வொலி வான உச்சியையும் பிளந்துகொண்டு சென்றது. அதனோடு தோற் கருவிகளைக் கொண்டு மொகு மொகு என்ற பெரிய ஓசையையும் அவா்கள் எழுப்பினா்.

**மெய் காப்பாளா்கள்**

காளி தேவியின் மெய்காப்பாளரும் பேய்களில் ஒருவகையினரும், அவளால் விரும்பப்படுபவரும் பழங்காலந்தொட்டு வருபவரும் ஆன சாதகா்கள், பறை, பம்பை,

முழவு முதலிய தோற் கருவிகளிலிருந்து எழுகின்ற தாள ஒற்றோடு சேர்ந்த ஒலியைக் கேட்டுத் தேவியை வணங்க வருவார்கள்.

**யோகினிப் பெண்கள்**

யோகிளிப் பெண்கள், வாளை வலக்கையிலும், வீரர்களின் பசிய தலைகளை இடக்கையிலும் பிடித்துக்கொண்டு இடையிடையே பேசியவண்ணம் இடை அசைய நடந்து தேவியிடம் வந்து சேர்வர்,

**“படை வலங்கொடு, பசுந்தலை**

**இடங்கொடு, அணைவார்**

**இடை மொழிந்து, இடை நுடங்க, வரு**

**யோகி னிகளே”** (116)

**பெருந்தலை கண்டு பேய் உறங்காமை**

பருந்து நீண்ட மூங்கில்களின் முனைகளில் எல்லாம் வீரர்களின் தலைகள் தொங்கின, அவை எல்லாத் திக்குகளிலும் கண் இமைக்காமல் இருந்து சிரித்தன, கண்டார்க்கு அச்சத்தை உண்டாக்கும் சுழலுகின்ற கண்களையுடைய பேய்கள், அந்தத் தலைகளைப் பார்த்துப் பயந்து, இரவு முழுவதும் தூங்காமல இருந்தன.

**காலன் இடும் தூண்டில்**

வீரர்கள் தங்கள் தலைகளை அறுத்துத் தேவிக்குப் பலிக்கடன் செலுத்தினர். அந்தத் தலைகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் காற்றில் அசையும் மூங்கில்களில் மாட்டிக்கொண்டிருந்தன. அக்காட்சி அலையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த வீரர்களின் உடல்களைக் கவர்வதற்கு எமன் பெரிய தூண்டிலைப் போட்டுப் பிடித்ததுபோல் இருந்தது.

### கொள்ளிவாய்ப் பேயின் தன்மை

காளிதேவி வாழும் சுடலையில் உயிர்களைக் கொல்லும் வாயையுடைய கிழ நரிகள் பறை ஓசைபோல முழக்கமிட்டன. அங்குக் கொள்ளிவாய்ப் பேய்கள் தங்கள் குட்டிகளின் வாய்க்கு ஏற்ற இனிய சிவந்த இறைச்சியைத் தேடித்திரிந்தன. அப்போது நரிகளின் வாயில் நல்ல இறைச்சி இருப்பதைப் பார்த்து அதைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டன.

### கோயிலைச் சுற்றியுள்ள சுடலை

பருந்துகள், இறந்த பிணங்களைக் கொத்திக் கொழுப்பையும் இறைச்சியையும் பிடுங்கித் தின்னும் காளி தேவியின் கோயிலைச் சுற்றிலும் பிணங்களைச் சுடும் நெருப்பு, செம்பருத்திச் செடி, பேய்கள், சுடுகாடு, ஒன்றோடு ஒன்று சண்டையிடும் நரிகள் ஆகியவைகளாகவே இருந்தன.

**“நிணமும் தசையும் பருந்து இசிப்பு,**
**நெருப்பும், பருத்தியும், பொன்று**
**பிணமும், பேயும், சுடுகாடும்,**
**பிணங்கு நரியும் உடைத்தரோ” (120)**

## விக்கிரம சோழன் உலா

### ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர் - ஒட்டக்கூத்தர், சிறப்புப் பெயர் - கவிச்சக்கரவர்த்தி மலரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். விக்கிரம சோழன் கி.பி. 1118 ஆம் ஆண்டில் முடிசூடிக் கொண்டு கி.பி.1122 ஆம் ஆண்டுவரை தன் தந்தையுடன் இருந்து அரசாட்சி புரிந்தான். இதனை ‘பூமகன் புணர’, ‘பூமாது மிடைந்து என்னும் இரு மெய்க்கீர்த்திகளும் தெளிவுபடுத்துகின்றன. தியாக சமுத்திரம், அகளங்கன்

என்பவை இவனுடைய பட்டப் பெயர்களாகும். விக்கிரம சோழன் உலா புறப்பட்ட போது அவனது உலாவைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவப் பெண்களின் மனநிலைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏழு பருவப் பெண்களின் உருவ அமைப்பும் அவர்களின் செயல்களும் தனித்தனியாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

“பேதை இளம்பிறை போன்றவள். பசிய தோகை முளைக்காத மயில் போன்றவள். தோல்வியுற்ற மன்மதன் வெற்றிபெற வளர்க்கும் கரும்பைப் போன்றவள். குயில் குஞ்சு போன்றவள். இளமை நிரம்பிய அன்னப் பறவை போன்றவள். அண்மையில் பிறந்த பச்சைக் கிளியைப் போன்றவள். பவளக்கொடியில் வளரும் இளமையான கொம்பைப் போன்றவள். களவு கொள்ளும் பார்வை இல்லாத கண்ணாகிய தேன்துளியைக் கொண்டிருப்பவன். தாயைப் பிரிந்து தனியே செல்லும் இயல்பில்லாத பேதைப் பருவம் உடையவள்”.

பெதும்பைப் பருவப் பெண்ணொருத்தி தன் மழலை மொழிப் பேச்சினைக் கிளிக்குக் கொடுத்துவிட்டுப் புல்லாங்குழலின் இனிமையைக் கவா்ந்து கொண்டவள். தன் ஒளிமிக்க முதல் பருவத்துப் பற்களை எல்லாம் முல்லைக்குக் கொடுத்துவிட்டு முத்துகளிடம் இருந்து பற்களைப் பெற்றுக் கொண்டாள். இளமையான பார்வையை மானுக்குக் கொடுத்துவிட்டுக் கண்கள் இரண்டிலும் விடத்தைக் கொண்டாள். ஒளி நிரம்பிய உடம்பின் சாயலைத் தான் வளர்த்த குருகிற்குக் கொடுத்து மின்னலைத் தன் சாயலாகக் கொண்டாள். தான் விளையாண்ட பாவைகளைக் குராமரங்கள் எடுத்துக்கொள்ளத் தான் பச்சைக் கிளியையும் நாகணவாய்ப் புள்ளையும் தான் ஏந்தி இருக்கும் தோற்றமுடையவளானாள். தன் அழகிய நடையை அன்னப் பறவைக்குக் கொடுத்துவிட்டு இளம் யானைக் கன்றின் நடையைப் பெற்றாள். அவள் தங்கத் தகட்டில் பதித்த பவளக் கொடி சுற்றிய கட்டில் மேல் முத்துப் பதித்த உச்சிக் கொண்டையினை உடையவள். முருகன் போன்ற வீரமுடையவர்களைக் கொன்று சிறந்த முனிவர்கள் மேல் மன்மதன் கோபம் கொண்டு கண் சிவக்குமாறு சிவந்த வாயினை உடையவள். ஒத்திருப்பதான கோங்க அரும்பு போன்ற

முலையினை உடையவள். தன் கழுத்தழகால் பாக்குமரத்தின் அழகினைக் கெடுப்பவள்''

''கருமையான கூந்தலை உடைய மங்கைப் பருவப் பெண் பூக்கள் நிறைந்த கங்கைக்கரை மணல் குன்றில் உள்ள செருக்கு நிரம்பிய அன்னப் பறவை போன்றவள் என் தலைவனை, மன்னர்களுக்கெல்லாம் மன்னாக இருப்பவனை, வரத்தால் பிறந்தவனை, சேரனை, பாண்டியனை, சோழனை, முன் பொருநாள் பெதும்பைப் பருவத்தில் கண்டு மனத்தில் கொண்ட காதலால் சோழனின் முடி முதல் அடிவரை பார்த்துத் தான் மனமயக்கம் தீருமாறு அவனை ஓவியமாக வரைந்து பகல் முழுவதும் கண்டு ரசித்து இரவு முழுவதும் கனவு கண்டு மற்ற எப்பொருளையும் காணாமல் இருந்தாள்''.

''சிவனின் நெற்றிக் கண்ணால் எரிந்த காமனின் கண்களில் உள்ள செம்மை நிறம் போலக் சிவந்த வாயினை உடையவள். ஒலிமிக்க கடல்களும் எழுந்து உலகைத் தன்னுள் அடக்குவது போன்ற கடைக் கண்களை உடையவள். உலக உயிர்களைக் கவர்ந்த காலன் போன்ற முலைகளை உடையவள். மன்மதன் போலப் பார்வைக்குத் தோன்றாத மெலிந்த இடையினை உடையவள். தவமுனிவர்களின் அறிவைத் தொலைப்பவள். இடை ஒடியாமல் இருக்கும் பொருட்டு இருபுறமும் பரந்து உயர்ந்த அல்குலை உடையவள். வெல்லப் பாகுபோன்று இனிமை உடையவள் ஆகிய மடந்தைப் பருவப் பெண்

''திருப்பாற் கடலில் தோன்றிய தேவாமிர்தத்தைப் போன்றவள். வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் கூந்தலை உடையவள் ஆகிய மடந்தையைவிட ஒருத்தி, அவள் தேர்த்தட்டும் சிறியது என்று கூறுமாறு மரகதக் கல்லால் கட்டும் கனமான அழகிய மேகலையானது பட்டு நூல் ஆடையின் ஒளி மறையும்படி ஒளிபரப்ப இடை விரிந்து அகன்ற அல்குலை உடையவள் அரிவை''

‘‘கலப்பில்லாத வெல்லப் பாகு போன்றவளும், பரிக்கப்படும் தளிரைத் தருகின்ற பொன்கொம்பு போன்றவளும் நிலவில் உள்ள களங்கத்தால் ஒளிமங்காத நிலவு போன்றவளும் வானில் உள்ள மேகத்தால் ஒளிகுறையாத மின்னல் போன்றவளும், இலக்கணம் கொண்டு வரையப்படாத ஓவியம் போன்றவளும், ஏழிசை பாடும் வண்டுகள் மொய்க்காத கற்பக மலர் போன்றவளும், தோகை உடைய இளமயில் போன்றவளும் எந்த நாளும் தெளிவில்லாத மயக்கத்தைக் கொடுக்கும் தேன் போன்றவளும் வருத்தம் கொண்டு தேடினாலும் கிடைக்காத மாணிக்கம் போன்றவளும் உண்ணத் தெவிட்டாத அமுதப் போன்றவளும் ஆகியவள் தெரிவை

‘‘வில்லை நெற்றியாகக் கொண்டிருக்கும் பேரிளம் பெண் கொற்கை நாட்டின் அரசனாகிய வலிமையான தோள்களை உடைய சோழ மன்னனின் மத யானையின் கை போலக் கொல்வதற்காகத் திரண்ட துடையினை உடையவள், ஆதிசேடனின் அகன்ற படம் போன்ற அல்குலை உடையவள். தோழியாகித் தன்னைத் தாங்கிய இடையைத் தேய்த்து அழித்த சாய்ந்த முலையினை உடையவள். திருமகள் தனக்கு ஒருவரும் நிகரில்லை என்று தான் வசிக்கும் தாமரை மலரையும் பறித்து நின்றவளைப் போன்று நின்றாள்’’ என்றவராக ஏழுபருவப் பெண்களின் மனநிலைகள் விரிவாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளனவற்றை பார்க்கலாம்.

**“சீர்த்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்**
**கார்த்ந்த வுந்திக் கமலத்துப் - பார்தந்த**
**ஆதிக் கடவுட் டிசைமுகனும் ஆங்கவன்றன்**
**காதற் குலமைந்தன் காசிபனும் - மேதக்க**
**மையறு காட்சி மரீ சியும் மண்டிலஞ்சேர்**
**செய்ய தனியாழித் தேரோனும்” (1-6)**

பல்வேறு சிறப்புகளை உடைய இலக்குமியின் கணவனாகிய மழை மேகம் போன்ற நிறத்தை உடைய திருமாலின் தொப்புளில் தோன்றி உலகத்தைப்

படைத்த முதற் கடவுளாகிய நான்கு முகங்களை உடைய பிரம்மனும், பிரம்மனின் மகனாகிய காசிப முனிவனும், உயர்வான அறிவுடைய மரீசியும், வட்டமான செம்மை நிறமுடைய ஒற்றைச் சக்கரத் தேரில் பயணிக்கும் சூரியனும்.

மயக்கமும் அதிகமான துன்பமும் கொண்டிருந்த பசுவிற்காக அதன் துன்பம் நீங்குமாறு தேர் சக்கரத்தைத் தன் மகன் மேல் ஏற்றிக் கொன்றவனாகிய மனுநீதிச் சோழனும், குளிர்ச்சி பொருந்திய நீராடும் இடமாகிய ஆற்றுத் துறையில் கொல்கின்ற தன்மை உடைய புலியும் மானும் ஒன்றாகச் சேர்ந்து நீர் அருந்தச் செய்த மாந்தாதா என்னும் மன்னனும் அளவிற்பெரிய வானஊர்தியைத் தனியே வழிநடத்திச் செல்கின்ற அரசனும், மகிழ்ச்சியை அனுபவிக்கும் பூமியாகிய தேவர்களின் உலகைக் காத்த முசுகுந்தன் என்னும் சோழ மன்னனும், (6 - 12)

தேவர் உலகத்திற்கு சென்று சொல்வதற்கு அரிதான மந்திரங்களைக் கொண்டு இயமனுக்கு முன்பு வழக்குரைத்த சோழ மன்னன் கிள்ளி வளவனும், இயமன் பகை உணர்வு நீங்கப்பெற்றுப் புறமுதுகு காட்டி ஓடும்படி வயதானவர்களுக்கு முதுமக்கட்தாழி செய்து கொடுத்த சுரகுரு என்னும் சோழ மன்னனும், பகைவர்கள் வானில் கட்டிய அசைந்து திரியும் தன்மை உடைய கோட்டைகள் மூன்றையும் அழித்தவனாகிய தூங்கெயில் எறிந்த சோழனும், மேற்குக் கடலில் உள்ள நீரைக் கிழக்குக் கடலுக்கு வரும்படி செய்த சமுத்தரஜித் என்னும் மன்னனும் நாகர் உலகமாகிய பாதாள உலகிற்குச் சென்று தன் புகழால் நாகர் கன்னியை மணம் செய்துகொண்ட சூரவாதித்த சோழனும். (12 - 20)

உலக மக்கள் அறிந்து கொள்ளுமாறு தன்னிடம் அடைக்கலம் தேடிவந்த புறாவுக்காக மன மகிழ்ச்சி கொண்டு கழுகுக்கு எடைக்கு எடை மாமிசம் கொடுக்கத் தராசில் ஏறி நின்ற மனத்தூய்மை நிறைந்தவனாகிய சிபிச் சக்கரவர்த்தியும், உயர்ந்து வளர்ந்த குடகுமலையைப் பிளந்து காவிரி இறங்கி வரும்படி செய்த சித்திரதன் என்னும் சோழ மன்னனும் தெளிந்த வெள்ளிய அருவிகளை உடைய இமயமலைச் சிகரத்தில் புலிக்கொடியை நாட்டி மேரு

மலையைத் திரியும்படிச் செய்து காவிரியாற்றுக்குக் கரை கட்டிய கரிகால் சோழனும். (20 - 26)

இனிமை பொருந்தக் கருணை மனத்துடன் பொய்கையார் பாடிய களவழி நாற்பது நூலை ஏற்றுக்கொண்டு கணைக்கால் இரும்பொறையின் கால் விலங்கை நீக்கி விடுதலை செய்த கோச்செங்கட் சோழனும், தன் உடம்பில் எல்லா இடங்களிலும் தொண்ணூற்றாறு வீரத் தழும்புகளைக் கொண்ட வெற்றியுடைய விசயலாய சோழனும், கண்டவர்களின் கண்களைக் கவர்ந்து கொள்ளும் தன்மைமிக்க தேனினை ஒத்த சிவபெருமான் நடம்புரியும் மன்றத்திற்குத் தன் விருப்பத்தால் பொன்தகடு வேய்ந்த முதல்பராந்தக சோழனும். (26 - 32)

தான் அனுப்பிய தூதுவனை இழிவாகப் பேசிய காரணத்தால் போருக்குப் புறப்பட்டுச் சென்று ஒரு நாள் பகல்வேளையில் பதினெட்டுப் பாலைவனங்களைக் கடந்து சேரமன்னனின் மலைநாட்டை வென்ற இராசராச சோழனும், தன் படைகளை அனுப்பிக் கங்கை ஆற்றையும் கடாரத்தையும் கைப்பற்றி அரியணையில் அமர்ந்த இராசேந்திர சோழனும், வங்க நாட்டில் பகைவர்கள் இல்லாதபடிக்குப் போரிட்டு மூன்று முறை படை எடுத்துக் கலியாணபுரத்தை அழித்த வெற்றிவீரனாகிய இராசாதிராச சோழனும், பகைவரிடம் கொண்ட கோபத்தால் போர்க்களம் சென்று தன்பட்டத்து யானையில் இருந்து போர் செய்து ஆயிரம் யானைகளைக் கொன்ற இரண்டாம் இராசேந்திர சோழனும். (32 - 40)

பழமையான நூல்கள் பாடும் ஒலி நிறைந்து விளங்கும் திருவரங்கத்தில் வீற்றிருக்கும் திருமாலுக்கும் பல்வகை இரத்தினக் கற்களால் பாம்பும் படுக்கை செய்து கொடுத்த இராசமகேந்திர சோழனும். தான் ஏற்றுக் கொள்ளும் பரணி இலக்கியத்திற்காகப் போர்புரிந்து கூடல் சங்கமம் என்னும் இடத்தில் அளவற்ற யானைகளை வெட்டிக் கொன்ற வீரஇராசேந்திர சோழனும், அவனுக்குப் பின்பு ஆட்சிபுரிந்து நிலவுலகைக் காத்தவனுமாகிய அதிராசேந்திர சோழனும் என இவர்கள் பூவுலகை அரசு புரிந்த பின்பு. (40 - 46)

சேரன், பாண்டியன் ஆகியோருடைய வில் கொடியையும் மீன்கொடியினையும் ‘நீக்கி இரண்டு முறை காந்தளூர்ச் சாலையில் நடந்த போரில் வெற்றி பெற்ற படையினை உடையவனும், மேற்குக் கடலைத் தன் உரிமையாகக் கொண்டு கொங்கண நாட்டையும் கன்னட நாட்டையும் கைப்பற்றி வலிமை பொருந்திய மராட்டிய மன்னனைக் கொன்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றி இமயமலையைத் தன் அரசுக்குரிய எல்லையாகக் கொண்டு தன் நாட்டில் உள்ள வறுமையினையும் சுங்கவரியினையும் நீக்கி அறம் வளர்க்கும் ஆணைச் சக்கரம் பூமியை வலமாகச் சுற்றிவர உலகைக் காப்பாற்றிய ஆத்திமாலை அணிந்த தோள்களை உடைய முதல் குலோத்துங்க சோழனுக்கு மகனாகத் தோன்றியவன் விக்கிரசோழன். (46 - 55)

போருக்குரிய தும்பைப் பூ மாலை சூடப்பட்ட முரசுகள் மூன்றும் (படைமுரசு, கொடை முரசு, மணமுரசு) மேகம் முழங்குவது போல் முழங்கவும், வலிமையான பரப்பை உடைய மூன்று உலகங்களையும் காப்பதற்காகத் தன் முடியைக் கவித்து ஒப்புமை கூற இயலாத செங்கோல் எட்டுத் திசைகளிலும் ஒன்று அளந்த வரவும் வெண்கொற்றக் குடை திசையானைகள் அனைத்தையும் தன்னுள் கொணர்ந்து அவற்றுக்கு நிழல் செய்யவும், தலையில் சூடிய முடிகளையும் மாலைகளையும் களைந்துவிட்டு வேற்று நாட்டு அரசர்கள் அனைவரும் இரண்டு திருவடிகளையும் தங்களுக்குரிய மணிமுடிகளாகச் சூடவும். (55 - 62)

நீர்ப் பெருக்கத்துடன் மேல் எழுகின்ற நீர் நிறைந்த ஏழு கடல்களும் ஏழு தீவுகளும் ஆகியவற்றைத் தனது போர்த்திறனால் இவை யாவர்க்கும் பொதுவானவை என்று உலகோர்கள் சொல்லுவதை நீக்கித் தனக்கே உரிமையாகக் கொண்டு புறக்கடலை அல்குலாகவும் சக்கரவாளக் கிரியை மேகலையாகவும் கொண்ட பூமன் தன்னுடைய இரண்டு தோள்களிலும் பட்டத்து ராணியின் மார்பிலும், மலரில் வீற்றிருக்கும் செல்வியாகிய திருமகள் நீண்ட கண்ணிலும் தங்கி இருக்க அரசாட்சி செய்துவரும் நாளில் ஒருநாள். (62 - 70)

ஒலி எழுப்பும் வீரக்கழல் அணிந்த பாண்டிய மன்னர்கள் திறைப்பொருளாகக் கொடுத்த முத்துகளில் சிலவற்றை அணிந்துகொண்டு, பாண்டியர் ஆட்சி எல்லைக்குட்பட்ட பொதிய மலையில் விளைந்த சந்தனக் குழம்பை உடலில் பூசி, அம் மலையில் இருந்து வந்த தென்றல் காற்று அடிகளை வருட, வாள் போன்ற கண்களைப் போர் செய்ய விட்டிருக்கும் பெருமை உடைய பெண்களின் கூட்டம் அருகில் இருந்து போற்றிக் கொண்டிருக்கவும் முத்துப் பந்தலின் கீழ் உள்ள வெண்ணிலவின் ஒளிபோன்ற வெள்ளிய படுக்கை மீது பூக்கள் மலர்ந்த மாலை அணிந்த தோள்களும், மை அணிந்த அழகிய கண்களும் மார்பும், அன்னப்பறவை போன்று மதிக்கப்படும் உலகங்கள் ஏழையும் பெற்ற பெண்ணாகிய அழகான மலர் அணிந்த கூந்தலை உடைய பெண் சக்கரவர்ததியுடன் துயின்று அத்துயில் நீங்கி இனிமையாக எழுந்து. (70 - 80)

எக்காலத்திலும் வற்றாமல் நீர் பெருகி வளமோடு விளங்கும் காவிரி ஆற்றில் மூழ்கி எழுந்து வேதம் படித்தோர் தங்கள் கைகளால் கொடுத்த இளமையான வளமார்ந்த அருகம்புல் காப்பை அணிந்த பழமையான வேதங்களின் கொழுந்தும், வெள்ளிப் பனிமலைக் கொழுந்தும் சடையில் பிறையின் இளம் கொழுந்தையும் வைத்திருக்கின்ற இறைவனும், நீலகண்டமுடைய குளிர்ச்சி பொருந்திய செவ்வானமும், ஒப்புமை கூற இயலாத தெய்வ ஒளியும் மூன்று கண்களை உடைய தெய்வமாகவும் விளங்கும் சிவபெருமானைத் தலையால் வணங்கி. (80 - 86)

செய்யத்தக்க உயர்வான தானங்களை எல்லாம் செய்து முடித்த பின்பு அணிந்து கொள்ளத் தகுதியான பெருமை பொருந்திய அணிகலன்களைப் பணியாளர்களைக் கொண்டுவரப் பணித்து அவ்வணி கலன்களில் வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் தாமரை மலர் போன்ற முகத்தில் கலைமகளுடன் தாழ்ந்த மகரக்குழை விளங்கவும் வாழ்வாங்கு வாழ்கின்ற பருத்த முலைகளை உடைய பூமிப் பெண்ணின் தோளில் ஒளிமிக்க இரத்தினங்கள் பதித்த வாகுவலயம் சூழ்ந்து விளங்கவும் பெருமை படைத்த பெண்ணுடன் கையில் கடகம் அழகுபெற

விளங்கவும், ஆசை கொண்டு இணைந்திருக்கும் திருமகளுடன் திருப்பாற்கடல் முன்னாளில் கொடுத்த கௌத்துபமணி மார்பில் ஒளிதரவும். வெற்றி தரும் வீரமங்கையாகிய துர்க்கையோடு இடுப்பில் சிறப்புப் பொருந்திய உடைவாள் வீற்றிருக்கவும் இவ்விதமாக அணிகளையும் பிற அணிகளையும் பல நிறங்கள் பொருந்த அணிந்து கொண்டு (100 - 103)

உலா புறப்பட்டபோது காமனைப் போல அழகுமிக்கவனாகத் தோன்றினான். அக்கணமே பேரழகு பெற்றுத் தோற்றமளித்தான். அத்தோற்றம் தன்மேல் ககை கொண்ட காமனின் அழகை வாங்கி சிவபெருமான் தன்னைப் பணிந்து வணங்கிய விக்கரம சோழனுக்கு வழங்கியது போல் இருந்தது. பின்பு அவன் அரண்மனையை அடுத்துச் சென்று நின்று. (100 - 103)

தான் போர்புரிவதற்குரிய போர்க் காலத்தில் பிளிறும் மதம் கொண்ட யானை இவ்வுலகில் தானாகப் பிளிறுமே அல்லாமல் தனக்கு எதிராக வானமே இருண்டு இடிஇடித்தாலும் அது வானைத் தடவிப் பார்த்துத் தன்போல் அதற்குக் கொம்பும் தும்பிக்கையும் இல்லை என நினைத்துத் தன் கோபம் தணியும் இயமனின் தண்டம் போன்றது. போர் புரியும் நீண்ட கொம்புகள் இரண்டும் வளர்ந்து தானே குத்திச் சிதைக்கும் கொம்புகளை உடைய கொடுமையான இயமன் போன்றது யானை. (104- 112)

எல்லாப் பொருள்களையும் இழுத்துச் செல்லுமாறு ஊறுகின்ற மதம் தன மதமாக இருக்க வேண்டும் என நினைத்து மற்ற யானைகளின் மத நாற்றம் பொறுக்க இயலாததால், திசை யானைகள் எட்டும் உலக பாரத்தைத் தாங்கி வருந்திய நிலையில் அப்பாரம் முழுவதையும் தானே தாங்கி அவற்றின் பாரத்தை ஒழித்து உலகைப் புரந்ததனால் திசை யானைகள் சுமை நீங்கி மதநீரைப் பெருக்கின, செறுக்கு அடைந்துள்ளன என அவற்றைக் கண்டபின் தன் கோபம் நீங்கி மகிழ்ந்திருக்கும் சோழனுடைய காற்றுப் போன்ற வலிமையான யானை. (112 - 124)

பகைவர்களின் நாட்டைக் கோபம் கொண்டு கீழ்மை அடையச் செய்த பகைவர்களை மிதித்துப் போர்க்களத்தில் போராடும் மன்னர்களின் உயிரை இயமனுக்கு உணவாகச் செய்கின்ற யானையின் மேல் அருகில் நின்ற பெண் யானையைப் படியாகக் கொண்டு ஏறி அதில் அமர்ந்து (124 - 128)

வெற்றியைக் கூறும் வெண்கொற்றக் குடை நிழல் தரவும், இருபுறமும் வெண் சாமரைகள் குளிர்ச்சியான இளங்காற்றைத் தரவும், வலம்புரிச் சங்கை அடுத்துப் பல சங்குகளும் முழக்கம் செய்யவும், மூன்று முரசுகளும் ஒலி எழுப்பவும், தாங்கள் இருக்கும் இடம் நீக்கி வாள்கள் சுழலவும், வீரமன்னர்கள் போர் புரிய நெருங்கி வரவும், கொல்லும் தன்மை உடைய புலிக்கொடி உயர்ந்து விளங்கவும். (128 - 134)

கொடுமையான போர்க்களத்தில் பகை மன்னர்களின் இறந்த உடலைப் பேய்கள் எடுத்துக் கொள்ளவும், உயிரை இயமன் எடுத்துக் கொள்ளவும் தங்கள் தலைவர்கள் மீது காதல் கொண்ட பெண்கள் கணவர்கள் இறந்ததனால் தங்களுடைய காதணிகளைக் களையும் என இந்நிகழ்வுகள் நிகழ நன்றாகக் கட்டமைக்கப்பட்ட வில்லைக் கையில் பிடித்திருக்கும். வாணனும், பகைவர்களின் நாடுகளான வேங்கி விழிஞும்,கொல்லம், கொங்கு, இரட்டப்பாடி, ஒட்டர நாடு ஆகிய நாட்டு மன்னர்கள் பின்வாங்கி ஓடுமாறு வெற்றி கொண்டு கொடி நாட்டிய கலிங்கர்கோனும், காவல் நிறைந்த மதிலுடைய அரண்மனையில் செஞ்சியர் மன்னனாகிய தூணில் கட்டப்படும் செருக்குடைய யானைகளைக் கொண்ட காடவன் என்பவனும், வறுமையினால் மக்கள் வருந்தாமல் வறுமையைத் துரத்திய வேணாட்டு மன்னனும், சிறந்த அறங்களை கங்கை முதல் குமரி வரை செய்து பரப்பிய அனந்த பாலனும். (150 - 180)

ஒன்பது வகையான மணிகளை அணிந்து அம்மணிகள் வெளிப்படுத்திய ஒளி வயிரத்தின் ஒளியை மங்கச் செய்யும் வளையலை அணிந்திருக்கும் பரத்தையர்களின் தெருவுக்குள் புகுந்தவுடன் முன்பொரு நாளில் நாரதன் வந்து

சேர்ந்த போது காமனை அறிவித்த போது அழகான துவரைநகர் அந்தப்புரத்தைப் போலவும் உயர்வாகவும் பரந்தும் காணப்படும் அல்குலை உடைய பெண்கள் தங்களின் ஆணையினால் ஆட்சி செய்துவரும் நாட்டை போலவும், மன்மதன், தன் வழியில் முனிவர்களை வெல்லத் திரண்டு எழுந்த தோற்றம் போலவும் தாழை மரங்கள் அடர்ந்திருக்கும் கடற்கரையில் மணல் குன்றின் மேல் அமர்ந்திருக்கும் அன்னப்பறவைக் கூட்டம் போலவும், மேகத்தில் தோன்றும் மின்னல் கூட்டம் போலவும் கடல் அலைகளில் தோன்றும் திருமகள் தோற்றம் போலவும் விரைவாக வந்து (180 - 194)

தெய்வவுத்தி என்னும் அணிகலன் ஒளி உமிழவும் ஒளிபொருந்த உச்சியில் சூளாமணி ஒளி வீசவும், வயிரக்கற்கள் வரிசையாக ஒளிதரவும் முத்து மாலைகளுடன் இணைந்த சந்தனக்குடம் போன்ற முலைகளைத் தாங்கி இருப்பதால் எடை தாங்காமல் அவர்கள் தாழ்ந்த தலை உடையவர்களாய் வந்து கூடினார்கள். (195 - 198)

அவ்வாறு வந்த பெண்களில் சிலர் தாங்கள் பார்க்கின்ற கொடுமையான பார்வையினால் விடத்துளி சிந்தவும், முருக்கம் பூவைப் போன்ற இருக்கின்ற சிவந்த வாயில் உள்ள கூர்மையான பற்கள் வெறுமனே தீமை செய்யவும் வியர்வை சிந்துமாறு மலை போன்ற உயர்ந்த மாடத்தின் கீழ் தங்கி இருப்பதனால் அவர்கள் நாகர் உலகப் பெண்கள் போல் காணப்பட்டனர். (199 - 202)

கைவிரல்கள் கொண்டு வாசிக்கப்படும் வீணையும், யாழும், புல்லாங்குழலும், வார்கொண்டு கட்டப்பட்ட மத்தளமும் ஒலி எழுப்ப இசைக்கு ஏற்றவாறு மேகம் படியும் மாடத்தில் இருந்து தேவர் உலகப் பெண்கள்போல் நெருங்கி வரவும். (202 - 206)

மை அணியப் பெற்றிருக்கும் கண்ணின் இமைக்காத தோற்றமும், மண்ணில் பொருந்தி நில்லாத மலர்போன்ற பாதமும், குளிர்ச்சி பொருந்திய வாடாத தன்மை

உடைய பூமாலையும் கொண்டு அழகு குறையாத வண்ணம் நிலாமுற்றத்தின் மேல் கூடி நின்று, அவர்கள் உருவத்தாலும் உடலின் ஒளியாலும் தேவப் பெண்கள் போலத் தோன்றினார்கள். (206 - 212)

இவ்வாறாகக் கூடி நின்ற பெண்கள் அனைவரும் அவன் அருகில் சென்று 'விக்கிரம சோழனைப் பாருங்கள்'. அளவில்லாத புகழ் பெற்று விளங்கும் அவனுடைய தோள்கள் பிரம்மன் படைத்தளித்த மண்ணுலகின் அளவுமட்டுமல்ல அதனை விடவும் நீளமானது என்றனர் சிலர். செம்மை நிறமுடையவளாகிய இலக்குமி மட்டுமே தங்கி இருக்கும் சிறுமைத் தன்மை உடையதோ இவ்வுலகத்தை ஆட்சி செய்யும் விக்கிரமனின் மார்பு என்று சிலர் கூறினர். இவனுக்கு இரண்டு கரங்கள் மட்டுமே உள்ளன. அதனால் இவன் முருகன் அல்ல. வேனில் காலத்தைத் தனக்குரியதாகக் கொண்டு மலரம்பு எய்யும் காமனாவாள் என்று சிலர் கூறினர். நான் நினைக்கும் நினைவிற்கு உடன்பட்டு என்னிடம் அவன் வருவானோ என்பர் சிலர். இவனைக் காண்கிறபோது கருணைக் கடலாகத் தோற்றமளிக்கிறான் என்பர் சிலர். ஒளியில் வாழும் மனித இனம் இவனால் பெருமையடையட்டும் என்றனர். சிலர் உடலில் தேமல் தோன்றியவர்கள் சிலர். தங்கள் வளையல் நழுவுவது போலத் தோன்ற அதனைத் தடுப்பது போல் கைகளைக் குவித்து நிற்பவர்கள் சிலர் என அனைவரும் நெருங்க. (212 - 224)

**பேதை பருவப் பெண்**

அவ்வாறாகப் பெண்கள் கூடிநின்ற இடத்தில் பூமியில் வந்து பிறந்து வளர்கின்ற பேதைப் பெண் இளம் பிறைபோன்றவள். பூங்கொத்துகள் அரும்பாமல் இருக்கும் தளிர்கள் நிரம்பிய கொம்பு போன்றவள். பசிய தோகை முளைக்காத மயில் போன்றவள். தோல்வியுற்ற மன்மதன் வெற்றி பெற வளர்க்கும் கரும்பைப் போன்றவள். குயில் குஞ்சு போன்றவள். இளமை நிரம்பிய அன்னப்பறவை போன்றவள். அண்மையில் பிறந்த பச்சைக் கிளியைப் போன்றவள். பவளக்

கொடியில் வளரும் இளமையான கொம்பைப் போன்றவள். களவுகொள்ளும் பார்வை இல்லாத கண்ணாகிய தேன்துளியைக் கொண்டிருப்பவள். தாயைப் பிரிந்து தனியே செல்லும் இயல்பில்லாத பேதைப் பருவம் உடையவள். (224 - 232)

பேதையானவள் தன்னுடைய விளையாட்டுப் பொருள்களாகிய பாவை, மான்கன்று, மயில், பசுங்கிளி, நாகணவாய்ப்புகள், அன்னம், முத்தால் செய்யப்பட்ட அம்மானை, நாகப்பட்டினத்து முத்தால் செய்யப்பட்ட கழங்கு, சோழனின் கொற்கைத் துறைமுகத்தில் கிடைத்த முத்தாகிய சிறு சோறு ஆக்கதற்குரிய அரிசியைக் கொண்டு பரத்தையர் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது பூமியில் முதல் யுகம் வந்து கால் பதித்தது போல இக்கலியுகத்தில் பசித் துன்பத்தை நீக்கிய விக்கிரமசோழன் உலாவருகிறான் என்று அறிவித்து மூன்று முரசுகளும் முழங்கத் தாயைச் சார்ந்து நின்று அவர்கள் வணங்கத் தானும் வணங்கி அவர்கள் செல்வதையே தானும் சொல்லி நின்றாள். (232 - 244)

பேதைப் பெண்ணின் கண்ணும் மனமும் முருகன் போன்ற தோற்றமுடைய சோழனின் சந்திரனும் சூரியனும் தோற்குமாறு ஒளிவீசும் மணிமுடியின் மீது ஒரு முறையாவது சேராமல், அவனுடைய தோற்றத்தைக் கண்ட மகிழ்ச்சி கொண்டு திருமகளின் குவளைமலர் போன்ற கண்ணும் மனமும் உருகக் காரணமான பார்வையோடு சேராமல், இதழ்கள் விரியாமல் சிரிக்கின்ற பவள நிறம் உடைய வாயின் சிவப்பு ஒளியுடன் கலக்காமல் பரவுகின்ற புன்சிரிப்பாகிய நிலவிலும் சாராமல் காக்கும் உலகம் எல்லாம் போற்றும் சிறந்த புருவத்தின் மேலும் செல்லாமல், பொட்டு அணிந்திருக்கும் முகமாகிய தாமரை மலரில் சேராமலும், பல திசைகளிலும் புகழ் பூத்து விளங்கும் தோள்களிலும் சேராமலும், பொருத்தமாக மார்பில் சேராமலும், தூய்மையான கரங்களில் சேராமலும், பாதத்தைச் சேராமலும் உருவ ஒளியில் சேராமலும், அவன் அணிந்திருக்கும் செங்கழுநீர் மலர் மாலையின் மேல் நிலைத்தன. (244 - 258)

பேதைப் பெண் மனம் உருகி, தாய் மார்களே, இங்கு வாருங்கள், அவன் தன் மார்பில் அணிந்திருக்கின்ற செங்கழுநீர்ப் பூ மாலையை வாங்கித் தாருங்கள் என்று கூற, அவர்களும், அம்மா, நம் மன்னனைக் கண்டு அச்சம் கொள்ளாதே, பெண்களினால் அமுதம் போன்றவளே, நாம் அந்த சிறந்த மாலையைத் தருக என்று கூறிச் செல்வோம். அதனைப் பெறுவது எளிதான காரியம் அல்ல. மிகவும் அரிதானது என்று கூற அப்பேதைப் பெண் மார்பில் கண்ணீர் சிந்தப் பிறமாதர் கொள்ளும் காதலைத் தன்மனத்தில் கொள்ளத் தயங்கினாள். இளமைப் பருவம் உடையவர்களைத் தன்னிடம் அழைத்ததோடு பேதைப் பருவச் செயல்கள் அனைத்தையும் மறந்தாள். (258 - 268)

**பெதும்பைப் பருவத்துப் பெண்**

பெதும்பைப் பெண் தாயும் தோழியரும் எழுப்பியபின் தூக்கம் கலைந்து எழாமல் தானே தூக்கம் கலைந்து எழுந்து படுக்கையை விட்டுச் சென்று தளரும் இடையுடன் தாயை நோக்கி அன்னையே! நேற்று இரவு நான் ‘தாழ்ந்த தளிர்களுடன் ஓர் இளங்கொடியில் நிறைந்த கொழுந்தும் அளவில்லாத பூங்கொத்துகளும் அழகு பெற்று விளங்க மேலேறிக் கிளைகள் வளருமாறு உள்ள கோங்க மரத்தின் வலிமையான கொம்பினைப் பற்றிக் கொண்டு அங்குத் தங்கி இருந்த வண்டுகள் ஒலி எழுப்பவும் மணம் தரவும் இணைந்திருப்பது கண்டு மகிழ்ந்தேன் என்று கூற. (286 - 296)

பெதும்பைப் பெண் கூறிய கனவைக் கேட்ட தாய் அவளைத் தழுவிக் கொண்டு இளமையான கிளியைப் போன்றவளே, முத்தம் தருவாயாக என்று கூறி அவளைத் தழுவிக்கொண்டு தெய்வப் பெண்ணைப் போன்றவளே, உன்னுடைய மார்பில் முலைகள் தோன்றியுள்ளன. அவை சோழனின் மார்பைத் தழுவிப் பின்பு விடாமல் இருப்பதற்கு ஏற்ற புதுமணம் சோழனுடன் செய்து கொண்டு நல்வாழ்வு

வாழ்வாயாக என்று வாழ்த்தினார்கள் அவ்வாறு அவர்கள் வாழ்த்திய போது, (296 - 302)

அச்சம் தரக்கூடிய வேலாயுதத்தை ஏந்திய சேர மன்னனும் பாண்டிய மன்னனும் வணங்க வரும் சோழர்களில் சிறந்த வீரனாகிய விக்கிரம சோழனும் அந்த எல்லையைக் கடந்தான். மன்மதன் தகுதி உடையவள் ஆகி அதற்குத் தகாதவள் ஆகிய பெதும்பையைப் பூமியில் கிடக்குமாறு செய்ய நினைத்த அவ்வாறு செய்யாமல் தம்முடைய அம்புகளை மடக்கி வைத்துக் கொண்டு சென்றான். (320 - 324)

**மங்கைப் பருவப் பெண்**

கருமையான கூந்தலை உடைய மங்கைப் பருவப் பெண் பூக்கள் நிறைந்த கங்கைக்கரை மணல் குன்றில் உள்ள செருக்கு நிரம்பிய அன்னப் பறவை போன்றவள். என் தலைவனை, மன்னர்களுக்கெல்லாம். மன்னனாக இருப்பவனை, வரத்தால் பிறந்தவனை, சேரனை, பாண்டியனை, சோழனை முன்பு ஒருநாள் பொதும்பைப் பருவத்தில் கண்டு மனத்தில் கொண்ட காதலால் சோழனின் முடி முதல் அடி வரை பார்த்துத் தன் மனமயக்கம் தீருமாறு அவனை ஓவியமாக வரைந்து பகல் முழுதும் கண்டு ரசித்து இரவு முழுதும் கனவு கண்டு மற்ற எப்பொருளையும் காணாமல் இருந்தாள். (324 - 335)

அவ்வாறு சோழனையே நினைத்திருந்தவள் போர் புரியும் யானையின் மேல் மகரந்தத் துகள்கள் நிறைந்த பூமாலை அணிந்தவனாகிய வெற்றியுடைய விக்கிரம சோழன் உலா வருகிறான் என்பதை அறிந்து வயிரக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். அணிகலன்களையும் கொண்டு வருக எனக்கேட்டு அவற்றை வாங்கி அணிந்து கொண்டாள். மலர்ந்த பூக்களால் ஆகிய மாலையைச் சூடினாள். பசுமையான பொன்னாடையை உடுத்தினாள். சந்தனக் குழம்பு பூசினாள். தான் அணியத் தகுந்த அணிகலன்களை அணிந்தாள். (335 -340)

தோழியர்கள் காட்டிய கண்ணாடியில் செந்தாமரைப் பூவையும் தலை குனியச் செய்யும் ஒளியைக் கண்டு விடைபெற்றுச் செல்லும் காமன் போல் வேல் போன்ற விழிகள் போருக்குச் சென்று வருவது போலப் பக்கத்திலும் தொலைவிலுள்ள என்று காதில் அணிந்திருக்கும் அணியின் எதிர் சென்றும் ஐந்தாகப் பகிர்ந்து முடிக்கத்தக்க கூந்தல் நெருங்கியும், அழகான அரிதான முத்துகள் பதிக்கப்பட்ட பொன்னால் செய்த தோள்வளை அணிந்த தோள்கள் பருத்த மூங்கில் போலத் திரண்டு விளங்கவும் மாலைகள் சூழ்ந்த சுவடு பதிந்த சந்தனக் குழம்பு பூசப்பட்டிருக்கும் கொங்கைகள் மலை குறைவுபடுமாறு உயர்ந்தும் விளங்குமாறு உடையுடன் சேர்ந்திருக்கும் அல்குல் அகன்றும் இடை சிறுத்தும் சோழனின் உலாவைக் காண நடந்து வந்தாள். (340 - 354)

தன்னுடைய புதிய அழகை வானவரும் கண்டு காதல் கொள்ளும் வடிவ அழகினைக் கண்டு அச்சம் கொண்டு கொடை வழங்குவதில் சிறந்த சோழ மன்னன் முற்காலத்தில் முந்திய பருவத்தில் அறிந்த அவ்வுருவத்தை நான் காணவில்லை. முன்பு சோழன் கண்ட அவ்வடிவத்தையும் நான் இழந்தேன். என் முகம் பார்த்து என் வடிவை நானே அறியாமல் இருக்கிறேன். என்ன செய்வேன், சோழனை வணங்கி அடுத்து வருவதை நான் அறிவேன் என்று கூறிப் பெண்களுடன் அவளும் நின்றாள். (355 - 362)

முதல்வனும், அகளங்கனும், எம் மன்னனும் குமரித் துறைக்கு உரிமை உடையவனும், மன்னர்கள் குலத்துள் உயர்ந்தவனும் ஆகிய விக்கிரம சோழன் காக்கின்ற திருப்பாற்கடலைக் கடைந்த கையாகிய தாமரை மலரும், தொப்புளாகிய மலரின் உண்டான உலகம் முழுதையம் அளந்த பொன் போன்ற அடியினையும் திருமகள், இருக்கும் மார்பும் பகைவர்கள் கண்ட அஞ்சும் தோளும், கண்ட பெண்களின் மனத்தை மயங்கச் செய்யும் மகரகுண்டலம் அணிந்திருக்கின்ற செவியும் பெண்களின் உடல் வனப்பை உண்ணப் பார்க்கின்ற பார்வையும் பவளத்தின் நிறம் கவர்ந்த சிவந்த வாயும், எக்காலமும் ஒளிவிளங்கும் முகமும்

மாறாத நிறமும் உறுப்புகளின் அழகும் பருவமுள்ள நிலவைக் கண்டு மகிழ்ந்த அல்லிமலர் மலர்ந்ததுபோல சோழனைக் கண்டு தன் கண்ணும் மனமும் மகிழ்ச்சியடைந்து கொல்கின்ற மத யானையானது அவனைத் தாங்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்று சென்றது. (363 - 378)

முந்தைய நாள் அவளை ஓவியமாகத் தீட்டிப் பகல் வேளையில் கண்டு நல்ல கனவு கொடுக்க அவனுடைய உருவத்தை இரவுக் காலத்தில் கண்டு மனமகிழ்ச்சியுற்ற மங்கை இப்போது ஒவியத்திலும், காண இயலாத அவள் அழகை நோக்கிய கண்கள் உறக்கத்தைப் போக்கிவிட அவ்விடம் விட்டுச் சென்றாள். உறவினர்களின் பருத்த தோளில் சாய்ந்து விழுந்து தன்னை மறந்தாள். அவளது நிலை இவ்வாறாக இருந்தது. (378 - 384)

**மடந்தை பருவத்துப் பெண்**

சிவனின் நெற்றிக் கண்ணால் எரிந்த காமனின் கண்களில் உள்ள செம்மை நிறம் போலச் சிவந்த வாயினை உடையவள், ஒலிமிக்க ஏழு கடல்களும் எழுந்து உலகைத் தன்னுள் அடக்குவது போன்ற கடைக்கண்களை உடையவள். உலக உயிர்களைக் கவர வந்த காலன் போன்ற முலைகளை உடையவள். மன்மதன் போலப் பார்வைக்குத் தோன்றாத மெலிந்த இடையினை உடையவள். தவமுனிவர்களின் அறிவைத் தொலைப்பவள். இடை ஒடியாமல் இருக்கும் பொருட்டு இருபுறமும் பரந்து உயர்ந்த அல்குலை உடையவள் வெல்லப்பாகுபோன்று இனிமை உடையவள் ஆகிய மடந்தைப் பருவப்பெண், (384 - 395)

தன்னுடைய தோழியைத் தோள் வருத்தம் கொள்ளுமாறு தழுவிக் கொண்டு நிலா முற்றத்தில் ஏறி நின்று கொடி போன்ற பெண்ணே, நாம் இரண்டு பேரும் போல இரண்டாகப் பகிர்ந்து உருண்டையான பந்தினைக் கொண்டு கூத்தர்கள் கண்டு மகிழ்ச்சி கொள்ளுமாறு விளையாடி நான் தோல்வியடைந்தால் என் மாலையை நீ வாங்கிக் கொள்வாயாக. நீ தோல்வியடைந்தால் என் மன்னனுடைய

பூமாலையை வாங்கித் தர நான் அதனைப் பெறுவேன். இதுவே பந்தம் ஆகும் என்று மின்னல் போன்ற அம் மடந்தை கூறிக் கூந்தலைக் சுருட்டிக் கட்டி முலைகளையும் கச்சினால் இறுக்கமாகக் கட்டிப் பல பந்துகளைக் கையில் எடுத்துப பந்தயம் பேசி.... (395 - 402)

விளையாடுகின்ற போது தோழியர்களின் விளையாட்டு நீங்குமாறு தானே நின்று இரண்டு புறங்களிலும் வரும் பந்துகளை ஏந்தி முத்துப் பதித்த பந்துகள் தன்னருகில் விழுந்து நெருங்க அது திருப்பாற் கடலில் அலைகளின் நடுவே தோன்றிய திருமகளைப் போலத் தோற்றமளிக்க செங்காந்தள் மலர் போன்ற உள்ளங்கைகள் சிவக்கும் என்று வாய் கூறுவது போலக் கையில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலி எழுப்பவும் இடை நொந்து தளர்ந்தது என்று கூறுமாறு மேகலை ஒலியெழுப்பவும் மென்மையான பாதம் வருந்துவது பற்றிக் காலில் அணிந்திருக்கும் சிலம்பு ஒலி எழுப்பவும் பந்தைக் கையினால் பற்றும் பொருட்டு மேலே எழுகின்ற கை, இடை, மலர் போலும் வடிவம் குறித்தோ கருமையான நிறம், வாய்ந்த கூந்தலின் மேல் உள்ள வண்டுகள் எழுந்து ஒலி எழுப்பவும் அப்பெண் பந்து விளையாடித் தன் தோழியை வெற்றி கொண்டு சூரியனை ஒத்த சோழனின் சந்தனம் பூசப்பட்ட மார்பில் அணிந்திருக்கும் மாலையை வாங்கித் தருமாறு தோழியின் ஆடையைப் பற்றி இழுத்து வருத்துகிற போது.... (403 - 419)

ஒப்புமை கூற இயலாத குடையின் கீழ் யானையின் மீது வெண்சாமரம் வீசவும், படைகள் நெருங்கவும், பவளமும் முத்துகளும் ஒளி வீசவும், சங்குகள் எல்லாம் ஒலி முழங்கவும் சுராமீன்கள் எல்லாம் தெருக்களில் வந்து புறளவும், கட்பறை முழங்கவும், யானையில் ஏறியவர்கள் முன் நிறைந்து நிற்கவும், நடுக்கம் உள்ளவர்களாய்த் தாழ்ந்த தொழில் உடைய தன் உறவினர்களைக் காப்பதற்காகப் பரதவர் பக்கத்தில் நெருக்கமாக நிற்கவும் கன்னி, நர்மதை, கங்கை, சிந்து காவிரி இவைகளைத் தோய்ந்த காவிரிப் பூம்பட்டினம் விளங்கவும் நிலைபெற்ற

மன்னனாகிய தியாக சமுத்திரம் வந்தபோது தமது மன்னனின் வீதியில் கண்டு.... (419 - 432)

தலைவியும் தோழியும் தங்களுக்குள் கொண்ட பந்தயத்தை அறியாமல் கைவளையலும் மேகலையும் கழன்று நழுவியதைப் பாராமல் நெருங்கி வணங்கினாள். மறந்தாள். அசைந்தாள். சோர்வடைந்தாள். அழுதாள், தனிமையானாள், குற்றமிலாது உடுத்தப்பட்ட சேலையும் பொன்னால் செய்யப்பட்ட மேகலையினையும் போக்கிய அல்குலே நீ அணிந்து கொள்க என்று கூறி மணி பதிக்கப்பட்ட கச்சினையும் தன்மேல் அணிந்திருந்த மேலாடையினை முலைகள் கொடுக்க அதனைக் கண்ட கண்கள் முத்துக்கோவையினையும் பொன்னிறப்பட்டையும் அணிந்து கொள்க என்று முலைகளுக்குக் கொடுத்தன. முலைகளும் அவற்றை அணிந்தன. மாந்தை அருகில் இருந்த பெண் மேல் சாய்ந்து தன்னை மறந்தாள். (432 - 444)

கோபம் கொண்டு உயிரைக் கவரும் காமன் உடனடியாகப் போர் புரிந்ததோடல்லாமல் வருத்தமுடன் பழமையான சொற்களைப் பேசும் தாய்மார்கள் சந்தனத்தைப் பன்னீரில் குழைத்துப் பூசினார்கள். நீர்த்துளிகளை உடலில் தெளித்த விசிறி கொண்டு வீசினார்கள். நிலவொளி வீசும் இடத்தில் படுக்க வைத்தனர். இளமையான தென்றல் காற்றைக் கொண்டு வந்து சூடுபடுத்தினார்கள். அத்திமலை மாலையாகப் புனைந்து கொண்டார்கள். அதோடுமட்டுமல்லாமல் குளிர்ச்சிமிக்க பொருள்களைத் தந்து துன்புறுத்தினார்கள். பள்ளத்தை நோக்கிச் செல்லும் வெள்ளம் போல அவளுடைய உள்ளத்தையும் உயிரையும் உடன் கொண்டு சோழனின் ஒளிமிகுந்த தெருவில் உடன் சென்ற போக்கினால் அவள் உயிர் பிழைத்திருந்தாள். (444 - 454)

**அரிவைப் பருவத்துப் பெண்**

திருப்பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தத்தைப் போன்றவள், வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் கூந்தலை உடையவள் ஆகிய மடந்தையை விட, ஒருத்தி. அவள் தேர்த்தட்டும் சிறியது என்று கூறுமாறு மரகதக் கல்லால் கட்டும் கனமான அழகிய மேகலையானது பட்டு நூல் ஆடையின் ஒளி மறையும்படி ஒளிபரப்ப இடம் விரிந்து அகன்ற அல்குலை உடைய அரிவைப் பருவமுடையவள். (454 - 460)

பகை கொண்டு தேய்த்து இயையைப் போக்கி ஒன்றினை ஒன்று நெருங்கிப் பேரழகு நிறைந்து செருக்குக் கொண்டு மார்பு முழுவதையும் தனக்குரிய இடமாகக் கொண்டு மின்னல் கொடிபோன்று இரண்டு குடங்களைச் சுமந்து நின்றது என்று கண்டவர்கள் கூறுமாறு அகன்று ஒப்பாகி இளைஞர்களின் மனத்தைக் கட்டிப் பெரிய உச்சியில் இருத்திப் பருத்து விளங்கும் ஒலிக்கும் கடல் சூழ்ந்த பெருமையும் உவமையும் தனக்கு இல்லை எனுமாறு தோன்றிய முலை உடைய அன்னம் போன்றவள். (460 - 468)

கருமையான ஒளியை வீசச் செய்து இரண்டு பக்கங்களிலும் தான் செல்வதற்குரிய எல்லை இது என்று காதணியை இடமாகக் கொண்டு மடங்கிச் செம்மையான கோடுகள் உடையதாய் இளைஞர்களின் மனம் நடுக்கம் கொள்ளுமாறு உயிரில் அம்புபோல் ஊடுருவி அழகான இதழ்கள் கொண்ட கழுநீர் மலர்களைவிட அழகாக மான் விழியின் இயல்பு பொருந்திய மருண்ட கண்களை உடையவள். (468 - 474)

நெளிநெளியான வடிவுடையதாக நுனிப்பக்கம் சுருண்டு வழவழப்புடன் கருத்தும் நீண்டும் நெருக்கமாகவும் வளர்ந்து கண்டவர்களின் மனத்தை நிறைத்துப் பூங்கொத்துகள் செருகப்பட்டதாய் கொழுந்து இலைகள் தோன்றும் பூங்கொடியாய், மாந்தளிர் கிடந்து அசையும் சோலையாய், திருஎன்னும் தலைக்கோலத்தால்

தாமரையாய்த் தோன்றித் தன்னிடம் வந்த வண்டினங்களுக்கு விருந்தாகத் தேனைக் கொடுக்கும் கூந்தலை உடையவள். (474 - 480)

போர் செய்யும் தன்மைமிக்க யானையின் மேல் முன்பு ஒரு நாள் மனுகுலத்தைச் சேர்ந்த விக்கிரம சோழன் தெருவில் உலாவந்து காதல் தந்த தனிமையில் செந்தமிழ் நாட்டு அரசன் என்னைக் கவர்ந்து கொண்டான். அவனாக வந்து காதலைத் தரட்டும் இல்லை என்றால் ஒன்றும் வேண்டாம் என்று கூறுவது போல மலர் போன்ற இரண்டு கைகளும் இரண்டு தோள்களும் இடுகின்ற வளைகளைத் தாங்காமலும் இரண்டு கண்களையும் தூங்க வைத்தால் தூங்காமலும் நீல நிறமான கூந்தல் மலர்களை மறந்துகூடப் புனைந்து கொள்ளாமலும் விருப்பம்தரக் கூடிய முலைகள் கச்சணியை அணிந்து கொள்ளாமலும் அல்குல் பொன் ஆடையினை விரும்பாமலும் மனம் கூறக்கூடிய தெளிவான சொற்களைக் கேட்காமலும் இருக்கக் கரும்பு வில்லைக் கையில் எடுக்கும் காமனின் அம்பினால் விழுந்த காமத் தீயினால் மனம் உருகித் தன் கற்புக் கெட்டு இருக்கும் சமயத்தில் (480 - 492)

மன்னர்களுக்கெல்லாம் மன்னன், வளவன், அகளங்கள் ஆகிய சோழ மன்னன் உலா வருவதைக் குறிக்கும் முகமாக அவன் வருவதற்கு முன்பு சங்கு முழங்கியது. அரிவை தான் மின்னலைப் போல் சென்று தான் காத்து வைத்திருந்த குணமும் எப்போதும் நீங்காத நாணமும் தன்னிடம் இருந்து நீங்க, சூரியனை எதிரில் கண்டது போலச் சோழனின் உருவத்தைக் கண்டு தன் முகமாகிய தாமரை மலர்ந்தாள். பின்பு அவளின் அல்குல் மேகலைக்குப் பொருந்தாமல் அகன்றது. முலையும் தோளும் பருத்தன. சோழனின் உறுதி செய்தாள். சோழனுக்குப் பூமாதேவியின் முலையாலும் திருமகளின் தோளாலும் வராத காதலை வரவைத்தாள். (511 - 524)

**தெரிவைப் பருவத்துப் பெண்**

இது இவ்வாறு இருக்கக் கலப்பில்லாத வெல்லப்பாகு போன்றவளும் பறிக்கப்படும் தளிரைத் தருகின்ற பொன் கொம்பு போன்றவளும், நிலவில் உள்ள களங்கத்தால் ஒளி மங்காத நிலவு போன்றவளும், வானில் உள்ள மேகத்தால் ஒளி குறையாத மின்னல் போன்றவளும், இலக்கணம் கொண்டு வரையப்படாத ஓவியம் போன்றவளும் ஏழிசைபாடும் வண்டுகள் மொய்க்காத கற்பக மலர் போன்றவளும், தோகை உடைய இளமயில் போன்றவளும் எந்த நாளும் தெளிவில்லாத மயக்கத்தைக் கொடுக்கும் தேன் போன்றவளும் வருத்தம் கொண்டு தேடினாலும் கிடைக்காத மாணிக்கம் போன்றவளும் உண்ணத் தெவிட்டாத அமுதம் போன்றவளும் ஆகிய தெரிவை. (524 - 534)

தெரிவைப் பெண் ஒருத்தி சோலையில் இருந்து தென்றல் காற்றைப் போல வரவும், மாலை வேளையில் மணிகள் பதித்த மண்டபத்தில் கடலில் இருந்து எழுந்த நிலவின் ஒளி படியவும் நிலா முற்றத்தில் தூங்கும் மகர மீனின் அகலமான வாய் போன்ற வாயில் இருந்து பனித்துளிகள் சிந்தவும், தோழியர்கள் பூசிய சந்தனம் மணம் தரவும், புள்ளிகளை உடைய வண்டுகள் சூழ்ந்து மொய்த்த முல்லை மலர்கள மணம் தரவும், இசை பாடும் யாழ் பாணன் விறலியுடன் சேர்ந்து இனிமையாக இருந்த ஒரு சமயத்தில் (534 - 542)

சோழ மன்னனின் நேரி மலையினையும் அவனுடைய தலைநகராகிய உறையூரையும் புலிக் கொடியையும் மூன்று முரசுகளையும் குதிரையையும் அயிராவத யானையினையும், திருமாலாகிய சோழன் புனைந்த ஆத்தி மாலையினையும் அவனுடைய ஆணைச் சக்கரத்தையும் சோழ நாட்டையும், காடுகளைப் புரட்டி எறியும் காவிரி ஆற்றையும் குறித்துப் பாடுக என்று தெரிவை பாணனை நோக்கிக் கூற. (542 - 546)

பாணன் வளைவான தன் யாழினைக் கையில் எடுத்தான். அதனைக் கண்ட காமனும் சினம் கொண்டு தன்னுடைய வில்லை எடுத்தான். தேன் போன்ற நரம்புகளைப் பாணன் கையால் தடவினான். காமனும் வில்லில் நாணைத் தடவினான். பாணன் ஏழு இசைகளும் நிற்கும் நிலைகளை ஆராய்ந்தான். காமனும் அம்புகளை ஆராய்ந்து தொடுக்கத் தயாரானான். பாணன் விறலியுடன் சேர்ந்து இசைக் கோர்வையை உண்டாக்கினான். மன்மதன் வில்லில் பல அம்புகளைக் கோர்த்தான் பாணனின் பாடல்கள் இனிமையாக ஒலித்தன. மன்மதனின் கரங்கள் அம்புகளை ஏவின. (547 - 556)

நரம்பில் இருந்து எழுந்த வீணையின் இசையாலும் மன்மதனின் அம்பாலும் ஒளிமிக்க நெற்றியுடைய அவள் மயங்கித் தென்றல் காற்றைக் கோடைக் காற்று என்று கூறினாள். கச்சணியாத முலை மேல் தெளிக்கப்பட்ட நீரை நெருப்பு என்று கூறினாள். ஊர் மக்களைக் காக்க முழங்கும் பறையினை மன்மதனின் போர்ப்பறை என்று கூறினாள். ஊரார்கள் மகிழ்ந்து துயிலும் நிலவின் ஒளியை வெயில் என்றாள். உறையூர் மன்னனாகிய சோழனின் செங்கோலைக் கொடுங்கோல் என்று கூறினாள். இரவு தொடங்கி விடியும்வரை இவ்வாறு புலம்பி இருந்தாள். (556 - 569)

மலைகள் சூழந்த உலகைத் தன் உரிமையாக உடைய சோழ மன்னன் பலரும் வணங்குமாறு முகபடாம் அணிந்திருக்கும் யானையின் மிது பவனிவர அத்தோற்றத்தைக் கண்டு வீணையின் இசையாகிய மூன்று பகைக்கும் பொறுக்க இயலாமல் வருத்தம் கொண்ட உயிர் செழிக்குமாறு எழுந்து ஓடிப்பிழைத்தவள் ஆகி நின்றாள். (570 - 574)

வானை முட்டும் சக்கரவாள மலையின் முதுகில் கட்டிய யானைகள் எட்டும் தாங்கும் உலகைத் தனியாகத் தாங்கும் சோழனின் அயிராவதமே கலிங்கர்கள், போர் செய்து தோற்று ஓட வடக்கில் உள்ள மலைகள் எல்லாம் கெட்டுப் போகுமாறு அவற்றின் மேல் நடந்த மலையே! சந்திரகுலத்துக்கும்

பொதியமலைக்கும் குமரி ஆற்றுக்கும் தங்கள் நாட்டுக்கும் போர் புரியும் பாண்டியர்கள் நடுங்கி விழப் பிளிறும் இடியே. (575 - 586)

சிறிய தடி கொண்டு இரவுதோறும் அடிக்கப்படும் முரசின் ஒலியால் நான் இழந்த என் கற்பினை உன் வரவறிவித்த முரசினால் மீண்டும் பெற்றேன். அச்சம் தரும் காளையின் கழுத்து மணி ஒசை தந்த செவிப்புண்ணை உன் இருபுறமும் உள்ள மணியின் ஓசையால் ஆறப்பெற்றேன். முலைமேல் தென்றல் சுட்ட வெப்பத்தை உ்ன செவிகளில் இருந்து வரும் காற்றால் மாற்றினேன். பனித்துளிகள் பிரித்துக் கொண்டு போன என் உயிரை உன் யானை வீசும் மதநீர்த் துளிகளால் திரும்ப பெற்றேன். ஒலி எழுப்பும் கடல் முழங்க அதனால் நான் பெற்ற துன்பத்தை ஒப்புமை கூற இயலாத உன் முழக்கத்தால் நீக்கினேன். இரவில் மன்மதன் எனக்குச் செய்த தன்பங்களை எல்லாம் சோழ மன்னன் உலாவரக் கண்டு நீங்கினேன் என்று கூறினாள். (586 - 598)

வண்டுகள் இரண்டு புறமும் பயணிக்க நடந்து செல்லும் மலை போன்ற யானையே, நீ என்னை இனியும் காக்க நினைத்தால், நீராடும் பொய்கையைக் கலக்குவது என்றால் காமனுக்குரிய கூர்மையான அம்பு காட்டி நிற்கும் பொய்கையைக் கலக்க வேண்டும் உன் மதத்தில் படியும் வண்டுகளை அடித்துக் கொடுக்க வேண்டும். சோழனின் கையில் உள்ள கரும்பினைவிடுத்து மன்மதனின் கைவில்லாகிய கரும்பையே விரும்ப வேண்டும் எங்களுக்கு உயிராய் உடலாய் அறிவாய் இருக்கும் அயிராவதமே நீ நகராதே என்று கூறினாள். (598 - 609)

**பேரிளம் பெண் பருவத்து பெண்**

வில்லை நெற்றியாகக் கொண்டிருக்கும் பேரிளம் பெண் கொற்கை நாட்டின் அரசனாகிய வலிமையான தோள்களை உடைய சோழ மன்னனின் மதயானையின் கைபோலக் கொல்வதற்காகத் திரண்ட துடையினை உடையவள். ஆதிசேடனின் அகன்ற படம் போன்ற அல்கலை உடையவள். தோழியாகித் தன்னைத் தாங்கிய

இடையைத் தேய்த்து அழித்த சாய்ந்த முலையினை உடையவள். திருமகள் தனக்கு ஒருவரும் நிகரில்லை என்று தான் வசிக்கும் தாமரை மலாரையும் பறித்து நின்றவளைப் போன்று நின்றாள். (609 - 618)

பேரிளம் பெண் மணம் வீசும் பூமாலை அணிந்து கத்தூரிக் குழம்பு பூசிக் கடலில் பிறந்த முத்து மாலை அணிந்து கொண்டு பூஞ்சோலையில் மானும் மயிலும் போன்ற தோழியரும் தானும் அழகுடன் அமர்ந்திருக்க வண்டுகள் ஒலியெழுப்பும் கள் ஊறும் இளமையான பானையின் உச்சியில் உண்டாகிய புளிப்புடைய கள் வடித்து இறங்கிய சமயத்தில் அக்கள்ளை வேறு இடத்தில் நிரப்பி வண்டுகளையும் அதில் உள்ள நுரைகளையும் நீக்கி ஒருத்தி புகழ்ந்து கொடுக்க அதனைக் கையில் எடுத்து நகத்தால் எடுத்துத் தெறித்து விட்டுப் பின்பு அதனைக் குடித்துத் தன் உறவினர்களின் மேல் சோர்வுற்று விழுந்தாள். (618 - 628)

பேரிளம் பெண் மயங்கி விழுந்த போது உண்டான குடியின் மயக்கத்தால் மனு குலத்தில் வந்த மன்னர்களில் சிறந்தவனாகிய விக்கிரம சோழன் வந்து விரும்பத்தக்க கனவில் சோந்த புணர்ச்சியால் அதிகமான ஆசையும், அதிகமான கள் குடித்த மயக்கமும் உறக்கமும் ஒன்றுக்கொன்று பகையாக, தன் உருவத்தைப் பளிங்குச் சுவற்றில் கண்டு அல்கலில் அணிந்த மேகலையைத் துகிலாகவும் துகில் அகலவும், தோள் நெகிழ்வடையவும், பூமாலை நீங்கவும், முலைகளில் பூசிய சந்தனம் அழியவும் செந்திறமான வாய் வெண்மை நிறமாகவும், கருமை நிறமான கண்கள் சிவந்த நிறமாக மாறவும் ஒளிமிக்க நெற்றியில் வியர்வை தோன்றவும் கனவை நனவாக (628 - 642)

வண்டுகள் சூழ்ந்த ஒலிக்கும் மணம் வீசும் கூந்தலை உடைய அவள் தன் மனத்தில் வேறுபாடாகக் கண்ட உடலில் நிறைந்த மகிழ்ச்சி பொய்யாகுமாறு பரந்த மாலை அணிந்த வெண்கொற்றக்குடை நிழல் தர வெற்றியில் உயர்ந்தவனாகிய

விக்கிரம சோழன் அச்சம் தரக்கூடிய யானையின் மீது உலா வருதலும். (642 - 646)

தேன் போலும் இனிமையான சொற்களை உடைய பேரிளம்பெண், உலாவைக் கண்டவுடன் நான் கெட்டேன் கனவை நான் உண்மை என நினைத்தது மயக்கத்தால் நிகழ்ந்ததாகும். உலகில் சிறிதும் தவம் செய்யாத பாவியாகிய என்னைக் கூட மன்னன் வருவானோ வரமாட்டான் என்று கூறி வணங்கிப் பின்பு மயக்கம் தெளிந்து மீண்டும் மயக்கம் கொண்டு தோழியர்களின் மேல் சாய்ந்து விழுந்தாள். (646 - 653)

தோழியர்கள் ஏழு முழம் உயர்ந்த பட்டத்து யானையின் அருகில் சென்று, ஆணைச் சக்கரத்தை உடையவனே புகாருக்கும் கருவூருக்கும் காஞ்சிக்கும் மதுரைக்கும் உறையூருக்கும் தலைவனே, எழு உலகையும் காக்கும் சூரியனே, வெண்கொற்றக் குடையால் எட்டுத் திசைகளையும் காக்கும் உயர்ந்த மேருமலையே கலிங்க நாடுகள் ஏழையும் வென்று வெற்றி கொண்டவனே போர் புரிந்த பகையரசர்களின் மணிமுடியில் தங்கி இருக்கும் மணி போன்றவனே இறைவனே (653 - 664)

உன்னுடைய நாட்டில் உண்டாகும் தன்மையன பல வயிரக் கற்களும் உன்னுடைய கடல் நீரில் பிறந்தன பல முத்துகள் உனக்குரிய மலையிலும் பிற மலைகளிலும் வயிரங்கள் உள்ளன. மன்னா இவள் உன்னைப் பணிந்ததும் இவளது துகிலைக் கொள்ளை கொண்டாய் இவளுக்குத் தேமல் தந்ததும் நீங்காத நறை தந்ததும். மாந்தளிர் போன்ற சாயலும் தூக்கம் கவர்ந்ததும் உனக்கு முறையான செயல்களளா? மேகம் போலக் கொடைச் சிறப்பு உடையவனே கூறுவாயாக. (664 - 672)

வளமான தொண்டை நாடு காமனுக்கு அம்புகளையும், சோழநாடு அழகான வில்களையும், பாண்டிய நாடு தேர்களையும் தந்து அவனுடைய குறைகளை

நீக்கினால் அவன் இளம் பெண்களைத் துன்புறுத்தாமல் இருப்பானா? அவன் கோபித்த நீலமலர் போன்ற கண்ணுடைய பேரிளம் பெண்ணின் உயிர் பாராமாகும். மலை இது என்று கூறும்படியான உன் அரண்மனையின் மணி ஒன்றே நிலைபெற்றதாகும். காமன் பெண்களை எல்லாம் துன்புறுத்த , மதயானை மீது அமர்ந்த கொடையால் உலகோரை விட உயர்ந்த சோழன் உலா வந்தான். (673 - 684)

## திருக்குற்றாலக்குறஞ்சி

### குற்றாலக் குறவஞ்சி

மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. காலம் 17 -ம் நூற்றாண்டின் பிற்பகுதி, 18 -ம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர், திரிகூட ராசப்பக் கவிராயர் தலபுராணம், கோவை குறவஞ்சி என 14 பிரபந்தங்கள் தந்தவர். யாவும் தமிழ் கொஞ்சும் பிரபந்தங்கள். குற்றாலக் குறவஞ்சி 1718 -ல் அரங்கேற்றப்பட்டது.

தலைவன் உலாப்போகும் தலைவி கண்டு அவன் மேல் கொள்ளும் காதல், அவனுக்கு குறத்தி குறி சொல்லுதல், குறவன், குறத்தி காதல் என சுவராசியமான பகுதிகள் கொண்டது. வெண்பா, அகவற்பா, விருத்தப்பா, சிந்து, கண்ணி எனப் பல்வகைப் பாக்களும் பாவினங்களும் விரவி வரும்.

குறவஞ்சி என்ற பெயர் இந்த இலக்கியவகைக்கு ஏன் வந்தது என்பதைக் காண்போமா? குறவஞ்சி என்ற இந்த இலக்கிய வகையினுள் இடம் பெறும் செய்திகளில், குறத்தி குறி கூறுதல், குறவனுடன் உரையாடுதல் என்பன பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே, இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. குறவஞ்சி என்ற சொல்லுக்குக் குறப்பெண் என்பது பொருள். வஞ்சி என்றால் பெண் என்று பொருள். இந்த இலக்கிய வகையில் குறத்தியின் செயல்களும், குறி வகைகளும் தலைமை இடம் பெறுகின்றன. எனவே இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்று பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

குறவஞ்சி இலக்கிய வகையின் கரு தொல்காப்பியத்தில் காணப்படுகினற்து. களவுக் காலத்தில் தலைவி தலைவனைப் பிரிந்து வாடுகின்றாள். இதனை வளர்ப்புத் தாயும் பெற்ற தாயும் காண்கின்றனர். தலைவி ஏன் வாடிக் காணப்படுகின்றாள் என்பதை அறிய முயல்கின்றனர். எனவே, கட்டு, கழங்கு என்பன மூலம் குறி பார்க்கின்றனர். இதைத் தொல்காப்பியம்,

**"கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்**

**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"**

**(தொல்.பொருள் அதி. களவியல்.24)**

என்று கூறுகிறது.

**கட்டு**

முறத்தில் அல்லது சுளகில் நெல்லைப் பரப்பி வைப்பர். அந்த நெல்லை எண்ணிக் குறி பார்ப்பார். இது கட்டு எனப்படும்.

**கழங்கு**

கழங்கு என்பது கழற்சிக்காய். இந்தக் காய்கள் மூலம் முருகனால் நோய் ஏற்பட்டு உள்ளதா என்று அறிவதற்காக வேலன் என்பவன் குறிபார்ப்பான். குறிபார்த்தல் என்ற வழக்கம் தொல்காப்பியத்தில் சுட்டப்படுவதை அறியலாம். இதனைக் கருவாகக் கொண்டு பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியம் தோன்றியத எனலாம்.

குறவஞ்சி நூல் எந்த இடத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்படுகிறதோ அந்த இடத்தின் பெயரை ஒட்டி நூலின் பெயர் அமையும். (எ.கா.) திருக்குற்றாலக் குறவஞ்சி (திருக்குற்றாலம் என்ற இடம்).

**திரிகூடமலையின் சிறப்பு**

**"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

**கானவர்கள் விழயெறிந்து வானவரை அழைப்பார்**

**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**

**தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்**

**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

**கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்**

**குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.**

முழக்கமிடும் அலைகளையுடைய நீர்வீழ்ச்சியானது தானும் கழங்காடுவதுபோல முத்துகளைச் சொரிந்து கொண்டிருக்கும் கானவர் மனைகளின் முற்றங்களிலெல்லாம் பரவிப் பெண்களின் சிற்றில்களையும் அவ்வருவி நீரானது கொண்டு ஓடிக்கொண்டும் இருக்கும். மலைச்சாரல்களிலே கிழங்குகளைக் கிள்ளி எடுத்தும், தேன் இறால்களை எடுத்தும், மலைவளங்களைப் பாடியும் நாங்கள் நடனமாடுவோம். களிற்றயானைகளின் கொம்புகளை ஒடித்துக் கொணர்ந்து பூண்கட்டி, அதனாலே வறுத்த தினையினை உரலிலேயிட்டு இடிப்போம். குரங்குகள் இனிய மாமரத்தின் வளமான பழங்களைப் பறித்துப் பறித்துப் பந்தாடுவதுபோல எறிந்து கொண்டிருக்கும். தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசமோ வானுலகிலும் சென்று பரவும் அருளோடு அடியவர்களுக்கு வழங்கும் கொடைத்தன்மையினையுடைய மகராசர் திருக்குற்றாலநாதர். குறும்பலாவினடியிலே

கோவில் கொண்டிருக்கும் ஈசராகிய அக்குற்றால நாதருடைய, வளம் பெருகிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையுமாகும்.

ஆடும் நாகப் பாம்புகள் கக்கும் நாகரத்தினங்கள் கோடி கோடியாகக் கிடந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். வெண்ணிலவைத் தாம் உண்ணும் வெண்சோற்றுக் கவளமென நினைத்து, யானைகள் அதனை வழிமறித்து நிற்கும் வேடுவர்கள் தினைப்பயிரினை விதைப்பதற்காகப் பண்படுத்தும் தினைப்புனங்கள் தோறும் அவர்கள் காடழித்து நெருப்பிட்டால், வியப்பான அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். காட்டின் எம்மருங்கும் வரையாடுகள் துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும். காகமும் அணுகாத உயர்ந்த மலையுச்சிகளிலே, மேகக்கூட்டங்கள் வந்து படிந்து கொண்டிருக்கும் நெடிய குறும்பலாவினடியிலே இருக்கும் ஈசர், கயிலால மலையினைத் தமக்கு வாசமாகக் கொண்டவர், அவர் நிலையாகத் தங்கியிருக்கும் திரிகூட மலைதான் எங்கள் மலையுமாகும்.

கயிலைமலை என்று போற்றப்படுகின்ற வடதிசையிலுள்ள மலைக்கு ஒப்பாகத் தென்திசையிலே விளங்கும் மலை இந்தத் திரிகூட மலையேயாகும். ‘பொன்னிறமான மகாமேரு மலை போலும்’ என்று சொல்லும்படியாக உயர்ந்து நிற்கும் மலை, இந்த மலையேயாகும். சிவசயில மலை என்று கூறப்படும் தென்திசையிலேயுள்ள மலைக்கு வடதிசையிலே இருக்கும் மலை இந்த மலையேயாகும். சகல மலைகளும் கொண்டிருக்கும் சிறப்புகள் எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் மலையும் இந்த மலையேயாகும். வயிரக் கற்களும் மாணிக்கங்களும் விளைகின்ற மலையும் இந்த மலையேயாகும். வானத்துக் கதிரவன் மலைக் குகைகள் தோறும் நுழைந்து நுழைந்து ஒளிபரப்பும் மலையும் இந்த மலையேயாகும். திருப்பாற்கடலிலே பாம்பணைமேல் துயில் கொண்டிருப்பவரான திருமாலும் கண் விழித்துக் கொண்டவராகி, அகிலமெல்லாம்

தேடித் திரிகின்ற மேன்மையாளராகிய திருக்குற்றாலநாதரின், இந்தத் திரிகூட மலையே எங்கள் மலையுமாகும்.

கொல்லிமலை என்பது எனக்கு இளையவளாகப் பிறந்த என் தங்கையான செல்லி என்பவள் இருக்கும் மலையாகும். என் கொழுநனுக்குக் காணியாட்சியான மலை பழநிமலையாகும். கதிரவன் படிந்துசெல்லும் விந்தியமலை என் தந்தைக்குரிய மலையாகும். இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும். சொல்வதற்கு அருமையுடையதான சுவாமி மலை என்னுடைய மாமியின் மலையாகும். என் தோழியின் மலை நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்விமலையாகும். மேகக் கூட்டங்கள் முழவுகளைப் போல இடிமுழக்கினைச் செய்ய, அதற்கிணங்க மயிலினங்கள் ஆடிக்கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

எங்கள் குலத்தை தவிர வேறொரு குலத்திலே பெண் கொடுக்கவும் மாட்டோம், பெண் கொள்ளவும் மாட்டோம் எங்கள் சாதியினரை ஒருவர் உறவு பிடித்துச் கொண்டனரென்றால், எந்நாளும் அந்த உறவை நாங்கள் கைவிடவும் மாட்டோம். அப்படிப்பட்ட குறவர் குலத்தவர் நாங்கள். நாங்கள் அச்சங்கொண்டு நடுங்கும்படியாகத் தினைப்புனத்திலே வந்த பெரிய மிருகமாகிய யானையை விலக்கி, வேங்கைமரமாகி நின்று எமக்கு நிழல் செய்த அந்த நன்மையினை எண்ணியே அருளாளரான இலஞ்சி வேலவர்க்கு, எம்குலத்துப் பெண்களுள் ஒருத்தியை மனைவியாக நாங்கள் கொடுத்தோம். அதற்காக எங்கள் ஆதினத்திலிருந்த பிற மலைகளையெல்லாம் அவளுக்குச் சீதனமாகவும் கொடுத்தோம். ஞாயிறும் திங்களும் சுற்றி வருகின்ற மகாமேரு மலையினைத் துருவன் என்பவனுக்குக் கொடையாகக் கொடுத்து உதவினோம். அத்தகைய பெருமையுடைய எங்களுடைய மலையானது, பரமனாகிய குற்றாலநாதர்க்கு உரிய திரிகூட மலையாகிய பழைய மலையேயாகும்.

சங்கக் குழைகளின் வளம் செறியுமாறு விளங்கும் காதுகளை உடையவர் திருக்குற்றாலநாதர். அவருடைய மலையிலே வாழ்ந்து வருகின்ற இளமயிலினைப் போன்றவளே! ‘‘யானைத் தந்தங்களினுடைய அழகினை உன் கொங்கைகள் காட்டும். பூங்கொடியின் நுண்மை வளத்தினை உன்னுடைய நுண்மையான இடையானது காட்டும். குறிஞ்சி மலர்கள் பூத்துள்ள காட்டின் வளத்தினை உன் கரிய கூந்தலானது காட்டிக் கொண்டிருக்கும். இப்படி நின்தோற்றமே மலை வளத்தின் சிறப்பினைக் காட்டிக்கொண்டிருக்கும் போது, நீ நின் வாயினால் உரைத்து அவற்றையெல்லாம் காட்டுவது எதற்காகவே? உமது நாட்டின் வளத்தினையும் குற்றாலத்தலத்தின் வளத்தினையும் எனக்கு இனி எடுத்துச் சொல்லுவாயாக.

மாமரங்களிலே இருந்து கொண்டு குயில்களாகிய திருச்சின்னங்கள், ‘காமத்துரை வந்தான் வந்தான்’ என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும். பருத்த முலைகளிலே முத்தாரங்கள் கிடந்து புரளும். மின்னல் போன்ற அழகினையுடையவரான பெண்கள், அவரவர்களுடைய அல்குல் தேர்களை அலங்காரம் செய்து கொண்டிருப்பார்கள். மிகப் பெரிய திங்களாகிய வெண்கொற்றக்குடையானது மேலே கவிந்து கொண்டிருக்கும். பறக்கின்ற கிளிகளாகிய குதிரைகள் தேர்களின் முன்னே கொஞ்சீச் சென்று கொண்டிருக்கும். இப்படியாகிய இளந்தென்றலாகிய தேரினையடையவனாகக், காமதேவன் வந்து உலாவருகின்ற சிறப்பினையுடையது திருக்குற்றால நாதரின் தென்னாரிய நாடாகும்.

மேகத்தை ஒப்பான் கருமையுடைய கூந்தலை உடையவரான பெண்களைக் கண்டு நாணங் கொண்டவையாகக் கடலை நோக்கிச் சென்று சேர்ந்தன கறுப்பான மேகங்கள். அங்கே கடல் நீரை முகந்து கொண்டு, கச்சுகளைச் சேர்ந்த கொங்கைகளுக்கு ஒப்பான மலைகளைச் சேர்ந்து, அங்கே வானத்தே வில்லினை இட்டு, நீரைச் சேர்ந்த மழைத் தாரையாகிய அம்புகளுடன், நெடிய கீழ்க்காற்றாகிய தேரிலே ஏறி, வெம்மையாளனாகிய கதிரவனின் தேரைச் சுற்றி, முதுவேனிலை

வெற்றிகொள்ளும் வளத்தினையடையது. திருக்குற்றாலநாதரின் தென் ஆரிய நாடாகும்.

எருமை மாடுகள் கூட்டங் கூட்டமாக இறங்குகின்ற நீர்த்துறையிலே, அவை சொரிகின்ற பாலினைப் பருகிய வாளைமீன்களானவை. மணம் பொருந்திய கூழைப் பலாவினை நோக்கிப் பாயும். அதனால் கொழுவிய பலாக்கனிகள் வாழை மரங்களின் மேலே உதிரும். வாழை மரங்கள் சாய்ந்து ஒப்பற்ற தாழை மரத்தினைத் தாக்கும். வருகின்ற விருந்தினர்க்குச் சோறிட்டு உபசரிப்பவரைப் போலத், தாழை அப்போது மகரந்தத்தோடு கூடிய பூக்களைச் சோறுபோலச் சொரியும். வாழை தன் குருத்தினை விரித்து அச்சோற்றினை ஏந்திக் கொண்டிருக்கும் இத்தகைய வளமுடையது சந்திரசூடரின் தென்னாரிய நாடு.

அழகிய நல்லாரான இள நங்கையர்களின் இனிய சொற்களைப் பழித்ததென்று. ஆடவர்கள் கரும்புகளை வெட்டி மண்ணிலே புதைத்து மூடுவர். எனினும், அவை மீண்டும் செழிப்புடன் வளர்ந்து மடந்தையரின் தோள் அழகையும் தம் பொலிவினாலே வெற்றி கொள்ளும் ஒளியுடைய முத்துகளை ஈன்று, பின்னர் அவர்களுடைய பற்களையும் வெற்றி கொள்ளும். அதன்பின் அவர்களுடைய காதலர்கள் பிரிந்துபோன காலத்திலே, பெண்மையை முற்றிலும் வெற்றி கொள்ளக் கருதி, மதனவேளுக்குரிய கரும்பு வில்லாகவும் சிறந்த விளங்கும். இப்படிப்பட்ட கரும்பு வளம் உடையதான குற்றால நாதருக்குரிய தென்னாரிய நாடே எங்கள் நாடாகும்.

தகுதியான வளமுடைய பூமிக்குள்ளே முதன்மை உடையதாக விளங்கும் வளநாடு, சகல தேவர்களுக்கும் அன்புடையதாக விளங்கும் தெய்வீக நாடு, திசைகள் அனைத்திலும் வளர்ந்து ஓங்கிய நாடு, சிவத்துரோகம் என்ற தீமை அறவே நீங்கிப் போன சிவநாடு, பழைமையான நான்மறைகளும் பாடிப் பரவிய நாடு, மைதீற்றிய கண்களையுடைய குழல்வாய் மொழியினைப் பாகமாக உடையவரின் இளந்தென்றல் உலவும் ஆரிய நாடு, இதுவே எங்கள் நாடாகும்.

அகத்திய முனிவர் ஐந்நூறு வேள்விகளைச் செய்து முடித்ததற்கு இடமாயிருந்த நாடு, அநேக கோடி யுகங்களைக் கண்ட மிகவும் பழைய நாடு, தாமரை மலரிலே தோன்றிய நான்முகன் வந்து பிறக்கின்ற நாடு. திருமகளும் கலைமகளும் போற்றுகின்ற நாடு செம்மையான தமிழ்ச் சொல்வளமுடைய பெரிய முனிவரான அகத்தியர் வந்து சார்ந்த நாடு. சிவந்த கண்களையுடைய திருமால் சிவனாகிய நாடு பெண்ணைப் பாகத்திலேயுடைய திரிகூடநாதரின், தென்றல் உலவும் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

மாதந் தவறாமல் மூன்று மழை பொழிகின்ற நாடு, வருடம் மூன்று போகங்கள் வீதம் விளைகின்ற நாடு, வேதங்களே வேர், மரம், பயன் என மூன்றாகவும் அமைந்த குறும் பலா மரத்தினை உடைய நாடு, நித்தியம், நைமித்திகம், காமியம் ஆகிய மூவகைச் சிறப்புகளும் தவறாமல் நிகழ்கின்ற நாடு, பிறப்பு, வாழ்வு, இறப்பு என்னும் மூன்று நிலைகளினும் நன்மை விளைவிக்கும் சிவநாடு, மூன்று புவனங்களாகிய மேல் நடு, கீழ், ஆகியவற்றில் உள்ளாரனை வரும் வலஞ்செய்து போற்றும் நாடு, நாத தத்துவத்தின் மெய்ப் பொருளாக, அரி, அயன், அரன் என மூன்றுருவாக விளங்கும் குற்றால நாதரின் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

இந்நாட்டினை வந்து சேர்ந்திருப்பவர்கள் தங்களிடம் இருந்து போய்விடக் காண்பதெல்லாம் தம்மிடமுள்ள பாவங்களேயாகும். இந்நாட்டிலே எம்மருங்கும் நெருங்கிக் கிடக்கக் காண்பதெல்லாம் வயல்களிலேயுள்ள கரும்பும் செந்நெல்லுமேயாகும். இங்கே தொங்கிக் கொண்டிருக்கக் காண்பதெல்லாம் மாம்பழக் கொத்துகள்தாம். இங்கே சுழன்று கொண்டிருக்கக் காண்பதெல்லாம் தயிர்கடையும் அழகிய மத்துகள்தாம். இங்கே வீக்கமுடன் விளங்கக் காண்பதெல்லாம் மங்கையரின் கொங்கைகள்தாம் வெடிக்கக் காண்பதெல்லாம் தோட்டத்திலேயுள்ள முல்லை யரும்புகள்தாம். ஏங்கக் காண்பது எல்லாம்

மங்கலமான பேரிகைகளின் ஒலியேயாம். இப்படிப்பட்ட ஈசருக்குச் சொந்தமான மேலான நாடே எங்களுடைய நாடாகும்.

(பாவந் தவிர ஏதும் இங்கே நீங்குவதில்லை. கன்னலும் செந்நெலம் நெருங்குவது தவிரப் பிற நெருக்கடிகள் இங்கே இல்லை மாம்பழம் தொங்குவதன்றி மனிதர்கள் தொங்கிக் கிடந்து வாடுவதில்லை. மத்துகள் சுழல்வதன்றி மக்கள் வருந்தி வாடி மனம் சுழல்வதில்லை. கொங்கைகள் வீங்குவதன்றிக் குறிப்பிட்டார் சிலர் மட்டும் செல்வத்தால் வீக்கம் பெறுவதில்லை. பேரிகை புலம்புவதன்றி மக்களுள்ளே எவரும் வாய்விட்டுப் புலம்புவதில்லை. இத்தகைய வளநாடு என்கிறார். தூங்குதல் - தொங்குதல். வீங்குதல் - பூரித்தல் ஏங்குதல் - புலம்புதல்.

இங்கெ ஓடிக் கொண்டிருக்கக் காண்பதெல்லாம் பூக்களுடன் வரும் புதுவெள்ளப் பெருக்கமேயன்றி மக்கள் அல்லர். இங்கே ஒடுங்கக் காண்பதெல்லாம் யோகியரின் உள்ளங்களேயன்றி மக்கள் அல்லர். இங்கே வாடக் காண்பது எல்லாம் நங்கையரின் இடைகளேயன்றி மக்களுள் எவரும் அல்லர். இங்கே வருந்தக் காண்பதெல்லாம் முத்துகளை ஈன வருந்தும் சங்கினங்களே யன்றி மனிதர்கள் அல்லர். இங்கே போடக் காண்பதெல்லாம் பூமியில் வித்துகளே யல்லாமல் பயனற்றவர் என எவருமே கழித்துப் போடப் படுவதிலர். இங்கே, புலம்பக் காண்பதெல்லாம் கிண்கிணிக் கொத்துகளே யல்லாமல் ஏழையரான மக்கள் அல்லர். இங்கே அனைவரும் தேடிக் கொண்டிருக்கக் காண்பதெல்லாம் நல்ல அறநெறிகளும் புகழுமேயல்லாமல் போலிச் செல்வங்கள் அல்ல. இத்தகைய சிறப்புடைய திருக்குற்றால நாதர் வாழுகின்ற தென் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

**ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்**

**ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்**

**வாடக் காண்பது மின்னார் மருங்குல்**

**வருந்தக் காண்பது சூலுளைச் சங்கு**

**போடக் காண்பது பூமியில் வித்து**

**புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து**

**தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி**

**திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே.**

## வினாக்கள்

1. கலிங்கத்துப்பரணி - பெயர்க்காரணம் தருக.
2. கலிங்கத்துப்பரணியின் வரலாற்றை செய்திகளை கூறுக.
3. கலிங்கத்துப்பரணி கூறும் கோயிலின் அமைப்பினை விவரி.
4. காளிதேவியை வழிபடும் வீரர்களின் செயலினை விவரி.
5. வீர வழிபாடு - விளக்குக.
6. கொள்ளி வாய்ப்பேயின் தன்மைகளை எடுத்துரைக்க.
7. காளி கோயிலின் பேயின் செயல்களை விளக்குக.
8. விக்கரமச் சோழன் உலா - குறிப்புத் தருக.
9. ஏழுவகைப் பருவ பெண்களின் நிலையை எடுத்துரைக்க.
10. ஏழு பருவப் பெண்களின் உருவ அமைப்பினை விவரி.
11. ஏழு பருவப் பெண்களின் மனச் செயல்களை எடுத்துரைக்க.
12. விக்ரமச் சோழன் உலாவில் வரும் சோழ மன்னர்களின் புகழினை எடுத்துரைக்க.
13. விக்கிரமச் சோழனின் சிறப்புகளை விவரி.
14. ஏழு பருவ பெண்களை விக்கிரமச் சோழன் உலா வருவதைக் கண்டு எவ்வாறெல்லாம் புகழ்கிறார்?.

15. திருக்குற்றாலக்குறஞ்சி - பெயர்க்காரணம் தருக.

16. கட்டு, கழங்கு - விளக்கம் தருக.

17. திருகூட மலையின் சிறப்பினை விவரி.

18. குற்றாலநாதரின் சிறப்புகளை விவரி.

19. ‘‘திரிகூட மலை எங்கள் நாடு’’ என்றே தலைப்பில் கட்டுரை எழுதுக.

# அலகு - 5

## முக்கூடற்பள்ளு

### ஆசிரியர் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் என சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில் திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

### பள்ளியர் வரவு

**காவலராந் தேவரைமுன் கைதொழுது பின்னருமென்**
**ஆவலினா லேயழகர் ஆசூர் வளநாடும்**

பூமியில் வாழ்கின்ற உயிர்களை எல்லாம் காக்கின்ற கடவுளான திருமாலைத் தொழுது வணங்கி அழகரான திருமால் கோயில் கொண்டிருக்கும் முக்கூடல் நகரில் திருமாலுக்குரிய ஆசூர் வளநாட்டையும், மருதூரை உள்ளடக்கி விளங்குகின்ற சீவல நாட்டையும் அவை பெற்றிருக்கும் நிறைந்த புகழை எடுத்துச் சொல்வதற்குப் பண்ணைக்காரனின் ஏவல்படி வயல்களில் வேலை செய்கின்ற பள்ளியர்கள் வந்து சேர்ந்ததைப் பற்றிச் சொல்கிறேன்.

### முக்கூடற்பள்ளியின் வருணனை

எண்ணெயும் குங்குமமும் கலந்து செய்யப்பட்ட பொட்டையும் முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகருக்கு அடிமை என அணியும் குறியீட்டுப் பொட்டினையும் அணிந்து தலைமுடியைச் சமபாகங்களாகப் பிரித்து வகிடு எடுத்து முடியைத் தளர்ச்சியாகவிட்டு முடிக்கப்பட்ட கொண்டையும், கைகளில் இறுக்கமாகப் பற்றிய இரும்புக் காப்பும் அணிந்து கொண்டு வாயில் வெற்றிலை பாக்கை ஒதுக்கி மென்றுகொண்டு வெற்றிலையை மடித்து வாயில் இடும்போது இதழ்கள் பிரியும்

தன்மை உடையவளாய், தன்னைப் பார்ப்பவர்களின் பார்வையை வெற்றி கொள்ளும் அவளின் விழி வீச்சைச் சந்திக்க இயலாமல் அவருடைய கொங்கைகளின் நுனிகள் இரண்டும் கருமை கொண்டன. இன்னும் எதிர்த்து நின்றால் கருமை படருமோ என்று கீழே சரிந்தன, நுண்மையான இடையும் எடைக்கு எடை தங்கம் பெறத்தக்க சிறப்புடைய சேலையும் அணிந்துகொண்டு முக்கூடல் நகரில் வாழும் பள்ளி காட்சியளித்தாள்.

**பள்ளியர் வரவு**

காண்பவர்களின் மனத்தைக் கொள்ள கொள்கின்ற பள்ளியர்களின் பார்வை பார்த்தவர்களின் மனதில் நீங்காமல் அலைமோதும் தன்மையது. பள்ளியர்களின் களவு கொள்ளும் பார்வையினால் வலிமை உடைய இரும்பும், கடுமைத்தன்மை உடைய கல்லும் கரைந்து போகும். பாற்கடலில் துயில்கொள்ளும் கருமை நிறமுடைய அழகர் கோயில் கொண்டிருக்கும் முக்கூடல் நகரில் வாழ்கின்ற பள்ளியர்களின் அழகுபோல் வேறு எங்கும் பார்க்க இயலாது.

**மருதூர்ப் பள்ளி (இளையப்பள்ளி)**

சிவந்த பாதங்களில் அலங்காரமாக பூசப்பட்ட கொச்சி என்று சொல்லக்கூடிய உயர்வான மஞ்சளும் அணியத்தக்க மலர்களும் மருக்கொழுந்து அணிந்து அவற்றின் மணம் வீச, சிறிய பிறைபோல் நெற்றியில் திருநீறு ஒளிவீசித் திகழ, பஞ்சலை கெண்டை என்னும் இருவகை மீன்களும் போல மைபூசப்பட்ட கண்கள் இரண்டும், தலையில் பின்னி முடிக்கப்பட்ட தோளில் புரளும் கொண்டையைத் தாக்குவதாக ஒன்றும் காதில் அணிந்துள்ள குழை என்னும் அணிகலனைத் தாக்குவதாக ஒன்றும் குதித்துக் கொண்டிருக்க, காண்பவர்களின் மனத்தை கொள்ளை கொள்ளுகின்ற கனமான பருத்த கொங்கைகள் இரண்டும் மதம்கொண்ட யானைகளின் கொம்புகளைப் போல விளங்க, நீலநிற மணிபதித்த நீண்ட மாலையும் கோவைத் தாலியும் அணிந்து கொண்டு கொடி போன்ற இடையில்

பட்டுச் சேலை அணிந்து பஞ்சவர்ணக் கிளியின் எழிலுடன் மருதூர் வாழ்கின்ற இளையப்பள்ளி காட்சியளித்தாள்.

உலகில் முதலில் தோன்றிய இறைவனான மருதூரில் வாழும் சிவபெருமானுக்குக் காலம்தோறும் அடிமை பூண்டு வந்து இடையில் இப்போது முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகருக்கு அடிமையாக மாட்டாள். மருதூரில் வாழ்கின்ற இளைய பள்ளியானவள் தன்னுடைய முகத்தினை ஒளிதோன்ற மள்ளர்களுக்கு மட்டுமே முகம் காட்டி வயலில் இறங்கி நாற்று நடவு செய்தால் ஒருபோத்துக்காகச் செய்த பயிரில் ஐந்து போகத்தில் கிடைத்த விளைச்சல் கிடைக்கும்.

**பள்ளன் வரவு ( குடும்பன் வருணனை)**

கோபம் கொண்ட ஆட்டுக்கிடாயின் வளைந்த கொம்பு போன்றிருக்கும் முறுக்கிவிடப்பட்ட மீசையும் முடிகள் கத்தரிக்கப்பட்ட அழகிய கன்னங்களும் விளக்கமாகத் தோன்ற இடையில் வளைத்தடியைக் குறுக்காக வைத்து அணியப்பட்ட கச்சை என்னும் அணியும், தலையில் பொன்நிறப் புள்ளிகள் உடைய உருமாவும் கருங்கொண்டையும் காட்சியளிக்க, நடை தடுமாறுகின்றபோது குதித்தும், காலில் ஏதேனும் குத்துகிறபோது முகம்மாறுபட்டுத் தலையை அசைப்பதும் என்னும் செயல்களுடன் கையில் இருக்கும் தடியைச் சுழற்றிக் கொண்டு ஏப்பம் விட்டபடி தான் அருந்திய மதுவின் மயக்கத்தினால் யாரும் ஏதேனும் பேசினால் அதனை மறுத்துப்பேசி காண்பவர்களைப் பயம் கொள்ள வைக்கும் சிரிப்பைச் சிரித்தவாறு நல்ல வடிவம் உடைய குடும்பன் காட்சியளித்தான்.

**பள்ளன் தன் பெருமை கூறுதல்**

பள்ளர்களின் தலைவனே, ஒரு போதாவது முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் திருப்பாதங்களை நினைக்காதவர்களின் மனதைப் பயனற்ற தரிசுநிலம் என்று கருதி அதனை அப்படியே விட்டுவிடாமல் இறைப்

பக்குவம் ஏற்படுத்தும் பொருட்டு ஏர்கொண்டு உழவு செய்வேன். வேதங்கள் வணங்கும் ஓம் நமோ நாராயணா என்னும் எட்டெழுத்து உண்மைப் பொருளைப் பெரிய நம்பியைக் கேட்டு அறிந்து கொள்ளாதவர்களின் காதுகளைப் புற்றென நினைத்து மண்வெட்டியைக் கொண்டு வெட்டுவேன். திருமால் கோயில் கொண்டிருக்கும் நூற்று எட்டுத் திருத்தலங்களுக்கும் சென்று அவனை வலம் வந்து வழிபடாதவர்களின் கால்களைப் பேய்த்தன்மை உடையவவை என்று கருதி ஏர்க்காலில் இணைத்துக் கட்டுவேன். திருவாய் மொழியைக் கற்று இறைவனான திருமாலின் பெருமைகளை உணராதவர்களை இரண்டு கால்கள் உடைய மாடுகள் என நினைத்துத் தார்க்கோல் கொண்டு தண்டிப்பேன்.

**பள்ளியர் குடித்தரம் கூறுதல்**

உழவர்களின் குலத்தில் பிறந்திருந்தாலும் இரண்டு பள்ளியர்களுக்கு ஒரு பள்ளன் கணவன் என்றால் அவர்களின் மனநிலையில் வேறுபாடுகள் இல்லாமலா இருக்கும்? பகாசுரன் என்னும் அசுரன் கம்சனால் கொக்காக ஏவப்பட்ட போது அக்கொக்கு தன்னுடைய அலகினால், கண்ணனைக் குத்தித் துன்பப்படுத்தியது. கண்ணன் கொக்கைக் காலால் மிதித்து அதன் வாயைக் கிழித்துக் கொன்றான். அத்தகைய சிறப்புமிக்க கண்ணனாகிய அழகர் வீற்றிருக்கும் முக்கூடல் முழுதும் பரவித் தெரியுமாறு பள்ளியர்கள் தங்களின் குலப் பெருமைகளைக் கூறுகின்றனர்.

**பள்ளியர் குடித்தரம்**

சிற்றாறு முக்கூடலுக்கு வடபுறம் பொருநை எனப்படும். தாமிரபரணி நதி தென்புறம் ஓடுவது. இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று கலப்பதையும் அதன் சூழலிலும் இருந்து வந்த பழமையான பள்ளர் குடியில் பிறந்தவள் நான். என்னுடைய கணவன் கண்ட நாளிலேயே தாலிகட்டி மனைவியாக்கிக் கொண்டான். இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில்

முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் பணிக்கு காலம் முழுதும் அடிமை பூண்டு வாழ்ந்துவரும் என தலைவனுக்கு மூத்தபள்ளி நான் பண்ணைத் தலைவனே.

**இளைய பள்ளி**

செஞ்சி நகருக்கும் மதுரை நகருக்கும் தஞ்சை நகருக்கும் எல்லையாகக் கொண்டு அதிகாரம்செலுத்தி நல்லாட்சி செய்கின்ற மன்னனான வடமலேந்த்ரன் பிறந்த ஊர் எங்கள் ஊராகும். மக்கள் நலமோடு வாழ்வதற்காக அவன் ஐந்து குளங்கள் வெட்ட வேண்டும் என நினைத்த அதனைச் செயல்படுத்த முர்த்தக்கால் ஊன்றிய நாளில் இப்பண்ணையில் வேலைக்குச் சேர்ந்தவள் நான். உண்ணுகின்ற உணவுக்கு வழியில்லாமல் நான் கெஞ்சிக் கூத்தாடிக் குடும்பனோடு சேர்ந்து கொள்ளவில்லை. என்னுடைய அழகைக் கண்டு விரும்பி அவனே தாலி கட்டி என்னை மனைவியாக ஏற்றுக்கொண்டான். மேகத்தை ஒத்த கருமையான நிறமுடைய முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகருக்கு அடிமைத் தொழில் புரியும் பள்ளனுக்குப் மருதூரில் வாழ்பவளான இளைய பள்ளி நான் பண்ணைத் தலைவனே.

**பள்ளன் குடித்தரம் கூறுதல்**

சுக்கிராச்சாரியாரின் தாய் தேவர்களின் தலைவனான இந்திரன் அழிய வேண்டும் என்று கடுமையான தவம் மேற்கொண்டிருந்த போது திருமால் தன்னுடைய சக்கரத்தை ஏவி அவளைக் கொன்றார். அதனால் திருமாலைப் பிரமகத்தித் துன்பம் பற்றிக் கொண்டது. அத்துன்பம் நீங்கும் பொருட்டுத் தென்னாட்டுக்கு வந்த கோயில் கொள்ள நினைத்ததால் தென்னாட்டு விட்டுணுவாய் முக்கூடல் நகரில் அவர் பாதம்பட்ட நாளில் இருந்து அழகரின் அடிமையாய் இருப்பவன் நான். உயர்சாதியினர் உண்ணும் நெல்லை விளைவித்துக் கொடுத்தவன் நான் என்பதை மறந்து அருகில் சென்றால் பள்ளன் என்ற இழித்துரைப்பார்கள். நீல நிறமுடைய கடலில் விளையும் முத்துக்களையும் விட

மிகுதியாக நெல் முத்துகளை விளைவிக்கும் நான் வடிவழகக் குடும்பன் பண்ணைத்தலைவனே!

## நாட்டு வளம்

திருமாலின் மூக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் நாட்டு வளத்தைப் பேசுவதற்காகப் பள்ளியர்கள் நாவினை அசைத்துச் சொல்லத் தொடங்க, பாடல்களுக்குரிய இலக்கணங்கள் பொருந்திவர, நம்மாழ்வார் திருமால்மீது அருளிய பூமாலைகளாம் பாமாலைகளின் சிறப்பினை உழவர்கள் பாடத் தொடங்குகின்றனர்.

## நாட்டு வளம் மூத்தபள்ளி (வடகரை)

உயரமான இடத்தில் ஏறி நின்று தன்னுடைய கால் தரையில் ஊன்றி தோகைகளை விரித்து நின்று வானத்தைப் பார்த்த மயிலைக் கண்டு, மாமரத்தில் கிளையில் இருந்து வசந்தகாலத்தை உணர்த்துவதற்காகக் கூவ நினைத்த பெண் மயிலின் நடனம் கண்டு கூவுவதை கைவிட்டு வாயை மூடிக்கொண்டது கோடைக்காலம் நிறைவு பெற்று வசந்தத்தில் அறிகுறிகள் தெரிய, நீர் சுமர்ந்த குளிர்ந்த மேகம் மழைத்துளிகளை உதிர்க்க, எங்கும் மண் வாசனை நிறைந்தது. இத்தகையதாக, மக்கள் எல்லாம் மகிழ்ச்சியுடன் இருக்கும் வளமை உடையது வடகரை ஆசூர் நாடு.

## இளையபள்ளி (சீவலப்பேரி)

வெற்றி கொண்டு விடுவேன் என்னும் வீரமுடன் இரண்டு யானைகள் எழுதுவதுபோல மேகங்கள் திரண்டு நிலவை மறைக்க, ஒளிந்து கொள்ளக் குன்றுகள் போதாது என்று நினைத்த ஆடவர்கள் பூங்கொடி போன்ற அழகினை உடைய காதலியர்களின் கொங்கைகளாகிய குன்றுகளில் ஒளிந்திருப்பர். காதலர்களை இணைத்த இளவேனிலின் வருகையை மாமரத்தில் வாழும் குயிலுக்கு

அறிவிப்பதற்காகலத் தென்றல் காற்று மன்றங்களை நாடிவர மகிழ்ச்சி கொள்வது தென்கரையில் அமைந்துள்ள சீவலப்பேரி நாடாகும்.

**நகர்வளம் மூத்தபள்ளி (முக்கூடல்)**

வானில் பரவியிருக்கும் கார் மேகங்கள் கோயில் கோபுரத்தைத் தழுவி நிற்கும் கோயிலில் கொடி மரங்களில் ஏற்றப்பட்டிருக்கும் கொடிகள் வானத்தை மறைத்துக் கொண்டிருக்கும் பறவைகள் வசந்தகாலம் தொடங்கியது கண்டு சோலைகள் நாடிச் செல்லும் அன்னப் பறவைகள் கோபுரங்களின் முன் இடத்தில் விளையாடும். பூக்களின் தேன் தரையில் பெருகி ஓடி ஒருபுறம் மண்மேட்டை அமைத்திருக்கும். பொன்னாலாகிய சுவர்களை ஊடுருவிப் போக இயலாத சூரியன் வழிதடுமாறுவான். இத்தகைய சிறப்புகளை உடைய உலகின் தலைவனான செண்டலங்காரம் என்னும ஆயுதம் கொண்டிருக்கும் அழகரின் ஊரான முக்கூடலே எங்கள் ஊர்.

**இளையபள்ளி (மருதூர்)**

நீர்வளமும் இயற்கை வளமும் நிறைந்த மருதூரின் மேட்டு நிலங்களில் சங்கினங்கள் உலாவிக் கொண்டிருக்கும். அலைகளால் ஒதுக்கப்பட்ட மீன்கள் பொன்மேடைகளில் குதித்து விளையாடும் சோலைகளில் வளர்ந்திருக்கும் மரங்களின் கிளைகள் நிலவை வருடும். அவ்வாறு வருடும்போது தெருக்கள் எங்கும் மலர்களில் இருந்து தேன் துளிர்க்கும் மரக்கிளைகளில் இளம் கிளிகள் தன் துணையோடு இன்புற்றிருக்க, நாகணவாய்ப் பறவைகளும் புறாக்களும் துணை தேடிக் குரல் எழுப்பும். கலங்கள் செல்லும் கடலில் தோன்றிய ஆலகால விடத்தை உண்ட சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் ஊரே எங்கள் ஊரான மருதூராகும்.

**குயில்**

வானவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் பெருமை உடைய உயர்வுமிக்க அழகரான திருமால் வீற்றிருக்கும் மூக்கூடல் நகரின் வளங்களை எல்லாம் கூறிமுடித்த பின்பு, வாசைன பொருந்திய கூந்தலை உடைய பள்ளியர்கள் குயில் போன்ற தங்களது குரலால் குயிலை நோக்கிப் பாடுக என்று வேண்டி நின்றனர். (மழை பெய்யக் கூறுமாறு குயிலை அழைத்தல்)

**தெய்வநிலை போற்றல்**

சீவலப்பேரி என அழைக்கப்படும் முக்கூடல் நகரில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சிறந்து விளங்கவும், செல்வவளம் பெருகவும், நிறைவான பொருள் வளத்துடன் திருமாலுக்குரிய மருதநிலமக்கள் வாழ்வதற்காக மருதூரை வாழ்த்தியும், புலவர்களைக் காப்பவனான காவை அம்பலவாணனின் சுற்றத்தார்கள் வளம் பெற்று வாழவும், நாட்டை ஆளும் மன்னனுக்குப் பெருமைகளைத் தரும் தோப்பாகனான திருமாலின் கோயிலில் தினப்பூசைகள் சிறக்கவும் குயிலே, கூவுவாயாக.

காரிமாறனின் மகனாகிய நம்மாழ்வார் திருமாலைப் பாடிப் பரவுவதற்காகப் படைத்தளித்த வேதமாகிய திருவாய் மொழியைப் பாடியருளிய முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் பண்ணிசை பாடுவதற்கு உரியவனான அழகரின் நாட்டில் மழைவளம் சிறக்க வேண்டும் என்பதற்காக உழவுத்தொழில் செய்யும் மள்ளர்களின் இனத்தவர்கள் எல்லாம் தாங்கள் வாழும் சேரிப்பகுதியில் குலவை என்னும் ஒலியினை எழுப்பித் தெய்வத்திடம் வரம் கேட்டு வணங்கினர்.

மாதம் மூன்று முறை உலகமுழுதும் மழை பெய்வதற்காகத் தெய்வங்களைக் கைதொழுது வணங்க வேண்டும். பொங்கல் வைத்துத் தேங்காயும் கரும்பும் பூலாவுடையார் என்னும் கிராம தெய்வத்திற்கு நிறையக் கொடுங்கள், குங்குமப் பொட்டோடு சந்தனம் சேர்த்து, கூட்டமாகச் சென்று உடையாராய் என்னும்

கிராமத் தெய்வத்திற்கு அணிவியுங்கள், வழிபாடு நடப்பதற்கு முன் காப்புக்கட்டி ஏழு ஆட்டுக்கிடாய்களை ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் ஐயனார் முன்பு விரைவாக வெட்டிப் பலி கொடுங்கள்.

**மழைக்குறி**

பிறவாத வரமாகிய வீடுபேற்றைத் தருவதற்காக முக்கூடலில் எழுந்தருளிக் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் பாதங்களை வழிபடுவதை மறக்காத பண்ணைத் தொழில் புரியும் பள்ளர்கள் அனைவரும் வணங்க வேண்டிய முறைமையில் தெய்வங்களை வழிபட்டுப் போற்றிய பின்னர் வானத்தில் மேகம் எல்லாத் திசைகளிலும் பரவி மழை பெய்வதற்கான குறியை உண்டாகச் செய்தது

**மழைபெய்தல்**

ஆசூர் நாட்டில் உலகின் வேலியாக அமைந்திருக்கும் ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்று நீரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் கடலில் நீரை முகர்ந்து மழைமேகமாக மாறிய மேகம் மழைத் தூறல்களையே தனக்குரிய கால்களாகக் கொண்டு மழைக்காலம் என்று சொல்லும்படியாக மழையைப் பெய்விததது.

**ஆற்று வரவு**

பறந்து செல்லும் கருடனை வாகனமாக உடைய திருமாலுக்குரிய முக்கூடல் நகரில் வெம்மை உடைய குன்றுகள் என்று சொல்லப்படுபவை எல்லாம் வாசனைப் பொடிகள் பூசப்பட்ட மகளிர்களின் கொங்கைகளாகிய குன்றுகளைத் தவிர வேறு இல்லை. வானில் இருந்து பெய்கின்ற அமுதமாகிய மழையில் குளிரக் குளிர நனைகின்ற தலைவனின் உடைகள் ஈரமாயினவே தவிர, அவர் மனதில் சிறிதும் ஈரம் இல்லை.

## குறிஞ்சி

வானவா்களின் தலைவனான இந்திரனின் நிறைந்த அருள்போலப் பொழிந்த மழைநீா் மலைகள் நிறைந்த பகுதிகளில் அருவியாகப் பெருகி வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஒலியுடன் பெருகிவர, வெள்ள நீரில் அகப்பட்டு மதம்கொண்ட யானைகள் நிலை தடுமாறின. கொல்லும் தன்மை உடைய ஆண் பன்றிகள் செத்து மடிந்தன. வெள்ளைத் சந்தனமரக் கிளைகளையும் பசிய மூங்கில் மரங்களின் முத்தையும் அடித்துக் கொண்டு, காட்டு மல்லிகைக் கொடிகள் வெள்ளத்தால் அலைக்கழிக்கப்பட்டவும் தேன்கூடுகளில் அமா்ந்திருக்கும் தேனீக்கள் கலைந்து செல்லுமாறும் புகுந்தது. அதன்பின் குறிஞ்சி நிலக்குறவா்கள் வாழும் மேட்டு நிலத்தினில் புகுந்து குதிரைப் படைகளை உடைய திருமாலின் மருமகனான முருகனை வணங்கித் தினைப் புனங்களில் முற்றி விளைந்த தினைக் கதிா்களில் இருந்து தினைகளை உதிரச் செய்து பாலை நிலத்தை ஒத்த வறண்ட நிலப் பகுதிக்குள் பெருக்கெடுத்துப் புகுந்தது.

பாற்கடலில் துயில் கொள்ளும், பண்ணிசையால் பரவி வழிபடப்படும் தன்மை அடையவரான முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் பால் போன்ற வெள்ளம் ஆற்றில் ஒலியுடன் பெருக்கொடுத்து வரும் முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் நகருக்கு வேலமரங்கள் நிறைந்திருக்கும் காட்டைக் கடந்து வருகையில் மின்னல் மட்டுமே ஒளிகாட்டிக் கொண்டிருக்கிறது. கால்வாய்களையும் ஆறுகளையும் மறைத்துக் கொண்டு கரை தெரியா வண்ணம் வெள்ளம் பாய்ந்தாலும் ஒதுங்கி நின்று கொள்ள இடம் இருக்கிறது. ஆனால் தலைவியால் உண்டான காமநோயின் கரையைக் காண இயலவில்லை. இரவே நீயும் துன்பம் தராதே. வராமல் நின்றுவிடு.

**பாலை**

குறிஞ்சி நிலத்திலிருந்து பாலை நிலத்தில் பாய்ந்த வெள்ளநீர் எதிர்பட்ட மரவம், வெதிர், பாலை, குரவம், இருப்பை, ஈஞ்சு, பல்வேறு கள்ளி மரவகைகள் ஆகியவற்றின் வேர்ப்பகுதியை அரித்துத் தள்ளிக் கொண்டு, முதிர்ச்சியடைந்த பருந்துகள் வருத்தம் கொள்ளவும் மரங்கள் வெள்ளத்தால் அசைக்கப்படுவதால் கழுகுக் குஞ்சுகள் மரத்தில் இருந்து கீழே விழ அதனைக் கழுகுகள் சிறகினால் அணைத்துக் கொள்ளவும் வெள்ளம் பெருகியதால் முள்ளம் பன்றிக் கூட்டம் கிடையில் இருந்து எழவும், ஒளிர்கின்ற வேல்படையைக் கொண்ட எயினர்கள் வெள்ளத்தால் அச்சம் கொண்டு இருப்பிடம் விட்டு அகலவும் வெள்ளத்தில் சிக்கிய காளைமாடு என்ன செய்வதென்று புரியாமல் விழிக்கவும், வீரம் நிறைந்த பாலை நில மறத்தியர்களும் அங்கிருந்து அச்சம் கொண்ட விலகவும் சூரியனும் உயிர் கவரக்கூடிய காலனையும் ஒத்த செல்லும் இடத்தில் எல்லாம் வென்று இரத்தம் காணும் சூலமாகிய வேலினை அணிந்த துர்க்கையின் கொங்கையில் சுரக்கும் அருளாகிய பால்போன்ற வெள்ளம் பாலை நிலம் கடந்து முல்லை நிலத்தில் பாய்ந்தது.

ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்று நீரை உடைய கடலில் அம்பினை எய்து வற்றும்படிச் செய்த திருமால் கோயில் கொண்டிருப்பது முக்கூடல். முக்கூடல் மலைப் பகுதியில் பெய்த மழையினால் ஒளியைப் போன்று விளங்கும் நீர் பெருக்கெடுத்துப் பாலையில் புகுந்து அதனை வளமடையச் செய்தது. எல்லாவளமும் பெற்றிருக்கும் மருதநிலம் போலக் கானகமும் வளம் பெற்றது இது எவ்வாறு என்பதனை உண்மையாக உணர்ந்து மெல்ல உவப்புடன் சொல்ல வேண்டும்.

**முல்லை**

பாலை நிலத்தில் பாய்ந்த வளம் செய்த வெள்ளம் முல்லை நிலத்தின் எல்லையை அடைந்து தோட்டங்களில் புகுந்தது. அங்கிருந்த கொன்றை மரத்தில் மோதி மலர்களை உதிர்த்தது. பின்னர் தோன்றி மரம், மல்லிகைக் கொடிகள் ஆகியவற்றில் மோதி தேனை எடுத்துக் கொண்டு கொடிய அலைகளோடு.

முல்லை நிலத்தில் உள்ள வீடுகளை மோதி எண்ணெய் வெண்ணெய் எள், அவரை, துவரை ஆகியவற்றையும் அடித்துக் கொண்டு, அவர் இவர் என்று பார்க்காமல் அனைவரையும் துன்பத்திற்கு உள்ளாக்கி பாறையைப் பெயர்த்தது.

பாறையால் காயாமரத்தில் மோதி அலைகளால் அதன் உச்சியைத் தொடமுயன்று மரத்தில் மோதிப் பூக்களை உதிர்த்தது. பின்னர் துளசிச் செடிகள் நிறைந்த காட்டுக்குள் புகுந்து அதனை நிறைத்து ஊழிக் காலத்தில் திருமால் துயில் கொள்ளும் பாற்கடல் போலாக்கி மீன்கள் துள்ளிக் குதிக்கும் மருதநில நீர் நிலைகளில் பாய்ந்தது.

**ஆற்று வரவு**

கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்டு ஆநிரைகளைக் காத்த கண்ணணாகிய திருமால் கோயில் கொண்டிருக்கும் முக்கூடலில் இன்றைய நாளின் இரவில் தலைவியைத் தேற்றுபவர்கள் யார்? இளம் கன்றுகளைக் கழுத்தோடு அணைத்துக் கொண்டு தாய்ப்பசுவை அழைக்கும் ஆயர்களின் கொன்றைக் கனியினால் செய்த குழலின் ஓசை அழகிய கூந்தலை உடைய இவளுக்குத் துன்பம் தருவதாகும்.

**மருதம்**

முல்லை நிலத்தை வளப்படுத்திய வெள்ளம் மருதநிலம் செழிக்கவும் அந்நிலத்தின் பண்ணைகளில் வளர்ந்திருக்கும் மருதமரங்கள் செழிக்கவும், மாடுகள் பூட்டிக் கமலை ஏற்றம் இறைக்கும் மேட்டு நிலத்திலும், ஒளிமிக்க தாமரை மலர்கள்

மலரும் குளத்திலும் புகுந்தது, பின்பு எருமையை வெள்ளத்தில் சிக்கவைத்து அது பதறி மேய்ந்து கொண்டிருக்கும் எருமைகளை ஓடச்செய்தது, புழுதி உழவு செய்த வயல்களை நனைத்து எங்கும் பரவி அனைத்து இடங்களையும் குளிர வைத்தது, உரல்களையும் கரும்புகளையும் வெள்ளம் சாய்க்க, வெள்ளத்தில் புகுந்தும் ரீங்காரமிட்டும் வண்டுகள் அலைந்தன. வெள்ளம் முதலைகளை நீந்தவிடாமல் இழுத்துச் சென்றது, வாழைக் குழைகளை இழுத்துச் சென்று சேர்த்தது. இப்படியாகச் சினம் கொண்ட வரும் வெள்ளை யானையான வெள்ளத்திற்கு அச்சம் கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் சங்கினங்கள் புலம்பின. மருத நில மக்களின் வாழ்விடங்களைப் பெயர்த்துக் கொண்டு வெள்ளம் நீர்பறவைகளின் ஒலி நிறைந்து விளங்கும் மருத நிலத்தில் புகுந்தது.

முற்றங்களில் குடங்களைப் போலப்பருத்த வெண்மையான சங்குகள் உலவும் ஊரான முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரிடம் நான் என் காதலனைக் கொண்ட வந்து சேர்க்க வேண்டும் என வேண்டினேன். அதற்கு அழகர் எனக்குச் செய்த நன்றிக்கு எதனையும் இணையாகக் கூற இயலாது. அவர் என்னை நீண்ட மயக்கத்திற்கு உள்ளாக்கிவிட்டார். அவருக்கு வெற்றித் திருநாமம் எதற்கு? தாமிரபரணியில் வாழ்கின்ற அன்றில் பறவைக் கூட்டங்களே நீங்களாவது என் தலைவனிடம் சென்று என்னுடைய நிலையைக் கூறி வாருங்கள்.

### நெய்தல்

நெய்தல் நிலத்தில் புகுந்த வெள்ளம் நெய்தல் நிலம்தானா இது என மயக்கவும் கொள்ளும் வண்ணமாகப் பாய்ந்தது. மிகுதியாய் மலர்ந்திருந்த நெய்தல் மலர்கள் எல்லாம் வெள்ளப் பெருக்கினால் கலங்கின. வெள்ளம் ஆற்றங்கரைகளை விரைவாக அரித்ததனால் மணல் திட்டுகள் உதிர ஆங்கு, புதர்களில் இருந்த பறவைகள் அச்சம் கொண்டு பறந்தன. அலைமோதிய வெள்ளம் பட்டினத்திற்குள் புகுந்து மீண்டும் பட்டினத்தை உருவாக்க விடாத வகையில் நிறைந்தது. மக்கள் அனைவரும் ஒதுங்குதற்கு இடமின்றித் துயருடைய இலைகளை

உதிர்த்து நின்ற சோலைகளில் புகுந்து அவற்றை அழித்து கிளைகள் விரிந்து வளர்ந்திருந்த புன்னை மரங்களில் மோதி, உப்பளங்களில் அலைகளைச் செலுத்தி அலைகளுக்கு உப்பளத்தை இரையாக்கிக் கடலோடு போட்டியிட்டது. நெய்தல் நிலமக்கள் உயர்வுடையவனும் நெய்தல் நில இறைவனுமான வருணனை வணங்க வேண்டிய முறைப்படி வணங்க, வெள்ளமானது தன்னுடைய வேகம் குறைந்து நதியாக நடந்து சென்று பணிவாகக் கடலில் கலந்தது.

கருடனை வாகனமாகக் கொண்ட திருமால் கோயில் கொண்டிருக்கும் முக்கூடலில், பொருள் தேடுவதற்காக என்னைப் பிரிந்து சென்ற என் காதலர் மீண்டு வந்து என்னை மணம் செய்யவில்லை. கடலே அனலில் இட்ட ஈயமாய் நான் உருகுகிறேன். வெண்மை நிறமுடைய சங்குகளே, மலர்போன்ற சிவந்த கைகளில் உள்ள வளையல்கள் பிரிவுத் துயரால் கழந்கின்றன.

### ஆற்று வெள்ளம்

பொருநைநதி எனப்படும் தாமிர பரணியில் பெருகிய வெள்ளம் விசை கொண்டு கடலை எதிர்த்துச் சென்று கடலில் கலக்கின்ற தன்மையினால் அதன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு புகுந்தது. ஒலியெழுக் கடலில் கலக்கும் நீர் கிழக்கே சூரிய உதயத்திற்கும் மேற்கே பொதிகை மலைக்கும் சமமாகப் பெருக்கெடுத்து வருகிறது. நீரின் வேகத்தால் அச்சம் கொண்டு துதிக்கை மூக்கன் என்னும் மீன் நெளியவும் பண்ணைச் சாலைமீன், எண்ணெய்மீன், பசலிமீன், திருக்கைமீன், கசலிமீன், கெளுத்திமீன், பண்ணாக்கு மீன், பழம்பாசி மீன், மனிதர்களைத் துன்புறுத்தும் மகரமீன், துள்ளிக் குதிக்கும் சள்ளைமீன், மத்திமீன், உல்லம் மீன், பொத்திமீன், மடந்தைமீன், கடந்தைமீன், சம்பான்மீன், நொறுக்கி மீன், பஞ்சலைமீன் கருங்கண்ணி மீன் ஆகியவற்றைப் பெருகி வரும் நீர் மணலுக்குள் புதைத்தும், கரையில் ஒதுக்கியும் கடலை நோக்கி அழகரான திருமாலின் கருணை வெள்ளமாய்ப் பாய்கின்ற தாமிரபரணியின் புதுமையைக் காண்பதற்காகப் பள்ளியர்களே வாருங்கள்.

**சித்திரா நதி**

குற்றாலத்தைத் தன்னிடத்தில் கொண்ட பெரிய மலையான திரிகூட மலையின் சிகரங்களில் தங்கிய மேகங்கள் பொழிந்த மழைநீர் அங்கிருந்து பெருக்கெடுத்து ஒன்று சேர்ந்து தாமிரபரணி நதியை நாடி, அழகர் கோயில் கொண்டிருக்கும் முக்கூடலை வலமாகக் கொண்டு வற்றாத குளங்களில் பாயும். சிற்றாறு என்று பெயர் பெற்றாலும் வாமன அவதாரம் எடுத்த திருமாலின் பெருமை போன்றது நல்ல நதியாகிய சித்திராநதி பெருகிவரும் அழகை, பள்ளியர்களே பாருங்கள்.

**பண்ணைக்காரன் வரவு**

ஆற்றில் வெள்ளம் பெருகியபின் ஒரு நிலமக்கள் மருதநில வளத்தைப் பெற முடியாமல் இருந்ததால் வருத்தம் கொண்டனர். வெள்ளப் பெருக்குக் குறைந்த பின் ஒரு நிலமக்கள் அந்நிலப் பொருள்களோடு பிறநிலப் பொருள்களையும் பெறும் பொருட்டு ஆற்றில் வெள்ளப் பெருக்குக் குறைந்ததால் கடந்து சென்றனர். அப்போது முக்கூடல் நகரில் கோயில் கொண்டிருக்கும் முக்கூடல் சிறந்த விளைவை உருவாக்கும் பண்ணை நிலவரங்களை விசாரிப்பவன் வந்தான்.

**மூத்தபள்ளி முறையிடுதல்**

எண்ணெயும் வாசனைத் திரவியமும் பூசிய கூந்தலை உடைய மூத்தபள்ளி பள்ளனின் மனதில் நிறைந்திருக்கும் பொய்களை எல்லாம் பண்ணைக்காரனிடம் எடுத்துக் கூறினாள். வெண்ணெய் உண்ட கண்ணன் அவ்வாயினால் குழல் இசைத்துப் பெண்களின் மனதைக் கொள்கை கொண்டது போல, பள்ளனின் பகட்டுக்கு மயங்கிய பெண்கள் அவனுடன் திரிகின்றார்கள். அந்தப் பெண்களின் வாழ்வு கெட்டுவிடாதா? அவர்களை யார் மணந்து கொள்வார்கள்

மானம் என்பதே இல்லாத பள்ளன் வேலை செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அவன் செய்யும் ஏமாற்றுச் செயல்களைக் கொஞ்சம் கேளுங்கள் முழுவதுமாகச் சொல்கிறேன். காவல் செய்ய வேண்டிய கால்வாய் அணையை இவன் போய்ப் பார்ப்பதே கிடையாது. எதற்கெடுத்தாலும் மூக்கின்மேல் கோபம் வருகிறது. நான் சொல்லுகின்ற அறிவுரைகளையும் கேட்பது கிடையாது. பகைவன்போல் நடந்து கொள்கிறான். நான் உங்களிடம் அவனைப் பற்றிச் சொல்லியது தெரிந்தால் வாய்ச் சண்டையை உண்டாக்கி விட்டாளே என்று என்னைத் திட்டினாலும் திட்டுவான். நான் சொன்னதெல்லாம் உண்மை பண்ணைக்காரரே.

**இளைய பள்ளி கூறுதல்**

தன்னுடைய சக்களத்தியான மூத்தபள்ளி கூறிய சொற்களைக் கேட்ட இளையபள்ளி தானும் குற்றம் சொன்னால் பள்ளனுக்கும் பண்ணைக் காரனுக்கும் இடையே விரிசல் வரும் என நினைத்து குற்றம் ஏற்படா வண்ணம் பண்ணைக்காரனிடம் சொல்லவேண்டிய முறைப்படி சொன்னாள். கணவனுக்குப் பெருமை வரும் செயல்களை மட்டும் செய்து பழிவரும் வழியைத் தடுக்கும் பெண்கள் திருமாலின் தோள்களிலும் மார்பிலும் வீற்றிருக்கும் வீரலட்சுமியையும், திருமகளையும் போன்றவர்கள் அவ்வாறான பெண்களைக் காண்பது அரிது என்று கூறினாள்.

வீட்டில் இருந்த பள்ளனை மூத்தபள்ளி எழுப்பி நேற்று முதல்நாள் அதிகாலையிலேயே வேலைக்குப் போ என்றாள், அவனும் கிளம்பிப் போனான். ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து கொண்டிருக்கிறது. அவனுக்கு அங்கு என்ன கடுமையான வேலையோ? போய் மூன்று நாட்கள் ஆகியும் இன்னும் திரும்பி வரவில்லை. அவன் மனைவியான எனக்கு நேற்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. என்னுடைய வேதனையை முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகர் அறிவார் பண்ணைக்காரரே.

நீங்கள் பசும்பால், ஆட்டுப்பால் தேங்காய்ப்பால் கலந்து சோறு உண்பதற்காகப் பள்ளனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டீர்கள் பழமையான அடிமைத் தொழில் புரியும் பரம்பரையில் வந்த அவன் எங்கோ சென்று விட்டான். சென்ற இடத்தில் அவனுக்கு ஏதேனும் ஆகிவிட்டால் உங்களுக்குத்தான் நட்டம் பண்ணைக்காரரே. முக்கூடல் அழகர் செய்வதைப் பார்க்கலாம் என்று காத்திருக்கிறேன் நான் என்ன செய்வென் பண்ணைக்காரரே.

**பண்ணைக்காரன் கோபித்தல்**

கள்ளத்தனம் செய்வதில் பெயர்போன மருதூரில் வாழ்கின்ற இளையபள்ளி, யாருக்கும் தெரியாமல் பள்ளனை வீட்டுக்குள் ஒளித்த வைத்துக் கொண்டு என்னிடம் கொஞ்சமும் பொருந்தாத பொய்வார்த்தைகளைக் கூறினாய். உன்னைச் சவுக்கினால் அடிப்பேன் என்று பண்ணைக்காரன் கண்கள் சிவக்கக் கூறினான்.

முக்கூடலில் வாழ்கின்ற மூத்த பள்ளியைப் போல நீ பள்ளனுக்கு உரிமை உடையவள் அல்ல. இருந்தும் ஏன் உனக்கு இத்தனை அலங்காரமான பேச்சு? மருதூரில் வாழும் இளைய பள்ளியே நீ பழிச்செயல்களைச் செய்பவள்.

குடிசை வீட்டுக்குள் பள்ளனை மறைத்து வைத்துக் கொண்டு என்னை உன்னுடைய வாய் வார்த்தைகளால் பயம் கொள்ளச் செய்வதை விட்டுவிடு. உன்னுடைய வாயைத் தைத்துவிடுவேன். மருதூரில் வாழ்கின்ற அற்பத்தனமான பள்ளி நீ.

**பள்ளன் வெளிவருதல்**

பண்ணைக்காரனின் கடுமையான பேச்சைக் கேட்ட பள்ளன் குடிசைக்குள் இருந்து விரைவாக வெளியே வந்தான்.

### பண்ணைக்காரன் வினவுதல்

பண்ணைக்காரன் பள்ளனை நோக்கிக் சந்தேகப் பார்வையுடன் பார்த்து, பள்ளா ஆட்டம் போடாதே. பண்ணையில் நடைபெறும் பணிகளை விளக்கமாகச் சொல் என்றான்.

### பள்ளன் கூறுதல்

பத்து அவதாரங்கள் எடுத்த அழகரான திருமாலின் முக்கூடல் நகரத்துப் பண்ணைக்காரன் பண்ணைச் செயல்களை விளக்கச் சொன்னபடி பள்ளன். விதைகளின் வகை, மாடுகளின் வகை, ஏர் கலப்பை ஆகியவற்றின் வகை, மண்வெட்டிகளை, எடுக்கும் களைக்கொட்டு எல்லாவற்றையும் வாங்கிய செலவையும், கொண்டுவந்து சேர்க்க ஆன செலவினையும் ஏற்கனவே பண்ணையில் இருந்த பொருள்களின் இருப்பையும் குறை ஏதும் ஏற்படாமல் சொல்லி முடித்தான்.

என்னோடு நெருக்கமாகப் பழகீனீர்கள், என்னை நன்றாக அறிவீர்கள் பயிரிடாமல் ஏமாற்றுகின்ற பள்ளன் அல்ல நான் உழவு செய்ய வேண்டிய நிலம் ஒரு பன்றி உழும் அளவு மட்டுமே. அது ஒன்றைத் தவிர எனக்கு வேறு நிலம் கிடையாது. இராமனின் சொல் கேட்டு இலங்கையை அழித்து மீண்ட குரங்கினம் உள்ளவரை வாரம்தோறும் கதிர்கள் விளைந்தாலும் சோம்பல் கொண்டிருக்க முடியுமா பண்ணைக்காரரே.

### வித்துவகை

மணல்வாரி என்னும் நெல்வகையை முன்னோர்கள் பண்டைக்காலம் முதலே அழகரின் தினப்பூசைக்காகச் செலவிட்டு விட்டனர். மணல்வாரி நெல்வகை தீர்ந்ததும் குறைந்த அளவே இருந்த பூம்பாளை என்னும் நெல்வகையும் செண்டு என்னும் ஆயுதம் தாங்கிய அழகரின் அடியார்களுக்கே போதுமானதாகவே இருந்தது. கூர்மையான மூக்குடைய திருமங்கை ஆழ்வான் என்னும் நெல்வகை காணக் கிடைக்கவில்லை. அச்சு முறித்தான் என்னும் நெல்வகை வார்த்தைகளால்

வடிக்க இயலாத தேவ அடியார்களான பெண்களுக்கே கொடுத்து தீர்ந்தது. அதனால் சொரி குரம்பை என்னும் நெல் வகையினையும் விற்றவர்கள் பல் பண்ணைக்காரரே.

**மாட்டு வகை**

முக்கூடல் கோயில் கொண்டிருக்கும் அழகரின் பண்ணையில் உழவு செய்வதற்கான மாடுகள் விதியின் வலிமையினால் விலை உடைய ஆயிரம் மாடுகள் தன்னுடைய இனத்தில் இருந்து பிரிந்து மேற்குத் திசையில் சென்றன. இன்னும் திரும்பவில்லை. செப்பறை நோக்கிச் சென்றமாட்டைப் போய்ப் பார்க்க வேண்டும் நம்மாடுதானா என்று சடையைப் பார்த்து அடையாளம் காண வேண்டும் எதிர்க்கும் குணமில்லாத மயிலைக் காளையை வாணியன் ஓட்டி வந்தான். அது பெண் தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

ஒற்றைக் கொம்பன் என்னும் மாட்டினைத் தாண்டவராயன் என்பவன் உள்ளூர்க் கோயிலில் அடைத்து வைத்தான். மற்ற காளைகளை எல்லாம் வடமலையப்பருடைய பெயரை இட்டுக் கோயில் காளைகளாக்கி விட்டார்கள். அவை, வயல் வெளிகளையே காத்துக்கிடக்கின்றன. செம்பருந்து நிறமுள்ள காளை சுமை ஏற்றினால் தாங்காது புற்றில் வாழும் பாம்பு அதைக் கடித்துவிட வானத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் பண்ணைக்காரரே.

**ஏர்க்கால் வகை**

மேன்மை பொருந்திய முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகருக்கு இளையவளான உமையம்மையை மனைவியாகக் கொண்ட மருதப்பரான சிவபெருமான் உழுவதற்கான கொழுக்கள் நானூறையும் பெற்றுக் கொண்டார். காரைக்காட்டார்கள் தங்களுடைய கொடி ஏர்க்கால் பலமுடையதனால் எல்லாவற்றையும் அவர்கள் வாங்கிக் கொண்டு போய்விட்டனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் காம உணர்வு ஊட்டுவதற்காகக் காமன் தன்னிடம் இருந்த

கலப்பை எல்லாம் அவர்களுக்கே முழுவதையும் கொடுத்து விட்டான் பண்ணைக்காரரே.

அழகரின் நாட்டில் பிறந்த அழகப்ப முதலியார் அழகருக்குரிய மண்டபக் கட்டிட வேலையில் தூண்களைச் சாரத்தில் ஏற்றுவதற்காகப் பொன் போன்ற கயிறுகள் ஆயிரம் கொடுத்து விட்டேன். கார்ப்பருவத்துப் பயிர் இடும்பரை எனக்கிருப்பது ஒரே கயிறு தான். என்ன சொல்ல? நான்கு நுகத்தடிகள் இருந்தன. அவற்றில் ஒன்றைக் கூடப் பகலில் தேடியும் காண இயலவில்லை. இரவில் பூதம் எடுத்துப் போயிருக்கும் என்று நினைக்கிறேன் பண்ணைக்காரரே.

**ஆயரை வரவைத்தல்**

நான் என்ன செய்வேன் என்று கூறிய பள்ளனின் பொய்யான பேச்சைக் கேட்ட அறிவற்ற பண்ணைக்காரன் பள்ளன் சொல்வதைப் பாதி காது கொடுத்தும் கேட்பதும் இடை நிறுத்தி அதனை மனதில் ஆராய்ந்து பார்த்து, அவன் சொல்வது பொய் என உணர்ந்து பிறகு கவனித்துக் கொள்ளலாம் என நினைத்து, பள்ளனிடம் வயலில் ஆட்டுக்கிடை வைக்க வேண்டும், மேட்டு நிலத்தைச் சீரமைக்க வேண்டும் குற்றமில்லாத திருமாலின் பரம்பரையில் வந்த இடையனைக் கூட்டிவா' என்று கூறினான்.

**பள்ளன் ஆயர்களைத் தேடிச் செல்லுதல்**

கார்மேகத்தின் நிறத்தைப் போன்ற அழகு பொருந்திய திருமாலின் பண்ணை வயலில் பண்ணைக்காரன் சொன்னதுபோல் தவறாமல் ஆட்டுக்கிடை வைக்க வேண்டும் என்ற மனதில் மகிழ்ந்து ஒப்புமை கூறஇயலாத பள்ளன், பண்ணைக்காரன் கூறியபடி ஆயர் இனத்தவரின் வீட்டைத்தேடி நடந்தான்.

சிறப்புப் பொருந்திய அழகர் கோயில் கொண்டிருக்கும் முக்கூடல் நகரில் அமைந்திருக்கும் வயல்களில் நல்ல விளைச்சலைத் தரும் சத்துகளை ஏற்றுவதற்காகத் தவறாமல்கிடையமைக்க ஆடுகளைக் கொண்டு வருவேன்

பாருங்கள் பண்ணைக்காரரே. முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரான திருமாலின் அருள் சுரக்கும் மனம் போல ஆள்பவரான நயினாருக்கு என்மேல் அன்பு வரும்படியாக உழவு செய்யும் வயல்களில் எல்லாம் உரம் சேரும் பொருட்டு ஆட்டுக்கிடை அமைப்பேன் பண்ணைக்காரரே.

**ஆயன் வரவு**

பார்த்தவர்கள் அச்சம் கொள்ளத் தன்னுடைய கையில் வைத்துள்ள தடியைச் சிலம்பு சுறறுவதுபோல் சுற்றிக் கொண்ட பள்ளன் சென்று கூறியபடியே சங்கத் தமிழன் வளம் நிறைந்த முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரை வணங்கும் இடையன் வருகை புரிந்து பண்ணைக் காரனைச் சந்தித்தான்.

பால், தயிர், நெய் ஆகியவற்றின் வாசைன உடம்பில் மணக்க, நெற்றியிலும் உடலிலும் பட்டையாகப் பதினெட்டு நாமங்கள் அணிந்து கொண்டு அழகிய வெண்மையான குதிரையின் வால்போன்ற நரைத்த முடியும் வாயாகிய குளத்தில் அலைகள் போல் நுரை அலையவும் முற்காலத்தில் ஆலஇலையில் துயில் கொண்ட முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் புழுதி உழவு செய்யப்பட்ட வயல்களில் ஆட்டுக்கிடை வைப்பதற்காக ஒருகையில் கோலும் மறுகையில் மூங்கில் குழாயினால் செய்யப்பட்ட பால்கறக்கும் கலத்தையும் தூக்கிக்கொண்டு இடையன் கிடையமைப்பதற்காக ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தான்.

**இடையன் சொல்லுதல்**

பூதக்கோன் என்பவன் வைத்திருந்த பொது ஆடான சண்டை செய்யும் ஆட்டை ஒரு பாம்பும் புலியும் காத்துக் கொண்டிருந்தன. இது கலிகாலமடா பள்ளா வேதக்கோன் என்பவன் கிடை காத்தது எதற்காக? அவனது சாதியைச் சேர்ந்தவர்கள் வீதிகள்தோறும் அமைந்திருந்த கிடைகள் பயன்படாது பள்ளா? தாதக்கோனுடைய ஆடுகளை முன்பு அறிவேன் பொருளுக்காக அதை

உன்னுடையதாக நீ வைத்துக் கொண்டதையும் உன் மனதையும் அறிவேன் பள்ளா, இசையானவன் முக்கூடலில் கோயில் கொண்ட பழமையானவன், அழகரின் வயலில் வளமான உரம் ஏற்றும் ஆயன் நானடா பள்ளா.

## மூத்த பள்ளி முறையீடு

ஆயர் இனத்தவர்களைக் கொண்டு வயலில் கிடை அமைக்குமாறு கூறிவிட்டுப் பள்ளன் இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்றான். பள்ளன் இளைய பள்ளியின் வீட்டுக்குச் சென்ற செய்தியைக் கோபத்துடன் முக்கூடற் பள்ளியான மூத்தபள்ளி பண்ணைக்காரரிடம் கூறினாள்.

பக்கத்து வீட்டுக்காரர்கள் நல்லது எது என்று சொல்லிக் கொடுக்க மாட்டார்களா? இவன் இருக்க வேண்டியது ஆட்டுக்கிடையிலா அல்லது இளைய பள்ளியின் வீட்டிலா? அவள் வீட்டில் கிடையாய்க் கிடக்கும் பள்ளன் வேலையைக் கெடுக்கும் திருடன். காலையிலேயே என்னைக் கண்டதும் கையும் காலும் உதறல் எடுக்க மனம் பதறி விழுந்தான், அவளுக்காக அவன் மடலேறவும் துணிவான். மோகப்பேய் பிடித்திருக்கும் உடலோடு அலைகிறான். அவனுடைய திருட்டுத்தனத்தை நீங்கள் அறியவில்லையா? நான் சொல்வதையும் கேட்காமல் இருக்கின்றீர்கள். முக்கூடல் அழகரும் என்னைத் தடுத்து ஆட்கொள்ளவில்லை. நியாயம் கேட்கவும் இல்லை. அவனைச் சிறையில் அடைத்தால்தான் சரியாக வேலையில் கவனம் செலுத்தவான் பண்ணைக்காரரே.

வரவுக்குமீறிய செலவால் துன்பமே வந்துசேரும் கோயில்களுக்குக் கொடுக்கும் பொருள்களில் கொஞ்சமும் கட்டுப்பாடில்லாமல் இருக்கிறான். கூத்தாடுபவர்களுக்கும் தாளம் இசைப்போருக்கும் பொருள் கொடுத்து நல்ல பெயர் எடுத்திருக்கிறான்.

**பள்ளன் வரவு**

பள்ளன் திட்டு வாங்குவதற்கென்றே பிறந்தவனோ? அவனுக்கு வெட்கம் என்பது சிறிதுகூட இல்லை. இளைய பள்ளியின் இளமையில் மட்டுமே அவனது கவனம் இருக்கிறது. வயது கூடும் என் இளமை நலத்தையும் பறித்துக் கொண்டான். எல்லை மீறிப் போனபின் இனி என்ன பேச்சு வேண்டி இருக்கிறது? வயலில் உழவு செய்வதைப் பற்றிச் சற்று நினைத்துப் பார்ப்பதுமில்லை. என் மீது ஆசை கொண்டு கிளர்ச்சியாகக் குரல் எழுப்புவதும் இல்லை. தீயால் சுட்ட புண் ஆறிவிடும் ஆனால் அவனால் நான் பெற்ற பழிச் சொற்கள் புண்ணாகப் புரையோடிப் போயிருக்கின்றன. அவனை மனதில் இருந்து ஒதுக்கிவிட்டேன். இனி அவனுடன் பேசவும் மாட்டேன் அவனிடம் பேசிப் பாருங்கள். மரத்தில் விளைந்த கணுவை வெட்டினால் தான்போகும். அவன் பயப்படும்படி விடாமல் பிடித்து தொழுவத்தில் அடைத்து வையுங்கள் பண்ணைக்காரரே.

**பள்ளன் வரவு**

உலகினரைக் காப்பவராகிய முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகிய கண்களை உடைய அழகரின் பண்ணைக்காரன் முன்னால் மனம் உருகி மூத்தபள்ளி பள்ளன்மேல் குற்றச்சாட்டுகளைச் சொல்லிச் சென்ற பின்னால், பொய்யான சொற்களைப் பேசி முன்னால் சென்ற பள்ளன் எருவைத்த வயலில் இருந்து வருவது போல் வந்தான்.

**நிலவகை கூறுதல்**

மழைபோல வளம் தரும் சீவலப்பேரி ஏரியின் தண்ணீர் பாயும் சிறப்புடைய இந்திரன் தொழும் திருமாலின் பெயர் பெற்ற கேசவன் வயலுக்கும், கார்ப் பருவத்தில் பயிர் செய்து ஊரிலேயே அதிகமாகக் கதலி வாழை என்னும் நெல் விளைந்த வயலுக்கும் புகழ்மிக்க நயினாத்தையின் வயலுக்கும், கரிய மேகங்கள் சூழ்ந்து சாரலாய் நிலம் ஈரமாகத் தூறல் இடும் நாற்றுப்படவும் சன்னை வெட்டியான்

வாய்க்கால் பகுதியில் உள்ள வயல்களுக்கும் வன்னிமரத்தின் அருகில் உள்ள மேட்டு நில வயலுக்கும் கோரைப் புற்கள் அடர்ந்த வயலுக்கும் ஓடை அருகில் இருக்கும் வயலிலும் அழகாய்த் தோற்றமளிக்கும் குத்துக்கல் வயலுக்கும் குளத்தின் அருகே உள்ள வயலுக்கும் முத்தன் வயலுக்கும் வீரபாண்டியன் ஏரிநீர் பாயும் திருமகளுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களிலும் சுமைதாங்கிக் கல்லின் அருகில் இருக்கும் வயல்களுக்கும் கடைசியில் உள்ள வயலுக்கும் தென் மருதூரில் உள்ள பண்ணை வயலுக்கும் அழகர் கோயில் கொண்டிருக்கும் கோயிலுக்குத் தெற்கில் உள்ள வயல்களுக்கும் வடக்குப் பகுதி வயல்களுக்கும் குளக்கல் மடைக்கு உட்பட்ட வயல்களுக்கும், வாரத்துடையான் ஏரிக்கு உட்பட்ட வயல்களுக்கும் வட்டமாக அமைந்த வயல்களுக்கும் ஆந்தைக் குளத்தை அடுத்திருக்கும் வயல்களுக்கும் தோணித்துறையின் அருகில் இருக்கும் வயல்களுக்கும் இன்னபிற பெயர்களைக் கொண்ட வயல்களுக்கெல்லாம் எருவைத்துவிட்டு இன்றைக்குத்தான் திரும்பினேன். இனியும் உங்களுடைய கட்டளையைக் கேட்டு நிறைவேற்றக் காத்திருக்கிறேன் பண்ணைக்காரரே.

### பள்ளனைத் தொழுவில் அடித்தல்

எம் தந்தையாகிய திருமாலான முக்கூடல் நாயகர் ஏரியைச் சாந்த வயல்களில் நீ ஆட்டுக்கிடை வைத்துத் தந்த விதமா இது? மருதூர்ப் பள்ளியுடன் உறவு கொண்டு அவள் வீட்டில் உறங்கிய உறக்கமா? மனதைத் தொட்டுப்பார் என கண்கள் கோபத்தால் சிவந்த பண்ணைக்காரன் பொய்யுரை கூறிவந்து நின்ற பள்ளனின் காலில் மரக் கட்டையை இணைத்துக் கட்டினான்.

### இளைய பள்ளி புலம்பல்

பழகாரியான முக்கூடல் வாழும் மூத்தபள்ளி தாலிகட்டிய கணவன் என்று கூடப்பாராமல் எங்கிருக்கும் பழிகளையெல்லாம் உன் தலையில் சுமர்த்தி விட்டு உன்மேல் கொண்ட அன்பைக் காட்டிவிட்டாள். தீட்டப்படாத வளம்மிக்க அரிசியைப்

போட்டாலும் கோழி கிளறித்தான் தின்னும் என்னும் பழமொழியை நிரூபித்துவிட்டாள். செல்லாது என ஒதுக்கப்பட்ட காசு மீண்டும் செல்லுமோ? இனியா அவள் உன்னை ஏற்றுக் கொள்ளப் போகிறாள்? அழகரின் பெயரைத் தன் பெயராகக் கொண்டிருக்கும் பள்ளனே, இனி நான் என்ன செய்வேன்.

**பள்ளன் தேற்றுதல்**

இளைய பள்ளியே! என்னிடம் விரைவாக வருவாயாக ரகசியம் ஒன்று இருக்கிறது பொய் சொல்கின்றவளான மூத்தபள்ளி என்னைப் பார்க்க வருவாள் இதற்கு இடையில் கடவுள் என்னைச் சோதித்து விட்டான். பண்ணைக்காரருக்குக் காதும் கண்ணைப் போன்றது. நீ இங்கிருந்து விரைவாகப் போய்விடு. சகதியில் எறிந்த கல்போல் அனைவருக்கும் தெரியப்படுத்திவிடாதே. காயம்பட்டால் அதனால் உண்டான தழும்பை மறைக்க முடியுமா? வருவது வந்தே தீரும்.

**மூத்தபள்ளி சோறு கொண்டு வருதல்**

நயினாரே! பள்ளன் எங்கெ இருக்கிறான்? உங்களிடம் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. செங்கான் என்பவன் எனக்கு மூத்தவன் அவன் என்ன காரணத்திற்காகவோ தெய்வத்திற்குப் படையில் போட்டானாம். அங்கிருந்து ஒரு சட்டியும் கறியும் சோறும் கொடுத்தனுப்பினான். நான் தனியாக உண்ண முடியுமா? உங்கள் அடிமையான பள்ளனுக்குக் கொண்டு வந்தேன். நான் கொடுத்தால் அவன் உண்பானோ மாட்டானோ தெரியவில்லை பண்ணைக்காரரே.

இரண்டு தாரமாக இருந்தாலும் தன் கணவன் மேல் கொண்ட அன்பின் காரணமாக முக்கூடலில் வாழும் மூத்தபள்ளி மனதில் தந்திர எண்ணமுடன் பண்ணைக் காரனிடம் வேறு ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு மனதில் கள்ளம் நிறைந்தவளாய்ப் பள்ளனுக்குச் சோறு கொண்டு வந்தாள்.

**பள்ளனிடம் சொல்லுதல்**

உன்னை மருந்திட்டு வசியம் செய்த கள்ளத்தனமான மருதூரில் வாழும் இளைய பள்ளியின் வடகரை நாட்டை விட்டு நீ வந்தபின் திருந்துவதற்காக நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்கவில்லை. நான் என்ன சொன்னாலும் அதற்கு எதிராகத்தான் செயல்பட்டாய். பெருந்துன்பம் கொண்டு குழியில் அகப்பட்ட யானை போல மரத்தில் கட்டுண்டாய். அவரவர் செய்தவினை அவரவர்களைத் தண்டித்தே தீரும். பலிக்காமல் போகுமோ! சொல்வாய் முக்கூடற் பள்ளா!

**பள்ளன் வேண்டல்**

முடிந்துபோன செயல்களைப் பற்றி எதற்காகப் பேச வேண்டும்? விருந்து உபசரித்தபின் விருந்தினர்களைத் தண்டிப்பவர்கள் உண்டா? சிறுமையான பேச்சுகளைப் பேசாதே. வாயில் கொண்ட நீரைக் குடித்தாலும் குடிக்கலாம். வெளியே உமிழ்ந்தாலும் உமிழலாம். அதுபோல்தான் நீ என்னை விடுவிப்பதும் விடுக்காமல் போவதும். பஞ்சில் பற்றிய நெருப்பு உள்ளிருந்து அதனை எரிப்பதபோல் உன் மனதில் பழைய பகையை வளர்க்காதே பண்ணைக் காரரிடம் கெஞ்சி மன்னிப்புக் கேட்டு விடுவிப்பாய் முக்கூடற்பள்ளி.

**மூத்தபள்ளி கூறுதல்**

முட்டிக் கொண்ட பின்னால் குளிந்து செல்லும் பழைய கதையை உண்மையாக்குகிறாய். இப்போது என்ன செய்வதென்று புரியாமல், சரி சரி இளையபள்ளி எடுத்துக் கூறாமல் வயதில் மூத்த நான் சொன்னால் பண்ணையார் காதில் ஏறுமா? புனைவாக எதனையும் என்னால் பேச முடியுமா? பெரிய இடத்தில் ஆக வேண்டிய காரியம்! என்னிடம் என்ன இருக்கிறத. அன்று நீ செய்ததெல்லாம் சரியென்று செய்தாய். அவளையே போய் சொல்லச் சொல்வாய் அழகரின் பெயரைக் கொண்ட பள்ளனே!

### பள்ளன் வேண்டல்

இப்படிப் பேசவேண்டும் என்று உனக்கு நான் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? நான் இவ்வளவு துன்பப்பட்டும் திருந்தாமல் இருப்பேனா? இளைய பள்ளியைச் சக்களத்தி என நினைத்து அவளிடம் எதிராக நின்று பேசினால் உனக்கே இகழ்ச்சி வரும். என் மக்கள் மேல், என்மேல், உன்மேல் சத்தியம் செய்கிறேன். நீ ஊற்றிய கஞ்சியைக் குடித்துக்கொண்டு நீ சொல்லிய இடத்தில் இருப்பேன். விக்கல் எடுக்கும் வாயினை உடைய பண்ணைக்காரரிடம் சென்று பேசி என்னை விடுதலை செய்வாய் முக்கூடற்பள்ளி

### மூத்தபள்ளி பண்ணைக்காரனை வேண்டல்

சத்தியம் செய்து கூறிய பள்ளனின் மனம் சிறிதும் வருத்தம் கொள்ளாமல் அவனுக்கு அறிவுரை கூறி உன்னை நான் பண்ணைக்காரனிடம்சென்று மீட்பேன் என்று கூறி எழுந்து, பிறவாத வரத்தைத் தரக்கூடிய திருமால் கோயில் கொண்டிருக்கும் முக்கூடல் நகரில் வாழும் மூத்தபள்ளி பண்ணைக்காரன் இருக்கும் திசை நோக்கி அவனைச் சந்திக்க கிளம்பினாள்.

ஐயா, வணக்கம் வணக்கம் உம்மை வணங்கினேன். பண்ணைக்காரரே உங்களைத் தேடித்தான் உங்கள் அடிமையான பள்ளியாகிய நான் இங்கே வருகை புரிந்தேன். பள்ளன் செய்த கள்ளத்தனங்களை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் பண்ணைக்காரரே! பள்ளன் தொழுவில் மாட்டப்பட்டிருப்பதைக் கண்ணால் காண முடியவில்லை. பாவமாக இருக்கிறது பண்ணைக்காரரே.

தருமமாக நினைத்துப் பள்ளன் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்களுக்குக் காவலாக இருக்கும் பண்ணைக்காரரே! முலை தளர்ந்து போனால் அதை வயிறுதான் தாங்கிக் கொள்ள வேண்டும். பள்ளன் செய்த குற்றங்களை மனதில் கொண்டு தண்டிக்க அவன் எதிரி அல்ல. தென் மருதூரில் வாழும் இளைய பள்ளியால் ஏற்பட்ட குற்றம் தான் பண்ணைக்காரரே.

குற்றச்சாட்டின் மேல் குற்றச்சாட்டினை வைத்து விட்டு இப்போது அதற்கு மாறாக வந்து நிற்கிறேன் என்றாலும் நான் பெண் பிள்ளைதான் பண்ணைக்காரரே. எனக்காக இரங்கி அவன் செய்த பிழைகளை மன்னித்து விடுவிக்க வேண்டும். முன்னர் கள்குடித்த வெறியால் அவன்மேல் குற்றங்களைச் சுமர்த்தினேன். நீங்கள் சொன்னபடி கேட்டு நடப்பேன். பள்ளனின் காலில் பிணைத்த மரத்தை வெட்டி அவனை விடுதலை செய்ய வேண்டும்.

### பள்ளனை விடுவித்தல்

மூத்த பள்ளியின் சொற்களைக் கேட்ட பண்ணைக்காரன் முக்கூடற் பள்ளனின் காலில் சேர்த்துக் கட்டிய மரத்தை நீக்கியபின் அவனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்து அவன் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறியபின் பள்ளன் திருமாலின் பண்ணைக்காரனின் முன்பு நல்ல விதை வகைகளையும் மாட்டு வகைகளையும் எடுத்துக் கூறினான்.

### விதைவகை

செஞ்சம்பா - செம்மை நிறமுடைய அரிசியுடைய நெல், சீரகசம்பா - சிறிய நெல் வகை, முத்துவிளங்கி - முத்தினைப் போல் ஒளியுடைய அரிசி கொண்டது, பூ - போகம், இருபூ - இருபோகம்.

### மாட்டுவகை

குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக்குளம்பன், மோழை, குடைச்செவியன், குற்றாலன், கூடுகொம்பன், வடப்புல்லை, கரும்போரான், மயிலை, கழற்சிக் கண்ணன், மட்டைக்கொம்பன், கறுப்பன், மஞ்சள் வாலன், படப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக்காலன், அணிற்கலன், படலைக் கொம்பன், விடர்த்தலைப் பூ நிறத்தான், வெள்ளைக் காளை என மாடுகள் ஆயிரம் வகை உண்டு. இது உண்மை பாருங்கள் பண்ணைக்காரரே.

**ஏர்க்கால் வகை**

தசரத மன்னனின் புதல்வாரன தாமரைக் கண்ணை உடைய திருமால் வில்லை வளைத்து ஒரே அம்பில் ஏழு மரங்களைத் துளைத்த நாளில் கசமரம் ஒன்றும், சகமரத்தை நுகத்தடியோடு இணைக்கும் மரக்கருவி ஒன்றும், நுகத்தடி ஒன்றும், திரட்சியான நுனியை உடைய ஏர்க்கால் ஒன்றும், தார்க்குச்சி ஒன்றும், நிலத்தை உழவு செய்யும் கருவி ஒன்றும், ஏர்க்காலின் அடிப்புறம் இணைத்து வளைவாக உள்ள உறுப்பும் என்ற ஏழு உறுப்புகளையும் ஏழுவகை மரங்களால் செய்து பத்திரப்படுத்தி உள்ளேன். அத்தனையையும் அறிந்தவர்கள் யார் பண்ணைக்காரரே!

**முகூர்த்தம் பார்த்தல்**

ஏர்வகை, விதைவகை, ஏர்க்கால் வகை ஆகியவற்றைச் சிறப்பாகப் பண்ணைக்காரன் ஆறியும்படியாகப் பள்ளன் எடுத்துக் கூறியபின்னால் அனைவரும் போற்றி வணங்கும் தன்மை உடைய அழகரின் பண்ணைக்காரன் சோதிடன் கூறிய நல்ல முகூர்த்தத்தைப் பள்ளனுக்குத் தெரிவித்தான்.

**பள்ளனை மாடு முட்டல்**

ஏரில் பூட்டி உழப்பட்ட காளைகளை விட்டுவிட்டுப் புதிய காளைகளை ஏரில் பூட்டிக் கொண்டிருக்கும் வேளையில் வயலில் வரால்மீன் துள்ளிக்குதிக்க அதனைக் கண்டு பயந்து வெறித்த மஞ்சள் நிறக்காளை ஒன்று எதிரில் நின்றவர்களை எல்லாம் முட்டிவிட்டு ஓட, நான் மாட்டின் வெறியை அடக்குகிறேன் என்று பள்ளன் மாட்டின் எதிரே நின்றான். அம்மாடு பள்ளனைக் கொம்பால் குத்தியது. அதனால் அவன் மயங்கி விழுந்தான்.

**மூத்தபள்ளி புலம்பல்**

மதயானையைப் பிடிக்கும் வலிமை உடைய நீ இந்த மாட்டுக்கு எதிராக நிற்க முடியாமல் போனதன் காரணம் என்ன? சொல்வாயாக, முன்பு மலைபோன்ற

காளைகளை அடக்கிய உனது வீரம் கதையாகப் போனதோ? அந்த வீரம் இப்போது இல்லை எனக் காட்டவா் மாட்டை மறித்து நின்றாய்? பிரம்மன் எழுதிய தலை எழுத்தோ, இல்லை என் சக்களத்தியான மருதூர்ப்பள்ளி உனக்கு வைத்த வசிய மருந்தின் வலிமையோ? இது யாரால் வந்த துன்பமோ? தெரியவில்லையே முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் பள்ளனே!

**இளைய பள்ளியின் புலம்பல்**

அழகரின் பாதங்களை வணங்குவதை மறவாத பள்ளனே, காயம் படாத உன் உடம்பில் காயத்தால் தழும்பு ஏற்படுமோ? என்னுடைய அன்புக்குரியவனின் திறமை போய் விடுமோ? மாட்டைத் தடுத்ததோடு அல்லாமல் ஏன் அதைத் தொடர்ந்து சென்றாய்? முக்கூடற் பள்ளியான மூத்தபள்ளி உன்னைப் பார்த்துச் சிரிப்பதற்காகவா விழுந்து கிடந்தாய்? இத்தகைய துன்பம் உனக்கு வருதல் முறையா? மலையின் மேல் இருக்கும் ஐயாரால் வந்த குறை இதுவோ! படுத்திருக்கும் நிலையில் இருந்து எழுவாயாக.

**உழுது விதைத்தல்**

தன்னுடைய நிலையைக் கண்டு இளைய பள்ளியும் மூத்தபள்ளியும் புலம்பிய சொற்களைக் கேட்ட பள்ளன் துயரம் நீங்கித் தலையை அசைத்து தோள்களைக் குலுக்கி இயல்பாக எழுந்தான்.

**உழுது விதைத்தல்**

பள்ளியர்களின் புலம்பலைக் கேட்ட பள்ளன் தன்னுடைய இயல்பு நிலையை அடைந்து எழுந்து நின்றான். இளையபள்ளி மூத்தப்பள்ளி ஆகியோரின் முகம் பார்த்துச் சிரித்தான். புருவத்தை வளைத்துக் கண்களை இமைத்தான். கட்டுக்கு அடங்காமல் திமிறி ஓடிய மாட்டை வந்து ஏரில் இணைத்து உழவைத் தொடங்கினான்.

**நாற்றுப்பறித்தல்**

தரிசு நிலத்தை உழசெய்து மூன்று சால்கள் அடித்து நான்கு உழவுகளையும் முடித்து வயலில் சமதளமடைய மூன்றுமுறை பரம்படித்து வயல் நடுவதற்காகப் பக்குவமாக வளர்ந்த நாற்றுகளைப் பறித்து முடிமுடியாகக் கட்டி வேறு வயலில் வட்டமாகக் குவித்து வைத்து, அழகரின் பாதங்களை வணங்கி நாற்று முடியை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டு நான்கு திசைகளையும் வணங்கி, நாற்று நடுபவர்களைப் பிரித்து நிறுத்தி நாற்றுகளைப் பகுத்துக் கொடுத்து பறவைகள் ஒலி எழுப்புவது போல் குலவையிட்டு நாற்றுகளை இடைவெளி அதிகம் இல்லாமலும் நெருக்கமாக அமைத்து விடாமலும் நடுமாறு பள்ளன் பள்ளியர்களை நோக்கிக் கூறினான்.

**பள்ளியர் வகை**

கொத்தான பூக்கள் நிறைந்த துளசி மாலையை அணிந்திருக்கும் அழகரின் முக்கூடல் நகரில் சேறுபடிந்த கால்களை உடைய பள்ளர்களுக்குத் தென்றல் காற்றினால் என்ன நிலை ஏற்படுமோ? மருதநிலப் பெண்கள் மனதில் ஊடல் எழுந்த காலத்தில் பண்ணையில் நாற்றங்காலில் இருக்கும் நாற்றுகள் நடுகைக்கு வராமல் போய்விடும். பெண்களின் ஊடலால் தென்றலின் துயரால் நடவு பாதிக்கப்படும்.

**அறுவடை**

நெற்கதிர்கள் எல்லாம் நன்றாக முற்றி விளைந்தபின் முக்கூடற்பள்ளன் பண்ணைக்காரனிடம் கதிர்கள் விளைந்ததைத் தெரிவித்தான். பள்ளர்கள் அனைவரும் பள்ளன் கூறிய நெல் வகைகள் நன்று என உணர்ந்து வயலில் கூடி அறுவடைக்கு முன்பு தெய்வத்திற்குப் படையலிட்டுப் பூசை செய்து நல்ல நாளில் கதிர்கள் கொய்தனர். அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். அறுவடைக்குரிய ஆட்களை வயலில் நிறுத்தி அவரவர்கள் அறுவடை செய்ய வேண்டிய பகுதியை

வகுத்தனர். ஒருவருக்கொருவர் நெருங்கிநின்று அறுவடை செய்து வயலெங்கும் கதிர்களைப் பரப்பி வைத்தனர்.

**மூத்தபள்ளி முறையீடு**

எல்லாக் கணக்குகளையும் கூறிவிட்டு என்னுடைய பெயரையும் எனக்கு அளக்க வேண்டிய நெல் கணக்கையும் கூறாமல் விட்டுவிட்டு பள்ளனின் கள்ளத் தனத்தைக் கேளுங்கள் என்று வில்லேந்திய இராமனான அழகரின் முக்கூடலில் வாழும் மூத்தபள்ளி அழுது விம்மிப் பள்ளியர்களின் முன்னால் அந்தக் கொடுமையைக் கூறினாள்.

**பள்ளியர் ஏசல்**

அறிவற்ற முக்கூடற்பள்ளி! குறை சொல்கிறாயா? உங்கள் மரபு வழிச் சொத்தைப் பள்ளன் எனக்குக் கொடுத்தது உண்மை என்கிறாய். அதை நிரூபித்துக் காட்டு. சும்மா தொண்டைகட்ட என்னைக் கூப்பிட்டுக் கத்தி வையாதே. வைதால் நீ பேசிய பேச்சுகளைப் பண்ணைக்காரரிடம் சொல்லிவிடுவேன்.

**பள்ளியர்கள் சமாதானமடைதல்**

**சொன்னா லென்ன நீயும் பொறு**

**நானும் பொறுத்தேன் - கிளை**

**சூழ்ந்திருக்க நாமே கூடி**

**வாழ்ந்திருக்கலாம்**

**பன்னகத்தி லாடிய முக்**

**கூட லழகர் - திருப்**

**பாத மலர் வாழ்த்தி யாடிப்**

**பாடுவோமே.**

சொன்னால் என்ன மருதூர்ப் பள்ளி, நீயும் பொறு, நானும் பொறுத்துக் கொண்டேன். சொந்தங்கள் சூழ நாம் ஒற்றுமையாக வாழ்ந்திருப்போம்.

காளியங்கள் என்னும் பாம்பின்மேல் நடனமாடிய முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் திருப்பாதங்களை வணங்கிப் பாடி ஆடுவோம்.

## வினாக்கள்

1. முக்கூடற்பள்ளுவின் அமைப்பினை விவரி?
2. முக்கூடல் நகரச் சிறப்பு யாது?
3. முக்கூடற்பள்ளுவின் உணர்த்தும் உழவர்களின் வாழ்க்கையை எடுத்துரைக்க.
4. மூத்தப்பள்ளி இளையப் பள்ளி உரையாடலை விளக்குக.
5. முக்கூடற்பள்ளு பள்ளு கூறும் நெல்லின் வகைகள் யாவை?
6. முக்கூடற்பள்ளு கூறும் விதை வகைகளையும் மாடு வகைகளையும் எடுத்துரைக்க.
7. முக்கூடற்பள்ளு கூறும் மீன் வகைகளைக் கூறுக.
8. முக்கூடற்பள்ளு உணர்த்தும் குடும்பனின் செயலை எடுத்துரைக்க.
9. மருத நில வாழ்வியலை எடுத்துரைக்க.
10. பள்ளியரின் முறையிடலை விளக்குக.

## பாடநூல்கள்


1. முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. பதினோராம் திருமுறை - கழகப்பதிப்பு, சென்னை.
3. மதுரை சொக்கநாதர் - தமிழ் விடு தூது - முல்லை நிலையம், சென்னை.

4. வீரமாமுனிவர், திருக்காவலூர் கலம்பகம், முல்லை நிலையம், சென்னை.

5. முகைதீன் சதகம், சாரதா பதிப்பகம், சென்னை.

6. ஜெயங்கொண்டார், கலிங்கத்துப்பரணி, சாரதா பதிப்பகம், சென்னை.

7. ஒட்டக்கூத்தர், விக்கிரமசோழனுலா, சாரதா பதிப்பகம், சென்னை.

8. திருக்குற்றால குறவஞ்சி, பாவை பப்ளிகேஷன், சென்னை.

9. முக்கூடற்பள்ளு, பாரிநிலையம், சென்னை.

## பார்வை நூல்கள்

1. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகம் பதிப்பகம், சென்னை.

2. அ.மார்க்ஸ், சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள், புலம் வெளியீடு, சென்னை.

3. நாஞ்சில் நாடன், சிற்றிலக்கியங்கள், தமிழினி வெளியீடு, சென்னை.

**முனைவர் சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப்பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

9788749246.

spetchi29@gmail.com